അവൈകളാക് കൊണ്ടു തക്കവാറു ലിംഗങ്കളൈ செய്ய വേണ്ടും. ഒരു ശിലൈകൾ യാവും യാവർക്കും ഏറ്റവൈ എൻപതു ചിലർ കരുത്തു. (23)

മേൽക്കുറിയ നാൽവകൈയാന ശിലൈകൾ മുറൈയേ മോക്ഷത്തൈയും, വെറ്റിയൈയും, ചെൽവത്തൈയും, ഞാനിയത്തൈയും കൊടുക്കും, എടുത്തു വൈക്കപ്പട്ട ശിലൈ എന്ത തിചൈയൈ നോക്കുകിൻറതോ: (24)

അന്ത തിചൈയൈ നോക്കിയ വണ്ണമേ ആലയത്തിലും അതൈ സ്ഥാപിക്കവേണ്ടും. പീംപത്തിറ്കു "ആൺ" ശിലൈയൈത് തേർന്തെടുക്ക വേണ്ടും. പീടത്തിറ്കുപ് "പെൺ" ശിലൈ; പാത പീടത്തിറ്കു "നപുംസക" ശിലൈ. എല്ലാ പീംപങ്കളുക്കും പൊതുവാനതു ഇവ് വിഷയം. തകുന്ത ശിലൈയൈക് കൺടെടുത്തു മുറൈപ്പടി അതറ്കു പൂജൈ കൊടുത്തു, പൊൻ ഊചി അഷ്ടലം—ഇവൈകളാൽ വെട്ടി എടുത്തു, അതറ്കുപ് പിറകു മീൺടും ഉൾളും പുറമും അടിയിലും നുണിയിലും അടൈയാളം ചെയ്തു, കൊൺടു വര വേണ്ടും. (25-27)

வ்ரீஷிவைசகல்ஷிதெ லிஜ்ஜ ராஜ்ஜம் ராஜா வ கலுகி।
வாஷிவைசகல்ஷிதெ வீரெ லிஜ்ஜ வீரெ வ வஷ்ணுகெ ॥ உச ॥

வ்ரியா வாஷவா வ லகுவீரெ கூதெ வருரஜ்ஜ ராஜ்ஜாயகழி।
வவ்வ விஜ்ஜாய கதெ ராஜ்ஜ ராயெ ரிவராவுகழி ॥ உக ॥

வாவ கூகுவா வஜ்ரொவ்ய ரயம் நீகுவா ஸிவராலுவ।
கொலவெய-ம் ஸிஸி வவ்வாவ்ய லிஜ்ஜ வதுகெ லுகலு.
[வெக ॥ கூ ॥

கூவ ரத்தாதி

வ்லு ஷிகம் வஜ்ரராமணு வஜ்ரம் நீலம் வஜ்ரணையழி।
வொலுயம் விஜ்ரூதம் வாஷ்ரம் ரத்தஸிம்வம் தயாவத்யா ॥

பெண்சிலையில் லிங்கம் செய்யப்பட்டால் நாடும் அரசனும் அழிவார்கள். ஆண் சிலையில் பீடம் செய்யப்பட்டாலும், லிங்கமும் பீடமும் நபும்சக சிலையில் செய்யப்பட்டாலும், ஆண்—பெண்—சிலைகளால் பூபீடம் செய்யப்பட்டாலும் ராஜ்யம் அழிந்து விடும். இவ்வாறு அவசியமான விஷயங்களை நன்கு கவனித்துத் தகுந்த சிலையைத் துணியிலால் மறைத்துக்கொண்டு வரவேண்டும். (28-29)

இவ்வாறு செய்து இரதத்தில் (வண்டியில்) ஏற்றி, சிவன் கோயிலுக்கு எடுத்துச் சென்று, வடக்கு திசையில் இறக்கிவைத்து முறைப்படி நன்றாக லிங்கத்தைப் பண்ணவேண்டும். (30)

இனி இரத்தினங்கள்

ஸ்படிகம், பத்மராகம், வஜ்ரம், நீலம், பொன், வைடூர்யம், பவழம், புஷ்யராகம் என்று இரத்தின பிம்பங்கள் எட்டு வகை. அவற்றில் முதலாவது, *ஸ்படிகம்-ஸூர்யகாந்தம்-சந்திரகாந்தம்

---

* மூவகைத்தான ஸ்படிகங்களுக்கும் பொதுப் பெயரான "ஸ்படிகம்" என்பது சிறப்பாக அதன் முதல் வகைக்கும் பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஷ்டிகம் வகுயக்காதஹ வஜ்ரகாதிதி க்ரியா ।
ஷ்டிகவெவுவ வெதாஷ்டு: காதஹொகூயக்தாீ சுதாஸ் ॥

ஸ்ரீயம் காஉ தயாமொஅ டூலிம் வாக்ரம் ஜயம் வாவழி ।
ஹஹெத வதிராஹிவிம்வாகாம் சுதஹொடவுகாஸ ॥ கூ ॥

ாணிகுஹு திவாகாரவஸு ஸஸிதெகா
ஹுகாவஹும் விதூஉ
ஹொளஹெவுஹுவாவுதவஸு வெ உாகதா
தகவாவுயாமம் மாஹொ: ।
வஜ்ரம் தெகுஹுவொ திபுவாகாரவாவொ-
நீஹு மொதெதிகம்
ாஹொ யபுஸ்ரீஹாரதகம் ஸ்ரணாவவெ!
கெதாஸ்து வெவஉயக்கு ॥ கூச ॥

என மூவகையானது. இவை மூன்றும் ஸ்படிகத்தின் உட்பிரிவுகளே யாகும். இவைகள் முறையே :— காமம் (சிற்றின்பம்), மோகம் (பேரின்பம்), அர்த்தம் (செல்வம்) ஆகியவற்றைத் தரவல்லன வாகும். (31—32)

பத்மராகத்தால் பிம்பம் செய்து பூஜித்தால் செல்வத்தையும், வஜ்ரத்தால் காமந்தை (சிற்றின்பத்தையும்)யும், (இந்திர) நீலத்தால் ஆரோக்கியத்தையும், பொன்னால் வளத்தை (ஸம்ருத்தியை)யும், வைடூரியத்தால் மக்கட்பேறையும், பவழத்தால் வெற்றியையும், புஷ்ய ராகத்தால் ஸௌக்யத்தையும் பெறலாகும். (33)

நண்ப! நவக்கிரகங்களுக்குரிய இரத்தினங்களைக் கேள். சூரியனுக்கு மாணிக்கம், சந்திரனுக்கு முத்து, செவ்வாய்க்குப் பவழம், புதனுக்கு மரகதம், குருவு (வியாழனு)க்குப் புஷ்யராகம், சுக்கிரனுக்கு வஜ்ரம், சனிக்கு நீலம், இராகுவுக்கு கோமேதகம், கேதுவுக்கு வைடூரியம். அந்தந்த கிரஹங்களை பூஜிப்பதில் அவ்வோ இரத்தினங்கள் ஏற்றவை. (34)

ரத்தாகாயமை வலெருஷாம் தொஷாம் வாதாதயுதொ தவ ।
மெவா விஜ்ஞாம் கலுஜ்ஜரு காகாபிகஷ்டகய குறையம் ॥ கூரு ॥

தொஷாரு தூவாரு ரூபாணி யத்தாதுதெஷு வஜ்ஜயெச ।
மெவா விஜ்ஞாம் கலுஜ்ஜது தூவாம் காகவஷ்டம்கஷ்டகம் ॥ கூசு ॥

வதெதொ தொ ஒகஷ்டிகா ஹாயாலெஷ்டாஸ்ரயி(ஸ்ரி)தொஷாரு தெக ।
நிஜ்ஜவ்ஸ்துகா தெதி தொஷா ரத்தாவா வ்யா ॥ கூள ॥

வ்ருத்தாரு வாவாஸகவிதா நு வ்யா தாதெஷு வவஸ்தம் ।

இரத்தினங்களின் தோஷங்கள் பொதுவாக ஒன்பது வகை:- (1) ரேகை (கீறல்-கோடு), (2) பிந்து (புள்ளி), (3) களங்கம் (அழுக்கு-கருமையான சிறுபகுதி), (4) காகபாதம் (காகத்தின் கால் போன்ற குறி), (5) கூதம் அடிபட்ட இடம் (எல்லாப் புறங்களிலும் சரியான அளவு இல்லாமல் ஒரிடத்தில் உடைந்து மூளியாயிருத்தல்), (6) தூளி (தூசி)படிந்திருத்தல், (7) துஷாரம் (பனிபடர்ந்தாற் போன்ற நிலை), (8) த்ராஸம் (நடுக்கம்), (9) ரந்த்ரம் (துவாரம்-துளை) என்பது அவற்றின் பெயர்கள். (35)

முன் சுலோகத்தில் கூறப்பட்டவைகளுடன், (1) கத்யோதம் (மின்மினிப் பூச்சிக்குறி), (2) மக்ஷிகா (ஈக்குறி), (3) பலவர்ணமான புள்ளிகள், (4) ஸந்தி (முறிந்து போன இரு பகுதிகள் ஒன்றாகச் சேர்த்துவைக்கப்பட்டது போன்ற தோற்றம்), (5) தலையில் பள்ளம் (அதாவது இரத்தினங்களின் சிகரம் (உச்சி-கூர்மையான் உயர்ந்த பாகம்) தாழ்ந்திருத்தல், தலை நிமிர்ந்து நில்லாமல் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு நிற்பது போன்ற நிலை), என்னுமிவையும் தோஷங்களாகும். (36)

எக்காரணங் கொண்டும் இரத்தினங்களில், ஆண்-பெண்-அலி என்னும் பாகுபாடு இடம் பெறாது. (37)

சுய லொஹம்

வஸவண-ம் ராஜகம் தார்ய லெதலும் காம்ஸ்ய ரயவஸ்ய ।
லெஹமகம் க்ரூவ ஷம் செதி லெஹமம்ஸிம்வம் தயாஷ்டயா।

ஹ க்ஷிஹ க்ஷிவ்யஷ்டம் லெஹம லிஜம், லொஸவ்யக்ர வாஷ்டிஷ்டு ।

காரஜம் வ க்ரூஷம் விஷ்யாஸ கலெவ வ்யாத்ர லெதலும் ।
சுயுராரலொஹ்யஷ்டம் காம்ஸ்ய ரயவஸ்ய ராரணம் வ்யுதஸ்து ॥ சஅ ॥

லெஹமகம் க்ரூவ ஷம் வாவி விலெலொவ்ரூடநாஷிஷ்ட ।
ஊவ்யலொஹாநி சகவாரி லெஹரீநி ஸ்ராஹாநி வலி ॥ சக ॥

விஸரவலொஹாந்யநுக்தாநி காம்ஸ்யாதீநீதி கெவல ।

இனி உலோகம்.

பொன், வெள்ளி, செம்பு, பித்தலம், வெண்கலம், இரும்பு, ஈயம், துராக்கட்டை, என்று பிம்பங்களுக்கு ஏற்ற உலோகங்கள் எட்டு. (38½)

பொன்னால் லிங்கம் செய்து பூஜித்தால் இம்மை மறுமை ஸௌக்ய முண்டாம். வெள்ளி, புஷ்டியைத் தரும். செம்பு மக்கட்பேறு தரும். பித்தளையும் அப்படியே. வெண்கலம் ஆயுளையும் நோயற்ற வாழ்வையும் தரும். இரும்பு மரணத்தைக் கொடுக்கும். (40)

ஸீஸம் (ஈயம்), த்ரபு (துராக்கட்டை) இவை: வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் காரியங்களுக்கும், ஏவல் முதலியவற்றை அகற்றும் வேலைக்கும் தகும். (முன்பு கூறியவற்றுள்) முதன்மையான பொன் முதலிய நான்கு உலோகங்கள் சுபமானவை. வெண்கலம் முதலான மற்ற உலோகங்கள் பிசாசங்களுக்கே தகும்-என்பர் சிலர். (41½)

அத² தா³ரூ:

சந்த³நம் தே³வதா³ரூ ஸ்ரீவிவ்ருக்ஷபா:² ॥ சை² ॥

வஹ்நிராஜத³ரூ ஸ்ரீமத³ர்கா வகு²ரவ்ருக்ஷகா: ।
வடு²கம் கணி-காரஞ்ச விவ்ருக்ஷீ தா³ரம் தூ³யம் தூ³யபு ॥ சை³ ॥

கூ³தா³ரவ்ருக்ஷ்ஜா தா³ரம் விஜ்ஞேயா வ்ருக்ஷ ஸ்ரீவ்ருக்ஷா: ।

அத² பூ⁴மி:

தீ³ர்க⁴ கே²தா³ஸ்வரூபாணி தே³ஹிதே³ஹிவாம் பூ⁴மி ॥ சை² ॥
ஸ்ரீக்ஷேத்ரம் ரூக்ஷம் தூ³ர்வா வீதா³ம் கூ³ஷ்டா² ஸ்தி²ரா ச-ஏணி-யெல ।
யவமொத்³ப⁴வஷாணாம் வ-ஏணி-ரூபம் மஹாரெளரவி ॥

இனி மரம்

சந்தன மரம், தேவதாரு (செம்புளிச்செம்மரம்), வன்னி மரம், அரசமரம், இருள்வீடு மரம் அல்லது அகில்மரம், கருங்காலி, அஸநம் (வேங்கை), மாலூரம் (பில்வமரம்), இலுப்பை, மகிழமரம், பத்மகம், கோங்கு மரம் ஆகிய இவற்றுள் அந்தணர் முதலான நான்கு வருணத்தாருக்கும் முறையே மும்மூன்று மரங்கள் ஏற்றவை. (42-43)

இவைகள் லிங்கம் பண்ணுவதற்கேற்ற சுபமான மரங்கள் என அறியப்பட வேண்டும். (43½)

இனி மண்

புண்ணிய தீர்த்தங்கள், புண்ணிய க்ஷேத்திரங்கள், மலைகள், நந்தவனங்கள் மற்ற புண்ணியமான தலங்கள் இவற்றினின்றும், வெண்மையானதும், சிவப்பானதும், மஞ்சள் நிறமுள்ளதும், கருப்பு நிறமுள்ளதுமான மண்ணைக் கொண்டுவந்து பொடியாக்க வேண்டும்.

அத்துடன்; யவம், கோதுமை, உளுந்து, குங்கிலியம், (குக்கில்) அரக்கு, திருவட்டம் பிசின் (மரத்துவெள்ளை), (ஸ்ரீவேஷ்டகம்),

ஶாகஷாஶீவெஷ கஶ்யாதலஜ-ாகாஶ வஸாஂஶகெஷ் ।
கூஷ்ணாரிக்ஷவ்ருவாஂஶெக ஶ்ருஶ்ருணீஂ வவபுவஸ்ருதிஂ ॥சூ॥

கூவிஶ்ராவஷுமவ்யுக வஸெதஶெஷதக ஷுஷ்யெசு ।
காஂ ஶ்ருஂ ஶஷிஷ்ருகாஂ வக்ஷஂ ஸாவஸாஂ ஶ்ராஷிதாஂ வாஂதஂ ॥

ஸ்ருஹீக்வா காஸ்ரயெஷ்டிஜ்ஜஂ வவீஂ ஶுக்ஷணாஷ்டிதிஷ்டி ।
ஸாவஸ்ருஂ ஶொஷயெஷ்டுஜ்ஜெ ஸிஂவஸாவஸ்ருஂ ஸாதிஷ்டி ॥ சஅ

கூவவா கெவஶ்ருஂ ஶ்ரஷ்டீஂ கஷ்டயொஸ்ருஂ விஷ்ருணீஷ்டாதி ।
ஷிஷ்டாஂ வஷுமவ்யாஷ்டிஸ்ரவஸாஸ்ருஂ தயொஷிதாதி ॥ சகூ ॥

ஸ்ருஹீக்வா காஸ்ரயெ ஷ்டிஜ்ஜஂ வவீஂ ஷ்டிவிஷ்டாகதஂ ।
விவவெசு கூஶுவெஸ்ரஜ்ஜெ வக்ஷுஷ்டிஜ்ஜஸ்ரு தஷ்டவெசு ॥ருஅ॥

ஞாழல் (சிவதைவேர்), ஆச்சாமரத்துப் பிசின், (வெள்ளை குங்கிலியம்) இவைகளின்பொடியையும்சமபாகமாகச் சேர்க்கவேணும். குந்துரிக்கத்தின் (குந்துருக்கம் பிசின்) பொடியையும் சிறிதளவு சேர்க்க வேணும். பிறகு அந்தப் பொடிமண் எல்லாவற்றுக்கும் ஏற்றதாகும். (45-46)

பிறகு அந்த மண்ணை, கபிலா (ஒருவகையான பசு)வின் பஞ்சகவ்யத்தினாலும் (பால்— தயிர் — நெய் — மூத்திரம் — சாணம் ஆகிய ஐந்தினுடைய சேர்க்கை), எண்ணையாலும் பிசைந்துத் துகைக்க வேண்டும். அவ்வாறு 15-நாட்கள் வரை துகைக்கப்பட்ட மண்ணைப் பிறகு 1-மாதம் வரை புளிக்குமாறு வைத்திருக்க வேண்டும். (47)

அவ்வாறு பண்படுத்தப்பட்ட மண்ணை எடுத்து, பீடத்துடன் கூடிய லிங்கத்தை லக்ஷணப்படி பண்ணி, சுடாமலே ஒரு மாதம் வெயிலில் உலர்த்த வேண்டும். இது ஆமலிங்கமாகும். ஆமம்— சுடப்படாதது. (48)

அல்லது, சுத்தமான மண்ணைமட்டும் கொணர்ந்து, வேலைக்கு ஏற்றதாகும்படி பொடி செய்து, பஞ்சகவ்யத்தினாலும் ஜலத்தினாலும் பிசைந்து, ஒரு மாதம் வைத்திருந்து, பிறகு அந்த மண்ணால் பீடத்

க்ருக்வா காரயேல்லிங்கம் ஸ்தபதிம் யொஹவட்விஹிதம்।
ஜ்ஞாத்வா விதிவதாதிவ்ய மொஷதைர்முதிதம் நரம்॥ 49॥

ஸித்தாதாவாதிவெ யதெண-ஸ்தெபுவ்யஸ்வம் யதொதிதம்।
ஜ்ஞாத்வா வாஸுதிபுகம்-ஸ்வம் வவ-ஸ்வில்விவ்ருதம் வதா॥ 50॥

ஜ்ஞாத்வை தொதாத்தாதி ஜ்வை வம்வ்ருவ்ய சாரயேத்।
வைகுதம் மொதயம் வைஷ்டாதம் மொதம் வதாதுகம்॥

காவதீதஸ்ய ஜ்ஞாதி க்ருஜ்ய காம் வ்ருதிவாவாரம்।
வெதெதெஷாம் வீரிகா க்ஷய-ர் கூவ்ருஜ்ஜம் கதாவதெ॥

துடன் இஷ்டமான அளவு லிங்கத்தைப் பண்ணி, தேர்ந்தவர்களைக் கொண்டு நெருப்பிலிட்டுச் சுட வேண்டும். இது பக்வலிங்கமாகும். (பக்வம்-சுடப்பட்டது.) (49—50)

மரத்தினால் சூலம் பண்ணி இரும்புப் பட்டங்களால் அலங்கரித்து முறைப்படி மண்ணை அதன் மேல் பூசி உலர்த்த வேண்டும். இது மிச்ரலிங்கம். (மிச்ரம்-கலப்புற்றது.) (51)

சுவர் போன்ற இடங்களில் தகுந்த வர்ணங்களால் முறைப்படி பிம்பத்தை (சித்திரத்தை) வரைய வேண்டும். இது லேக்ய பிம்பம் எனப்படும். (லேக்யம்-எழுதப்பட்டது.) மண்ணாலானதும், மரத்தினாலானதுமாகிய லிங்கம் எக்காலமும் எல்லாவிதமான சித்தியையும் கொடுக்கவல்லது. (52)

மண்ணாலான லிங்கத்தில், நடுவில் பொன்னையும், இரத்தினங்களையும் வைத்துப் பண்ணவேண்டும். மணலிறை செய்யப்பட்டதும், பசுவின் சாணத்தினால் செய்யப்பட்டதும், மாவு — சோறு வெல்லம் இவற்றால் செய்யப்பட்டதும், பழங்கள், வெண்ணை இவற்றால் செய்யப்பட்டதுமான லிங்கம் தினந்தோறும் பண்ணப்பட்டுப் பூஜை முடிந்தவுடன் கைவிடப்பட வேண்டியதாகும். இவற்றுக்குப் பீடம் செய்ய வேண்டியதில்லை. அதற்கான

ெஷாம் ரீவணே ஊாம் வா ம ஸிரோவத-ோஷிகூ ।
ெஷாம் காமம் ஈஹ்ஹ்ஹ்

ராஜதீ தாரஜா வா வலுாச ரெஷுலுயோயஃ கூதாச।
காலெவடா வாலெஹஹர்ஹ சிவுசாலிஸ்ஹ தாரவெ॥

ஊதி மீஹூரதே உதரலாடெ
விம்வாஷியாயநஷ்டி தாரா
வாயலோயோயஃ।

அல்லது வெள்ளியினலும் தாம்ரத்தினலும் இரத்தின லிங்கங் களுக்குப் பீடம் அமைக்கலாம். பொன் - வெள்ளி - தாம்ரம் - இவை களால் செய்யப்படும் பீடங்கள் முறையே, உத்தமம் - மத்யமம் - அதமம் - எனப்படும். லோஹங்களில் உயர்ந்ததுக்குத் தாழ்ந்த லோஹத்தாலும், மரத்தினல் செய்யப்பட்ட லிங்கத்துக்குச் செங்கல்லி னலும் பீடம் அமைத்தல் வேண்டும். (58)

சில்பரத்நம் இரண்டாம் பாகத்தில்
பிம்பம் முதலியவற்றைச் செய்யும் வகையைக் கூறும்
முதல் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ:

சுய ஸ்ரீகண்டாசார்யாய நம:

சுய ஸ்ரீமதுகேச்வராய நம:

ஸ ஓவாஸ்தாஸ்ரு வ்யாதம் ஸ்ருதோஷாஸ்மிதம் தத:।
தர்தீயம் வஜ்ரதஸ்யாதம் வதாம்யம் வ்யஷவாஹதம் ॥ ச ॥

வதாம் தர்தஸ்ருதில் ஸ்ரு ம்மாயா உதம்வாம் ।
வஷ்டம் க்ரவாராரிம் வ்யாஸ் தாதம் கல்யாணவாஹம் ॥ உ ॥

சுயாதாரீஸ்வரம் வஸ்ராஸ் தமஹ ஜஜஹா தயா ।
வகாஷிமம் வாஸ்வாதம் கம்ரும் மாதிமம் வ்ருதம் ॥ கூ ॥

சுயாதாராயணம் வஸ்ராஸ் விக்ஷாடாதம் தம: வாம் ।

இரண்டாம் அத்தியாயம்.

லிங்கலக்ஷணம்.

சைவத்தில் ஹான்றிய முன்னோர்களால் பதினெட்டு வகை லிங்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாவது—ஸகாஸநம் (சுகமாக வீற்றிருக்குமாறு). இரண்டாவது—முருகன் பார்வதி இவர்களுடன் கூடியது. மூன்றாவது பிறைசூடிய முடியுடையவாறு. நான்காவது—விருஷப வாஹனம். ஐந்தாவது—நடநமாடியவாறு. ஆறாவது—கங்கையைத் தாங்கியவாறு. ஏழாவது—மூன்று புரமெரித்தவாறு. எட்டாவது—கலியாணசுந்தரம். ஒன்பதாவது—அர்த்தநாரீச்வரம். பத்தாவது—கஜஹா (யானையைக் கொன்றவர்). பதினொன்றாவது—பாசுபதம். பன்னிரண்டாவது—கங்காளம். பதின்

வஜ்ரஸ்ரவஸாதத்ரு தக்ஷிணாதக்ஷிணாமெவ ச ॥ ச ॥

தத: கூர்மாநி ஸ்ரீதக்ஷி-ஸ்ரு
ஸ்ரீஹஸ்தாக்ஷம் வ்ரஜேத் ।
வாவம் ஸ்ரீஹ்ரீவம் வ-ஞ்ஜெவெஃ
வெராக்ஷம் ஸெவவாராயணெஃ ॥ ஞ ॥

சுய ஸ்ரீம்வம் து ஸ்ரீயம் ஸ்ரீஷ்டிம் வகரம் தயா ।
ஸ்ரீருஸ்ரெஷ்டி ச,
தஸ்ரீம்வம் சுவரூபு வயம் தயா ॥ கூ ॥

வராவரூபிணி ஸ்ரீதயா,
தத்ரீவங்ஃ வரஃஸ்ரு-ஸ்ரீதெ ।
ஸ்ரீஷ்டிம் கெவரும் ஸ்ரீஜம், சுரஸ்ரீவயவாந்ரிதம் ॥ எ ॥

தஸ்ரெவ ஸ்ரீ ரூயஃரூஜஃஸ்ரு-ஃ ஜ்ஞய-ஸ்ரீ ஸ்ரீகஃ ।

மூன்றாவது — அர்த்த நாராயணம். பதினான்காவது — பிக்ஷாடனர். பதினைந்தாவது—சண்டேச்வர ப்ரஸாதனம். பதினாறாவது—தக்ஷிணா மூர்த்தி. பதினேழாவது—காலாரி மூர்த்தி (நமோ வென்ற வடிவம்). பதினெட்டாவது—லிங்கோத்பவம், என்றவாறு. (1—5)

இனி பிம்பத்தைக் கூறுவோம். நிஷ்களம்—ஸகலம்—மிச்ரம்—என்று பொதுவாக பிம்பம் மூவகையானது. மேலும்-அசலம் (அசைவற்றது), சலம்(அசைவது), சலாசலம் (இரண்டு விதமாகவும் இருப்பது), என்று மூவகைப்படும்.

இனி அதை விரித்துரைக்கிறோம். "நிஷ்களம்" என்பது கேவலம் லிங்கம் மாத்திரமாகும். மற்றது அவயவங்களுடன் கூடியது. இதுவே ஸகலமாகும். அதுவே (ஸகலமே) "சித்திரம்" (1) "அர்த்த

• "காஹாயம் கூய-ஸ்ரீதக்ஷு (சுற்றளவில் பாதியே காணப்படுவது அர்த்தசித்ரம்.) ஸ்ரீவஹீய ஸ்ரீதக்ஷுஃரூஸ்ரீவஹ்ம்—ஸரஸ்வதிமஹால் வெளியீடு.

விக்ரஹாவஹ ஸ்யாத்தெவு ஸ்தாபநாதிகுதொணத்ய ॥ அ ॥

லக்ஷணம் க்ரியயம் ஜ்ஞேயம்.

ஸிரூபகதண முகூஷித்து ।

ஸிரூபவும் ஸ்வயிம்ப வ்யாஜ.

கூபரூர்திகளேவ்யுதெ ॥ கூ ॥

நியிகோம்ஹரூகிஷ்டாதி லக்ஷ ஸ்தாநஸ்தாநகஃ ।
கூகூபா வ்ரதிஷ்டிதம் ஸிவ உத்தம வரிகீர்திதே ॥ ஏ ॥

வீரிகொவரி லம்ஹ்ரவ வ-ஜ்ஜிதம் வரு ஹெ ஹி ।
ஹெளயதே வாயிபுவ் ஹெரும் வஜ்ரரம் கூபரும் ஸ்ரூலே ॥

சித்திரம்" (2) "சித்திராபாஸம்" (3) என மூவகைப்படும். எல்லா அவயவங்களுடனும் கூடியது முதல் வகை. பாதி உடலே காணப்படுவது இரண்டாவது வகை. அதுவுமன்றிக்கே எழுதப்படுவது மூன்றாவது வகை. இவை முறையே உத்தமம்-மத்யமம்-அதமம்-எனப்படும். (7, 8)

இரண்டு வகைகளும் கலந்தது மிச்ர லிங்கமாகும். இதுவே முகலிங்கமெனப்படும். அதாவது—முதல் வகையான நிஷ்கலலிங்கத்திலேயே சித்திரம் வரைவதுபோல் ரேகைகளால் உருவத்தைக் காட்டுவது என்றபடி.

இனி, அசலம்-சலம்-சலாசலம்-இவை விளக்கப்படுகின்றன: (9)

நிதி கும்பம் இவற்றைப் பிரதிஷ்டை செய்வது முதலாக முறைப்படி சடங்குகள் யாவற்றையும் செவ்வனே செய்து, ப்ரதிஷ்டை பண்ணப்படும் பிம்பம் "அசலம்" (அசைவற்றது) எனப்படும்.

பீடத்தின் மேல் வைத்துப் பூஜிக்கப் படுவது "சலம்" (அசைவது). கண்ணாடி, மண், கல், இவைகளால் தனித்தனியாகவோ, அல்லது ஒன்றிரண்டொன்று கலந்தோ அசல பிம்பம் செய்யப்படும். இது சுபமானது. (11)

ரத்தஞ்ச தாரஞ்ச லோகம் க்ருயதெனத் நுலம் ஸாலம்।
வாதாவணை ஸாதிவிதை-வ்யம் வடாதெள தலுயாவமிழ் ॥ கட ॥

லிம்பம், மலக்ருஹவ்யாவஸ்தாயிஷ்ட நிவேஷ்டவிஃ।
தாவளாதாஜ்ஞெயஸ்தாவி கயா ஏதாஜ்ஞெயெஸ்வி ॥ கக ॥

யஜமானொவுளாதெள லெவம் ருவவியம் வ்ருதிழ்।

மலக்வ்யாவெ விஹத்தே வ்ருஸ்ய தவதெ.
தெதுவ்ருவவெனெ வாதெவ.

இரத்தினங்கள் - மரம் - உலோகங்கள் - இவற்றால் செய்யப்படும் "சலபிம்பம்" சுபமானது. தாதுப் பொருள்கள், பலவகை வர்ணங்கள்—இவற்றால், துணி முதலியவற்றில் எழுதப்படுவது 'சலாசலம்' (அசைந்தும் அசையாமலும் இருப்பது) எனப்படும். (12)

லிங்கமானது :- கர்ப்பக்ருஹம், துவாரம் (வாயில்), கம்பம், அதிஷ்டானம், கிஷ்கு, தாலம் மானங்குலங்கள், மாத்ராங்குலங்கள், யஜமானுடைய உயரம், இவ்வாற்றால் ஒன்பது விதமாகும். அதாவது, ஒரு லிங்கம் புதிதாக நிர்மாணம் செய்யப்படும் பொழுது அதன் உயரம் "இவ்வளவு இருக்கவேண்டும்" என்று தீர்மானம் செய்வதற்கான ஆதாரங்கள் மேற்கூறப்பட்டவை. இவற்றில் ஏதேனு மொன்றைப்பற்றி லிங்கம் நிர்மாணிக்கப்பட வேண்டும். அடுத்து வரும் விவரணங்களால் இதை அறியலாகும். (13)

முறைப்படி, கர்ப்பக்ருஹத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு லிங்கத்தின் உயரத்தின் அளவை நிர்ணயம் செய்யும் வகை முதலில் விளக்கப்படுகின்றது. கர்ப்பக்ருஹத்தின் அகலத்தை, ஐந்து-ஒன்பது—இரண்டு—ஆகிய எண்களால் வகுக்கவேண்டும். அவற்றில் முறையே, மூன்று—ஐந்து—ஒரு—பாகங்கொண்டனவாக லிங்கங்கள் அமைக்கப்படவேண்டும். அதாவது கர்ப்பக்ருஹத்தின் அகலத்தை ஐந்தால் வகுத்தால் ஈவின் மூன்று பாகங்கள் லிங்கத்தின் உயரத்தின் அளவாகும். அதை ஒன்பதால் வகுத்தால், ஈவின் ஐந்து

யிர்ஜாதி தீர்ணி தெஷு க்ருஷ்ணாவிதெ-
ஷுகூலாதெ மிர்லாதெஃ।
தெ தெ தாதி வ்ருஷ்ணவம் தவ, யாணயுதம்
தத்தே வாதஹீதம்

பாகங்கள் லிங்கத்தின் உயரத்தின் அளவாகும். அதை இரண்டால் வகுத்தால் ஈவின் ஒரு பாகம் லிங்கத்தின் உயரத்தின் அளவாகும். இவ்வாறு மூன்று அளவுகள் முதன்மையாக எடுக்கக் கூடியவை. அவை ஒவ்வொன்றையும் மூன்று பாகமாக்கவேண்டும். அதில் ஒரு பாகம் ஒரு அளவு. இரண்டு பாகம் சேர்ந்தது மற்றொரு அளவு. இவ்வாருக அவை ஒவ்வொன்றும் மும்மூன்று வகையாகின்றன, அதனால் ஒன்பதாக :உயர்ந்தன. உதாகரணமாக :— ஒரு கர்ப்ப க்ருஹத்தின் அகலம் ஒன்பது அடி என்று வைத்துக்கொள்வோம். இதை ஐந்தாலும்—ஒன்பதாலும்—இரண்டாலும் வகுக்கவேண்டும். ஐந்தால் வருத்தால் 1-அடி 9½-அங்குலம் (21½-அங்குலம்) ஒரு பாகத்தில் வருகின்றது. இதை மூன்று மடங்காக்கினால் (64½-அங்குலம்) ஐந்து அடி நாலரை அங்குலம் ஆகின்றது. இது ஒரு அளவு. இந்த 64½-அங்குலத்தை மூன்றால் வகுத்தால் 21½-அங்குலம் ஒரு பாக மாகின்றது. இது மற்றொரு அளவு. இந்த 21½-அங்குலம் கொண்ட பாகம் இரண்டு சேர்ந்தால் 43 அங்குலம் ஆகின்றது. இது மற்றொரு அளவு. ஆக கர்ப்பக்ருஹத்தின் அகலத்தை ஐந்தால் வகுக்கும் முறையில்—லிங்கத்தின் உயரத்திற்கு மூன்று அளவுகள் கூறப்பட்டன. (21½—43—64½ அங்குலங்களுள்ளவை).*

இனி ஒன்பதடி அகலமுள்ள கர்ப்பக்ருஹத்தை ஒன்பதால் வகுத்தால் ஒரு அடி ஒருபாகமாகின்றது. இதில் ஐந்து பாகம் (ஐந்து அடி) லிங்கத்தின் உயரமாகும். இந்த அந்து அடியை மூன்றால் வகுத்தால் 20-அங்குலம் ஒரு பாகமாகின்றது, இது மற்றொரு அளவாகும். இந்த இருபது அங்குலம் உள்ள இரண்டு பாகங்கள் சேர்ந்தால் நாற்பது அங்குலமாகும். இதுவும் மற்றொரு அளவா

---

* இங்கு ½ அங்குலம் மிகுதியாக உள்ளது. அதையும் கூற செய்துகொள்க.

வாராஹீ யெனுகாமகாஹ்வா ஒவிஹாணஹவிதெ
கதுவெனுதாணி ॥ கச ॥

கும். இவ்வாருக கர்பக்ருஹத்தின் அகலத்தை ஒன்பதால் வகுத் தால் அதனல் லிங்கத்தின் உயரத்திற்கு மூன்று அளவுகள் கூறப் பட்டன (20—40—60-அங்குலங்களுள்ளவை).

இனி ஒன்பதடி அகலமுள்ள அதே கர்ப்பக்ருஹத்தை இரண் டால் வகுத்தால் 4½-அடி (54-அங்குலம்) ஒரு பாகமாகிறது. இது ஒரு அளவாகும். இந்த 54-அங்குலத்தை மூன்றல் வகுத்தால் 18 அங்குலம் ஒரு பாகமாகிறது. இது மற்றொரு அளவாகும். இந்த 18-அங்குலம் கொண்ட இரண்டு பாகம் 36-அங்குலமாகிறது. இது மற்றொரு அளவாகும் இவ்வாருக கர்ப்பக்ருஹத்தின் அகலத் தை இரண்டால் வகுப்பதனல் மூன்று அளவுகள் லிங்கத்தின் உயரத்திற்கேற்றதாகக் கூறப்பட்டன. (18—36—54-அங்குலங் களுள்ளவை.)

இத்தால் ஒன்பதடி அகலமுள்ள ஒரு கர்ப்பக்ருஹத்தில் லிங்கம் அமைக்க வேண்டுமானல், கர்ப்பக்ருஹத்தின் அகலத்தையே லிங்கத் தின் உயரத்தை நிர்ணயிப்பதற்கு ஆதாரமாகக் கொள்வதானல் ஒனபது அளவுகளில் அதை அமைக்கலாம். அங்குலங்களால் 18-20 21½; 36-40-43; 54-60-64½; என்று அவை கணக்கிடப்படும்— என்று தேறிற்று. இது போலவே வெவ்வேறு அளவுள்ள கர்ப்ப க்ருஹங்களின் அகலத்தையும் ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை ஒன்பது வகைகளில் நிர்ணயிக்கும் விதத்தை ஊகித் தறிந்து கொள்ளவேண்டும்.

இனி கர்ப்பக்ருஹத்தின் வாயிற்படி (த்வாரம்) யின் அகலத்தை ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயிக்கும் வகை விளக்கப்படுகின்றது. இதில் ஐந்து வகை உண்டு. வாயிற் படியின் அகலத்துக்குச் சமமாகவே லிங்கத்தின் உயரத்தை அமைப் பது. அதில் கால் பங்கு அதிகம் சேர்த்தும் குறைத்தும் மற்றும் இரண்டு அளவுகள் உண்டு. ஆக மூன்று விதமாயிற்று. மேலும் இரண்டு அளவுகள் உண்டு. அவைகளாவன:- கர்ப்பக்ருஹத்தின்

*வராஹாதிஷ்டாகாவ தயா வெஷ்டவானுதர்ஶ லாடமகஃ।

வாயிற்படியின் அகலத்தை மூன்று பாகங்களாக்கி ஒரு பாகம் ஒரு அளவாகவும், இரண்டு பாகங்கள் மற்றொரு அளவாகவும் கொள்ள வேண்டும். அதாவது:—

ஒரு கர்ப்பக்ருஹத்தின் வாயிற்படி மூன்றடி அகலம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யும் வகைகள் ஐந்து:—

(1) மூன்றடி உயரமே லிங்கத்தை அமைப்பது.

(2) மூன்றேமுக்கால் அடி (3¼ அடி) உயரமாக அமைப்பது.

(3) இரண்டேகால் (2¼ அடி) அடி உயரம் அமைப்பது.

(4) அகலத்தை மூன்றால் வகுத்து இரண்டு பாகத்தின் உயரம் அதாவது இரண்டு அடி உயரம் அமைப்பது.

(5) அகலத்தை மூன்றால் வகுத்து ஒரு பாகம் உயரம்—ஒரு அடி உயரம் லிங்கத்தை அமைப்பது.

இதுபோல்— பலவிதமான அகலமுள்ள வாயிற்படிகளின் அகலத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு லிங்கத்தின் உயரத்தை ஐந்து வகைகளில் நிர்ணயம் செய்யும் வகைகளை ஊஹித்தறிக. (14)

அவ்வாறே ப்ராஸாதத்தின் அளவைக் கொண்டும் லிங்கத்தின் உயரத்தைத் தீர்மானிக்கலாம். ப்ராஸாதம் என்பது விமானம்:—

அதில்— நாலிலொரு பாகம், ஐந்திலொரு பாகம், ஆறிலொரு பாகம்-லிங்கத்தின் உயரம் இருக்கலாம். உதாகரணமாக:— ஒரு விமானத்தின் அகலம் 20-அடி என்று வைத்துக்கொள்வோம். அதில் நாலிலொரு பாகம் 5-அடி இது ஒரு அளவாகும். ஐந்திலொரு பாகம் 4-அடி. இது மற்றொரு அளவாகும். ஆறிலொரு பாகம்—

---

* வராஹாதாரவாஷ்டாயிஷ்டாக ஷ்டாதொவ்வமலாடெ:- என்று வ்ராஹீய ஸ்ருகஷ்ஸாவ்ருத்தில் விமானத்தின் அகலமே ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

லிம்மாயாரொऽயவர ஜ்ஞேயः, வ்ருகாரொऽதஸ்ஸ கர்ணிதெ ॥

மஸ-ஸ்மெஹவிமாநாயாம் லிம்மாயாऽம் வ்ருகலக்ஷணெசா।

3-அடி 4-அங்குலம். இதுவும் ஒரு அளவாகும். ஆக, 20-அடி அகல முள்ள விமானத்தின் அகலத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு லிங்கத்தின் உயரத்தைத் தீர்மானிப்பதாலல் (1) 3-அடி-4அங்குலம், (2) 4-அடி, (3) 5-அடி என மூன்று வகைகள் உண்டு. இது போல் பலவிதமுள்ள விமானங்களின் அகலங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு லிங்கங்களின் உயரத்தை நிர்ணயிக்கும் வகைகளை ஊகித்துக்கொள்ள வேண்டும். மற்றும் சில விதங்கள் கூறப்படு கின்றன. (15)

கர்ப்பக்ருஹத்தின் அகலத்தில் பாதியளவு லிங்கத்தின் உயரம் இருக்கலாம்.

த்வாரம் (வாயிற்படி), அதிஷ்டானம் (மூலபேரம் ஸ்தாபிப்பதற் காக உபபீடத்தின் மேல் அமைக்கப்படும் மேடை போன்ற உயர மான பகுதி), பாதம் (கர்ப்பக்ருஹத்தின் சுவர்களில் வெளிப்புறம் கம்பம் போல் காண்பிக்கப்பட்ட பகுதி) இவற்றிற்குச் சமமாகவும், கால் பாகம் அதிகமாகவும் அல்லது குறைவாகவும் லிங்கத்தின் உயரம் இருக்கலாம். அதாவது:— கர்ப்பக்ருஹத்து வாயிற்படி வாசலின் உயரம் 8-அடி என்று வைத்துக் கொள்வோம். அந்த கர்ப்பக்ருஹத்தில் ஸ்தாபிக்கப்படும் லிங்கத்தின் உயரமும் 8-அடியே இருக்கலாம். இது ஒரு அளவு. அல்லது அதில் ¼ பாகம் குறை வாக அமைக்கலாம். 8-அடியில் கால் பாகமாகிய 2-அடி போக ஆக 6-அடி லிங்கத்தின் உயரம் இருக்கலாம். இது மற்றொரு அளவு. அல்லது 8-அடியில் கால் பாகமான 2-அடியைக் கூட்டி 10-அடி லிங்கத்தின் உயரமாக இருக்கலாம். இது மூன்றாவது அளவு. இவ் வாறே அதிஷ்டானத்தின் உயரத்தையும் ஆதாரமாக வைத்து

கொண்டு அதற்குச் சமமாகவும், கால் பாகம் குறைவாகவும், கால் பாகம் கூடவும், இப்படியாக மூன்றளவுகள் எடுத்து லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யவேண்டும். அப்படியே பாதத்தின் (பாதம் எனப்படுவது கம்பம் அல்லது ஸ்தம்பம் என்பது. கர்ப்பக் ருஹத்து விமானத்தின். அடிப்புறத்தில் வெளிப்பக்கம்—கம்பங்கள் போல் காணப்படும் பாகம். இவ்விடத்தில் மற்ற இடங்களில் உள்ள தூண்களோ ஆதாரமாகக் கொள்ளக்கூடாது) உயரத்திலும் மூன்று வகைகள் கண்டுகொள்வது. (16)

மேலும், இவற்றின் மத்திய பாகத்தை நான்கால் வகுத்தால் அதனால் கிடைக்கும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அளவாகும். ஆக ஒவ்வொன்றும் ஒன்பது விதமாகும். அதாவது;— த்வாரத்தின் உயரம் 8-அடி என்று முன் சுலோகத்தின் உரையில் கூறியபடியே வைத்துக்கொள்வோம். அத்துடன் கால் பங்கு கூட்டி 10-அடியாக ஒரு அளவும், கால் பங்கு குறைத்து 6-அடியாக ஒரு அளவும் முன் போலவே வைத்துக்கொள்வோம். இப்பொழுது கிடைத்த மூன்று அளவுகளில் 6-அடி குறைந்தபக்ஷமாகவும், 8-அடி மத்யமமாகவும் 10-அடி உயர்ந்தபக்ஷ அளவாகவும் உள்ளது. இவற்றில் ஒவ்வொன்றின் இடைப்பாகத்தை நான்கால் வகுக்கவேண்டும். 6-க்கும் 8-க்கும் இடையில் 2-அடி இருக்கிறது. இதை நாலால் வகுத்தால் ஒவ்வொரு பாகமும் அரை அடி கொண்டதாகும். அவ்வாறே 8 அடிக்கும் 10 அடிக்கும் இடையிலுள்ள 2 அடியையும் நான்கால் வகுத்தால் இவ்வாறே அரை அடி கொண்ட நான்கு பாகங்கள் கிடைக்கும். அதனால் மொத்தம் ஒன்பது அளவுகள் கிடைக்கின்றன. அவை :— 6, 6½, 7, 7½, 8, 8½, 9, 9½, 10—என்னும் அடிக் கணக்கில் வரும்.

வ்யாஜ்ஜ்க்ரா தத்தஹிம்ஸொ ஹ்யாதாகம் நவயா ஹ்ரஜ்கு ॥

ஸீம்ரா நி வாயக கூராஷி வடொ நி தாஷ்ரீ-
ஹவஷ்ரானிஷா நி சரணாம்ஸ லியூக்கணவ்ரா !

---

8 அடி உயரமுள்ள கர்ப்பக்ருஹ த்வாரத்தின் உயரத்தை ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யும் வகையில் மேற் கூறியபடி ஒன்பது அளவுகள் உள்ளன. அதுபோலவே அதிஷ்டானத்தினுடையவும், பாதத்தினுடையவும் உயரத்தை ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்வதிலும் ஒன்பது அளவுகள் கிடைக்கும் வகையை அறிந்துகொள்ள வேண்டும் (17)

இந்த சுலோகத்தில், அந்தணர் முதலிய நான்கு வருணத்தவருக்கும் ஏற்றதாக. தனித்தனியே லிங்கத்தின் உயரம், ஹஸ்தத்தை (முழம்) ஆதாரமாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும் வகை விளக்கப்படுகின்றது. கீழ் 13-வது சுலோகத்தில் சொல்லிய வரிசைக் கிரமத்தில் கர்ப்பக்ருஹம்—த்வாரம்—ஸ்தம்பம்—அதிஷ்டானம் என்னும் நான்கு முடிந்தது இதுவரை. இனி "கிஷ்கு" என்று கூறப்பட்ட ஐந்தாவது வகை விளக்கப்படுகிறது. கிஷ்கு என்பதே ஹஸ்தம். (முழம்). அந்தணர் முதலான நான்கு வருணத்தவருக்கும் ஏற்றதாகத் தனித் தனியே இதில் லிங்கத்தின் உயரம் நிர்ணயிக்கப்படுகின்றது. ஐந்து முழம் உயரமுள்ளது ஒரு அளவு. ஒன்றேமுக்கால் (1¼) முழம் மற்றொரு அளவு. இவ்விரண்டுக்கு மிடையில் வரிசையாகக் கால் கால் பாகம் குறைத்து ஒவ்வொரு அளவாக எடுத்துக் கொண்டே போனால் பதினைந்து அளவுகள் கிடைக்கின்றன. அவற்றில் முதல் வருணத்தவருக்கு ஐந்தும், மற்ற மூன்று வருணத்தவருக்கும் முறையே மும்மூன்றளவுகளும் தகுந்தவை. அதெவ்வாறெனில் :—

வஸ்வங்கோபாம் ருவலஞ்ஜோஷ வதேஷ்வாமா
வஜோஷ்டி வாவக ஜமத்ஸரிஷம்வுகாபி ॥ கஅ ॥

வரிசை எண்.	லிங்கத்தின் உயரம் ½ பங்காகக் குறைத்தல்.			
(1)	5	முழம்	உயரம்	முதல் ஐந்து அளவுகள்.
(2)	4½	,,	,,	
(3)	4½	,,	,,	
(4)	4½	,,	,,	
(5)	4	,,	,,	
(6)	3½	,,	,,	அடுத்த மூன்றளவுகள்.
(7)	3½	,,	,,	
(8)	3½	,,	,,	
(9)	3	,,	,,	அடுத்த மூன்றளவுகள்.
(10)	2½	,,	,,	
(11)	2½	,,	,,	
(12)	2½	,,	,,	அடுத்த மூன்றளவுகள்.
(13)	2	,,	,,	
(14)	1½	,,	,,	

இதில் முதல் ஐந்து அளவுகள் அந்தணர்களுக் கேற்றவை. இந்த ஐந்து அளவுகளில் ஏதேனுமொன்றை லிங்கத்தின் உயரமாகக் கொண்டு அந்தணர்கள் வழிபாடு செய்யலாம்

ஸம்வூம்ஶகூரூகூ தஹ்ரஸதெத ஹஜுயொ
வெ வெவெகஉ வூதஸ்விஜொஉகஸ்ஸொத்துயொஃ ஸஸ்ஸஃ।

என்றவாறு. அடுத்த மும்மூன்றளவுகளும் முறையே மற்ற மூன்று வருணத்தவருக்கும் ஏற்றவை. அதாவது தத்தமக்கென வகுக்கப் பட்ட மும்மூன்றளவுகளுள் ஏதேனுமொன்றை லிங்கத்தின் உயர மாக அமைத்துக்கொண்டு அவரவர்கள் வழிபாடு நடத்துதல் தகுதி யுடைத்தென்றவாறு. இதுபோன்ற இடங்களில் சுலோகங்களின் எழுத்துக்களுடைய எண்ணிக்கை கெடாமல் சரியாக வருவதற்காக சூலாசிரியர் சங்கேதச் சொற்களாலேயே எண்களைக் குறிப்பிடுகின் றார். மொழி பெயர்ப்பில் அந்தந்த சங்கேதச் சொற்களினின்றும் கிடைத்த எண்களே ஆங்காங்கு தரப்படுகின்றன. சங்கேதச் சொற் களின் விவரங்கள் அததற்கேற்ற பொருளுடன் இந்நூலிலேயே மற்றோரிடத்தில் அநுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளன. (18)

முன் சுலோகத்தில் கடைசியாகக் கூறப்பட்ட அளவு 1½ அடி உயரமாகும். இதனிலும் கால்பங்கு குறைத்து முன்போலவே மற் றொரு அளவும், அவ்வாறே மற்றும் கால் கால் பங்கு குறைத்து மேலும் இரண்டு அளவுகளும் எடுக்கவேண்டும். இவ்வாறாக மூன்றளவுகள் கிடைக்கின்றன. அவற்றுள் முதலிரண்டளவுகள் *அநுலோமர்களுக்கும், மூன்றுவது †பிரதிலோமர்களுக்கும் ஏற்ற தாகும். அதாவது — 1½ அடியில் கால் பங்கு குறைத்தால் 1¼ அடி யும், அதிலும் கால் பங்கு குறைத்தால் 1 அடியும் ஆக இரண்டு அளவுகள் கிடைக்கின்றன. அதிலும் கால் பங்கு குறைத்தால் 1 அடியுள்ளதாக மற்றோரளவு கிடைக்கின்றது. இவற்றில் 1¼, 1½ அடியுள்ள இரண்டளவுகள் அநுலோமர்களுடைய பூஜைக்கான லிங்கங்களின் உயரத்திற்கேற்றவை. இவ் விரண்டில் ஏதேனுமொரு அளவை லிங்கத்திற்கு ஏற்று அநுலோமர்கள் பூஜை செய்யலா

---

*அநுலோமர்—உயர்ந்த ஜாதி ஆணுக்கும் தாழ்ந்த ஜாதிப் பெண்ணுக்கும் பிறந்தவர்.

†பிரதிலோமர்—தாழ்ந்த ஜாதி ஆணுக்கும் உயர்ந்த ஜாதிப் பெண்ணுக்கும் பிறந்தவர்.

താരകാസുരനാമാനം വീരവീര്യം വരപ്രദം
ത്രൈലോക്യകണ്ടകം ദൈത്യം ഭൈരവസ്തമഘാതയത് ॥ ൪൫ ॥

ക്രമാദ്ധ്വം ഭവതാം നവഭവസ്യാജ്ഞം
ശിംഭം വിധേയം തദഭൈരവേഃ !
ഭവദ്ഭിരിഷ്ടം വരയേശ്വരാജ്ഞയാ
ശിംഭം ഉദ്വഹ്യതാം വിധിഭവേണ ॥ ൪൬ ॥

ഭൈരവേണ വധൂഭവസ്യകരണേ ശിംഭം
ദീക്ഷാണശിംഭം ച ഭവാഷ്ടഭവദ്ഭിഃ !

മെന്നവാറു. മൂന്നുവതു അളവു 1 അടിയുള്ളതു. ഇവ് വണ്ണിൽ ലിംഗത്തിന്റെ ഉയരത്തെ അമൈത്തു പ്രതിലോമർക്കൾ പൂജിക്കലാ മെന്നവാറു. ഒരു മുഴം തൊടങ്കി ഐന്തു മുഴം വരൈയിലുള്ള അളവുകളൈ അനുലോമർ—പ്രതിലോമർക്കൾ, നാന്കു വരുണത്തവർ കൾ ഇവർകളുക്കേറ്റതാക ഒവ്വൊരു മുഴം ഏറ്റിക്കൊണ്ടേ ചെന്റു അമൈത്തലും തകും. അതാവതു :- അനുലോമർ—പ്രതിലോ മർ—1 മുഴ ഉയരം ലിംഗത്തിന്റെ ഉയരം അമൈത്തുപ് പൂജിക്കലാം. അടുത്ത അളവു 2 അടി ഉയരം. അതർകടുത്തതു 3 അടി. പിറകു 4 അടി. മുടിവിൽ 5 അടി. ഇന്ത നാന്കു അളവുകൾ മുറൈയേ അന്തണർ ഈരുക ഉള്ള നാന്കു വരുണത്തവരുക്കും ഏറ്റവൈ. (19)

ഒരു മുഴം തൊടങ്കി ഒന്പതു മുഴം വരൈ ലിംഗത്തിന്റെ ഉയരം അമൈയും. മാനിടർകൾ, അസുരർകൾ, തേവർകൾ, ഇവ് വിനങ്കൾ മുറൈപ്പടി പൈ അളവുകളുൾ തത്തമക്കേറ്റവറ്റൈ എടുത്തുക് കൊൾളവേണ്ടും. അവറ്റുൾ മുതലാവതാക മനിതവർക്കത്തിന്റെ അളവു, ഒരു മുഴം ഉയരത്തിലിരുന്തു ഐന്തു മുഴം ഉയരം വരൈ. മുൻ ശ്ലോകത്തിൽ കൂറിയപടി ഉയരമുള്ള ലിംഗം അനുലോമർ—പ്രതിലോമർകളുക്കും, മറ്റ നാന്കു അളവുകൾ (2—3—4—5 മുഴം ഉൾളവൈ) മുറൈയേ അന്തണർ ഈരുകളുൾള നാന്കു വരുണത്തവരുക്കും ഏറ്റതാം. (20)

അസുരർക്കു ആറു മുഴം, അല്ലതുഏഴു മുഴം ഉയരമുള്ള ലിംഗം പൂജൈ ചെയ്വതർകേറ്റതാകും. തേവർകളുക്കു, 8 മുഴം, അല്ലതു

தெவாதியெர்க்குவத்குலெடகூடி
யிம்மாதி லவஞ்சு மவணிக்தாதி ॥ 21 ॥

ஹவெஷ்டாவுஷாகாதாரஷ்வு வாஷவ்யலிசூவெண தூ ।
ஹிரவஷ்டாஷ்ட கூதிஷ்டாதி யிம்மாதிலவூ நமுவெவ மலி ॥

வதஷ்டவுஷ்டாயதாயிம்மாஷ வூர்ஷ்வ வாதிவிவய்தாஷ ।

ஒன்பது முழம் உயரமுள்ள லிங்கம் பூசிக்கத் தக்கதாகும். தேவாதி யோனிகளில் எட்டு வகையுண்டு. அவரவர்க்கேற்றதாக லிங்கத்தின் உயரத்தில் மாறுபாடும் உண்டு. ஆனால் அவற்றை இங்கு நாம் விரித்துரைக்கவில்லை. (21)

இது முதல் மூன்று சுலோகங்களால் முழக்கலாக்கில் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயிக்கும் வகையில் பொதுவாக அதமம்—மத்யமம்—உத்தமம்—என மூன்று வகைகளாக் கூறுகிறார். அவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனியே ஒன்பது விதமாகும். அதமலிங்கத்தின் ஒன்பது வகைகள் இந்த சுலோகத்தில் கூறப்படுகின்றன. ஒரு முழத்தில் தொடங்கி மூன்று முழம் வரை ஒன்பது அளவுகள் உண்டு. ஒரு முழத்திலிருந்து வரிசையாக, கால் கால் பாகம் உயர்த்திக் கொண்டே போனால் மூன்று முழத்துடன் ஒன்பதாவது அளவு வந்து விடும். இவை ஒன்பதும் கனிஷ்ட லிங்கங்களாகும். அவையாவன:—

(1) ஒரு முழம் உயரம். (லிங்கம் அமைத்தல்)
(2) 1¼ முழம் உயரம் ,,
(3) 1½ முழம் உயரம் ,,
(4) 1¾ முழம் உயரம் ,,
(5) 2 முழம் உயரம் ,,
(6) 2¼ முழம் உயரம் ,,
(7) 2½ முழம் உயரம் ,,
(8) 2¾ முழம் உயரம் ,,
(9) 3 முழம் உயரம் ,, என்பனவரம். (22)

இதில் மத்யம லிங்கங்கள் ஒன்பது கூறப்படுகின்றன. நான்கு முழத்தில் தொடங்கி ஆறு முழத்தில் முடிவடையும் இவற்றினளவு.

ஷட்வர்ணாகம உபயுக்த ரீதிம்மார்க்க கரணயோக்ய ॥

வஸுவஹ்னிஹ்ருத்பூர்வ வாஹவ்ருத்தா ஸ்ரீ வஸவ்வஸ் ।
ஸ்ருஷ்டி கவ, ரீதிமார்கம் ருத்ரஸ்ரீமஹாஸ்ரீகர்த்ரு ॥ உச ॥

தாரஸ்ரீ கவ்தாரார்கம் தாரஸ்ரீகெத கீர்த்திதம் ।

4, 4½, 4½, 4½, 5, 5½, 5½, 5½, 6—என வரிசையாக ஒன்பது விதமான முழ அளவில் இவை அமையும். (23)

இதில் உத்தமமான லிங்கங்கள் ஒன்பது விளக்கப்படுகின்றன. 7 முழத்தில் தொடங்கிக் கால் கால் முழம் ஏற்றிக் கொண்டே போனால் ஒன்பது முழத்தில் முடிவடையும் இவை. இவ்வாறாக முப்பத்து மூன்று வகை லிங்கங்கள் (முழத்தின் அளவில்) கூறப்பட்டன. (24)

குறிப்பு:— கனிஷ்டம் ஒன்பது வகை, மத்யமம் ஒன்பது வகை உத்தமம் ஒன்பது வகை, ஆக இருபத்தேழு வகைகளே இங்கு காட்டப் பெற்றுள்ளன. அவ்வாறிருக்க, முடிவில் முப்பத்து மூன்று வகைகள் கூறியதாக நூலாசிரியர் சொல்லுகிறார். 27-க்கு மேல் ஆறு வகை கூடினாலன்றோ முப்பத்து மூன்று வரும்? இதை ஒருவாறு சரிக்கட்டலாம். கனிஷ்ட லிங்கம் ஒன்பது வகையும் 8 முழத்துடன் முடிந்து விடுகின்றது. பிறகு மத்யம லிங்கத்தின் அளவு நான்கு முழத்தில் தான் தொடங்குகிறது. 8½, 8½, 8½, என்னும் மூன்று அளவுகள் விட்டுப்போயின. அவ்வாறே மத்யம லிங்கத்தின் அளவு 8 முழத்துடன் முடிவடைகின்றது. பிறகு உத்தம லிங்கத்தின் அளவு 7 முழத்தில் தான் தொடங்குகிறது. 8½, 8½, 8½, என்னும் மூன்றளவுகள் விட்டுப் போயின. இவற்றை 27-உடன் சேர்த்தால் 33-ஆகும். அல்லது கீழ் 18-வது சுலோகத்திலிருந்து 21-வது சுலோகம் வரையில் கூறப்பட்ட 6-வகைகளையும் சேர்த்துக் கணக்கிடலாம்.

கீழ் 13-வது சுலோகத்தில் கூறிய வரிசையில், கர்ப்பக்ருஹம்—த்வாரம்—ஸ்தம்பம்—அதிஷ்டானம்—கிஷ்கு (முழம்) இவைகளை ஆதாரமாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யும் வகைகள் விளக்கப்பெற்றன. இனி இந்த சுலோகத்தில் "தாலமானம்"

வாஜாமொடுவு வதாவிஷ்ணு தர்மோத்தர ஸம்ஹிதை ॥

கூறப்படுகின்றது. அதாவது "தாலம்" என்னும் அளவை ஆதார மாகக் கொண்டு லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யுமாறு. ஒரு தாலம் முதல் ஒன்பது தாலம் ஈருக லிங்கத்தின் உயரம் அமைக் கலாம். அதாவது- ஒரு தாலம் உயரம்- இரண்டு தாலம் உயரம்- இவ்வாறே முடிவில் ஒன்பது தாலம் உயரம். இவ்வாருக தாலமானத் தின் உதவியால் ஒன்பது வகையாக லிங்கங்களோ அமைக்கலாம்.

தாலமானமாவது: சில்பரத்னம்-முதல் பாகம் இரண்டாம் அத்தி யாயம் 16-வது சுலோகத்தில் சொல்லப்பட்ட தாளத்தின் அளவு. "பிரிந்த கையில், கட்டைவிரலின் நுனியிலிருந்து, ஆள்காட்டிவிரல்- நடு விரல்—மோதிர விரல்—சிறு விரல்—இவற்றின் நுனிவரையில் உள்ள நீளம்; முறையே-ப்ராதேசம், தாளம், கோகர்ணம், விதஸ்தி- என வழங்கப்படும்" என்பது அந்த சுலோகத்தின் கருத்து.

இங்கு மற்றொரு விதமாகவும் "தாலமானம்" கூறப்படுகிறது. சிவலிங்கத்தின் "பூஜாம்சம்" (பூஜிப்பதற்கான பகுதி. ஆவுடை யாருக்கு மேல் தெரிகிற பாகம் என்றவாறு) இருக்கும் உயரத்தை 124 பாகமாகச் செய்தால் அந்த ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு அங்குலமாகும். இவ் வங்குலங்கள் 12 சேர்ந்தால் ஒரு "தாளம்" என்னும் அளவு ஏற்படும். இதுவே "தாளமானம்" எனப்படும். ஆனால், இந்த "தாளமானம்" ஏற்கெனவே இருக்கிற சிவலிங்கத்தின் அளவை ஆதாரமாகக் கொண்டு மற்ற விக்ரஹங்கள் பண்ணவேண் டியிருக்கும்போது தான் பயன் படும். புதிதாக சிவலிங்கம் பண்ண வேண்டியிருந்தால், அப்போது இவ்வழியில் அளவு எடுக்க இயலாது. முன்பு கூறிய (கட்டைவிரல் நுனியிலிருந்து நடுவிரல் நுனிவரை) தாலத்தையே அளவாகக் கொள்ளல் வேண்டும். அல் லது, சில சமயங்களில், ஏற்கெனவே உள்ள லிங்கம் சிறிதளவு பின்னமாகி, பூஜைக்குத் தகாததாகிவிட்டால், அதை அப்புறப்படுத்தி விட்டு வேறு லிங்கம் புதிதாகப் பண்ணி அவ்விடத்தில் ஸ்தாபிக்க

உமருலிங்கெஜ்ஜரும் கூகூ தாளுபாதம் வுகலுயெசு ।
வனகாமரூலி லியவ வயுகெதர தலாமரூசு ॥ உசு ॥

வேண்டியிருக்கும். அதுபோன்ற சமயங்களில் (பழைய) லிங்கத்தின் பூஜாம்சத்திலின்றும் தாளமானம் நிர்ணயம் செய்யும் முறை உபயோகமாகலாம். சிவாலயங்களிலேயே புதிதாக ஏதாவதொரு விக்ரஹம் பண்ணவேண்டியிருந்தால் மூல லிங்கத்தின் தாளமானத்தை அடிப்படையாகக் கொண்டு அதைச் செய்யலாம். சிவாலயங்களில் போல் விஷ்ணு ஆலயங்களிலும் மற்றக் கோவில்களிலும் மூல விக்ரஹத்தின் உயரத்தை 121 பாகமாக்கி அதில் ஒரு பாகத்தை ஒரு அங்குலமாக வைத்துக் கொண்டு அப்படி வங்குலங்கள் 12 ஒரு தாளம் என நிர்ணயம் செய்யலாம். மற்றை விக்ரஹங்களுக்கு இருக்கவேண்டிய உயரத்தை நிர்ணயம் செய்வதற்கு இது உபயோகமாகும். இதுவே "தேஹலப் தாங்குலம்" "பேராங்குலம்" என்றெல்லாம் வழங்கப்படுவது. எந்த விக்ரஹத்திலும் கையில் மணிக்கட்டிலிருந்து பெருவிரல் நுனிவரையிலுள்ள நீளம், அதனுடைய முகவாய்க்கட்டையினின்றும் கேசாந்த ஸீமத்திரம் வரையிலுள்ள பாகத்திலும் இருக்கவேண்டுமாதலால் மேற்கூறிய இரண்டு அளவுகளையும் தவிர்த்தனியே "தாளம்" என வழங்குவதுமுண்டு. இதுவும் "தாளமான" மெனப்படும். இடத்திற்குத் தகுந்தாற்போல் "தாளமானம்" என்னும் சொல்லுக்குப் பொருள்கொள்ள வேண்டும். இவ் விடத்தில், லிங்கத்தின் உயரத்தைத் தாளமானத்தின் ஆதாரத்தில் நிர்ணயிக்கும் வகை, ஒரு தாளத்திலிருந்து ஒன்பது தாளம் வரை, (விசேஷமாக) ஒன்பது— என்று கூறப்பட்டது. (25)

இவ் முறைப்படி மானங்குலத்தினாலால் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யும்வகை கூறப்படுகின்றது:- மானங்குலமாவது- சில்பரத்னம்-முதல் பாகம், இரண்டாவது அத்தியாயத்தில், 3, 4, 5, 6, 7, சுலோகங்களில் விளக்கப்பட்டுள்ளது. யவம் — எனப்படும் தானியத்தைப் பற்றி மானங்குலம் கணக்கிடப்பட்டுள்ளது. ஆறு யவங்களின் நடுப்பகுதியிலுள்ள அகலத்தைச் சேர்த்தால் அது ஒரு

कनिष्ठं त्रयाणामपि, तथा वैपाठमपि ज्यायः ।
ज्यायः त्रयाणामपि तथैवाजघन्यमनुत्तरं च ॥ ८८ ॥

மானுங்குலம். அதேபோல் ஏழு யவங்களினுடைய அகலத்தைச் சேர வைத்தாலும் ஒரு மானுங்குலமாகும். அப்படியே எட்டு யவங்களின் அகலத்தைச் சேரவைத்தாலும் அதுவும் ஒரு மானுங்குலமாகும். இவ் வாறு மூன்று வகைகள் கூறப்பட்டுள்ளன. இவை முறையே-கடை இடை-முதல் மானுங்குலங்களாகும். இந்த யவங்களின் அகலம் தவிர நீளத்தை ஆதாரமாகக் கொண்டும் மானுங்குலத்தைத் தீர்மானிக்கும் வகை அங்கே சொல்லப்பட்டுள்ளது. மூன்று சாலி (நெல்)களின் நீளத்தைச் சேர்த்து வைத்தால், அது ஒரு மானுங்குலமாகும். இது அதமம் (கடையானது). மூன்றரை நெல் நீளம், நான்கு நெல் நீளம். இவையும் ஒவ்வொரு மானுங்குலத்தின் அளவே. இவ் விரண்டும் முறையே இடை (மத்யமம்), முதல் (உத்தமம்) மானுங்குலங்களாகும். இங்கு மானுங்குலத்தின் அளவைக் கொண்டு லிங்கத்தின் உயரத் தைத் தீர்மானிக்கும் விஷயத்தில், யவங்களில் (8) எட்டில் அகலத் தைச் சேரவைத்துக் கணக்கிடப்படும் உத்தம மானுங்குலமே ஏற்கப் பட்டுளது. மானுங்குலம் ஒன்றில் தொடங்கி ஒன்பது வரை லிங்கத் தின் உயரம் இருக்கலாம். இதிலும் முழத்திற்குக் கூறப்பட்டதுபோல வே, அதமம் (கடையானது), மத்யமம் (இடை), உத்தமம் (முதன்மை யானது), என்று மூன்று விதமுண்டு. ஒவ்வொரு வகையிலும் தனித் தனியே ஒன்பது உட்பிரிவுகளுண்டு. ஆக, மானுங்குலத்தினால் லிங் கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்வதில் 27 வகை சொல்லியாயிற்று. அவற்றுள், கனிஷ்டமான ஒன்பது லிங்கங்கள் ஒரு அங்குலத்தில் தொடங்கி மூன்றங்குலத்தில் முடியும். ஒரு அங்குலம் — என்பது எட்டு யவம் அகலமென்று சொன்னேம். மூன்று அங்குலம் என்பது இருபத்துநான்கு யவங்களின் அகல அளவாகும். எட்டிலிருந்து படிப்படியாக, இவ்விரண்டு யவங்களைக் கூட்டிக்கொண்டே போனால், 24 யவங்கள் வரை ஒன்பது அளவுகள் வரும் :—

(1) ஒரு அங்குலம் (எட்டு யவம்)
(2) ஒரு அங்குலமும் இரண்டு யவமும் (பத்து யவம்)

ஸஷ்டாம்ஶாதி ஸ்யவஷ்டயுபரிகதாவரம்ஶாஶ்ச।
ஸ்ரஷ்டாரி கவலிம்பாரி ஸத்தஜாரி விஶேஷதஃ ॥ உஅ ॥

---

(3) ஒரு அங்குலமும் நான்கு யவமும் (பன்னிரண்டு யவம்)
(4) ,, ,, ஆறு ,, (பதினெட்டு ,,)
(5) இரண்டு அங்குலம் (பதினாறு ,,)
(6) ,, அங்குலம் இரண்டு யவம் (பதினெட்டு ,,)
(7) ,, ,, நான்கு ,, (இருபது ,,)
(8) ,, ,, ஆறு ,, (இருபத்திரண்டு ,,)
(9) மூன்றங்குலம் (இருபத்திநான்கு ,,)

இவை ஒன்பதும் களிஷ்ட மெனப்படும்.

இப்படியே மத்யமமாக ஒன்பது அளவுகள் நாலு அங்குலத்தினி
ருந்து ஆறு அங்குலம் வரை :—

(1) நான்கு அங்குலம் (32 யவம்)
(2) ,, ,, 2 யவம் (34 ,,)
(3) ,, ,, 4 ,, (36 ,,)
(4) ,, ,, 6 ,, (38 ,,)
(5) ஐந்து ,, (40 ,,)
(6) ,, ,, 2 ,, (42 ,,)
(7) ,, ,, 4 ,, (44 ,,)
(8) ,, ,, 6 ,, (46 ,,)
(9) ஆறு அங்குலம் (48 ,,)

இவை ஒன்பதும் மத்யமமெனப்படும்.

இப்படியே உத்தமமான ஒன்பது அளவுகள் உள்ளன.

ஏழு அங்குலம் முதல் ஒன்பது அங்குலம் வரை முன்போலவே.

கனிஷ்ட உத்தமாதி ரத்னஜாதாநி ஸர்வதஃ ।
அந்யாநி மத்யமே வஜ்ராதி ஸ்ரீகாணேயவர்ஜிதாநி ஹி ॥

கனிஷ்டாயாம் து கிஷ்கவ்யு ஸ்ரீகாண்யாதி வஜ்ரபேஸ் ।
ராஷ்ட்ரஸ்ய நாஸ்திகோ யௌ ஸம் ஸ்ரீமதாஷ்டாயுஷாம் ஸ்ரீயம் ॥

---

(1)	ஏழு அங்குலம்		(56 யவம்)
(2)	,, ,,	2 யவம்	(58 ,,)
(3)	,, ,,	4 ,,	(60 ,,)
(4)	,, ,,	6 ,,	(62 ,,)
(5)	எட்டு ,,		(64 ,,)
(6)	,, ,,	2 ,,	(66 ,,)
(7)	,, ,,	4 ,,	(68 ,,)
(8)	,, ,,	6 ,,	(70 ,,)
(9)	ஒன்பது ,,		(72 ,,)

இவை ஒன்பதும் உத்தமமான் அளவாகும்.

இந்த உத்தமமான ஒன்பது வகை லிங்கங்களும் இரத்தினங்களாலேயே சிறப்பாக அமைக்கப்படும். மத்யமமான ஒன்பது வகை, இவ்வாறே கனிஷ்டமான (கடையான) ஒன்பது வகை இவை எங்கும் இரத்தினங்களாலேயே அமைக்கப்படவேண்டும். (28)

சலம்—(அசையுந்தன்மையது) எனும் வகையைச் சார்ந்த லிங்கங்கள் விடுகளிலேயே பூஜிக்கப்பட வேண்டும். ஸ்திரமான (அசைவற்ற) லிங்கங்களே உயர்ந்தவை. அந்த ஸ்திர லிங்கங்களைக் கோவிலில் ப்ரதிஷ்டை செய்து பூஜிக்கவேண்டும். (29)

இனி உலோகத்தினால் செய்யப்பட வேண்டிய லிங்கங்களைப் பற்றிக் கூறப்படுகிறது. உலோகத்தால் செய்யப்படும் லிங்கம்—மூன்றங்குலத்திலிருந்து பதினாறு அங்குலம் வரை உயரமுள்ளது சலம் (அசைவுள்ளது) ஆகும். இதற்கு மேல் உயரமுள்ளதாயின்

38 ஸிஷ்ருதே— உத்தரஸ்தானே [அத்

சதுரஸ்ரம் வ்ருத்தம், தவ்ராஸ்ர வ்ருத்தாணு-மதுலம் லவணே ஸதி ।
மதுஷ்டிவ்ருத்த நிஷ்பாய வ்ருத்தம் நிவ்ருத்தம் து வா ॥ ஈக ॥

வஜ்ரா தூர்ண ஜலம் ஸ்ரோதோ நிஷ்டிவ்ருத்தம் வஹ்நி தைஜஸ ।
தத்தோ மோஹாத்ர பாவ ஏவ கார்ய மெளஷத கர்மஸு ॥

ஸர்வ கர்ம க்ரியாம் வக்ஷ்யே ஸுஸ்கார ஸஹிதாய தே ।
கரிஷ்யே ஸுகரிஷ்யா தூஷீ தூர்ண தரா தயா ॥ ஈக ॥

ஸுஷ்ருதஸ்ரவணாயைவ்ய்கி வக்ஷ்யா தூர்த்திகா வ்ருத்தா ।
வ்ருத்வெபுத்தாம் தாரயேஜ்ஜாம் வாய தூர்த்தா ஸாதாய யத்தத: ॥ ஈச

ஸ்திரம் (அசைவற்றது) எனப்படும். செம்பு—பித்தளை முதலிய லோஹங்களை உருக்கி வார்த்து லிங்கங்களைச் செய்யவேண்டியிருப்பதால் அந்த வகை இங்கு விளக்கப்படுவது இன்றியமையாததது. (30)

தேன் மெழுகிலும் ஸகலம்-அல்லது-நிஷ்கலம் (தமது விருப்பத்திற்கேற்றபடி) என்னும் லிங்கத்தை (அல்லது விரும்பின விக்ரஹங்களை) முதலில் பண்ணவேண்டும். பிறகு அதன்மேல் உறுதியாக மண்ணைக் கட்டவேண்டும். அது நன்றாகக் காய்ந்த பிறகு உள்ளேயிருக்கும் தேன் மெழுகை வெளிப்படுத்திவிட வேண்டும். (31)

இப்பொழுது உட்புறம் காலியாக இருக்கும். நன்றாக உருக்கி வைத்துக்கொள்ளப்பட்ட லோஹத்தை அதனுள் ஊற்றி நிரப்ப வேண்டும். இவ்வாறாக லோஹமயமான பிம்பங்களைப் பண்ணுதல் சிறந்த முறையாகும். (32)

இந்தத் தொழில் கடுமையாயுள்ளோரின் நன்மைக்காக இனி அந்த முறையைக் கூறப் போகிறேன். முதலில் ஐந்து வகையான மண்ணைத் தெரிந்துகொள்ளவேண்டும். 1 கடினமானது, 2 சிறிது கடினமானது, 3 மென்மையானது, 4 மிக மென்மையானது, 5 மூஷா

ரூஜ்ஜொஷ்ட ஸுணக்வம்யுக்தாம்
யாயஸ்ஸி விதிபுவெஸ்ஸ।
ஸுஜ்ஜாம்ஹவா வதிமதபத்ர-
வராம் யுக்தா வுபொஜவெஸ்ஸ ॥ கூரு ॥

காரவெஸ்ஸ கவிதா தெவம் ஸிறுஷுவறுதாலிதாரு।
தவ்ஹிறு மொதப வம்யுக்தெ வ்யாதிதுகவிதா வுதாஸ ॥ கூசு ॥

ரூஜ்ஜாணுவதிணக்வம்யுக்தாம் தத்தாதிரம்ஸகூரதிகாரு।
வெஷணாம் வெஷவெஜ்ஜாம் வர ரூஜ்ஜிதி கயிதா வுராவ ॥

(மோசி) பண்ணுவதற்கேற்றது – என்று மண்ணில் ஐந்து வகை உண்டு. (33,34)

முன்பு சொல்லப்பட்ட மண், அல்லது புற்றில் உண்டாகிய மண் இவற்றில் ஒன்றை ஜாக்கிரதையுடன் கொண்டு வந்து, மண்ணுங்கட்டியைப் பொடி செய்து அதில் கலந்து தகுந்தவாறு மர்தநம் பண்ண வேண்டும் (துகைக்கவேண்டும்). சுத்தமான ஜலத்துடன் பாக்குத் தோலின் சாரத்தையும் தகுந்த விதமாகக் கலக்கவேண்டும். பிறகு கல்—உலக்கை — இவற்றால் நன்கு இடிக்கவேண்டும். இவ்வாறு தயாரிக்கப்படும் மண் "கடினம்" எனப்படும். (35)

அவ்வாறு செய்யப்பட்ட மண்ணில் மேலும் பசுஞ்சாணியைக் கலந்தால் அதுவே "மந்தகடினம்" என்னும் இரண்டாவது வகையான மண்ணாகும். (36)

மண்பாண்டத்தைப் பொடி செய்து அதில் நாலிலொரு பங்கு மண்ணைக் கலந்து கல்வத்திலிட்டு நன்றாக அரைக்கவேண்டும். அது முன்னோர்களால் "மெதுவாளது" (மிருத்வீ) என்று கூறப்பட்டது. (37)

அதுவே பசுஞ்சாணத்துடன் கலக்கப்பட்டால் "மிருதுதர" (மிகவும் மென்மையானது) எனப்படும்.

தத்வ மொஹயந்தா ரூபீன் ரூபதிரா வஸ்யதா ।
கோஷாதிஜுரா வ மணைர்ப வம்யாஸ்தீ வ்ருத்திதா ॥ சுஅ ॥

காவ்யா யவட வ்ருணைர்ப வீர்ம ஸுவர்ணவீதா ।
வஸா ஸுஷாரூபாவ்யாந் கத-வ்யா வாதயா ரூபபுகூ ॥
யஜ் கிஞ்சீத்வ்ரீதம் தத்ர (தத்ர) கிஞ்சீத்ரீதக வ்ருணதி ।
சூகூரா ஜீதீயயா ஸுஷ்டி தவ்யா ஜிவ்யா வாதம் வாதம் ॥
சுத்தே மொஹயவ்யா ரணஜிவ்யா ஸுஷ்டீ சூர்தே வாதம் ।
சூர்கூரா தவிரு ஜயதுஜீவ்ட்டம் யாதூவ தாஜீ தர்ப ॥ சக ॥

ஜவ்ட வ்ருணம் தச வவர்ம் சூகூரா தேந வ்ருக்ஷணே ।
ஹ்ருஷ்ணாதீ வவ்யாணி ஜய-ஜிஜ்ஜீவ்ட்ட வ்ரு தத்ர ॥ சஉ ॥

உமி முதலானதைக் கரியாக்கிப் பொடி செய்து அத்துடன் சுடிய மண்பாண்டத்தின் மண்ணைப் பஞ்சுத் துணியின் பொடியுடன் கலந்து உரலிலிட்டு உலக்கையால் நன்றாக இடிக்கவேண்டும். இதுவே "மூஷாம்ருத்" (மோசி மண்) எனப்படும். இதனால் உறுதியாக "மோசி" பண்ண வேண்டும். (38, 39)

இனி ஏழு சுலோகங்களால் விக்ரகம் வார்ப்படம் செய்வதற்கான முறை விளக்கப்படுகின்றது. தனக்கு விருப்பமானது எதுவோ (லிங்கம்—அல்லது விக்ரஹம்) அதை வேண்டிய அளவுக்குச் சிறிது குறைவாகவே இரண்டாவது வகையைச் சேர்ந்த மண்ணால் (மந்தகடினம்) பண்ணி உலர்த்த வேண்டும். பிறகு தகுந்தவிதமாக அதைச் செதுக்கி அவசியமான இடங்களில் மேலும் மேலும் பூசவேண்டும். முடிவில் (பசுவின்) சாணிச்சாறு கொண்டு பூசி அதை அழகுறப் பண்ணவேண்டும். பிறகு அதன் மேல், தேன் மெழுகால் பட்டங் கட்டினாற்போல் திட்டமான கனம் (பருமன்) வருமளவு ஒட்டவேண்டும்.. இந்தத் தேன் மெழுகில் பண்ணப்படும் வடிவம், தான் விரும்பின அளவுக்குச் சரியாகவே இருக்கவேண்டும். (முன்போல் சிறிதாக இருக்கலாகாது.)

சூத்திரம் திருத்தியாகியபின் வெண்கலமாகியபின் தூய।
சூத்திரயாகமுமெஞ்ஞான வாஹிநீம் காரமெடுத்த ॥ சாரு ॥

வாகவிழுமெவையெநூஸ்ரீ ஏாதிராம் ஏுதீதாரம் சூதாச।
ஸாவெஷ்ட கவிநு வாகயிஷ்வா ஏுஷ்யா வஸம்ஸொஷயெச
[வாகஃ ॥ சாச

கரிமெகஸ் வாகவஸ்து ஸ்ரீவாயஸவடாதிஸீஃ।
வஸ்வா யஸாவயும் வஸ்ராசு கரிமெக விதெவயெச ॥ சரு ॥

ஆவ்ருத்யா தெவயெ தெக யஸாதொஷம் யஸாவஸ்ரு ॥

அதில் இருக்கவேண்டிய அங்க அடையாளங்கள் யாவும் பொருத்தமாக அமையுமாறு அதை கவனிக்கவேண்டும். அந்தத் தேர் மெழுகில் ஆபரணங்கள்—வஸ்திரம் முதலிய யாவற்றையும் நூலால் அடையாளமிடவேண்டும். புளியம்பழத்திலுள்ள நரம்புகளால் அல்லது மூங்கிலின் நரம்புகளால் ஆபரணங்களை அந்தத் தேரமெழுகில் அமைக்கலாம். பிறகு அதற்கெனவே பண்ணப்பட்ட ஆயுதங்களால் மழமழ வென்று அதை அழகாகப் பண்ணவேண்டும். பிறகு "ம்ருதுதரம்" எனப்பட்ட (நான்காவது வகையான) மண்ணால் ஜாக்ரதையாக மேல் பூச்சு பூசவேண்டும். அது உலர்ந்ததும் மீண்டும் ம்ருதுவான மண்ணால் பூசவேண்டும். உலர்த்த வேண்டும். அது உலர்ந்ததும் மீண்டும் கடினமான (முதல் வகையான) மண்ணால் பூசி அதையும் உலர்த்தி. இரும்புத் தகடுகளால் பலங் கொண்டமட்டும் நன்றாகக் கட்டி மீண்டும் கடினமான (முதல் வகை) மண்ணால் பூசவேண்டும். மேலும் மேலும் பல பூச்சுக்களும் பூசவேண்டும். திருப்தி ஏற்படும்வரை நன்றாகப் பலதரமும் பூச வேண்டும். உலோகப் பட்டங்களால் (இரும்பு முதலியவற்றால்) கட்டும்பொழுது முக்கியமல்லாத இடங்களில்தான் அவ்வாறு கட்டலாம். முக்கியமான உறுப்புக்கள் உள்ள இடங்களில் அவ்வாறு கட்டக்கூடாது. பிறகு மீண்டும் நன்றாக உலர்த்தி இயந்திரத்தின்

കഖ്യാനാവയവമഖ്യാനെ ഖ്യാ ഖ്യൊഖവഷ്ടകിഃ ॥ ശസു ॥

ഖവാ ഗൂഖ്ഷ്ട വാനയഃഖ്യവശാ ഛാതഖ്യ വഖ്ഷ്ടിനാ ।
ഉയംഹ്ഷ്ടം ബഖിഖ്യൂഹാ കം ടഖൈശ കാഷ്ഠവെഖ്ഷ്ടകു ॥

യഛാ കുശ്ചാണ്ഡവാഷ്ടാഖം വണഃഉങ്കമഃകം വാനഃ ।
ഖ്യൊഖഛാമഃരഖിനംഖ്യൈണ ഉഗ്ര്യുകൈ കത്തഖ്യൈവ ഖി ।

ശവനാഖ്യ ഖാവഃ ഗ്ലഖ്യൈവികൃഖ്യൈയ്യഃഉാവം യയാ ।
ഉംഷ്ടായാഛാഖ്യിഃകം ഖ്യൊഖം ശീഖ്യഛാഛായ യത്തകഃ ॥ ശസു ॥

ങികുഖിവൃ കത്നാവെ ഉഛ ഉങ്കമഃരമം വാഖവനാ യെശ ।
വാംഖാനാ ബഖിനാഗ്ലാഛ്യ കാഖ്യാഹ്ലീകഖിതെ വാനഃ ॥ നുല ॥

மூலம் நன்றுகச் சூடேறுமாறு காய்ச்ச வேண்டும். அவ்வாறு நன்றுகக் காய்ச்சி உள்ளேயிருக்கும் தேன்மெழுகு முழுவதையும் வெளிப்படுத்தவேண்டும். பிறகு கட்டைகளை அடுக்கி அதன் மத்தியில் அதை வைத்துப் புடம் போட்டு நன்கு கொளுத்திச் சுடவேண்டும். அது எரிந்துகொண்டிருக்கும் போதே உள்ளேயிருக்கும் மோசியைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். அதன் உட்புறம் பூஷணிப் பூவின் நிறம் போல் நிறம் பெற்றும். உலோகங்களால் (இரும்பு முதலியவற்றின் பட்டங்களால்) கட்டப்பட்ட அந்த மோசியை அப்படியே தான் காய்ச்சவேண்டும். மோசியின் நிற மாறுபாட்டை அந்த இரும்புப் பட்டங்களின் இடைவெளியால் கவனிக்கவேண்டும். மேற்கூறிய நிறம் வந்த உடன் புடத்திலிருந்தும் இறக்கி விட வேண்டும். பூமியில் பள்ளம் தோண்டி அதனுள் மேல் நோக்கியவாறு வைக்க வேண்டும். இந்த ஸமயத்தில் வார்ப்படம் செய்யவேண்டிய லோஹத்தை மற்றொரு மோசியில் நன்றுக திரவமாகுமாறு (நீர்போல்) உருக்கித் தயாராக வைத்திருக்கவேண்டும். வெகு சீக்கிரமாக அதை எடுத்து வந்து மிகவும் ஜாக்ரதையாக அதன் முகத்தில் மெதுவாகப் பொருந்தவைத்து உள்ளே ஊற்றி நிரப்பவேண்டும். உடனே

தீதஷாயவஸ்ரூவெதஃஸவெஷ்டஃபூஃஹ்தூஷ்டூவஸ்யீஃ குஹாச।
வஸ்ஷஷ்டஷ்டம் காரயெவெத்தவெஷ்டவஸ்யவிவெதஸ்ஷவ்ஷவெஃவெகஃ

வஸவம் தத்தஃஷ்டுஸ்ஸவெஸ்ரெஸ்ரோஹஜம் காரயெஷ்டீயஃ।
வஜ்ரம் வெஸ்ரோஹஜம் ஸிம்வம் மயஷ்டீவெஷ்டஃ கெவஸ்ஸ॥ நிஉ॥

கூஷ்வாஸ்யஸ்ரெவஹாஸீஸி வஷ்வவஃவஸ் குஃதஸ்ஷஸ்ரெஸ்ச।

*வஸ்ஹாரவி ஸிம்வொஹாரஹாஹ —

புழுதி மண்ணால் வெளிப்புறத்தில் (நாற்புறமும்) மூடிவிட வேண்டும். காலக்கிரமத்தில் தன்னாடையே அது ஆற வேண்டும். (செயற்கை முறைகளால் ஆறவைக்கக்கூடாது.) பிறகு கூர்மையான இரும்பு ஆயுதங்களால் முறைப்படி மண்ணை அகற்றவேண்டும். பிறகு அந்தந்த இடங்களில் தக்க விதமாக ஆயுதங்களை உபயோகித்து அழகுறச் செய்யவேண்டும். இவ்வாறு ஆயுதங்களை உபயோகிப்பவர்கள் இத் துறையில் சிறந்த அனுபோகமுள்ளவர்களாகவும், பரிபக்குவமான அறிவுள்ளவர்களாகவும் இருத்தல் மிக மிக அவசியம். இவ்வாறு, அறிவாளியானவன் தேர்ச்சி பெற்ற சிற்பிகளைக்கொண்டு லோஹஜமான பிம்பத்தைச் செய்யவேண்டும். லோஹபிம்பம் "கன" மாகஇராமல் தகடு போல் அமைக்கும் வழி இது. இதுவே கனமாக இருக்கவேண்டுமானால், அதாவது தகடுபோல் மேல் தோற்றம் மட்டுமில்லாமல், கெட்டியாக இருக்கவேண்டுமாயின் அதைச் செய்யும் வகை வேறு. அதற்கு தேன்மெழுகிலேயே முதலில் தனக்கு வேண்டிய பிம்பத்தை, வேண்டிய அளவிலேயே பண்ணவேண்டும். அதில் செய்யவேண்டிய அடையாளங்களை யெல்லாம் தவறாமல் அமைத்து முன்போலவே மண்பூச்சு செய்து அதைக் கெட்டிப்படுத்தி, பிறகு தேன் மெழுகை வெளிப்படுத்திவிட்டு உருக்கிய உலோகத்தை அதனுள் வார்த்து பிம்பங்களைச் செய்யவேண்டும்.

---

(1) லோஹ லிங்கத்தைக் கூறுமுன் தகுதியைக் கருதி உலோகத்தை உருக்கி வார்ப்படம் செய்யும் வகையும் விளக்கப்பட்டது. அதன்மேல் முன்பு 13-வது சுலோகத்தில் கூறப்பட்ட வரிசையில் அளவுகள் விளக்கப்படுகின்றன.

சுவஷ்டாம்ருதம் வஹாம்யஹம்
வாஷ்டா ஜுஹுவிவய-ம்நாச ॥ ருசு ॥

யௌஹாமி ஹவிஷ்மாமி க்ரஹவ்ஹாகோமி கூலுயெச ।
தயாஷ்டாம்ருது ரோஹாமி வியம்ருது விவய-ம்நாச ॥ ருச ॥

க்ரஹவ்ஹாகோமி லிம்மாமி க்ருயஷ்டிம்ஸ்ருவனி ஹி ।
வெஷாலஸ்டாம்ருதாஹாமி ஹாஹாலிம்மாக்ரும்ஹாச ॥ ருரு ॥

மீண்டும் பிம்பத்தின் உன்மானம் கூறப்படுகின்றது:- உலோகத்தினால் பண்ணப்படும் லிங்கங்கள், எட்டங்குலம் உயரத்தில் தொடங்கி, (72 அங்குலம்) 5-* முழம் உயரம் வரை அமைக்கப்படலாம். எட்டங்குலத்தில் தொடங்கி எட்டெட்டங்குலமாக உயர்த்திக் கொண்டே போகவேண்டும். அவ்வாறு சென்றால் மூன்று முழம் முடியும் வரையில் 9 அளவுகள் வரும். அதெங்ஙனே யென்னில்:—

(1)	முதல் அளவு	லிங்கத்தின் உயரம்	எட்டங்குலம்.
(2)	இரண்டாவது .	,, ,,	16 அங்குலம்
(3)	மூன்றுவது ,,	,, ,,	24 ,,
(4)	நான்காவது ,,	,, ,,	32 ,,
(5)	ஐந்தாவது ,,	,, ,,	40 ,,
(6)	ஆறுவது ,,	,, ,,	48 ,,
(7)	ஏழாவது ,,	,, ,,	56 ,,
(8)	எட்டாவது ,,	,, ,,	64 ,,
(9)	ஒன்பதாவது ,,	,, ,,	72 ,,

இவற்றில் மூன்றாமளவு ஒரு முழம், ஆறுவது அளவு இரண்டு முழம், ஒன்பதாவது அளவு மூன்று முழம் உயரமுமுள்ளதாகும்.

இதிலேயே மற்றொருவிதமும் செய்யலாம். எட்டங்குலம் முதற்ச அளவு. அதற்குமேல் இவ்விரண்டு அங்குலங்கள் உயர்த்தி ஒவ்வொரு அளவு எடுத்துக்கொண்டே போனால் மூன்று முழம் வரை

---

* ஒரு முழம் என்பது 24-அங்குலம்.

ஷொலஶரம்ம ுவு வூஜ்யா வஸ்ஃ வ்ருஷ்ணாஜாமி வெ தவ ।
ஷொலஶரம்ம ுஹாவு ஷ்ருதஶரம்ம ுவுவய-ர்தாச ॥ ருக ॥

ஏாரவாணீ தூயஷ்டிஂஶ ஷ்டிஂமா தூா ஸவைஹவ்யதஃ ।
யஸை யஷ்டிஸு ஹவெஷாவ்யா விஹ்ருதியுஷை யாஜ்யாஸீ ॥ ருஎ ॥

ஷ்டிஂமம் தஷி தஂஹாரெணை கூாரயெஷாஷயொவிதபு ।
கூாரயெஷெவஷொதூ ஷ்டிஂமம் ஏ தூாஂமஂஷொவி ॥ ருஅ ॥

யில் 33-அளவுகள் கிடைக்கின்றன. உலோகமயமான ஸ்தூபங்களோ இவ்விதமான உயரத்திலும் ஏதேனுமொரு அளவில் அமைக்கலாம். முதல் அளவு எட்டங்குலம். இரண்டாமளவு பத்து அங்குலம். மூன்றாமளவு 12 அங்குலம்.....33-வது அளவு 72-அங்குலம் என்றிவ்வாறு ஊகித்துக்கொள்க.

இனி தாருஸ்தூபங்களின் (தாரு—மரம்) அளவு கூறப்படுகிறது. பதினாறு அங்குல உயரமுள்ளது முதல் அளவு. ஆறு ஶதம் (144 அங்குலம்) கடைசி அளவு. ஒவ்வொரு அளவுக்கும் 16-அங்குலம் இடைவெளியிருக்கும் 16-அங்குலத்தில் தொடங்கி 144-அங்குலத்தில். இடையே 16-அங்குலங்கள் விதம் விட்டு விட்டுக் கணக்கு பண்ணிக்கொண்டே போனால் ஒன்பது அளவுகள் கிடைக்கும். மற்றும் ஒரு வழி இங்கு கூறப்படுகின்றது: பதினாறு அங்குலத்திலேயே தொடங்கி (144-அங்குலத்திலேயே) ஆறு ஶதங்களின் அளவிலேயே முடியும் அளவுதான் இதுவும். ஆனால் இடைவெளியில் வாசியுண்டு. நன்னூறு அங்குலம் இடைவெளியிருக்கும் இதில். அதெவ்வாறெனில்:—

தாருஸ்தூபத்தின் உயரத்துக்கு	முதல் அளவு	16-அங்குலம்.	
,,	இரண்டாவது ,,	20	,,
,,	மூன்றாவது ,,	24	,,
,,	முப்பத்துமூன்றாவது ,,	111	,,

என்றிவ்வாறு கண்டுகொள்க இப்படி நன்னூறு அங்குலங்களின் இடைவெளியில் 16-அங்குலத்தில் தொடங்கி 111 அங்குலம் வரை செல்வதில் மொத்தம் 33-அளவுகள் கிடைக்கும்.

யஜமானஸ்ய, தஸ்ய நேத்ராஸ்ருஜா ஸம்பூர்ணம்

வஜ்ராகாரம் ஸுஷ்யாகாரம் லிங்மௌசூத்தி ஸமுத்யா ॥ருகு ॥

தஸ்ய நேத்ரஸ்ருஜஸ்ய மத்யே ஸ்தாபனம் தத் விஸ்ருஜேத் ।

லிங்கம் செய்து வழிபாடு நடத்த விருப்பமுள்ளவர்களாகிய சிவனடியார்களுக்குள் யார் யாருக்கு எந்தெந்த வகையான லிங்கம் மனதுக்குப் பிடித்திருக்கின்றதோ; மேலும் அவரவர்களுடைய செல்வ நிலைமை எந்த வகையான லிங்கத்தைப் பண்ணிப் பூஜிப்பதற்கேற்ற தாக இருக்கின்றதோ, அதையெல்லாம் நன்கு கவனித்து அவரவர் களுடைய கோயிலுக்குத் தகுந்த லிங்கங்களைப் பண்ணவேண்டும்.

இவ் வத்தியாயத்திலேயே கீழ் 13-வது சுலோகத்தில் கூறப்பட்ட அளவுகளுள் ஏழு வகைகள் கூறப்பட்டன. இனி எட்டாவது வகை கூறப்படுகின்றது. மாத்ராங்குலங்களால் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்வதுதான் எட்டாவது விதம். இங்கு மாத்ராங்குலங் களால் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யும் வகைகள் விரி வாகக் கூறப்படவில்லை. "இவ்வாறுகளே" மாத்ராங்குலங்களால் லிங்கத்தின் உயரத்தை நிர்ணயம்கொள்க, என்று பொதுவாகக் கூறி விட்டார். மற்ற நூல்களினின்றும் கண்டு கொள்க. மாத்ராங்குல மாவது:—

"தஸ்ததோ²ஷ்டாங்குலாநாம் து ஸ்யாதுத்தம வவ-ணம் ।

தத்ரைவம் ஸாதகாநாம்து ஸ்ருஷ்டம் நீலம்தயோ ஸமம்விதது ॥

(சில்பரத்தினம்—முதல் பாகம். அத். 2, சு. 8.)

என்னும் சுலோகத்தில் கூறப்படுகின்றது. கோயில் முதலியவற்றைக் கட்டுவதற்கு முதல்வனாக இருக்கும் யஜமானனுடைய வலது கையின் நடுவிரலின் நடுக்கணுவின் நீளம் ஒரு மாத்ராங்குலமாகும். இது உயர்ந்த பக்ஷம். அதே நடுவிரல் நடுக்கணுவின் அகலத்தினளவும் ஒரு மாத்ராங்குலமாகும். இது அதமபக்ஷம். மானஸாரம் முதலிய நூல்களில் நடுக்கணுவின் சுற்றளவும் ஒரு மாத்ராங்குலமாகக் கூறப்பட்டுள்ளது.

விஸ்தாரம் வ்யாஸதுல்யா வங்கமானம் ஷட்பாணவெவ வா ॥ சுபி ॥

விஷ்ணோர் விமானவத்ஸ்யா காரமரம், திக்மாணம் வதி ।

முன்பு 13-வது சுலோகத்தில் கொடுக்கப்பட்ட வரிசையில் ஒன்ப தாவது வகை இப்போது விளக்கப் படுகிறது. "யஜமானோச்ச மானம்" என்பதே அது. ஆலயங்களைக் கட்டுவிக்கும் யஜமான னுடைய உயரத்தையே ஆதாரமாகக் கொண்டு அவ்வாலயத்தில் ஸ்தாபிக்கப்படும் லிங்கத்தின் உயரத்தை நிச்சயிக்கலா மென்றவாறு. இதில் ஏழு வகையுண்டு. (1) யஜமானனுடைய முழு உயரம். (2) அவனுடைய கண்கள் வரை உள்ள உயரம். (3) அவனுடைய வாயளவு உள்ள உயரம். (4) தாள்கட்டை வரை உள்ள உயரம். (5) தோள் வரை உள்ள உயரம். (6) ஸ்தனங்கள் (மார்பு) வரை உள்ள உயரம். (7) இதயம் வரை உள்ள உயரம். இவ்வாருக ஏழு அளவுகள் கண்டு கொள்க. (59)

இனி லிங்கத்தின் உயரத்தின் அளவைக் கொண்டு அதன் விமா னம் அமைக்கவேண்டிய விதம் விளக்கப் படுகின்றது. ஒரு முழம் உயரமுள்ள லிங்கத்திற்கு நாலு முழம் அகலமுள்ளதாக விமானம் அமைக்கப்பட வேண்டும். அல்லது ஐந்து முழம், ஆறு முழம் அகல முள்ளதாகவும் அமைக்கப்படலாம். அவ் விமானம், தனது அகலத் தைப் போல் இரு மடங்கு உயரமுள்ளதாக இருக்குமாயின் அது "நாகர" மெனப்படும். அதுவே தனது அகலத்தைப் போல் மும் மடங்கு உயரமுள்ளதாக இருக்குமாயின், "பூமிஜ" என்னும் பெய ரால் வழங்கப்படும். அப்படியே அந்த "பூமிஜ" மெனப்படும் விமானத்தைப் போல் இரண்டு மடங்கு உயரமுள்ளதாக சிகரம் அமைக்கப்படுமாயின், "நாகரவலபி" என்னும் பெயரால் வழங்கப் படும்.

குறிப்பு: இங்கு திடீரென்று விமானத்தின் உயரம் விளக்கப்படு கின்றது!

இனி லிங்கங்களின் சிறப்பான பெயர்கள் சில கூறப்படுகின்றன. லிங்கங்களுள் அதனதன் உயரத்தையும் அகலத்தையும் சேர்த்துக்

ஹஸ்திஜாவ்யம் வஸ்த்ரம் தவஸ்தாத்ர மிதீணம் ஸ்வாஹா யதா ॥

காமதம் வருஷ-ஸ்ர விதாகம் லவதிஷ்ணுடி ।

கணக்கிட்டு, ஒவ்வொரு வகைக்கு ஒவ்வொரு பெயர் கொடுக்கப் படுகின்றது. (1) ஜயதம், (2) பொகுஷ்டிகம், (3) *ஸார்வகாமிகம், என்று மூன்று சிறப்புப் பெயர்கள் இங்கு கூறப்படுகின்றன.

முதலில் மூன்று வகையான திராவிட லிங்கங்கள் விவரிக்கப்படு கின்றன. லிங்கத்தின் உயரத்தைப் பதினாறு கூருகச் செய்து, அதில்

---

* காச்ய பீயம், 49-வது படலம், 89-வது சுலோகம் முதல், 95-வது சுலோகம் வரை ஏழு சுலோகங்களில் மூன்று வகையான லிங்கங்களின் விஷயம் பேசப்பட்டுள்ளது. அவையாவன :—

காமதம் நாவிதம் லிம்பம் வெஸரம் ச வதாஹ்யஹம் ।

நாகரம், திராவிடம், வேஸரம் என்னும் லிங்கங்களைக் கூறு கின்றேன்.

லிங்மொத்தியே தூ வெஷ்டாம்ஸே வனகாம்ஸம் கதாவஸ்தே ॥

தூம்ஸ தூர்ணஸே ஸிவாம்ஸம் தூ விஷ்ணும் ஸ்ருஷ்டாவதே ।
தயொஷ்டயுஷ்டவஷ்டாஸே தூ தவயாகாரஸ்ரவதே ॥ கூம் ॥

ஸ்வஸ்தியகாம்ஸே தூ வம்வாம்ஸம் ஸாஸ்திகம் ஹவெஸ ।
வெஷ்டாம்ஸம் வெளவிகம் வ்யாதம் தூணாம்ஸம் ஜயதம் ஹவெஸ

ஸவிதாரா நிஹாரஸ் வ்யாஸ் வ்யாஹரெவம் வதூவிஷ்யே ।
வனவம் தூயொஷவ்யாஹம் காமரெ தூ வியீயதெ ॥ கூஉ ॥

லிங்கத்தின் உயரத்தை நாலு பாகமாக்கி அதில் ஒரு பாகம் லிங்கத்தின் அகலம் அமைக்கலாம். இது கடையானது. லிங்கத் தின் உயரத்தை மூன்று கூருகச் செய்து அதில் ஒரு பாகமும் லிங்கத் தின் அகலமாக அமைக்கலாம். இது உத்தமமானது. இவ் விரண்டு அளவுகளுக்குமுள்ள இடைப்பகுதியை எட்டு கூருக்கி ஒவ்வொன் றையும் லிங்கத்தினகலத்துக்கு ஒவ்வொரு அளவாகக்கொள்ளலாம். இவ் வழியில் லிங்கத்தினகலத்திற்கு ஒன்பது அளவுகள் கூறப்

யிம்மரயாகெ யிகுரராம்ஸெ லாஸதவெஷாஜி விஷ்ணு।
ஜயடிம் வெளஷ்டிகம் ஸாவர்கமிகம் ஏவிவெ லவெஜ॥
சுவிக்ரஹாம்ஸகெ மலெ ஷொலமராம்ஸம் தஜ்ஜாதவு॥ சுஊ॥

ஐந்து, நான்கு அல்லது மூன்று பாகங்களின் அளவு அகலமுள்ளதாக லிங்கத்தை அமைக்கவேண்டும். இம் மூன்றளவுகளும் முறையே "சாந்திகம், பௌஷ்டிகம், ஸார்வகாமிகம்" எனப்படும். இம் மூன்றும் திராவிடலிங்கத்திற்கே ஏற்பட்ட அளவுகள்.

இனி வேஸரலிங்கத்திற்கும் இதேபோல் மூன்றளவுகள் உண்டு. இதில் லிங்கத்தின் உயரத்தை இருபத்தைந்து கூறுகச் செய்து கொண்டு அதன் அடிப்படையில் நிர்ணயம் செய்யவேண்டும். லிங்கத்தின் உயரம் 25-பாகமாகுல் அதில் பதினாறு பாகம் லிங்கத்தின் அகலம் இருக்கலாம். இது உத்தமம். அதில் பதின்மூன்று பாகம் லிங்கத்தின் அகலமாக அமைக்கலாம். இது அதமம் (கடையானது). இவ் விரண்டின் இடைப் பகுதியை எட்டு கூறுகச் செய்து ஒவ்வொன்றையும் லிங்கத்தின் அகலத்திற்குத் தகுந்த அளவாகக் கொள்ளலாம். இவ்வாறு ஒன்பது அளவுகள் ஏற்கெனவே காண்பிக்கப்பட்ட வகையில் ஊகித்தறிந்து கொள்க.

குறிப்பு:— சுவிக்ரஹாம்ஸகெ மலெ— என்பது, கர்ப்பக்ருஹத்தின் அகலத்தைக் கூறுகின்றது. ஆனால், "சுவிக்ரஹாம்ஸகெ ஷிமெ" என்றோ, அல்லது "சுவிக்ரஹாம்ஸகெ

பட்டன. இவற்றின் தன்மையை முன்பு காண்பித்த வகையில் ஊகித்தறிக. மற்றும் நான்களவுகள்:— லிங்கத்தின் உயரத்தைப் பதினாறு கூறுகச் செய்து அதில் ஐந்து பாகம் லிங்கத்தின் அகலமாகக் கொள்ளலாம். இது "சாந்திகம்" எனப்படும். அதிலேயே நாலு பாகம்—அல்லது மூன்று பாகமும் லிங்கத்தின்—அகலமாகக் கொள்ளலாம். இவ் விரண்டும் முறையே "பௌஷ்டிகம்" "ஜயதம்" என்று வழங்கப்படும். அல்லது விசாரிக்காமலே (அளவெடுத்து உற்று நோக்காமலே) கண் பார்வையில் பொருத்தமாகத் தோன்றுகிறபடியாகவே லிங்கத்தின் அகலத்தை அமைக்கலாம். இதுவும் ஒரு வழியாகும். முன்பு கூறப்பட்ட ஒன்பது வகைகளுடன் இந்த நான்கு வகைகளையும் சேர்த்துக்கொண்டால்

ரூபொத்ஸாம்ஸ ஏயம் தயொத்யெஷ்டஹாஜிதை ।
நவஸ்ரோமி வஸ்யுஸ்ரீ வெஹரெதா நி கஸ்துயெஸ ॥ சுச ॥

வஸ்வஸ்ரோம்ஸகெ தெவெஷ்டு வஹ்னவஸுஷ்டம்ஸுதகெஃ ।
விஷ்ணோம் வெஹரெ விதேஸ்ய வஸுபுஜயதாதிகூ ॥ சுரு ॥

தாம்தை" என்றே பாடம் இருத்தல் தகும். ஏனெனில், லிங்கத்தின் உயரத்தை அடிப்படையாகக் கொண்டே இங்கு லிங்கத்தினகலத்திற்கு அளவு கூறப்படுகின்றது. அவ்வாறே எம்மால் பொருள் தரப்பட்டுள்ளது.

வேஸரலிங்கத்தில் முற்கூறிய மூன்று வகைகள் அமைக்கும் வழி மற்றொன்று கூறப்படுகின்றது. இதில் லிங்கத்தின் உயரத்தை இருபத்தைந்து கூருகச் செய்து கொள்ளவேணும். அந்த அடிப்படையில்

பதின்மூன்று வகைகள் லிங்கத்தின் அகலத்தைத் நிர்மானிப்பதற்கு ஏற்படுகின்றன. இதெல்லாம் "நாகர" லிங்கத்திற்கேற்றவை.

லிம்தோவெமிதவாம்ஸெ தா ரவஹாஜிதை யாஹாம்ஸதெ ।
மாணவம்ஸெ ஸாஜிகூழிஃ வ்யாஸ ஊவிவெ வ வதாவிபுயழ ॥

இனி திராவிட லிங்கத்தின் விஷயம் விளக்கப்படுகிறது. இதில் லிங்கத்தின் உயரத்தைப் பதினெட்டு பாகமாக்கிக் கொள்ள வேண்டும். அதில் ஆறு பாகம் லிங்கத்தின் அகலமாகக் கொள்ளலாம். ஐந்து அம்சம் அல்லது நான்கு அம்சமும், மூன்று பாகமும் லிங்கத்தின் அகலமாகக் கொள்ளலாம். இவை முறையே சாந்திகம், பௌஷ்டிகம், ஜயதம், (கணக்கிடப்படாதது?) என வழங்கப்படும். இவை திராவிட லிங்கத்திற்கே ஏற்பட்ட நான்கு விதங்களாகும்.

வெஹரெ லிம்மதாம்தெ தா லிம்ஸதுஸ்ஸவிஹாஜிதை ।
சுஷ்டவா வஸுஷ்டா வணாஸ்தெவுஹாம் வ்ருகூலிதபு ॥
ஸாஜிகம் வெளவிகம் தெவ ஜயதம் வ ரூதெணதா ।
வெஹாரம் வ வதாஹெஷ்டம், ... ॥ சுரு ॥

இனி வேஸரலிங்கத்தின் அகலத்தினளவு கூறப்படுகின்றது. இருபது பாகமாக லிங்கத்தின் உயரத்தைப் பண்ணிக்கொண்டு

லிம்பம் லவஷ்டவஸ்தம் லலொமி விவிதகாரம்ய த்யம் தத்ரீ ஃ,
வ்யாயதகர வதாகாரமகம் யதி வதாம்ஸம் நோய விஸ்தீர்ணதரம்

லிங்கத்தின் அகலம் நிர்ணயிக்கப்படுகின்றது. லிங்கத்தின் உயரம் இருபத்தைந்து பாகமாகில், எட்டு பாகம், ஏழுபாகம், அல்லது ஆறு பாகம் லிங்கத்தின் அகலம் இருக்கலாம். இதில் முதல்முறை ஸர்வதோபத்ரியதம் இரண்டாவது பௌஷ்டிகம், மூன்றாவது ஸார்வகாமிகம் என்றறிய, வேண்டும். இவ் வகை வேஸரலிங்கத்திற்கே ஏற்பட்டது. (65)

இனி, பொதுவாக லிங்கத்தின் வகைகள் சில கூறப்படுகின்றன: (1) ஸர்வஸமம், (2) வர்த்தமானம், (3) சிவாதிகம், என லிங்கங்கள் மூன்று வகைப்படும். அவை மூன்றும் இந்த சுலோகத்தில் விளக்கப் படுகின்றன. முதலில் "ஸர்வஸம" லிங்கம் கூறப்படுகின்றது. இதன் பெயரே இதன் நிலையை விளக்கும். "எல்லா விதத்திலும் ஸம அளவாக இருக்கும் லிங்கம்" என்பது இந்தப் பெயரின் பொரு

அந்த அடிப்படையில் லிங்கத்தின் அகலத்தை நிர்ணயிக்க வேண்டும் இங்கு. இருபது பாகமாக்கப்பட்ட லிங்கத்தின் உயரத்தில், எட்டு, ஏழு, ஆறு, ஐந்து பாகம் லிங்கத்தின் அகலம் அமைக்கலாம். இவை முறையே, சாந்திகம், பௌஷ்டிகம், ஜயதம், (பொதுவில் கணக்கு பார்க்காமல் நிர்ணயிக்கும் வகை?) என்னும் நான்கு வகைப்படும். இவை நான்கும் வேஸரலிங்கத்தின் உட்பிரிவுகளேயாகும்.

இங்கு காச்யபீயத்தில்; நாகரம், த்ராவிடம், வேஸரம் என்னும் மூன்று வகை லிங்கங்களிலும், சாந்திகம், பௌஷ்டிகம் ஜயதம்—எனப்படும் மும்மூன்று உட்பிரிவுகளை விளக்கமாக அவ்வ ற்றின் அளவுடன் கூறியிருக்கிறார். ஆனால் இந்நூலில், த்ரா விடம்-வேஸரம்-இவ்விரண்டு வகைகளின் மும்மூன்று உட்பிரிவு களே தெளிவாக விளக்கப்படுகின்றன. நாகரலிங்கத்தின் உட்பிரிவுகள் விளக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக நாகர லிங்கத்தின் அளவை ஆதாரமாகக் கொண்டு அதன் விமானத்தை அமைக்கும் வகை. 60, 61, 62 சுலோகங்களில் கூறப்பட்டுள்ளது. விமானத்தைப் பற்றி திடீரென்று இங்கு கூறவேண்டிய அவசியம் என்ன? என்பது சிந்தனைக்குரிய விஷயம். மேலும் "ஜயதம்" என்பதன் ஸ்தானத்தில் "ஸார்வகாமிகம்" என்பது இங்கு கூறப் பட்டுள்ளது.

மதே ஹாநயாஜோ தீர யெதி வஹாநாம்மொஷ்டு

[உருஷிஷ்டு-

வெதம் ஏழவிதே க்ரியொக யாமஸம்வாதெவஜ்ஜெ.

[ஸாயிகே 1 சுசு 1

ளாகும். லிங்கத்தில், பிரம்மாம்சம், விஷ்ணுவம்சம், சிவாம்சம் என்று மூன்று பாகங்களுண்டல்லவா? அந்த மூன்று அம்சங்களும் ஒரே அளவு கனமுள்ளதாகவும், ஒரே அளவு உயரமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் லிங்கத்தின் சுற்றளவு அதன் முழு நீளத்திற்குச் சமமாகவே இருத்தல் அவசியம். ஏற்றத் தாழ்வாக இருக்கலாகாது. இவ்வாறு அமைக்கப்படும் லிங்கம், "ஸர்வஸமம்" எனப்படும்.

இனி வர்த்தமான லிங்கத்தைக் கூறுவாம். இதிலும் பெயரே இதன் தன்மையை உணர்த்த வல்லதாக இருத்தின்றது: "படிப்படியாக வளர்ந்து கொண்டே செல்வது" என்பது "வர்த்தமானம்" (வர்த்தமானம்) என்னும் சொல்லின் பொருளாகும். முன்போலவே லிங்கத்திலுள்ள மூன்று அம்சங்களுள், முதல் அம்சம் பிரம்மபாக மென்பது. அதைக்காட்டிலும் இரண்டாவதான விஷ்ணு பாகம் சிறிது வளர்ந்திருத்தல் வேண்டும். அதையும் விட மூன்றுவதான சிவாம்சம் வளர்ந்திருக்க வேண்டும். இதற்கான முறையாவது:— லிங்கத்தின் முழு உயரம் எவ்வளவு இருக்கவேண்டுமென்று விருப்பமோ அதை இருபத்துநான்கு கூறுகச் செய்து கொள்ளவேண்டும். இதில் முதல் (பிரம்ம) பாகம் ஏழு கூறுகளிலும், இரண்டாவது (விஷ்ணு) பாகம் எட்டு கூறுகளிலும், மூன்றுவது (சிவ) பாகம் ஒன்பது கூறுகளிலும் அமைக்கவேண்டும். இதில் லிங்கத்தின் மூன்று பாகங்களிலும் படிப்படியாக உயரம் வளர்ந்துகொண்டே செல்வதால் இது வர்த்தமானம் என வழங்கப்படுகின்றது.

இனி "சிவாதிக" லிங்கம் கூறப்படுகின்றது. பெயரிலிருந்தே இதன் தன்மையையும் ஊகித்தறியலாம். மற்ற இரண்டு அம்சங்களைக் காட்டிலும் சிவாம்சம் மட்டும் அதிகமாக இருத்தல்

சூயாதே ஏவிதே ஶிவாசுரய ஜாஹீவே ஷுஷுவிவி ஷுஷ்ய ஏகிः
சாய ஸ்ரோமொரவி வஷவஷுயவய ஒதேஷுः வஷவஷிः
[வஷவஷிः।
வ்ரூயாதாசுய ஸ்ராம்ஸ சுவிரவ நாம்ஸः வ்யாத்வः, சேவ-
[ஒதேஷுः
வஷ்ராம்ஸொரவி, மஹ ஸுமஹ சவஸ்ராம்ஸொ சரவி வா
[வ்ய ஸுதே ॥ சுவ ॥

இதன் தனிச் சிறப்பாகும். அதாவது, மற்ற இரண்டம்சமும் சம அளவாக இருக்க, சிவாம்சம் மட்டும் அதிகமாக இருக்குமென்ற வாறு. அவ்வாறன்றிக்கே மூன்றம்சங்களும் படிப்படியாக ஒன்றைவிட மற்றொன்று அதிக உயரமுள்ளதாக அமைந்தால் அது வர்த்தமான லிங்கம் என்னும் முந்திய வகையையே சாருமேயன்றி சிவாதிகமாகாது. இதை அமைக்கும் வகை:— லிங்கத்தின் முழு உயரம் எவ்வளவு இருக்கவேண்டுமென்று விருப்பமோ, அதைப் பத்து கூருகச் செய்து, மும்மூன்று கூறுகளால் முறையே பிரம்மரம்சமும் விஷ்ணவம்சமும் அமைத்து, எஞ்சியுள்ள நான்கு கூறுகளால் சிவாம்சத்தை யமைப்பது. இதில் மூன்றுவதான சிவாம்சம் மட்டும் மற்ற அம்சங்களைவிட அதிகமாக இருப்பதனால் இது 'சிவாதிகலிங்க' மெனப்படுகின்றது. (66)

லிங்கத்தின் அகலம் பலவாருக விளக்கப்படுகின்றது. லிங்கம் நிர்மாணம் செய்ய விரும்புகின்றவர்கள், முந்துற முன்னம் தாங்கள் செய்ய விரும்பும் லிங்கத்தின் உயரம் எவ்வளவு இருக்கவேண்டு மென்பதை நிச்சயித்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு அவ்வுயரத்தின் ஆதாரத்தில் அதன் அகலத்தை நிச்சயிக்கவேண்டும். தனக்கு இஷ்டமான லிங்கத்தின் உயரத்தை இருபத்துநான்கு கூருகச்செய்து, அதில் எட்டுபாகம் லிங்கத்தின் அகலமாகக் கொள்ளலாம். இது ஒரு அளவு. இருபத்துநான்கில், ஏழு அம்சமும் ஐந்து யவமும் கூடிய பாகத்தை லிங்கத்தின் அகலமாகக் கொள்ளலாம். இது மற்றோரளவு. இருபத்து நான்கு பாகத்தில், ஐந்து பாகமும்

ஸாதாரணாஸனயஸாமஸஹிதம் ஸ்ரீமத் விமாநாக்யமுதேஹி
ஸர்வாஸி யஸ்வவஸ்துயுக்தஸ்ரீநிவி-
ஷ்டாயதம் யதவைஃ வந்தனீயைஃ।
ஸர்வதேஃ வந்தனீயைவ வந்யவிவிதேஹ
விஸ்வாதிதோ விஷ்ணுதேஃ
கூயதாஸ் ஸவபுஸஹம் ஸஹஸாஸ்ரவிஹிதம்
வ்யஸ்தாதிரோஸாயிகே ॥ சுஅ ॥

ஐந்து யவமும் கூடிய பாகத்தை லிங்கத்தின் அகலத்தினளவாகக் கொள்ளலாம். இதுவும் ஒரு அளவாகும். மற்றுங்காண்மின்! லிங்கத்தின் முழு உயரத்தை இருபத்துநான்கு கூறுகச் செய்ததில், எட்டு பாகங்களும் ஒரு யவமும் கூட்டிய அளவு லிங்கத்தின் அகலம் இருக்கலாம். அல்லது இருபத்துநான்கு கூறுகச் செய்த லிங்கத்தி னுயரத்தில் ஐந்து பாகம் மட்டுமே அதன் அகலம் அமைக்கலாம். கர்ப்பக்ருஹத்தின் அகலத்தில் ஒன்பதில் ஒருபாகமாகவும் லிங்கத் தின் அகலம் அமைக்கப்படலாம். (67)

இந்த சுலோகத்தில் அந்தணர் முதலிய நான்கு வருணத்தவருக் கும் ஏற்றவிதமான லிங்கத்தினகலம் கூறப்படுகின்றது. இங்கு முற்கூறப்பட்டபடியே லிங்கத்தின் முழு உயரத்தை முந்துற முன்னம் 24 கூறுகச் செய்து கொள்ள வேண்டும். அதில் லிங்கத்தின் அகலம் எட்டு அம்சம் அமைக்கலாம். இது முதல் அளவு. அதிலேயே ஏழு பாகமும் ஐந்து யவமும் லிங்கத்தின் அகலமாக அமைக்கலாம். இது இரண்டாமளவு. ஐந்து பாகமும் ஐந்து யவமும் லிங்கத்தினகலம் அமைக்கலாம். இது மூன்றாமளவு. அதிலேயே, ஐந்து பாகங்கள் மட்டும் லிங்கத்தினகலத்தில் அமைக்கலாம். இது நான்காவது அளவு. இவ்வளவுகள் நான்கும் முறையே அந்தணர் முதலான நான்கு வருணத்தவருக்கும் ஏற்றவையாகும். இவ்வாறுகவே இந்த நான்கு வகையான லிங்கங்களிலும் முன்பு 66-வது சுலோகத்தில் கூறப்பட்ட விதமாக ஸர்வாலம், வர்த்தமானம், சிவாதிகம், என்றும்

ஹாமெ ஸூதஈவிழுஂஸு திவி ஷுஏஷு-
ஷுஂமஹ்யு தீவஃஂ வ்ரவிஹஜ்யு ஷுஏ2யுக்ஷு ।
விஷ்ணஂஹ ஐஂமெஸ ரூய வக்ஷுவிஸ்ஷு
தாஹஂம் பிதம் ஷொ2ளஸுவிஸ்ஷு ஹாமெஃ ॥ சுகூ ॥

ஷூரஹ்யு ஷஷ்டூாம உதஃ சுரெணை
வாதாஃஸுவ்ஜ்யூா தவயா விஹாமெஃ ।
வஷ்ணு தெதாதி தவொஷிதாதி
ஷுஂமாதி பிதுஸ்யஹாமஹதெ ॥ எவி ॥

மூன்று வகைகளையும் அதற்குற்ற முறையில் அவரவர்களுக்கு அமைத்துக்கொள்ள வேண்டும். (68)

இருபத்துநான்கு பாகமாக லிங்கத்தின் முழு உயரத்தை நன்றாகக் கவனித்து அளந்து வைத்துக்கொள்ளவேண்டும். அதில் ஐந்து பாகங்களால் அந்த லிங்கத்தின் அகலத்தை அமைக்கவேண்டும். அதன் சுற்றளவு, (இருபத்துநான்கு பாகமாகச் செய்யப்பட்ட அதன் உயரத்திலேயே) பதினாறு பாகமுள்ளதாக அளவிட்டு அமைக்க வேண்டும். இதில் பதினாறு பாகம் சுற்றளவு வருமாறு லிங்கத்தின் கனம் இருக்கவேண்டும். ஐந்து பாகமே லிங்கத்தின் கனம் இருக்குமாயின், அதன் சுற்றளவு பதினாறு பாகம் வருவது சாத்திய மில்லை அதனால் இந்த இரண்டு அளவுகளையும் கூர்ந்து கவனித்துச் சரியாக வருமாறு ஏதாவதொன்றில் சிறிதளவு கூட்டியோ குறைத்தோ அல்லது உள்ள படியேயோ சிற்பிகள் கவனித்துச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். (69)

இருபத்துநான்கு பாகமாக லிங்கத்தின் முழு உயரத்தைப் பங்கு போட்டு, அதில் ஆறு பாகம் லிங்கத்தின் அகலம் இருக்குமாறு அமைக்கலாம். அதற்குமேல் கால் பாகம் கூட்டி 6½ பாகம் அமைக்கலாம். இப்படியே படிப்படியாகக் கால் கால் பாகம் கூட்டிக் கொண்டே போய் ஒன்பது அளவுகள் எடுக்கவேண்டும். ஒன்பதாவது அளவில் லிங்கத்தின் அகலம் (இருபத்துநான்கில்) எட்டு பாக

சுஷ்டாஷ்டாயுத சதுரஸ்ரமெகே விலஜிதெ
விஷ்காரஉமாமயம்
ரெவம், உயுக்தஸ்ரமெகெவிஹிரத.
ஸ்ரீயு-ர்ரம்ஸவ்யெர்யாதுரெ।
ஹெக்தெகரு *ஸ சதுரஸ்ரமெகெவிஹி ரதொ
ஹெக்தெ ஸ மாமயம்

முள்ளதாக இருக்கும். இவ் வழியிலும் தனக்கிஷ்டமான ஒரு அளவில் லிங்கத்தின் அகலத்தை அமைக்கலாம். (70)

வேறு சில வழிகள் இதில் கூறப்படுகின்றன. லிங்கத்தின் முழு உயரத்தை எட்டு பாகமாகச் செய்யவேணும். எட்டரை பாகமாகவும், ஒன்பது பாகமாகவும் அதைச் செய்துகொள்ள வேணும். இவ்வாறு மூன்று விதமாக லிங்கத்தின் உயரத்தைக் கூறு செய்து, அந்த ஆதாரத்தில் லிங்கத்தின் அகலம் இருக்கவேண்டிய அளவு கூறப்படுகின்றது இங்கு. முதலில் லிங்கத்தின் உயரத்தை எட்டு கூருகச் செய்யும் பக்ஷத்தில் இழிவோம். இரண்டு பாகம் லிங்கத்தின் அகலம் அமைப்பது உத்தமபக்ஷம், மூன்று பாகம் கொண்டதாக லிங்கத்தின் அகலத்தை அமைப்பது அதமபக்ஷம். இதற்கு மத்தியில் இரண்டரை அம்சமுள்ளதாக லிங்கத்தின் அகலத்தை அமைப்பது மத்யமபக்ஷம். இவ்வாறு மூன்றளவுகள் இதில் கூறப்பட்டன.

எட்டரை அம்ச முள்ளதாக லிங்கத்தின் முழு உயரத்தைக் கூறு செய்யுமிடத்திலும் இவ்வாறே மூன்றளவுகள் லிங்கத்தின் அகலத்திற்குக் கண்டுகொள்க. ஆனால் ஒவ்வொன்றிலும், அரைப் பாகம் சேர்த்துக்கொண்டு, உத்தம மத்யமாதமபக்ஷங்களை இதில் நிர்ணயம் செய்யவேணும். அதாவது எட்டு கூருகச் செய்ததில் இரண்டு கூறு அகலம் உத்தமமானால், எட்டரை கூருகச் செய்ததில் இரண்டரை கூறு அகலம் உத்தமம் — என்கிற வழியில்

---

* சதுரஸ்ரமெகெ என்று மூலத்தில் பாடம் உளது. சதுரஸ்ரம் என்று அதைத் திருத்தி அச்சிட்டுள்ளோம்.

விஷ்ணும் வாகரவதெவ தவயா
வம்கஷ்டியெ ஆ சுரோசு ॥ எக ॥

ராமிஷாராகூடநிஹதம் சூசுவா விஷ்ணு ராஜிதழி ।
சுதஎகெந சுவீஹகம் வ்ரிணாஹம் வதீவமழி ॥ எஉ ॥

விஷ்ணுஹராசு க்ரிமாணம் நியாய
விஷ்ணு வஷ்டுஹகதாவஷ்டாம்சு ।

ஒன்பது கூருக லிங்கத்தின் உயரத்தைப் பங்கிட்ட பகுதித்திலும் இவ் வழியிலேயே மேலும் அரைப்பாகம் கூட்டி உத்தம மத்யமாதமபகுதிங் கள் ஊகித்தறிந்துகொள்க. இங்கு மூலத்தில் சுலோகத்தின் இரண் டாவது அடியில், "ஸ்ருஷ்டம் கூரு வஷ்டம்ஸகெஃ" என்றிருத்தல் தகும். அவ்வாறே இருப்பதாகக் கருதி எம்மால் பொருள் தரப்பட் டது. ஆனல், "ஸ்ருஷ்டம் உய்டஷ்டம்ஸகெஃ" என்றே பாடமுள் ளது. அவ்வழியில் பொருள் பொருத்தமாக வரவில்லை. அறிஞர்கள் ஆய்ந்துணர்க. (71)

இந்த சுலோகத்தில், அகலத்தின் ஆதாரத்தில் சுற்றளவைத் தீர்மானிக்கும் முறை விளக்கப்படுகின்றது. இந்த சுலோகத்தின் முதல் அடியும் மூன்றுமடியும், அகலத்தை ஆதாரமாகக் கொண்டு சுற்றளவை நிர்ணயம் செய்யும் வகையைக் கூறுகின்றன. இவற்றி லுள்ள ஸங்கேதச் சொற்களின் கருத்து தெளிவாக விளங்கவில்லை. தற்காலம் சிற்பிகள் வழக்கமாகக் கையாளும் முறையாவது:— குறுக் களவை ஐந்தால் வகுத்து, மேலும் மூன்று பாகங்களாக் கூட்டி இதை இரண்டால் பெருக்கினல் சுற்றளவு வருமென்பது. அதாவது—சுற்ற ளவின் மொத்தத்தை இரண்டு கூறுக்கி ஒன்றை எட்டால் வகுத்து மூன்று பாகங்களை நீக்கி நின்றது குறுக்களவு என்றவாறு. இம்முறை தான் இந்த சுலோகத்தில் விளக்கப்படுகின்றதா? அல்லது வேறு முறையா? என்பதும் ஆராய்ச்சி செய்தறியவேண்டிய விஷயம். (72)

அகலத்தின் ஆதாரத்தில் சுற்றளவைக் கண்டுபிடிக்கும் வகை மற்றொன்று இந்த சுலோகத்தில் கூறப்படுகின்றது. குறுக்களவை மூன்றல் பெருக்கி, குறுக்களவின் எட்டிலொருபாகத்தில் எட்டி லொருபாகத்தைக் கூட்டியதனல் கிடைப்பது சுற்றளவு. அதாவது—

விக்ஷிவ்யவ்யாகாமவியிவ்ஷ்டிக

விம்ஸ ஸிஹாதெமா நிஹிதொய்வா வ்யாஸ ॥ எக ॥

வலயுதொஹஸ்ரகம் ஸிம்மம் வய்ஹாதம் ஸிவாயிக்ஷ் ।

வ்யவ்ஹிகம் ச சதுர்ய்ஹா வ்யாஸ தஸ்யக்ஷ்ட்வ்யமுவ்யுதெ ॥

விஷ்ணாம் வலயுதொஹஸ்ரம் ஸ்ஹஸ்ரஜாம் வய்ஹாதகம் ।

ஸிவாயிகம் விஸாவிஷ்டம் ஸஸ்ரஹாணாம் வ்யவ்ஹிகம் உதம் ॥ எரு ॥

ஒரு லிங்கத்தின் குறுக்களவு 1 அடி (12 அங்குலம்) என்று வைத்துக் கொள்வோம். அதை மூன்றால் பெருக்கினால் மூன்று அடி (36 அங்குலம்) ஆகின்றது. குறுக்களவு ஒரு அடியை எட்டால் வகுத்தால் 1½ அங்குலம் ஒரு பாகமாகின்றது. அதையும் எட்டால் வகுத்தால் 1½ யவம் ஆகும். முன்பு கிடைத்த மூன்றடியு (36 அங்குலத்து) டன் இதையும் கூட்டினால் 3 அடி, 1½ யவம் சுற்றளவு வருகின்றது. இது ஒரு வழி. மற்றொரு வழியும் உண்டு. முன் கூறியபடி அகலத்தை மூன்றால் பெருக்கிக் கொண்டு, அகலத்தில் இருபத்தொன்றில் ஒரு பகுதியைக் கூட்டினாலும் சுற்றளவு கிடைத்துவிடும். முன் கூறியபடி ஒரு லிங்கத்தின் குறுக்களவு 1 அடி என்றே வைத்துக் கொள்வோம். அதை மூன்றால் பெருக்கினால் 3 அடியாகும். அத்துடன் குறுக்களவாகிய ஒரு அடியின் 21-ல் ஒரு பாகத்தைக் கூட்டிக் கொள்ள வேண்டும். ஒரு அடிக்கு 12 அங்குலம் அதாவது 96 யவம். இதை இருபத்தொன்றால் வகுத்தால் *4½ யவம் வரும். 3 அடியுடன் இதையும் கூட்டினால், 3 அடி 4½ யவம் சுற்றளவு; என்று தேறுகின்றது. முன் காட்டிய வழியில் 3 அடி 1½ யவம்தான் சுற்றளவாகத் தேறிற்று. இதுதான் இவற்றின் வாசி. (73)

(1) ஸர்வதோபத்ரம், (2) வர்த்தமானம். (3) சிவரதிகம். (4) ஸ்வஸ்திகம் என்று லிங்கம் நான்கு வகைப்படும். அவற்றின் தனித் தனியான இலக்கணம் இனி கூறப்படுகின்றது. (74)

மேற் கூறியவை நான்கும், முறையே அந்தணர் முதலான நான்கு வருணத்தவருக்கும் ஏற்றவை. பிரதிலோமர், அனுலோமர் இவர்கட்கும் ஸ்வஸ்திக மேற்றது. (75½)

---

* இது உத்தேசமாகக் கூறப்பட்டது. சரியான கணக்கல்ல.

வுதியொஉஊயொஷி வண-ஊதாஉவி வுஷ்ஷிகூ।

யயொவிதாதாதவிதாதயஂகாம்
ஶீயாம் யயொகுஉதாஉவிஹஜ்।
உஉம் யஂமாஶும் விஉயீத உயூ
உஷ்டாஶுகம் வுதுஉயம் வாஂம உ! எள!

கஂப-ஶெ வஂஹஉ வுஹாய-ஹஂஜஹஷ்-
ஶும் கண-ஹஷ்-குஉயூதா

ஸர்வதோபத்ரம்—முதலான லிங்க பேதங்களைக் கூறுவதற்காக, பொதுவான லிங்க அமைப்பின் சில உண்மைகளை இது முதல் சில சுலோகங்களால் விளக்குகின்றார். முதன் முதலில், லிங்கம் செய்வதற்கேற்ற சிலையைப் பரீக்ஷித்தறிந்து கொண்டு, அதில் இருக்கவேண்டிய அகலம்—நீளம்—கனம், இவற்றையும் தகுந்த வாறு கவனித்து, முறைப்படி துண்டித்து எடுத்துக்கொண்டுவர வேண்டும். அதை மூன்று பாகமாக (அளவுகோலால் அளந்து அடையாளம் செய்து)ப் பிரித்து, அடிப்பாகத்தை நான்கு மூலையாகவும், நடுப்பகுதியை எட்டு கோணமாகவும், நுனிப்பகுதியை வட்டவடிவமாகவும் செய்ய வேண்டும். (77)

இனி, மேற் கூறியவாறு லிங்கத்தின் மூன்று பகுதிகளையும் (சதுரம்-எண்கோணம்-வட்டம்) அமைக்கும் வகை இங்கு விளக்கப்படுகின்றது. முந்துற முன்னம் லிங்கத்திற்காக உத்தேசம் பண்ணிக் கொண்டுவந்த சிலையை முழுதும் சமசதுரமாகப் பண்ண வேண்டும். அதில் மூன்றில் ஒரு பாகம் (அடிப்புறத்தில்) பிரம்மாம்சத்தை ஒதுக்கிவிட்டு மத்திய பாகத்தை எண்கோணமாக்க வேண்டும். இதற்காக வேண்டிய வழி இங்கு கூறப்படுகின்றது. சமசதுரத்தின் ஓரங்களில் நான்கு கோடுகள் சென்று ஒன்றோடொன்று கலந்து ஒரு சதுரமாக நிற்கின்றன வல்லவா? அவற்றுள் ஒவ்வொரு கோடும் இணைந்துகொள்ளும் இடங்களே கோணங்கள் எனப்படும். சம சதுரத்தில் நான்கு கோணங்கள் உள்ளன. ஒவ்வொரு கோணத்

கவ்யாஹாவிதயுக்யவா வ்ருதிஷ்டம்
வெவெ லாஜாவலுதுகெ।
க்ருஷ்ணா தவயயு வம்ஷ்டிதவதா-
ஷ்டானாநி வம்மொயயு வா-

திலிருந்தும் இரு புறங்களிலும் செல்லும் ஸம ரேகைகள் இரண்டு. அவற்றுள் ஒன்று "புஜம்" என்றும், மற்றொன்று "கோடி" என்றும் வழங்கப்படும். இது கணித சாஸ்திரஸங்கேதம். "கோடி" யினுடையவும், "புஜ"த்தினுடையவும் இரு முனைகளையும் ஒன்று சேர்க்கும் வகையில் ஒரு கோடு வரைந்தால் அது "கர்ணஸூத்ர" மெனப் படும். இந்த சுலோகததில் விளக்கப்படும் முறைக்கும், மற்றும் பல விடங்களிலும் கூறப்படும் அளவு முறைகளுக்கும் இந்த விஷயம் இன்றியமையாததாகலின் இங்கு இவ் விஷயத்தை விளக்கமாகக் கூறும்படி நேர்ந்தது.

ஸமசதுரத்தில், கர்ணஸூத்திரம் செல்லும் வழியில் அதன் புஜஸூத்திரத்தைச் (புஜமெனப்படும் ஒரு ரேகையின் அளவுள்ள நீளத்தை) செலுத்தி அந்த இடத்தை அடையாளம் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறே நான்கு கோணங்களிலின்றும் செல்லுகின்ற கர்ணஸூத்ரங்களின் வழிகளிலும் அந்தந்த புஜஸூத்ரங்களைச் செலுத்தி அதனதன் முடிவிடங்களை அடையாளம் செய்து கொள்ள வேண்டும். ஸமசதுரத்தின் உட்புறத்தில், ஒரு கோணத்தினின்றும் நேர் எதிரான மற்றொரு கோணத்தை நோக்கிச் செல்லும் ரேகையின் எல்லையில் மேற் கூறியவாறு நான்கு புள்ளிகள் இட்டு அடையாளம் செய்துகொள்வது, ஸமசதுரத்தை (நாற்கோணத்தை) எண்கோணமாகச் செய்வதற்கான முதல் செயல்.

பிறகு அந்த அடையாளப் புள்ளிகள் ஒவ்வொன்றிலிருந்தும் இருபுறங்களிலும், ஸமசதுரக் கோடுகளைத் தொடும் வண்ணம் இவ் விரண்டு புஜஸூத்ரங்கள் செலுத்தி, அவ்விடங்களையும் அடையாளப் புள்ளிகளால் குறித்துக் கொள்ள வேண்டும். ஸமசதுரத்தின்

[illegible]

[illegible]

நான்கு கோணங்களின் இரு புறங்களிலும் சம அளவில் இந்த அடையாளங்கள் இடம் பெறும். இப்போது ஸமசதுரத்தின் நான்கு ரேகைகளிலும் தனித்தனியே இவ்விரண்டு புள்ளிகள் இடம்பெற்றுள்ளனவல்லவா? இவைதான் அதில் அமைக்கப்போகிற எட்டு கோணங்களின் குவிந்த முனைகளாகும். இவ்வாறு அடையாளம் செய்து கொள்ளுவது, ஸமசதுரத்தை எண்கோணமாக்குவதன் இரண்டாவது செயல்.

இதன் பிறகு ஸமசதுரத்தின் நான்கு மூலைகளிலும் இரு புறங்களிலுள்ள அடையாளப் புள்ளிகளிலிருந்து நேர்க்கோடு ஒன்றுக் கொன்று வரைந்து கொள்ள வேண்டும். இந்தக் கோடு, ஏற்கெனவே உள்ள நான்கு கோணங்களையும் வெளிப்படுத்தியவாறு செல்லும். அந்தக் கோட்டின் அளவுக்கே நான்கு கோணங்களையும் ஆயுதத்தால் சிதைத்து நீக்கி விட்டால், நின்றது எண்கோணமாக அமைந்துவிடும். ஸமசதுரத்தை எண்கோணமாக்குவதில் இதுதான் முடிவான செயல். இவ் வழியிலேயே அளவெடுத்து முயன்று, எண்கோணத்தைப் பதினாறு கோணமாகச் செய்ய வேண்டும். பிறகு அதையே வட்ட வடிவமாகவும் பண்ணவேண்டும். (78)

இதில் லிங்கங்கள் யாவற்றுக்கும் பொதுவான விஷயம் கூறப்படுகின்றது. லிங்கத்தில் சதுரம்—எண்கோணம் வட்டவடிவம்—என்று மூன்று விதமாக அமைக்கப்படும் பாகங்களில், முறையே பிரம்மாவும், விஷ்ணுவும், சிவனும் தேவதைகளாவார்கள். எல்லா

காரஸ்ஃ வாகபீஜாயாரம் வ்யாகு, விஷ்ணோர்ஃ வீர்யஸ்வரூபிகே।
பூஜ்யஃ சிவாம்ஸஃ வ்ருத்தஜ்ஞஃ வ்யாஸ் வவ-ஹ்ரும்நமோஸ்துதே வியஃ

வரதாகா ஸவெதீ ஹ்ரும்மவ்யாவரரிகா யயா।
வ்ருத்தராம்ஸ வனவ கிரிபுவெஷ்டா ஹ்ரும்மஸ்வரூப வாது வி ॥

வெடாரூவீரிகாயாவ்ரூ ஹ்ரும்நெ வவ-ஹ்ரூம் வஜ்ரம் கூடிபு।
கஹ்ரும்ம வரிணாவஸ்ரூ ஸ்ரூவாவ-ஹ்ரூ ச தவ்ஷடெ ॥ அ ॥

விவ்ஹார்ஃ வஜ்ரவ வவ்யாஸ் ஹோயாதொஷ்ரொட்ரகுயாலவெஸ்।
கூதொ ஹ்ரும்மவ்ரம் வீரம் வ்யாஹ்ரூயாதொஷவஜிபுதபு ॥ அ ॥

லிங்கங்களுக்கும் இது பொதுவானது. த்ரிகண்டலிங்கங்களில் இம்முறை சிறப்பாக அநுசரிக்கப்படவேண்டும். (79)

லிங்கத்தின் பிரம்மாம்சம், பாதசிலையில் பொருத்தப்பட்டிருக்கும். விஷ்ணுவின் அம்சம் பீடிகைக்குச் சமமாயிருக்கும். இது இரண்டும் கண்ணுக்குப் புலனாகாது. மேல் கண்ணுக்குத் தெரியும் பகுதி சிவாம்சமெனப்படும். இது எல்லா லிங்கங்களுக்கும் பொதுவான விஷயம். (80)

லிங்கத்திற்கு ஆவாரிகை (ஆவுடையார்) எப்படி யிருக்கின்றதோ அவ்வாறே அதன் வேதியும் சம அளவுள்ளதாக இருக்கவேண்டும். இங்கு "லிங்கம்" என்றும் சொல்லால் பூஜாம்சமேதான் குறிப்பிடப் படுகின்றது. (81)

நான்கு மூலையுள்ள பகுதி; பீடிகை, லிங்கம், இவற்றில் இது ஸமமாகக் கவனிக்கப்படவேண்டும். அந்த லிங்கத்தின் பரிணாமத்தில் (சுற்றளவில்) உள்ள பிரம்ம ஸூத்திரங்கள் நான்கிலும் அதன் விஸ்தாரம் (அகலம்) சம அளவாகவே இருக்கவேண்டும். இல்லையேல் "சாயாதோஷம்" வந்துவிடும். ஆதலின் பீடம் லிங்கத்

வீம்ஷ்ஷ்ஷ்ஹ தூஹ்ஹ வஹ்ஹாஸ வாணாஹம் தூ விஹ்ஹ்ஹ்ஹிः
தயா தூம்மெஷ்ஷ் ஷ்ஹிமெஷ்ஷ் வீகிகாயிசுவிஹ்ஹ்ஹ்ஹிः ॥அச॥

ஸவமஹ்ஹ் ஶிவாம்ஷ்ஹி தூ வயூயெஸ தத்ஹ்ஹம் யயா ।
யாவஹ்ஹ்யூயம் ஶிவாம்ஷ்ஹி தூ ஸ்ரஹ்ஹாம்ஷ்ஹி ஹாவயெதூ தஸ॥

தஸஸ் ஸ்ஹுஹிஷ்ஷ்ஹ ஷ்ஹிமெஷ்ஷ் சூஹ்ஹுமதாம் வீம்விஹ்ஹ்ஹ்ஹிதிः ।
விஜூஹ்ஹ்ய வஜ்ஹாஹாமம் தூ சூயஹ்ஹ்ஸ்ரஹ்ஹ்ஹம் தத்ஹ்ஹ்ஹதிः ॥ அசூ

ஸ்ரஹ்ஹாம்ஷ்ஹி வயூயெஷ்ஹாஹெ வ்யஸிஹாஹீ ஹ வெஹ்ஹ்ஹ்வெ ।

திற்குச் சமமாகவே அமைக்கப்பட வேண்டும் அதுதான் சாயா தோஷமற்றதாக இருக்கும். பிரம்ம ஸூத்திரமென்பது, லிங்கத்தின் உச்சியிலிருந்து நடுமத்தியில் நான்கு புறமும் நேராகத் தொங்க விடப்படும் சூத்திரம். இதுவே மத்ய ஸூத்ரமென்றும் வழங்கப் படும். சாயாதோஷம்—நிழல் விழுவதனால் உண்டாகும் தோஷம். லிங்கங்களின் சுற்றளவு, எத்தனை பாகமோ, அத்தனை பாகமே பீடங் களின் பரப்பு (அகலம்) இருத்தல் வேண்டும். (83½)

அப்படியே, உயரம் அதிகமுள்ள லிங்கங்களில் பீடத்தின் அகலமும் அதற்கேற்றவாறு அதிகரிக்கவேண்டியிருக்கு மல்லவா? அதையும் சாயாதோஷம் ஏற்படாதவாறு நன்றாகக் கவனித்து சிவாம்சத்தில் வளர்த்தவேண்டும். சிவாம்சத்தில் எத்தனை பாகம் அதிக உயரமாக்கப்பட்டுள்ளதோ, அத்தனை பாகத்தை பிரம்மாம் சத்தில் குறைத்துக் கொள்ள வேண்டும். (85।

அதுபோலவே ஸ்தூலமான (பெருத்த அளவுள்ள) லிங்கங் களில் பீடத்தின் அகலம் சிறிது குறைவாக அமைக்கவேண்டியிருக் கும். அதை ஊன்றிக் கவனித்து, அதற்கேற்றவாறு பூஜா பாகத்தை (சிவாம்சத்தைக் குறுகியதாகச் செய்யவேண்டும். அவ்வாறு குறுக்கப்பட்ட அளவை, அதனுடைய பிரம்மபாகத்தில் கூட்டி, அதை

ஹாயரதொஷொ விஸாயெ-ர்ஸயம் ஸ்மெஸவபுஸவெஷ்டிதம்

வயுஸாகாரிஸ்மெஷு மெதஸு வ்யாபிதி கெவத ।
தஸவ்யுத்தெஷு ஸ்மெஷு வ்யுத்தாவுத்தெ ச ஸாதுஜெ ॥ அஅ ॥

ஸ்லயம்ஹு வி தயாவரணெஷ்வாஷெ-ர் வா நியதொ தவி ।
வய-ஸாகாரிஸ்மாதாம் தூயாணாஸவ்யயம் வியிஃ ॥ அசு ॥

யதஸு மெது தத்து கூயிதா ஹாயரதொஷம் விதா யயா ।
ஸ்மாயதி வ்ரஹாணாதீ தூயாதி தா வீம்விஷ்ணுதிஃ ॥ கூஐ ॥

ஸிவஹாமஸஹ சாய-ர் வ்யாவ்யாதம் வம்ஸ்ரமெ தயா ।

வளர்த்தவேண்டும். விஷ்ணு பாகத்தில் கூட்டுவதோ-குறைத்தலோ கிடையாது. சிவாம்சத்தில் குறைந்தால் அதை பிரம்மாம்சத்திலும், பிரம்மாம்சத்தில் குறைந்தால் அதை சிவாம்சத்திலும் சரிக்கட்ட வேண்டும். விஷ்ணுவம்சம் எப்போதும் ஒரே அளவாகவே இருக்கும். (77½)

இவ்வாறு சாயாதோஷம் வாராமைக்காகக் கூறப்பட்ட இவ் விஷயங்கள், "ஸர்வஸமம்" எனப்படும் லிங்கத்தில்தான் கவனிக்கப் படவேண்டும். "வர்த்தமானம்" முதலான லிங்கங்களில் இது அவசியமில்லை என்பது சிலருடைய கருத்தாகும். அதுபோலவே, வ்யக்தமான லிங்கங்களிலும், வ்யக்தாவ்யக்தமான லிங்கங்களிலும் இரத்தினத்தாலான லிங்கங்களிலும், ஸ்வயம்பூ லிங்கங்களிலும், பாண லிங்கங்களிலும், ஆர்ஷமான லிங்கங்களிலும் இந்த நியமம் இல்லை. வர்த்தமானம் முதலிய மூன்று வகையான லிங்கங்களுக்கும் இவ்விதி சமமானது. (89)

யமஸூத்திரத்தில், சாயாதோஷம் இல்லாமல் பிடத்தின் விஸ்தாரத்தை அமைக்கும் வகை, "ஸ்மாயதி வ்ரஹாணாதி" என்று தொடங்கிக் கூறப்பட்டுள்ளது. அந்த பிடத்தினளவும், சிவாம்சத்திற்குச் சமமாக இருக்கவேண்டுமென 'சங்கிரக"த்தில்

யாவஷ்டிம்ஸஹ்ரு ஸெவ ஸெஷவஷ்டிம் தாவஸ்ஸ வீம்ஸஹ்ரு விஷ்ணுர்பி:
ஸஹஸ்ரதாம்ஸெ தா ஷ்டிம்ஸாஷ்டெ ஸஷ்டாஷ்டி தவஷ்டிபி: கூஜாஸ ।
ஸம்ஸெவ ஸஹ்ரு ஷ்டிஸஹஸ்ரீஷா தஹாதாரா: ஸஹ்ரு-ஷ்யுஷா நகெ ॥

ஷ்டிம்ஸாயாஸெ ஸஹஸ்ரதாம்ஸெ ஷட்டஸஷ்டாஷ்டாம்ஸகுஷ்டி தாரா:
கூஜா ஸ்ரீஷ்டாதிஹாதாஷ்டு வனவம் வா வய-ஷ்யுஷா நகெ ॥ கூகூ ॥

வம்வஷட்டஸஷ்டஹாஸெதவ-ஷ்ரு வதஸ்ரஷ்டுஷ்டஷவம்ஸகெ: ।
வய-ஷ்டாதம் ஹவெ ஷ்டிம்தம் ஸ்ரெஷ்டீயஸ்ரதகூஜாஸ ॥ கூசு ॥

கூறப்பட்டுள்ளது. லிங்கத்தின் நீளம் எவ்வளவோ அவ்வளவு தான் பீடத்தின் அகலம் அமைக்கப்படவேண்டும். அதற்கு ஏற்றத் தாழ்வாக இருக்கலாகாது. (90—91)

இனி வர்த்தமான லிங்கம் கூறப்படுகின்றது மூன்று சுலோகங் களால். லிங்கத்தின் உயரத்தை 24 கூருகச் செய்து, ஏழு பாகம் பிரம்மாம்சமும், எட்டுபாகம் விஷ்ணுவம்சமும், ஒன்பது பாகம் சிவாம்சமும் அமைக்கலாம். இது வர்த்தமான லிங்கத்தில் ஒரு வகை. (92)

அதிலேயே மற்றொரு வகை. லிங்கத்தின் உயரத்தை 21 கூருக்கி ஆறு பாகம் பிரம்மபாகமும், ஏழு கூறு விஷ்ணுபாகமும், எட்டு கூறு சிவபாகமும் அமைக்கலாம். இதுவும் ஒருமுறை. (93)

மற்றொருவகை. லிங்கத்தின் உயரத்தைப் பதினெட்டு கூருக்கி, அதில் முறையே 5—6—7 பாகங்களுள்ளனவாக பிரம்ம—விஷ்ணு—சிவாம்சங்களை அமைக்கலாம். அல்லது, லிங்கத்தின் உயரத்தைப் பதினைந்து கூருக்கி, முறையே நான்கு, ஐந்து, ஆறு பாகங்களில் பிரம்ம விஷ்ணு சிவபாகங்களை அமைக்கலாம். இவற்றில் முதலில் கூறியது (24 கூருக்கியது) உத்தமம். அடுத்தது மத்திமம். கடை யான இரு வகைகளும் அதமம்.

ஸிம்மாயாதத்த வம்சுஸ்ரீம்ஸ்ரீ ஸாதாஸ்ரீஸ்ரீ நிவாஸிதத்தஃ ।
கூடஸ்ரீ ஸ்ரீர்ஷ்ணாஸிவாயாஃ ஸ்ரீஃ சுதாஸ்ரீம்தத்த ஸிவாயிகே ॥

ஸிம்மாதத்தஸ்ரீயத்த நந்தாம்ஸ்ரீ ஷட்டவஷ்டவவஸ்ரீவாஸமதத்தஃ
ஸ்ரீஷ்ணவிஷ்ணுஸிவாயாநாம் சுஸ்ர ஸாஸனாஃ வுகீர்திதாஃ ॥

ஸிம்மம் தத்தஸ்ரீயம் நாஸ ஸவேஸ்ர வவஷ்டவத்தத்த தஸ்ர ।
ஸ்ரீயாஸ்ரீயர்ஸ்ரீயர் விஷ்ணுஸ்ரீம் வஷ்டிகம் வா ஸிவாயிகஷ் ॥எ॥

வஸ்ரீஸ்ரீநாம் தஸ்ரீம்மம் நாஸ்ரீ ஸ்ரீஸ்ரீமணாஸ்ரீர்தஷ் ।
தஸ்ர வாவஷ்டதத்தயிகம் ஜ்ஞேயம் வஸவர்வணர்வித்காவஹஷ் ॥

வெளஷ்டஸ்ர காரணாவ்ய ஸ யயோக்தம் தத்த கயஷ்தத ।

இனி சிவாதிக லிங்கம் பேசப்படுகின்றது. இதில் லிங்கத்தின் உயரத்தைப் பத்து கூறுகச் செய்து கொள்ளவேண்டும். அவற்றுள் முறையே மும்மூன்று பாகங்களில் பிரம்மாம்சமும், விஷ்ணவம்சமும், எஞ்சிய நாலு பாகங்களில் சிவாம்சமும் அமைக்கப்பட வேண்டும். (95)

லிங்கத்தின் உயரத்தை ஒன்பது கூறுகச் செய்து, அதில் ஆறுபாகம் பிரம்மாம்சத்தின் சுற்றளவாகவும், ஏழுபாகம் விஷ்ணுவம்சத்தின் சுற்றளவாகவும், எட்டு பாகம் சிவாம்சத்தின் சுற்றளவாகவும் இருக்குமாறு அமைக்கவேண்டும். "இது ஸர்வஸமம்" எனப்படும் லிங்கத்தில் "த்ரைராசிகம்" என்று வழங்கப்படும். தனது உயரத்தின் பாதியிலும் பாதியளவு அகலமுள்ளதாக இருக்கும் ஸ்வஸ்திகம், அல்லது சிவாதிகம், வர்த்தமானம் என வழங்கப்படும் லிங்கங்கள் தேவர் கூட்டங்களால் பூஜிக்கப் பெற்றவையாம். இதற்கு "ஸார்வதேசிகம்" எனப் பெயர். இது எல்லா வருணத்தவருக்கும் நன்மை செய்ய வல்லது.* (96.97.98)

பௌஷ்கரம் என்றும், காரணம் என்றும் வழங்கப்படும் சைவாகமங்களில் இவ் விஷயங்கள் பரக்கப் பேசப்பட்டுள்ளன. அவ்

---

* ஸார்வதேசிகம்—த்ரைராசிகம்— இவை மற்ற நூல்களில் வேறு வகையாகக் கூறப்பட்டுள்ளன.

வதுரமாதி விவராணாம் வருமாமாதி நூவொமிதம் ॥

வஷ்மாதி விமாம் யொமம் வஷ்மாமாதூஷ்ரு வாஷ்றி ।
வயஷ்மாநம் வதுலொழுத் தெவம் வணு கூமாதிதி ॥ ஈ ॥

ஆகூரு கூமாமொதம் ஸ்ரீமொதெ வாஷ்ம வஷ்மாஷ்மாமகெ: ।

விஷயத்தை இங்கே கூறுவாம். அவற்றில் அந்தணர் முதலிய நான்கு வருணத்தவருக்கும் வர்த்தமான லிங்கம் அமைத்துக் கொள்ளும் வகை முறைப்படி கூறப்பட்டுள்ளது. முதலாவது; பிரம்மாம்சம் நான்கு பாகம், விஷ்ணுவம்சம் ஐந்து பாகம், சிவாம்சம்—ஆறு பாகம். ஆக லிங்கத்தின் உயரத்தை 15 பாகங்களாகச் செய்து விவரிக்கப்படும் வகை இது. இதிலேயே 5—6—7 என்று பிரம்ம—விஷ்ணு—சிவாம்சங்களை முறையே அமைத்தால், லிங்கத்தின் உயரத்தைப் பதினெட்டு கூருக்கிக் கொள்ள வேண்டும். இது இரண்டாவது வழி.

இவ்வாறுகளே 6—7—8 பாகங்களில் முறையே பிரம்ம விஷ்ணு சிவாம்சங்களை அமைத்தல் மூன்றாம் வகை. இருபத்தொரு பாகமாக்கிக் கொள்ளவேண்டும் லிங்கத்தின் முழு உயரத்தை இதில்.

லிங்கத்தின் முழு உயரத்தை இருபத்துநான்கு கூருக்கி, அதில் முறையே 7—8—9 பாகங்களில் பிரம்ம விஷ்ணு சிவாம்சங்களை அமைத்தல் நான்காவது வகை. இந்த நான்கு வகைகளும் முறையே நான்கு வருணத்தவருக்கும் ஏற்ற வர்த்தமான லிங்கங்களாகும். (100)

இனி திவாதிக லிங்கம் விவரிக்கப்படுகின்றது. இதிலும் முன்போலவே நான்கு வருணத்தவர்கட்கும் தனித்தனியாக உபயோகிக்கும் வகையில் நான்கு வகைகள் கூறப்படுகின்றன. முதலாவதாக, அந்தணர்கட்குத் தகுந்த திவாதிக லிங்கம் விளக்கப்படுகின்றது. லிங்கத்தின் முழு உயரத்தை இருபத்திரண்டு பாகமாகச் செய்து கொள்ளவேண்டும். அதில் மூன்றாவே ஏழு பாகம் பிரம்ம பாகமும்

ஸுஷுராத்மொஷ்ட யஜ்ஞாம விஷ்ணோலிஷ்ட சிவாயிகழ் ॥

வனகொரவிஸ்ருதா ஹஸ்தே தஸ்மை ஷட்ஷட்தராம-
[ஹகஃ ।

ஸுஷுராதிலாமதஸ்தாம் வெஸ லெள்வ ஸிராயிகெ வ்ருதகழ் ॥

கூயொடிஸாஸ்மெ லிஸ்மொதெ வெடிவெடிஸராஸ்மஹகஃ ।
கூழிலாமம் விஸாம் யொமஸ்ம லிஸ்மஜுக்கூ சிவாயிகழ் ॥ ஈஈ ॥

லிஸ்மதஸ்மெ டிஸாரஸ்மொத மாணாழ்தி ஸ்ரூதிலாமிகழ் ।
ஸுஷுராத்மொஷ்ட ஸஜ்ஜூணாதிஷ்ட லிஸ்மம் சிவாயிகழ் ॥

ஏழு பாகம் விஷ்ணு பாகமும் எட்டு பாகம் சிவாம்சமும் அமைக்க வேண்டும். இது அந்தணர்களுக்குத் தகுந்ததான சிவாதிக லிங்கமாகும். (101)

இதிலேயே இரண்டாவது வகை. இதில் லிங்கத்தின் முழு உயரத்தைப் பத்தொன்பது பாகமாக்கிக் கொள்ள வேண்டும். அதில் பிரம்ம பாகம் ஆறு அம்சங்களாலும், விஷ்ணு பாகம் ஆறு அம்சங்களாலும், சிவாம்சம் ஏழு பாகங்களாலும் அமைக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் சிவாதிக லிங்கம் அரசர்கள் பூஜை செய்வதற்கேற்றதாகும். (102)

லிங்கத்தின் முழு உயரத்தைப் பதின்மூன்று கூறு செய்து, நான்கு பாகம் பிரம்மாம்சமும், நான்கு பாகம் விஷ்ணவம்சமும் ஐந்து பாகம் சிவாம்சமும் அமைத்தால் இது வைசியர்களுக் கேற்றதான சிவாதிக லிங்கமாகும். (103)

லிங்கத்தின் உயரத்தைப் பத்து கூறுகச் செய்துகொண்டு, மூன்று பாகம் பிரம்மாம்சமும், மூன்று பாகம் விஷ்ணவம்சமும். எஞ்சிய நான்கு பாகங்களில் சிவாம்சமும் அமைப்பது சூத்திரர்களுக் கேற்ற சிவாதிக லிங்கமாகும். (104)

வாலவ்ருத்தஸ்ய ஸர்வஸ்ய ஸர்வதா ஸர்வதோ ஹிதம் விதாஸ்யதி ।
வதாரஸ்ய மஹாவீர்யஸ்ய தஸ்யைவ வரிகுலோத்பவ ॥ ஈரு ॥

வைஷ்ணவாம்ஸ ஏவைஷ வைஷ்ணவாம்ஸோ யாஸாவிதிஹாணீகூயதே ।
ஸவைஷ்ணவீம் ஸ்ரீமாநாம் யாஸாஸ்யம் தீர்யா உதபு ॥ ஈசு ॥

உதிஷ்ஷாஸ்ரம் வா கூஷாஸ்ரம் யாஸாஸ்ரம்,
கஷ்டாதிஷ்டம் கதிஷ்டாஸீ வ்யாஷ்டயாஸாஸீ ।
வனவ வாதிவஷ்டாவாயாஷ்டகெளீஷ்டாஸவ்ய
வெஷ்டகம் யாஸாஸ்யம் வெதஸ தீர்யைவ ॥ ஈஎ ॥

முன்பு கூறப்பட்ட ஸமஸ்தங்களையே "தாரா" லிங்கமாகவும் பண்ணலாம். இந்த "தாராலிங்கம்" மூன்று வகையாகலாம். அடி, நடு, நுனி—என மூன்றுப் பிரிக்கப்பட்ட லிங்கத்தின் பகுதிகளில், அடியில் நாலு பட்டை, நடுவில் எட்டு பட்டை, நுனியில் 16-பட்டை உடையது முதல் வகை. அடியில் எட்டு பட்டை, நடுவில் 16-பட்டை, நுனியில் 32-பட்டை—உடையது இரண்டாவது வகை. அடியில் 16-பட்டை, நடுவில் 32-பட்டை, முடிவில் 64-பட்டை—உடையது மூன்றாவது வகை. லிங்கத்தின் மூன்று பகுதிகளில், முறையே ஒன்றைவிட மற்றொன்றில் பட்டைகள் இரட்டிப்பாக இருக்கவேண்டுமென்றவாறு. இப்படி லிங்கங்களின் எல்லா வகைகளிலும் தாராலிங்கம் அமைக்கலாம். (105-106)

இவ் விஷயமே தெளிவாகக் கூறப்படுகின்றது. லிங்கங்களின் மூன்று பகுதிகளில், (பிரம்மா—விஷ்ணு—சிவாம்சங்களில்) மூலத்தில் (அடியில்) எட்டுப்பட்டை, 16 பட்டை, அல்லது நான்கு பட்டை உள்ளதாக அமைக்க வேண்டும். அதற்குமேல், அதைப்போல் இருமடங்கு எண்ணிக்கையுள்ளதாக அமைக்கவேண்டும். அதாவது, அடியிலிருப்பதில் நான்கு பட்டையானால் நடுவில் 8-பட்டை, நுனியில் 16-பட்டை... இதுபோல் மற்ற இரு வகைகளுக்கும் கண்டுகொள்வது. இவ்வாறு முன்னோர்கள் தாராலிங்கத்தை மூன்று வகையாகவே கூறியுள்ளனர். (107)

ലക്ഷ്മീതന്ത്രത്തിലെ ശാരദാ ഖണ്ഡത്തിൽ ।
ലക്ഷ്മണഗുരുവോടരുളിച്ചെയ്തതു് ലക്ഷണമൊത്തൊരു ശാസ്ത്രമിതു് ॥ ൧൮ ॥

ലക്ഷണമൊത്തൊരു ശാരദയാലയ ലക്ഷണശില്പമിതീവണ്ണം ।
കൂടുകിലാകിലുമാകട്ടെ ലക്ഷണമൊത്തൊരു ലക്ഷണമാകും ॥ ൧൯ ॥

ലക്ഷണമുള്ളൊരു കൊണായ-ൽ ലക്ഷിതയാമാമക ലയ്കതിരേ ।
കൊണ്ടുനമാത്മ ഭവിഷ്യസുകൂടുക വിഘ്നംസ വിലയമെ ॥ ൨൦ ॥

കൂടുവാ ശില്പവിധാനം ലക്ഷ്യമാ വിധമെ ചൊല്ലുവൻ ।

സർവതോഭദ്രലിംഗങ്ങളിൽ, ഇരുപത്തൊന്നു താരകൾ ഇരുത്തൽ വേണ്ടും. ഏഴിലംപാല മരത്തിന്റെ ഇല പോൽ ഒവ്വൊരു താരയുമ് സമാനമാന അകലത്തിൽ ഉള്ളതാക ഇരുക്കവേണ്ടും. ഒവ്വൊരു താരയിലുമ് നാൽപതു ലിംഗങ്കൾ—എൺപത്തൊന്നു ലിംഗങ്കളോ അമൈത്താൽ ആയിരം ലിംഗങ്കളാകും. ഇന്ത ലിംഗങ്കളുമ് (ആയിരം ലിംഗങ്കളുമ്) ഒന്റുക്കൊന്റു അളവു ഏറ്റക്കുറൈവാക ഇരാമൽ സമ അളവുള്ളതാക ഇരുക്കവേണ്ടും. അവറ്റുൾ ഏറ്റത്താഴ്വു ഇരുപ്പിൻ ആയിരം ലിംഗങ്കളിൻ അമൈപ്പു കവർച്ചികരമായിരാതു. ശാസ്ത്രനീതിയിലുമ് അതു തവറുമാകും. (108-109)

ഇലി ചമചതുരത്തൈ എട്ടു കോണമുള്ളതാകച് ചെയ്യുമ് വകൈ വിവരിക്കപ് പടുകിന്റതു. ലമചതുരത്തിൻ മത്തിയിൽ നേരാക ഇരു സൂത്തിരങ്കൾ ഇരുക്കവേണ്ടും. അവ്വിരു സൂത്തിരങ്കൾ ചെല്ലുമിടത്തൈ അടൈയാളപ് പുള്ളികളാൽ നൂപകപ് പടുത്തിക്കൊള്ള വേണ്ടും. അതനിന്റുമ് കോണത്തിറ്കുച് ചെല്ലുമ് ഇരു പുറങ്കളിലുമുള്ള രേകൈകളിൽ മത്തിയിൽ അടൈയാളമ് ചെയ്തു കൊണ്ടു, ഒവ്വൊരു മൂലൈയിലുമ് അവ്വടൈയാളങ്കളിൽ നേർക്കോടു വരൈന്തു കൊണ്ടു അതനാലിൽ കോണത്തൈച് ചേതിത്തു വിട്ടാൽ തിണ്ടു എൺകോണമാകിവിടുമ്. ഇതുവേ വിവരമാകുമാകുമ്. (110)

മറ്റൊരു വഴിയുമ് ഇതറ്കുണ്ടു. ലിംഗത്തിൻ അകലത്തൈ ഏഴു സമ ഭാകമാകപ് പിരിത്തുക്കൊണ്ടു അടൈയാളപ് പുള്ളികൾ വൈത്തുക് കൊള്ള വേണ്ടുമ്. നടുവിൽ മൂൻറു പാകങ്കളോ നിലത്തിൽ

ஒலெ்ய் கிரஹாம் வாவ்ரவ்ய் மிமிலாமவிவஜ்-ஃநாசு ॥

வவ்ஜ்ரம் வலிலுக்கி வஜம்;

சுய வ்ருத்தம் நிமஜ்ஜெ ।

ஸ்தானாஸ்ரவ்ய் ஜ்யோமஸ்ய் ஸிரொஜலெ்ய் நியாய தூ ।

வஸ்துகூம் நிமஜ்ஜாஜெந் ஸ்தாஜெ ய்ருத்தவிலயெ ॥ கமெ ॥

சுய ஸிரொவர்த்தகர்கடு ।

கூவீர்த்த கூவாவ்ஷீ வஜாஸ்ர வர்த்ஸரா

ஹரெ்தாவஜம் ஜவ்ஜகம்

கொண்டு இரு புறங்களிலும் இவ்விரண்டு பாகங்களை ஒதுக்கிவிட வேண்டும். ஸமசதுரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இவ்வாறே செய்துகொண்டு இவ்விரண்டு பாகங்களைக் கொண்ட கோணங்களைச் சிதைத்து விட்டால் நின்றது எண்கோணமாகிவிடும். முன் சுலோகத்தில் கூறப்பட்ட வழியைக் காட்டிலும் இவ்வழி பொருத்தமாகக் காண்கின்றது. இம் முறையில் கோணங்கள் ஏற்றத் தாழ்வில்லாமல் சம அளவாக அமைகின்றமையைக் காண்க. (111)

இனி வட்டவடிவமாக்கும் வகை கூறப்படுகின்றது. ஸம சதுரத்தின் (லிங்கத்தின்) சிரஸ்ஸின் (உச்சியின்) மத்தியில் ஸூத்திரத்தை வைத்துக்கொண்டு நாற்புறமும் சுழற்றினால் ஓரங்களில் விளிம்புகளில் தொடுகின்ற வகையில் அது செல்லும். அந்த ஸூத்திரம் செல்லும் வழியில் உட்பட்ட பகுதியை வைத்துக்கொண்டு வெளிப்பட்ட பகுதியைச் சிதைத்துவிட்டால் நின்றது வட்டமாகும். (112).

இவி சிரோவர்த்தநம் கூறப்படுகின்றது.

சிரோவர்த்தநமாவது, லிங்கத்தின் சிரத்தில் (உச்சியில்) ஸம சதுரமாகவுள்ள பகுதியை மழ மழ வென்று வழித்தாழ்போல் சிதைத்து அதன் அமைப்பைப் பூர்த்தி செய்தலாகும். இதில் நான்கு

வாமேநாகூதி கூகூடாணு வஜ்ரம்
விஷ்ணுக்ரந்தி ।
ஹேஷ்டா ஸவபூ ஸஹஸ்ரகு வ்ருஷ்டகயோ
நாஸவஜ்ரஹேஷ்டாஸ்தி தா-
வேதவேதகஸ்ரஷ்டாரு ஸேதஷ்ட-ஸ்ரா-
ஷ்டீக்ரு திஸ்ரேஷ்யதே ॥ ககக ॥

விஷ்ணோம் ஸிவஸ்யம்ஸ்ரயிக் வஸ்ரா-ந்த-
ஷ்டாதி க்ரு ஸ்ரோஸ்ரகம்
க்ரூக்வா க்ரு க்ரஸேதா விஸ்ரேயஸ்ரவாதா
ஸேயுகஸிஸ்ரோகாம்ஸ்ரகாரு ।

வகைகளுண்டு. தும்மட்டிக்காய் அல்லது வெள்ளரிப்பழம் இவற்றின் முனை போன்றதாக லிங்கத்தின் முனையைச் செய்வது ஒருவகை. குடை போன்றதாக அமைத்தல் இரண்டாவது விதம். பிறைச் சந்திரனுடைய வடிவம் போன்றது மூன்றாவது வகை. கோழிமுட்டை போல் அமைப்பது நான்காவது வகை. இந்நான்கு வகைகளும் முறையே அந்தணர் முதலிய நான்கு வகுப்பினருக்குமுரியவை.

இவ் வத்தியாயத்திலேயே 75-வது சுலோகத்தில் கூறப்பட்டபடி பல வகையான சுற்றளவுள்ள ஸர்வஸமம் முதலான நான்கு வகை லிங்கங்களுக்கும் இம் முறை பொருந்தும். அதாவது, ஸர்வஸம லிங்கத்தில் வெள்ளரிப்பழத்தின் முனை போலும். வர்த்தமான லிங்கத்தில் குடை போலவும், சிவாதிக லிங்கத்தில் இளஞ்சந்திரன் வடிவமாகவும், ஸ்வஸ்திக லிங்கத்தில் கோழிமுட்டை போன்ற வடிவமாகவும் அமைக்கப்படவேண்டும் என்றவாறு. அனுலோமர்களுக்கும் முன் கூறப்பட்டபடியே ஊகித்தறிந்துகொள்க. (113)

இந்த சுலோகத்தில் சிரோவர்த்தனம் பன்னிரண்டு வகை விளக்கமாகக் கூறப்படுகின்றது. முன் சுலோகத்தில் பொதுவாக அதன் அமைப்பு மட்டும் கூறப்பட்டது.

கூகூதாவுஷ்டிகியி வுகூரகுதியூரதி-
வுர்தாரம்ஸயுகூம் கூஹாஸு
வ-ஜாஹாமவிஹாரகுஹாமஹுவாஷ்டி-
ஹ்ஹாயவெஸ்ணி-ஷு ॥ ககச ॥

சிவலிங்கத்தின் தலேயில் உள்ள அகலத்தை, எட்டு, ஒன்பது, பன்னிரண்டு, பதினேரு பாகங்களாகச் செய்துகொள்ள வேண்டும். அதில் முறைப்படி, இரண்டு, ஒரு , இரண்டு, மூன்று பாகங்களே நாற்புறமும் கழித்துவிட வேண்டும். சிவலிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தைப் பதினேழு, பதினேந்து, இருபத்தொன்று, பத்தொன்பது கூறுகளாகச் செய்துகொண்டு, மேலுள்ள பாகத்தை (ஒவ்வொன்றிலும்) செதுக்கிவிடவேண்டும். இங்கு கூறப்பட்ட நான்கு வகைகளும், முறையே நான்கு வருணத்தவருக்கும் அமையும். அது எங்ஙனேயெனில் :

(1) லிங்கத்தின் உச்சியிலுள்ள அகலத்தை எட்டுக் கூருக்கி இரண்டு கூறு கழிக்கவேண்டும்; அதன் பூஜாம்சத்தின் உயரத்தைப் பதினேழு கூருக்கி, மேலிருந்து ஒரு பாகம் கழிக்கவேண்டும்;

(2) சிவலிங்கத்தின் தலேயகலத்தை ஒன்பது கூருக்கி ஒரத்தில் உள்ள ஒரு பாகத்தைக் கழித்துவிட வேண்டும். இவ் வகையில் பூஜாம்சத்தின் உயரத்தை பதினேந்து கூருக்கி மேலிருந்து ஒரு பாகம் கழித்துவிட வேண்டும்.

(3) மூன்றுவது வகையில், சிவலிங்கத்தின் உச்சியிலுள்ள அகலத்தைப் பன்னிரண்டு கூருக்கிக் கொண்டு, நாற்புறமும் இரண்டு கூறுகளேக் கழித்துவிட வேண்டும்; சிவலிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தை இருபத்தொரு கூருக்கி, மேலுள்ள ஒரு பாகத்தை ஆழமாகக் கொள்ளவேண்டும்.

(4) நான்காவது வகையில், சிவலிங்கத்தின் உச்சியிலுள்ள அகலத்தைப் பன்னிரண்டு கூருக்கி, மூன்று கூறுகளே ஓரங்களில்

தத்ரஸ்தகே பவவிஷாதயா விலகே
ஹாமம் விஸொய்வ்ரிதம், ஶிவஹாமகெவ்ய்ஹ் ।
வாக்ரிம்ஸ்டிம்ஸகதயா வரிகஸ்ரு, ஹாமாநு
வனகெகஸொ மிஜ ஊவெஷ்ட விஸொயயெவா ॥

ஹகூரஹம் கூவ்ஷாகாரம் கூக்ஷ்டாண்டநிஹம் தயா ।
சுலெஹ்ட வஜ்ரஸ்ரம் வரய வ்ஷ்டாஹம் கூ வணஹ் ॥ ககசு

வவெஷ்டாஉவி லிம்பாகாம் ஶிரஹொவதஉ சுருஹ் ।

கழித்துவிடவேண்டும். இதற்கு ஆழம்: பூஜாம்சத்தினுயரத்தைப் பத்தொன்பது கூருக்கிக்கொள்ள வேண்டும். அதில் மேலுள்ள ஒரு பாகத்தின் ஆழத்தைச் சிதைக்க வேண்டும். இவ்வாறு சிரோவர்த்தநத்தின் நான்கு வகைகள் நான்கு வருணத்தவர்க்கும் ஏற்றதாகக் கூறப்பட்டன. (114)

இதற்கே மற்றொரு வகை இந்தச் சுலோகத்தில் விளக்கப் படுகின்றது. சிவலிங்கத்தின் உச்சியிலுள்ள அகலத்தை ஒன்பது கூருக்கிக் கொள்ள வேண்டும். அதில் நாற்புறமும் ஒரு பாகத்தைச் சேதித்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஆழம்: சிவலிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தை முப்பத்திரண்டு பாகமாகச் செய்து, நான்கு வருணத்தவர்க்கும் முறையே | ஒரு, இரண்டு, மூன்று, நான்கு பாகங்களை (மேலிருந்து) கழிக்க வேண்டும். (115)

சிரோவர்த்தநம் செய்த பிறகு சிவலிங்கத்தின் முகம் இருக்க வேண்டிய விதங்கள் ஐந்து இச்சுலோகத்தில் விளக்கப்படுகின்றன. அவை முறையே, குடைபோலவும், வெள்ளரிப்பழத்தின் முகம் போலவும், கோழிமுட்டையின் முகம் போன்றும், பிறைச்சந்திரன் வடிவமாகவும், நீர்க்குமிழியின் வடிவத்தோடும் அமையுமாம். (116)

இனி, கீழ்க் கூறப்பட்ட ஐந்து வகையான சிரோவர்த்தநங்களை எல்லா லிங்கங்களுக்கும் அமைக்கும் வகை கூறப்படுகின்றது. முதலில், குடைபோன்ற அமைப்பு வருவதற்கான முறை. லிங்கத்தின்

ஶிம்மவ்யாஹரசு ஷொபஶாம்ஶ கெஹிதீயவாயிகழு ॥ ககள ॥

சூரொவ்யகெழயஃ வம்ஶம்வ்ய யிஜ்ஹெவ்யாஹயவாஶ்ஶயொஃ ।
வதஶ்யெசு தது வசுவாரி ஹ தூராஹாணி ஹவஹி ஹி ॥

வ்ரயஶ்ம ச விதீயம ச வஹஶிஜ்ஜ விதியொஜயெசு ।
ஶிவாயிகெ தூ தீயந்தூ வதூயழும் வயழுராகெ ॥ ககக ॥

வதழுகம் வம்கரம் கெஹவ கூயஶ் தூஶூஹம் யதஃ ।
ஷபம்ஶெ ஶிம்ஶ விவ்யாரெ வாயஶ் ஹ்யம்ஶெ ந வதஶ்யெசு ॥

அகலத்தைப் பதினறு கூறுக்கிக் கொள்ள வேண்டும். லிங்கத்தின் உச்சியிலிருந்து இருபுறங்களிலும் மேற்படி பதினறு பாகங்களில் ஒரு பாக அளவு ஸூத்திரத்தைத் தொங்கவிட்டு, அப்பகுதியைக் கழித்து விட வேண்டும், இப்பொழுது லிங்கத்தின் முனை குடைபோல் அமையும். இதிலேயே, ஒரு யவம். இரண்டு யவம், அல்லது மூன்று யவம் அதிகமாகவும் சேதிக்கலாம். இவ்வாறு, குடை போன்ற அமைப்புக்கு நான்கு வகைகள் கூறப்பட்டன. (118)

ஏற்கெனவே சொல்லப்பட்ட நான்கு வகை லிங்கங்களுள் ஸம லிங்கத்தில், முதல் இரு வகைகளை அமைக்கலாம். அதாவது, லிங்கத்தின் அகலத்தில் பதினறில் ஒரு பாகமும், அதனுடன் ஒரு யவம் கூட்டியும். சேர்க்கும் இரு வகைகள். சிவாதிக லிங்கத்தில் மூன்றும் வகையான, லிங்கத்தின் அகலத்தில் பதினறில் ஒரு பாகத்துடன் இரண்டு யவம் சேர்த்துக் கழிப்பதும், வர்த்தமான லிங்கத்தில் நான்காவது வகையான, லிங்கத்தின் அகலத்தில் பதினறில் ஒரு பங்குடன் மூன்று யவம் அளவு கூட்டிச் சிதைத்தலும் தரும். இந்த சிரோவர்த்தனத்தில், லங்கரம் (ஒன்றுக்குச் சொல்லியதை மற்றொன்றுக்கு அமைப்பது) கூடாது; அது தீங்கு விளைவிப்பதாகும். (119½)

இனி வேள்ளரிப்பழம் போன்ற அமைப்பின் முறை விளக்கப் படுகின்றது. லிங்கத்தின் அகலத்தை ஆறு கூறுக்கி அதில் இரண்டரை பாக அளவு முன்போன்று ஸூத்திரங்களை இரு புறமும்

தூவஷாஹஸ்ரவ்ருத்தெஷு ராஜாமெஸ்ஸு கூடாணுகு।
லிம்மவ்யாஹ்ருதீயாம்ஸவதர்தயேச்சூர்கு ॥ கஉக ॥

ஸ்ரீஜவ்யாஹ்வஷ்டியா ஹத்தே வாயர்ம்ஸ்தூயவதர்தசு।
வேஜ்ஞாதாஹவ்ய லிம்மவ்ய ஸ்ரவ்ஸ்ரிவ்யதி மொஹகு ॥கஉஉ॥

ஸ்ரீஜ்ஞாகாம ஸ்ரவ்ஸ்ரிதாம்ஸ ஈஹயொ
வ்ஸம்ஸ்ரும்வ்ய தத்தாஸ்வ்ருயொ:
கூக்வா உத்ஸ்ருயாஹ்ம தத்ரவஸ்ருஜ்யமா
நிர்ஜ்ராகைஸ்ஸு தூவயெ।

தொங்கவிட்டுசேதிப்பதுஸ்ரல் வெள்ளரிப்பழம் போன்ற அமைப்பு உண்டாகும்.

லிங்கத்தின் அகலத்தை ஆறு கூருக்கி, முன்போலவே மூன்று அம்சங்களைச் சேதிக்க, கோழிமுட்டை போன்ற வடிவம் அமையும். லிங்கத்தின் அகலத்தில் மூன்றில் ஒரு பாகத்தை முன்போலவே கழிப்பதஸ்ரல், பிறைச்சந்திரன் போன்ற வடிவம் அமையும். (121)

லிங்கத்தில் அகலத்தை எட்டுக் கூருக்கி, அதில், மூன்றரை பாகங்களை முன்போல் இரு புறங்களிலும் ஸூத்திரங்களோடு தொங்கவிட்டுக் கழிப்பதஸ்ரல், லிங்கத்தின் சிரஸில் அமைய நீர்க்குமிழி போன்ற வடிவம் அமையும். (122)

இந்த சுலோகத்தில், மேலே கூறப்பட்ட புற்பல வகையான சிரோவர்த்தநங்களுக்கும் பொதுவான சில விஷயங்கள் கூறப்படுகின்றன. லிங்கங்களின் உச்சியிலிருந்து இரு புறங்களிலும் அதற்குக் கூறப்பட்ட அளவுகளில் ஸூத்திரங்களைத் தொங்கவிட வேண்டும். பிறகு, அந்த அளவு லிங்கத்தின் கற்றுப்புறங்களில் சமமாக அமைவதற்காக அந்த ஸூத்திரங்களின் வரம்பில் (அதாவது, இரு புறங்களிலும் ஸூத்திரம் தொங்கும் அளவில்) இரு பக்கங்களிலும் இரண்டு மச்சங்களைக் குறித்தவராகச் சித்தரித்துக் கொள்ள வேண்

தவுரிதூ குவலயாதிஃ திஃதா
விழுதுபாயும் யஃர
தத்து பதஃயி தவுஃது வஹாயா
ஹொவாய ஃஹொஃதி தழ் ॥ கஉக ॥

ஷய ஹிம்ம வ்ஹுஷ்ஹும் வ்ஹுஷோ உயெ ஃஹுஸ்ம தயா।
ஸொஷ்ம வ்ஹுஷுஸிர வ்ஹுஸ்ம பதஃயொஃதி ஃஹொஃதி தழ் ॥ கஉச ॥

ஹிம்மவ்யாஹொஃவ்டயாஹத்தெ ஃஸுஹெஷயோஃமுயொர்ஸவி।
ஹாஃமயிகஸ்வஹிஃகஸ்வ வ்ஹுஷுஷ்ஹுஃஹிகஸ் வ்யுதழ் ॥ கஉடு ॥

டும். அந்த மச்சங்களுடைய வாய்கள், வால்கள் இவற்றிலிருந்து முறையே இரண்டு லக்ஷத்திரங்கள் கிளம்பி ஒன்று சேருமாறு குறித்துக்கொள்ள வேண்டும். அவைகள் சேருமிடங்களில் மூன்று புள்ளி இடம் வைத்துக்கொண்டு, புத்திசாலியான சிற்பியானவன், ரொம்பவும் நிதானத்துடன், கீழ்க் கூறப்பட்ட பலவகையான சிரோ வர்த்தநங்களை அமைக்க வேண்டும். இதுசம்பந்தமாகப் பலவகை யான சைவாகமங்களிலும் விரிவாகக் கூறப்பட்ட விஷயங்களை வேலை யில் ஈடுபடும் பொழுது நன்கு மனதிற் பதியவைத்துக்கொள்ள வேண்டும். (123)

"ஸ்தூல மூலம்" (அடி பருத்தது) "ஸ்தூல மத்யம்" (நடுபருத்தது). அவ்வாறே, சுருங்கியதும், சிரஸ்ஸில் மட்டும் பருத்த தும் என நான்கு வகைகள் கூறப்பட்டன. இவைகளை அமைக்கும் வகை இப்பொழுது கூறப்படுகின்றது. லிங்கத்தின் அகலத்தை எட்டுக் கூறுக்கிக்கொள்ள வேண்டும். அதில். அடிப்புறம், நடு. நுனி இவற்றில் முறையே ஒரு பாகத்தை அதிகம் வைப்பதனால், ஸ்தூல மூலம், ஸ்தூல மத்யம், ஸ்தூல சிரஸ் என்றும் மூன்று வகை களும், முழுவதிலும் ஒரு பாகம் குறைக்க "க்ருசம்" என்னும் வகை யும் அமையும். (124—125)

ஸ்ரீமஹாஷ்டம் தயா ஸ்வயம்ஹ்ரவிகஸ்து கதியா ।
வெதாரௌள ஸ்ருஹ்ரவிஷ்ணுரௌள ஸ்ரீமெஷ்வரெஷுஷ்ரு

[வம்ஶதெள ॥ கஉசு ॥

ஸிவாம்ஸொ வ்யுத்தஹவஸ்யாச ஸ்ரீரஹொ வா நவதாத்மு ।

சய ஸ்வயம்ஹ்ருஸ்யாநி ஜஜ்ஞாணி க்ரமாநிச ॥ கஉள ॥

ஹரஸ்ரா நி வாதீவ்ராணி வயுகாவஸ்ரமாநிச ।
சதுர்முகாணி மொக்ஷணுலா தாஸ்ரம்ம ரிஹாக்ருவி ॥

ஷட்ரூம்ம ரிஷயா ஸ்ரீணி வாதொ நாகாஜிவிவ்நா ।

லிங்கம்., "ஆர்ஷம்" என்றும், "ஸ்வாயம்புவம்" என்றும் இரு வகைப்படும்.

(குறிப்பு :— இங்கு மூலம் பிழையாகவுள்ளது.

"ஸ்ரீமஹாஷ்டம் தயா ஸ்வயம்ஹ்ரவிகஸ்து கதியா"

என்று இருத்தல் தகும்.)

ஆர்ஷலிங்கமாவது, முனிவர்களால் பூஜிக்கப்பட்ட லிங்கம் என்று பொருள்படும். அதில், பிரம்மாம்சமும் விஷ்ணு அம்சமும் நான்கு மூலைகள் உள்ளதாகவே இருக்கும். சிவாம்சம், வட்டவடிவ மாகவே இருக்கும். இதற்கு சிரோவர்த்தநம் கிடையாது. (126)

இனி சுயம்பு லிங்கங்கள் கூறப்படுகின்றன: இவை பலவகைப் படும். மிகவும் சிறிலமானவை சில, சில மெல்லியனவா யிருக்கும்; குட்டையாயும், நீண்டவையாயும் இருப்பவை சில: பலகை போல் தட்டையாயும் சில இருக்கும்; பல முனைகளுடன் கூடியனவும், பசு மாட்டின் காது போன்ற அமைப்புடையனவும், மாதுளம்பழம் போன்றவையாகவும் மற்றுஞ் சில உண்டு. (128)

மற்றுஞ் சில, ஆறு, ஐந்து, மூன்று, பத்து முனைகளுடன் கூடிய வையா யிருக்கும். இவற்றுக்கு நீளம், அகலம் உயரம் முதலிய அள வைகளின் வரையறை இருக்காது. பல நிறங்களுடன் கூடிய பற்பல

ஶ்ருங்மாணுவிவ வக்ராணி நாநாவண்ணாகூடீநிவ ॥கஉ॥

வவீநாநி விவீநாநி வாயயா கூழ்யவாணி வ।
வந வவ்யுகமதூஷ்டீயஃக்ஷேத்ரமதாகுவி ः கஙய॥

ஷஃநவ்யஷஃபூநாவஃவாவிः யெஷாம் வீவிரா நுத்தரா।
விதிர்வாஸ வ்யாஹ்ருதிம்மாநி யெஷு நிகூம் வ்ஷ்டிதஷ்டிவஃ॥

உஞ்ஜம் நயொயயெத்தேஷாம் யொயநம் வவஃநாயகூஸ।
கூஷோம்வ்யாநி தாகூயாவாஃ வஞ்ஜ்யாதெ கூவ யயாவ்ஷ்டி॥

தெஷாம்ஃஜிகூ விஹாமொழவ்ஷி நவவ்யாநுஞ்ஜவம்கராः।
தாநுஷ்டிஷ்டிவ யிஜ்ஞேஷு உஞ்ஜஃஜித்வாஃவிவம்கராः ॥கஙங॥

வடிவமுள்ள கோணலான சிருங்கங்கள் (கொம்புகள்) இவற்றில் காணப்படும். (129)

இவற்றில் சில பீடத்துடன் கூடியிருக்கும், சிலவற்றுக்குப் பீடம் இருக்காது. சில கோயிலுடன் காணப்படும்; மற்றுஞ் சில, கோயில்லாமலும் இருக்கும்; காடு; மலை, ஆறு. கடல், புண்ய தீர்த்தங்கள். புண்ணிய க்ஷேத்திரங்கள் இவ்விடங்களில் இவை காணப்படும். இவற்றைக் காண்பதும், தொடுவதும். பூஜிப்பதும் சிறந்த சித்தியைத் தரவல்லன். இவைகளே சுயம்பு லிங்கம் எனப்பெறும். இவற்றில் சிவபெருமான் நித்தியமாக ஸாந்நித்தியம் செய்திருப்பர். இவற்றின் மூலத்தைச் சோதித்தல் கூடாது. அவ்வாறு செய்வது ஸர்வநாசத்தையே உண்டுபண்ணும். ஆராய்ந்து பார்க்காமல் உள்ள வண்ணமே பூஜிக்கப்பட வேண்டியவை இவை. (131-132)

இவற்றுக்கு மூர்த்தி விபாகம் கிடையாது. அதாவது, ஸகாஸந மூர்த்தி முதலிய பாகுபாடுகள் இவற்றில் கிடையாது. அதனால், அவற்றுக்கு ஏற்பட்ட மந்திரங்களின் கலப்பும் அவற்றுக்குக் கிடையாது. மனிதர்களால் சமைக்கப்படும் லிங்கங்களுக்குத் தான் மந்திரம், மூர்த்தி முதலியவற்றின் ஸங்கரம் (அதாவது கலப்பு) உண்டு.

சுய வாணலிங்கம்.

வாணலிங்கம் தாயகல வலவம் பயாஜாதம் கியாவயெச ।
வெஹ்ஹயாயுகு ராஜாம்ஸம் வா வம்வாம்ஸம் மிஹாமிகு ॥

வீம் வருக்ஷணெ ஹ்ரௌஹெ
ஹௌயெ வாஹ்யாவயெ ஹ்ரூஹெ ।
கொடு வ்ஹிஹ்ரவ்ஹு ஸ்ரீம்மாஹ்ரௌள
திஹ்ரு ஸ்ரீவவ்தெ வ்ஹிதாஃ ॥ ககரு ॥

திஹ்ரவ்ஹு கூலிகூமதெவ் திஹ்ரூயா வுஹ்ரொஸ்ரூரெ ।
கூ நூ நீயெவ் உஹெ ஹ்ரூஹெள ஹெவாரெ கூ நூ காஸ்ரு ஹெ ॥
தெவ்ஷகெகூவாவ்ஹிதா கொடிஃ வனவம் கொடுவ்ஹு ஷொஹஸ

பாணலிங்கம்.

பாணலிங்கம் யாவற்றையும் அவை தோன்றியவாறே பீடங்களில் பொருத்தவேண்டும். உலோகங்கள் அல்லது சுண்ணாம்பு இவற்றாலான அழகிய, சுபமான பீடத்தில் அவற்றை ஸ்தாபிக்க வேண்டும். பாதியளவு, அல்லது மூன்று அங்குலம் அல்லது ஐந்து அங்குலம் அல்லது இரண்டங்குலம் அளவு— இவற்றைத் தன் விருப்பம் போல் பீடத்தில் ஸ்தாபிக்கலாம். இந்த பாணலிங்கங்கள் உலகெங்கும் கோடிக் கணக்கில் காணப்படுகின்றன. லிங்காத்ரியில் மூன்று கோடிகளும், ஸ்ரீசைலத்தில் மூன்று கோடிகளும், காளிகார்த்தத்தில் மூன்று கோடிகளும், அமர்நாதத்தில் மூன்று கோடிகளும் உள்ளன. மற்றும் கன்யாதீர்த்தத்திலும், மஹேந்திர மலையிலும், நேபாளத்திலும், கன்னிகாச்சிரமத்திலும் தனித்தனியே ஒவ்வொரு கோடி உள்ளன. இவ்வாறு பாணலிங்கங்கள் மொத்தத்தில் பதினாறு கோடி இருக்கின்றன. (134—136½)

வாவீம் வாவ்யுவீம் வர வஜ்ராவாஹாயுவதகுகுபு ॥ கஞை ॥

வவபுவம்கரவஜ்ரம் தஸ வஜ்ரவெஷ்டாம் மஂத்ரஂத்ரபு।
வஜ்ரஜ்வலாணஜ்ரம் தஸ வ்ரதிஷ்டாவ்ய விதாதகः ॥கஞஅ॥

கதுர்தயுவி ச லிம்காதி கரயஜ்ஜிவிகாமதுவி।
கஜ்ஜதாதி விதிவிஷ்டாதி தெவதெதகு உஂதீஜ்ஜதொः ॥ கஞகூ ॥

விவெயுஜதெதுஜ்ஜிலஜஂவெயுः
வஜ்ஜ்ராதெதுவ ஹி வாணவஜ ॥

ஊதி ஸிஜ்ஜுஜதெத உதுஜ்ஜாமெ லிம்மகுகுஷ்ணம் தாஜ
விதீயோऽத்யாயः ॥

இந்ததப் பாணலிங்கங்களைப் பீடத்துடன் கூடியதாகவோ, அல்லது பீடம் இல்லாததாகவோ, பிராஸாதத்துடன் கூடியதாக, சிரோவர்த்தன மின்றிக்கே, மூர்த்திலிங்கரம், மந்த்ர ஸங்கரமொன்று மில்லாமல் முறைப்படி பிரதிஷ்டை செய்வித்துப் பூஜிக்கவேண்டும். அவ்வாறு பூஜிப்பதனால், புக்தி, முக்தி இவற்றைப் பெறலாம். (138)

மற்றும் தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள், மற்றும் சித்தர் முதலிய தேவகணங்கள் இவர்களால் செய்யப்படாததும், ஆறு, கடல், மலை இவற்றில் தோன்றியவையுமான வேறு லிங்கங்களும் சிறந்தவையே ஆகும். அவற்றையும், பாணலிங்கத்தைப் போலவே மதித்துப் பூஜிக்கவேண்டும்.

சில்பரத்நம் இரண்டாம் பாகம் லிங்கலக்ஷணத்தைக்கூறும்
இரண்டாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ: ।

சுய தர்தீயொ2யோயஃ ॥

சுய முக்ஷணொ2தா3ரஃ ।

வஸவம் ஸ்ரீம2ம் கா3ரயிக்வா ஸஹாத்ர
ஸ்தம்பம் தொஷ்டை முக்ஷணொ3த்3தி4தம் ச ।
முக்ஷாலாபம் கா3ரயே ஆண்டயொ3ம்
யவஸ வ்ரொக்தம் தத்3ரூபஸ் வ்யாம2ஷ்டை ॥ க ॥

ஸ்ரீம2ஸ்யாந்தி4 க்ஷேத்ரம் வ்யாஷ்டை2ஸ
ராஜ்ஞாம் கேதா3ஸ்ய நாம2 கர்து ।
ஸிம்ஹம் லாயாம் வ்ரூதா2 ஸ்தம்வெ
வஷ்டை ஸ2தா3ரூ ஸ்ரீஸ்ரீ கர்து ॥ உ ॥

மூன்றும் அத்தியாயம்.

லிங்கத்தின் லக்ஷணோத்தாரம்.

மஹாத்மாவாகிய சில்பி, இவ்வாறு குற்றமற்றதும், நற்குறிகள் பொருந்தியதுமான லிங்கத்தைப் பண்ணித் தத்தம் ஆகமங்களிற் கூறப்பட்டுள்ள முறைப்படி அந்தந்த வருணத்துக் கேற்றவாறு * லக்ஷணோத்தாரத்தைப் பண்ணவேண்டும். (1)

லிங்கம் தலையிற் சிதைவுற்றிருந்தால்; அரசனுக்கும் செய்விப்பவனுக்கும் அழிவைத் தரக்கூடியதாம். நெற்றியின் மேற்புறம் சிதைவிருப்பின், அது (சிற்பியின்) மனைவி, மக்களையும், முகத்தில் முறைவிருப்பின் அது சிற்பியையும் கொல்லும்.

---

* "ஸ்ரீம2ஸ்ய ஊர்த்4வ நிர்மாணம் முக்ஷணொ3த்3தா4ர உச்யதெ" (காச்ய. 59—19.) என்கிறபடி லிங்கத்தில் முகம் உண்டுபண்ணுதல் லக்ஷணோத்தாரமெனப்படும். முகம் = (இங்கு) முன்புறமென்பதற்கான அடையாளம்.

தெய்ய தாவேம வ் ஈவிர்ஷம்
ரெஸாவெ வுவஷி விகாஸதபு।
சுதிர்யாயதம வாதீஹ்ரவ்லம்
கூபம வ்ருதிலும தூவாஹகூச ॥ ஈ ॥

வபுர்வு கூஉ பஷ்டிம்மம் ஸொணாஷி வபுர்ஹாஷிவீ।
மெரவாயுரஜ்ஜாவிஸ்ஸெவ வஷபுயெ ஸிவ்ர்ணம் வஸபு ॥ ஸ ॥

ஈகாரெரதிரவஸ ஸுக்ஷும் தூஸுவாயம வாவதர்ஹுபு।
தத: ஸாலாஜ்ஜாவிஸாகஷீர நாஷிகெரெக்ஷாவாஸிவீ ॥ ரு ॥

வரக்ஷாஸு கீயர்கொயெம வெராக்ஷஸிஹ்ரா நி முக்ஷயெச।

இடையில் இருக்கும் சிதைவு துன்பத்தையும் பஞ்சத்தையும் தரும்; குரோடத் தில் (மார்பில்) இருக்கும் சிதைவால் மழையின்மை யுண்டாம். அதிகமான நீளமுள்ளதும், அதிகமாகக் குறுகியதும், அவ்வாறே மிகவும் மெல்லியதும் மிகவும் பெருத்ததுமான லிங்கம் அரசனுக்கு நாசத்தை விளைவிக்கும். (3)

இவ்வாறு பூர்வாங்கமாகச் செய்யவேண்டிய வேலைகளெல்லாம் செய்து முடிக்கப்பெற்ற லிங்கத்தைச் சாணைபிடிக்கும் கல்லினாலும், மணல் முதலியவற்றாலும் பசுமாட்டினுடைய வாலின் மயிர்களாலான கயிறுகளாலும், மேடு பள்ளமில்லாமல சமமாகத் தேய்த்து வழவழப் பாக்கவேண்டும். (4)

அவ்வாறு செய்வதனால் கண்ணாடியின் உட்புறம்போல் பொலிவு டனும், நம் உருவம் பிரதிபலிக்கும் அளவு பளபளப்பாகவும், முழுங் கான வட்டவடிவத்துடனும், லிங்கம் அமையும். பிறகு தூய்மையான நீர், ஆவின்பால், இளநீர், கரும்புச்சாறு இவற்றால் அதைக் கழுவி, பின்பு மீண்டும் சுத்தமான நீரால் கழுவி, அதற்கென விதிக்கப்பட்ட அடையாளங்களை அதில் பொறிக்கவேண்டும். ராஜஸர்ஷபம் (கருங்கடுகு) அளவு உள்ள பொற் புள்ளிகள் லிங்கத்தில் அல்லது

ராஜஸஷ்வராதிஸ்ரை யத்ர வர்ணாஸ்ரமவிதயஃ ॥ ஈ ॥

லிங்மே வா வீரிகாயாம் வா லவ-ர்வண-ர்ஹிதாவஹே ।
வர்ணதொஷவதி தூராத்யும் ஸிஜ்ஜம் வீரம் ச தத்ஸெவெத் ॥ எ ॥
தீதெ-ரஷ ஸதூஸ் வம்வாதி ஸகுணொஷ்டார ஸாவதெரத் ।

ஹ ஜ்ஞ தெஜ்ரா ஸிவாரம்ஸாயதி ஸ்வர்திகம்
மாம ஸ்ரீவ்யு, ஸிஷ்டம்
தூவ்வாஷ்டாம்ஸம், வஸாஷ்டாறு ச விஷ்ணவவிரா-
வ்ரதி ஸ்ரீராஷ்டாம்ஸெ ।

ஸ்மாஹம் ஸகுந வாலாரண ஸ்ய யவாஸ-
வம்ஸெஹெஷ்ணாஹ

பீடத்தில் காணப்படுமாயின். அந்த லிங்கம் மிகமிகச் சிறந்தது, எல்லா வருணத்தவர்க்கும் நன்மையைத் தரவல்லது. இவ்வாறன்றி லிங்கம், அல்லது பீடத்தில் சிறிதளவேனும் குற்றம் காணப்படின் அதை அறவே நீக்கிவிட வேண்டும். குற்றமற்றதான மற்றொரு லிங்கத்தைக் கொணர்ந்து அதில் முறைப்படி செய்யவேண்டிய வற்றைச் செய்து லகுஷோத்தாரம் செய்யவேண்டும். (1—7½)

லகுஷோத்தாரம் செய்யும் வகை இனி விளக்கிக் கூறப்படுகின்றது. சிவலிங்கத்தில், பிரம்ம பாகம் - விஷ்ணு பாகம் - சிவாம்சம் அல்லது பூஜாம்சம் என மூன்று பிரிவினை ஏற்கெனவே கூறப்பட்டுள்ளதல்லவா? அதில் சிவாம்சத்தின் உயரத்தை மூன்று கூறாகச் செய்துகொள்ள வேண்டும். அதில், உச்சியிலுள்ள மூன்றிலொரு பாகத்தை விலக்கி விட வேண்டும். அதாவது இங்கு கூறப்படும் லகுஷோத்தாரம் சிவாம்சத்தின் கீழ்ப்புறமாக உள்ள மூன்றில் இரண்டு பாகத்திலேதான். மேலேயுள்ள மூன்றிலொரு பாகத்தில்லை என்றவாறு. ஒரு லிங்கத்தின் சிவாம்சம் மூன்றடி உயரம் என்று வைத்துக் கொள்வோம். அதில் மேற்புறமுள்ள ஒரு அடியை நீக்கி, கீழுள்ள இரண்டடி உயரத்திற்குள் லகுஷோத்தாரம் பண்ண

ஸ்ரீ ஸ்ரீகாரணாகமே வேதாந்தஸித்தாந்தவிசார விசாரிகளவ்யா ஸிவெஸா ॥ அ ॥

வேண்டுமென்பது தேற்றம். லக்ஷணம்—அடையாளம். உத்தாரம்—(அதை) அமைத்தல். வட்டவடிவமான சிவாம்சத்தில் எல்லாப் பக்கமும் ஒரே விதமாக இருக்குமல்லவா? அதில் ஒரு பங்கத்தில் அடையாளமிட்டு, அவ்வடையாளமுள்ள் பக்கத்தையே லிங்கத்தின் முன்புறமாக வழங்குமாறு செய்தல்—லக்ஷணோத்தாரமென்பதாம். இனி மூன்று கூருக்கப்பட்ட சிவலிங்கத்தின் பூஜாம்சத்திலுயரத்தில் மீழுள்ள இரண்டு பாகங்களின் மொத்த உயரத்தை எட்டு பாகங்களாகப் பண்ணிக்கொள்ள வேண்டும். மலையில் தோன்றும் தாதுப் பொருள்களால் செய்யப்பட்ட திரவப் பொருளில் சூத்திரத்தை நனைத்து "விஷ்ணுவல்லிரா" ஸூத்திரத்தைத் தட்டிப் பதியுமாறு அடையாளம் பண்ணிக்கொள்ள வேண்டும். இதிலுள்ள விசேஷங்கள் காச்யபீயம் முதலான நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆங்கு கண்டுகொள்க. விஷ்ணுவல்லிரா ஸூத்திரமென்பது பூமியின் சுற்றுவட்டத்தில் அச்சு போல் நேராகச் செல்லும் கோடு. அதுபோல் சிவலிங்கத்தின் குறிப்பிட்ட பகுதியில் நூல் தட்டி அடையாளம் செய்து கொள்ளவேண்டும். எட்டு கூருக்கப்பட்ட பூஜாம்சத்தின் மேற்புறத்திலுள்ள எட்டாவதான பகுதியில் லிங்கம் போன்ற அடையாளத்தை (க்கோடிட்டுச்) செதுக்கிக்கொள்ள வேண்டும். இதுவே லக்ஷணோத்தார மென்பது. லிங்கம்போல் அடையாளமிடும் இது எல்லா. வருணத்தவருக்கும் பொதுவானது. அல்லது ஒவ்வொரு வருணத்தவருக்கும் தனித்தனியாகவும் லக்ஷணோத்தாரம் பண்ணுவதுண்டு, (1) யவம் எனப்படும் தானியம் போன்ற வடிவமுள்ளதாக லக்ஷணோத்தாரம் பண்ணலாம், (2) பெரிய யானையின் கண் போன்ற வடிவத்திலும், (3) நெல் போன்ற வடிவத்திலும், (4) இருகையும் கூப்பின நிலையில் தோன்றும் அடையாளம் போலவும் லக்ஷணோத்தாரம் செய்யலாம். இந்த நான்கு வகையும் முறையே அந்தணர் முதலான நான்கு வருணத்தவர்கட்கும் ஏற்றதாம். (8)



இவ்வாறாக "லக்ஷணோத்தாரம்" செய்தபின்பு, அந்த லக்ஷணத்தின் அடிப்புறத்திருந்து கீழ் நோக்கியவாறாக ஒரு ரேகை (கோடு) வரைய வேண்டும். இது லக்ஷணோத்தாரத்திற்கென வகுக்கப்பட்ட பகுதியில் (பூஜாம்சத்தின் மூன்றில் இரண்டு பாகம் உயரத்தில்) ஏற்கெனவே எட்டு கூறுகச் செய்யப்பட்டதில் அடிப்புறத்தில் இரண்டு பாகம் நீக்கி, மற்ற ஆறு பாகம் வரை செலுத்தவேண்டியதாகும். இதுவே "மணிரேகை" என்று வழங்கப்படும். மற்றும், லக்ஷணத்தின் இரு புறங்களிலும் இரண்டு ரேகைகள் "மணிரேகை"யைப் போலவே கீழ் நோக்கிச் செல்லுமாறு வரையப்படவேண்டும். ஆனால் இவை மணிரேகை போல் ஆறு பாகம் வரை செல்லக் கூடாது. 5-வது பாகத்தில் பாதியளவு சென்று முடிந்துவிடவேண்டும். நாலரை பாகங்கள் வரை கீழ் நோக்கி வரவேண்டுமென்றபடி. பிறகு மேல் நோக்கியவாறு செல்லும் ருது ஸூத்திரங்களை வரைய வேண்டும். இவ்வாறு ருது ஸூத்திரங்களை வரைவதால் உண்டாகும் கட்டங்களில் அவ்வோ தெய்வங்களை ஆவாஹநம் செய்து பூஜிக்க வேண்டியிருப்பதனால் இவை "த்ரிதசகோஷ்டங்கள்" எனப்படும். பிறகு மணிரேகையின் இருபுறங்களிலும் செதுக்கப்பெற்றுக் கீழ் நாலரை பாகம்வரை வந்து முடிந்த அவ்விரண்டு ரேகைகளையும் பின் புறத்தில் கொண்டுபோய் ஒன்றுகூடுமாறு சேர்த்துவிடவேண்டும். அந்தந்த ரேகைகளின் "கர்ணம்" செல்லும் வழியில் அவ்விரு ரேகைகளையும் பின்புறத்தில் ஒன்றுவது ரேகையின் முடிவில் ஒன்றே டொன்று சேர்த்துவிட வேண்டும்.

கதணஃகுரஃகஃ வரமவஹிவ-
ஹுவெஃ வியொ யொஜயெஸ ॥ கூ ॥

விஷ்ணொர்யஃலக்ஷணெ ஜியவத-
வஹ்ஹாஃவுலெர்யஃஃதொ
ரொவா கஃஹுதொ ரிதா ஃணீஃயீ
கதஹ்ரிஃஸவெவ வரொ ।
ரொவா டக்ஷிணவாஃ ஃயுரஃரிதா
வுஹுராஜிகாஃஜஜி-

குறிப்பு: இங்கு கூறப்பட்ட விஷ்ணுஸ்ரா ஸூத்திரமும் ருத்ரஸூத்திரங்களும் வரையப்பட வேண்டிய முறை தெளிவாக விளங்கவில்லை. அதைப் பிறகு விளக்குவோம். (9)

இந்தச் சுலோகத்தில் மணிரேகையையும் அதன் இரு புறங்களிலும் செல்லும் இரண்டு ரேகைகளையும் பொறிக்க வேண்டிய அளவு கூறப்படுகின்றது. உத்தமம்—மத்யமம்-அதமம்—என மூவகைப்படும் இந்த "லக்ஷணம்." அததற்கேற்றாற்போல் ரேகைகளின் அகலமும் ஆழமும் மாறுபடும். இரண்டு யவம் அகலமுள்ளதாக மணிரேகை செதுக்கப்படவேண்டும் அதமலக்ஷணத்தில். கால் யவம் அகலம் சேர்த்து அடுத்த அளவும், மேலும் கால் யவம் கூட்டி அதற்கடுத்த அளவும், இவ்வாறே நான்கு யவம் அகலம் வரை மணிரேகையின் அகலத்தைக் கால் கால் பங்கு உயர்த்திக்கொண்டே போகவேண்டும். ஆக ஒன்பது அளவுகள் கிடைக்கின்றன. இவைகளில் மும்மூன்று அளவுகள் முறையே உத்தமம்—மத்யமம்—அதமம் ஆகிய லக்ஷணங்களுக்கேற்றவை. மணிரேகையின் இரு புறங்களிலும் உள்ள இரண்டு ரேகைகளின் அகலம், அவ்வோ மணி ரேகையின் அளவில் பாதி யளவு இருக்கவேண்டும்.

குறிப்பு:— "ஸஸ்ருதெ ரோக்ஷவ்யாஹவா கம் ஏ நாமுராயர-
கெதஸ் கலுயெஸ" (காச்யபீயம் 49—163) என்னும் சுலோகத்தின்படி மணிரேகையின் ஆழம் அதன் அகலத்திற்குச் சரி

மெடிவதி ஸுதாராஸுகாயிஸிவலி-
ஜாஸாஸு தடிவதாஃ ॥ ம ॥

வ்யூஷம் காமராலிமெ
ஷொபஸஹாரம் க்ருதெ ஸிவராயதெ ।
ஷட்லிதவெடிஹாரம்-
வ்ரீயெகாயெடு கதயஹாரிஷுயடு ॥ யக ॥

யாக இருக்கவேண்டும் என்று அறியப்படுகின்றது. இங்கு அதன் ஆழம் கூறப்படாமையின் அதையே வைத்துக்கொள்ள வேண்டும். இங்கு காச்சியபியத்தில், மணிரேகை என்பது இருபுறங்களிலும் உள்ள ரேகைகளாகவும், நடுவிலுள்ளது நாராமெனவும் கூறப்படுகின்றது.

ரிஜ்வதஷ்டாஸ்ரகம்வா வதுவஸ்ரிதவிஸ்தாரகம் ॥ உச ॥

தஸ்யோவாயஸ்தகாந்தம் தத்தாந்தம் வாவிதஸ்திமாணகாந்தம் வா ।
விமாணம் வாபி கதவ்யம் தத்தாஹாவயவம் லவெள ॥ உரு ॥

கேயூரஸ்யம் வீரா ஸோஷ்ணீஷ ஸ்தாநே ஸ்திதாஸ்தாஃ ।
ஸ்திதா ஸ்தாநேஷ்வஷ்டா வ்யஷ்டா யவவதாஸ்திதாஃ ॥ உசு ॥

இலைகள் போன்ற அமைப்பு இதில் காணப்படவேண்டும். இதையே "பத்ரபூரிதம்" என்பர். இவ்வாருன கேயூரத்தைப் புயத்தின் மத்திமில் அணிவிக்க வேண்டும். இந்தப் பத்ரபூரிதத்தின் காம்பின் கனம் கேயூரத்தின் கனம் போன்றதேயாம். (23)

அவ்வாருன பத்ரபூரிதத்தின் கீழ்ப்புறமுள்ள காம்பு புயம் முழுதும் வியாபித்திருக்குமாறு காண்ப்படும். பத்ரபூரிதத்தினகலம்; மூன்று, நான்கு, அல்லது ஐந்து அங்குலங்களிருக்கலாம். (24)

அதனகலம் அதன் உயரத்தில் பாதியேயாம் அகலத்தின் அளவை இருமடங்காக்கி, அதில் கால் பாகம் குறைவாகவும் அதனுயரத்தை யமைக்கலாம். அல்லது அகலத்தைப் போல இருமடங்கு உயரமுள்ளதாகவும் அமைக்கலாம். இதுவே "பாஹுவலயம்" (புயத்தில் அணியும் வகை) என்ப்படும். (25)

நடுவிரல் தவிர மற்ற விரல்கள் யாவற்றிலும் மோதிரம் அணிவிக்கவேண்டும். அம்மோதிரங்கள் விரல்களில் அடிக்கணுவிலேயே அணிவிக்கப் படவேண்டும். வட்டவடிவமாகவும், ஒரு யவம் கன முள்ளவையாகவும் மோதிரங்கள் அமைக்கப்பட வேண்டும். மோதிரங்களில் பலவகையான இரத்தினங்களைப் பொருத்தி விசித்திரமான

ஸ்தூலஸூக்ஷ்மதரவா தத்தத்ப்ரமாணம் யதாயதைவ ।

ஊர்த்வாதோமுகஸ்தலயே சோர்த்வாதோமுகம் யதாயதம் ॥ உள ॥
கஜகர்ணாதிகநிஷ்காஸா வ்ருத்தாயதாவ்ருத்தா வதிதாரஃ ।
ஸ்ரம்ஷயதிதத்ப்ரமாணஸ்தலாக்ரம்தா வதிஸூக்ஷ்மவ்ருத்தி ॥ உஅ ॥

கதைவ வரதம் கூர்மபாணிவக்ரம் கடிஸ்த வாமம் ।
ஊர்த்வாதோமுகாயம்ப்ர தேஸாக்ரம் பவதிஸ்தூலவ்ருத்தி ॥

கதைவ விம்ஹகர்ணாவ்யம் தத்ஊர்த்வமதம் யதி ।
ஊர்த்வாதோமுகம் வகாரம் தத்ஸ்வாங்குலமதம் தயா ॥ கூ ॥

வேலைகள் செய்து மிக்க அழகு நிறைந்ததாகவும், அந்தந்த பிம்பங்களுக்குத் தக்கவாருகவும் இவற்றை அமைக்கவேண்டும். (26½)

அபய ஹஸ்தம் அமைக்கும்பொழுது, கையின் நடுவிரலின் நுனி மேல் நோக்கியவாருக, ஸ்தனருகுகத்தின் மேற்புறத்திற்குச் சமமாக இருக்கவேண்டும். ஆள்காட்டிவிரல் முதல் சுண்டுவிரல் வரை உள்ள விரல்கள் யாவும் அடிப்புறம் சமமாகவே இருக்குமாறும் சிறிது வளைந்தவாருகவும் அமைக்கப்பட வேண்டும். பெருவிரல் சிறிது வளைந்தும், வெளிப்புறத்தை நோக்கியவாருகவும், நுனி மேல் முகமாக உள்ளதாகவும் இருக்கவேண்டும். இவ்வாருக அமைக்கப் படும் ஹஸ்த(கைத்தல)மே அபயஹஸ்த மெனப்படும். (28)

வரத ஹஸ்தமும் இதைப்போன்றதே. ஆனல் விரல்களின் நுனி கீழ் நோக்கியவாருக இதில் அமைக்கப்பட வேண்டும். மணிக்கட்டு, கடிப்பிரதேசத்திற்குச் சரியாக வரவேண்டும். நடுவிரலின் நுனி, மேட்ரத்தின் நுனியளவில் முன்புறம் பார்த்தவாருகத் தொங்கவிடப் படவேண்டும். இதுவே வரதானமுத்திரையாகும். (29)

அதிலேயே நடுவிரலின் நுனி உள்ளங்கையின் நடுவிலும், அதன் பக்கத்திலுள்ள மோதிரவிரல் அதைத் தொடர்ந்து வளைந்து

ஸகாதிகா ஸ்ரீ, ஸௌபாக்யாதி: வக்ஷ்யமாண லக்ஷணோபேதா: ।

கலயாகாரஸாம்யா மத்யேநிஷண்ண வதனவிதாந ॥ ஈக ॥
யதிதல கடகம் வைராக்ய மணிவலய-ஸ்ரீவாஹுத: ।
வதனவிதாநஸ்ஸ்வாதிஷ்டாந கதக்வய வலிஷ்டதேஹ: ॥ ஊ ॥

விகசாவயவ-ஸ்தவாத உயர்ஸாரு ஸுஸ்லிஷ்டாதரம் கரடி ।
வதநாவயவம் *கதக்ஸீவா ஸம்வதகபோதி வம்யஸ்தா ॥ ஊ ॥
வகேரளக்ஷ்மாதிகாஸ்ரீவேள தயுதயுமதேள வஸ்த: ।

வந்து அதனிலும் சிறிது பின்தங்கியவாறுகவும், மற்ற விரல்கள் முன் போலவேயும் அமைக்கப்படின், இதற்கு "ஸிம்ஹகர்ண" முத்திரை என்று பெயராம். (30)

கடக முத்திரை என்று மற்றொன்றுண்டு. அதில், அபய ஹஸ்த முத்திரையே அமைப்பில் முக்கியமானது. ஆனால் அந்த அபய ஹஸ்தத்தை மார்பளவில் மேல் நோக்கிய விரல்களுடன் அமைப்ப தற்குப் பதிலாக, இதில் நேராகத் தொங்கவிட்டுத் துடையில் பொருந் துமாறு அமைக்க வேண்டும். மணிக்கட்டு துடையின் வெளிப்புறத் தில் இருக்கும். அறிவிற் சிறந்த சிற்பிகள் இந்த முத்திரையில் துடைக்கும் மணிக்கட்டிற்கும் உள்ள இடைவெளியை, ஒன்று, இரண்டு, அல்லது மூன்று அங்குலம் அளவுள்ளதாக அமைப்பர். பிம்பங்களின் தகுதிக் கேற்றவாறுக இதை நிர்ணயித்துக் கொள்க.

கர்த்தரீ ஹஸ்தம் இனி விளக்கப்படுகின்றது. இதில் நிக்கா ஸோத்திரத்திற்குச் சமமாக இருக்கவேண்டும் நடுவிரலின் நுனி. கை மேல் முகமாக இருக்கும். உள்ளங்கை அபயஹஸ்தத்தில் போலவே எதிர்ப்புறம் பார்த்திருத்தல் வேண்டும். மோதிர விர லும் பெருவிரலும் வளைந்து உள்ளங்கையின் நடுவில் கவிழ்ந்த

---

* இம்முத்திரை நாட்டிய சாஸ்திரத்தில் வேறுவிதமாக கூறப் பட்டுள்ளது. நாட்டிய சாஸ்திரம் 9—32.

கிஞ்சிஜ்ஞா கரிஷ்யாமா ஸாவத்யாவத்யை ஜுஷ்டிகாயை ॥

தஸ்யா வஸுமீ கிவிவ்யாதா கணாஶ்வஸ்தூவஹோஹதா ।
தஜ்ஜநுஷ்டம் தஷா தத்ர யொஜயேத்ஸுஶாலிகபி ॥ ரூடு ॥

ஸுஜுஷ்டா நாரிகாயுஷாஜுஷ்டுவுஷ்டுவுயுமா: ।
கிஞ்சிஜ்ஞாகரிஷ்யாமா தஜ்ஜநுஷ்டாஜுஷ்டாஸா ஸவைஷ ॥ ரூசு ॥

யஜ்ஞாவவீதம் ஸவெஷ்டிஷ்டம் யவாஷ்டாஶ்வமாஸ்தித: ।
உவவீதம் க்ரீஷ்டாச்ய ஊர்ஷ்டுஷ்டு வஸ்திதபி ॥ ரூள ॥

வாருகக் காணப்படும். சிறுவிரல், அவை போலன்றிக்கே. சிறிதளவு வளர்ந்தவாருக நிற்கும். மற்ற இரண்டு (ஆள்காட்டி விரல், நடுவிரல்) விரல்களும் வளைவின்றிக்கே நேர்மையாக மேல் நோக்கி நின்றவாறிருக்கும். சங்கு, சக்ரம் முதலியவற்றை இவ்விரு விரல்களில் அமைப்பர். இம்முத்திரை "கர்த்தரீ" என வழங்கப் படும். (34)

இவரிஷ்டி முத்திரை விளக்கிக் கூறப்படுகின்றது. இம்முத்திரையில் ஆள்காட்டிவிரல் ஒன்று தவிர மற்ற விரல்கள் யாவும் வளைந்து மடங்கியிருக்கும். அதிலும்; பெருவிரல், மோதிர விரல், நடுவிரல் ஆகியவை உள்ளங்கையின் நடு வரையில் நன்றாக வளைந்து மடங்கியவாறுகவும், சிறுவிரல் மட்டும் அவைபோல் அதிக மாக வளைந்து மடங்காமல் சிறிது வளைந்துமிருக்கும். ஆள்காட்டி விரல் நேராக நிற்கும். அதன் நுனி, கர்ண ஸூத்ரத்திற்குச் சம மாக மேற்புறம் உயர்ந்திருக்கும். இந்த நிலைமைக்கே ஸ்ருஷ்டி முத்திரை என்று பெயர். அங்குசம் முதலியவற்றை இதில் அமையுமாறு இணைக்கவேண்டும். (36)

எல்லா பிம்பங்களுக்கும் யஜ்ஞோபவீதம் (நூலால்) அமைக்க வேண்டும். ஒரு யவத்தில் எட்டிலொரு பாகம் அதன் கனம் இருக்க

வாகுவெவஹ்ரு ரூஷ்ணுக்ரு உ ஸவீகவ நாஸ்தி கு ।
வாஉஷ்ணுரொவாஸிஷ்டாத் காஹ்யொஉ ஜ்ரொணகத் ॥ கூ ॥

யஜ்ஞோவவீ கதீவ ஸ்ணு காலெஉ ஸ்கூஷிணவாஸ்ரு ஸ்மு ।
சுவரெவம்ரு ஸாஸ்ரீரகு யஜ்ரூவ ஸ்தகம் நியாவயெச ॥ கூ ॥

உரஸ்ஸ்தகம் வஸாமுவ்வு ஷ்ணாஉஷ்டாஜ்ரொணரெ ।
யஜ்ஞோவவீ கவஸ கூயம் ஷ்ணுயொரு ஸ்லயொரவி ॥ சயி ॥

வேண்டும். முப்புரி நூலாக இது காணப்படும் "உரஸ்ஸூத்ரம்" என வழங்கப்படும் மார்பைச் சுற்றிலுமுள்ள நூலோடு இவ்வுபவீதம் இணைந்திருக்கும். அந்த ஸூத்திரமும் பூணூலைப் போலவே ஒரு யவத்தின் எட்டிலொரு பங்கு கனமுள்ளதாயிருக்கும். ஆனால் மூன்று நூலாக இராமல் ஒரே நூலாக அமைக்கப்படும். இடது தோளின் மேலிருந்து பூணூல் தொங்கியவாறாக விருக்கும் கொப்பூழின் வலதுபுறம் கீழே இரண்டங்குலம் வரை அது தொங்கும். உபவீதத்தின் நீளம் இதுவேயாம். பின்புறத்திலும் தொடர்ந்து காணப்படும் யஜ்ஞோபவீதம். முதுகெலும்பை யொட்டியவாறாக அதை அமைத்தல் வேண்டும். (39)

சன்னவீரம்— என்றும் அனி இனி விளக்கப் படுகின்றது. மார்பில் ஸ்தனங்களுக்கு எட்டங்குலம் தூரத்தில். உரஸ்ஸூத்திரத்திலிருந்து தொங்கியவாறாக இது அமைக்கப்படும். இதுவும் யஜ்ஞோபவீதம் போலவே அமையும். ஆனால் இரு தோள்களிலிருந்தும் தொங்கும் இது. இரண்டு பக்கங்களிலும் யோனித்த மேற்புறம் வரை இது தொங்கும். இதையே சன்னவீரம் என்பர்.

குறிப்பு :— கைகளில் செல்லாமல் உடம்புக்கு மட்டும் அளவுடன் நிருமிக்கப்பட்டு அணியப்படும் பொன்மயமான சட்டை போன்றது சன்னவீர மென்பர் சிலர். உடம்பின் மேற்பகுதியில் அணியப்படும் அணிகள் யாவற்றையும் ஒன்று சேர்த்துக்

வாஸ்துயொவ்வை யொதுங்கியெடு வகைவீரஹிரம் விதி: ।

ஹிக்காசு ஷடஸ்ரமாயஹாசு வட்டகயொடியுதெஸ்தி: ॥ சக ॥
தெரவெயஹாரஹாவ்யாகம் வெடிஹாரு விகாககு ।
யவத்ரயம் வகஹவ்ய நாநாரணிஹிரணயு ॥ சஉ ॥

கணுஷ்டஹாரயுகாஹ உக்ஷஹாரம் வ்ரகவுயெசு ।
ஹ்ரஸ்வாதெதி வ்ரவிஹாவா, ஹ்ரஸ்வஹாயாஸ்து கார்யெசு ॥சஎ॥

கட்டினைப் போல் தோன்றுவதும், வலதுபுறம் பூணூல் தொங்குகிற வகையில் வயிற்றில் இடது புறம் தொங்கும் முத்துவடம் போன்றதுமான ஒரு அணியே ஈதென்பது எமது உலகம். அறிஞர்கள் ஆராய்ந்து தெளிக. (40)

இனி ஹாரம் (மாலை) கூறப்படுகின்றது. ஹிக்கா ஸூத்திரத்திலிருந்து ஆறு அங்குலம் கீழ்ப்புறம் தொங்கியவாறாக இது அமைக்கப்படும். ஸ்தனங்களிரண்டினுடையும் நடுவில் இது இடம்பெறும். இதனகலம் நாலங்குலமாம். இதற்கு "க்ரைவேயஹாரம்" என்று பெயர் ("அட்டிகை வடிவமான மாலை" என்பது இதன் பொருள்). இதன் கனம் மூன்று யவங்களளவாம். பல்வகையான இரத்தினங்களோடும் செம்பொன்னுடன் இணைத்துப் பளபளப்பாக ஒளிவீசுமாறு இதை அமைக்க வேண்டும். (42)

கழுத்திலிருந்து உதரபந்தம் வரை தொங்குமாறு அடிமாலையை அமைக்கவேண்டும். உதரபந்தம் — வயிற்றில் உள்ள கட்டு. அதாவது ஸ்தனங்களுக்கும் நாபிக்கும் மத்தியில் வயிற்றைச் சுற்றி அமைக்கப்படும் பட்டம் போன்றது. அடிமாலை — ருத்திராக்ஷமாலை, அல்லது தாம்ரமணி மாலை, துளசி மணிமாலை முதலியது. இதையே "ஹ்ருன் மாலை" என்றும் ஆன்றோர் கூறுவர். "ஸ்கந்தமாலை" என்ற மற்றொரு வகையான அணியையும் அணிவிக்க வேண்டும்.

தாதாவஷயீ வஸுலெஜெஸை வா வம்ஸுரீதி-ஃதா ।

கபிலஸ்தம் திவிஸ்ஸுஜெத்; வஸ்தம் வ்ரதியவம்வாநு
கபிலவெய்ரவாவிஷ்டாஸ் ஸுவிதிரஸ்தாவரெஸ ।
ஜெராஸ்தம் கூத்ரிஸாவஸ்தம் வாஸுஷ்டாவஸ்துஸாகுகு ॥ சதி ॥

தாஸ்தம், தாஸவஸ்தம் தாஜ்ஜ வாஸயாஜ்ஜஸ்தம் வஸ்துதி ।
தகெதாஸ்தாஸ்தகுஸ்ஸாம்ஸ்தம் ஸுகூடாஸ்தாதி ஸுவெஸாசஸு ।

வாதெள ஜாதுகவம்யஸ்தெள ஸுஸ்ஸாவஸ்வ தஜெவ வ ।

ஸ்கந்தம்— தோள். பலவகையான மலர்களாலான இம்மாலை தோளின் மேற்புறத்தில் தொடங்கிப் புயத்தின் மேலேயே இருபுறமும் தொங்கியவாறுகக் காணப்படும். (43½)

கடிஸூத்திரம் (அரைஞாண்கயிறு) மூன்று நூல்களுள்ளதாக அமைக்க வேண்டும். ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு யவம் கனமுள்ள தாக இருக்கவேண்டும். (44)

"க்ருத்திமாஸ்யம்" என்றும் அளி இனி விளக்கப்படுகின்றது. கடிலத்திக்கு மேற்புறத்தில் வேஷ்டத்தின் கீழ் இந்த "க்ருத்திமாஸ்யம்" அளிவிக்கப்படவேண்டும். க்ருத்ரிம—செயற்கையான, ஆஸ்யம்—முகம். முன்புறம் மத்திமில் சிங்கம் முதலியவற்றின் முகம் போன்ற அமைப்புள்ளதாகிய பட்டம் இடையில் கற்றியவாறுக அமைக்கப் படுகின்றதல்லவா? அதில் முன்புறத்தில் மத்திமில் முகம் போல் தோன்றும் பகுதி தான் இந்த "க்ருத்திமாஸ்யம்". இந்த க்ருத்திமாஸ்யத்தின் அகலம், ஐந்து, ஆறு, அல்லது ஏழு அங்குலமிருக்கலாம். அகலத்தினாலேயே உயரமுமாகும். இதன் கனம் அரை அங்குலமாம். அதிலிருந்து துடையில் மூன்று அங்குலம் அளவு வரையில் முத்து ரைக்கள் முதலியவற்றைத் தொங்கவிட வேண்டும்.

பாதக்கனிரண்டிலும் கணைக்காலுக்கு கீழ் ஜாலகம் அளிவிக்க வேண்டும். ஜாலகம் என்பது பட்டைலரம் என்றும், பாதஸரம்

ஜாமுகூவலலஸி தூஜு யவயவமகாதிகி ॥ சள ॥

கூஜூஸி தூஜாறுகாமுஸ்வி திரபஜெயவஃ தூகுழி।
திரயவம ஜாமு நாஷஜு வூஃவஸ தூமுஜு ஜிதி ॥ சஅ ॥

யஷஃநகம வநம, ஸொஷம மாஸ்வி திரபூஜுயெஸ்।
மாயயூகூந தூ வூதூலஸ உகஃ வாஷாண வஸ்வூதி ॥ சசூ ॥

மாஸஜி நம வநம வாதிஷ்யஷ்டி தூ நகாஜுயெஸ்।

என்றும் வழங்கப்படும். சிலவிடங்களில் "பட்டைகொறுக" என்றும் இதை வழங்குவர். இதில் ஜாலகங்களை ஒரு ஸூத்திரத்தில் கோத்துக் கட்டவேண்டும். ஜாலகம் எனப்படுவன. முத்துக்கள் போல் தனித்தனியாகப் பண்ணப் பெற்று, ஜாலகஸூத்திரத்தில் கோக்கப்பட்டு வலைபோல் இணைத்து நிற்கும் சிறுபட்டைகள். இவைகள் எல்லாம் ஒன்று கூடியதே பாதலேபமாகும். இந்த ஜாலகங்களைக் கோத்துக் கட்டுவதற்கான நூலின் கனம் இரண்டு யவமாம். (17)

அந்த ஸூத்திரத்திலிருந்து ஜாலகங்கள் தொங்குவதற்கான அளவு மூன்று அல்லது ஐந்து யவம். ஜாலகங்களின் நாளம் (காம்பு) மூன்று யவம். அதன் உயரமும் அகலத்திற்குச் சமமே.

இதன் கனமும் ஒரு யவம் அளவு. இதில் மற்ற பகுதியைப் பள்ளமாக அமைக்கவேண்டும். சங்குபோல் உட்புறத்தில் இடமுள்ளதாக (கெட்டியாக இராமல்) பண்ண வேண்டுமென்றவாறு. அவ்வாறு இடமுள்ள பகுதி லட்டுமானமிருக்கவேண்டும். இதனுள் சிறு கற்களைப் போட்டு வைக்கவேண்டும். இந்த ஜாலகங்களை, உள்ளிடமில்லாமல் கெட்டியாகவும் அமைக்கலாம். இவ்வாறுமின், உட்புறத்தில் கற்களைப் பொருத்தவேண்டிய அவசியமும் இல்லாமல் போகும். (19½)

ஸுஜ்ஜுவயம் யது வுகொஞ்சிஷ்ணொவதெ ॥ நிய ॥
தஸ்ரிஷ்ணவஸீணாஹாச ஸவாஹிம் வ்யாத்தூயதது ।
தஸ்ரீவாஹிவஸிவ்யாதம் ஸணம்ஹாஜுஜுயொயதது ॥ நுக ॥

ஸவ்வாஜுஜுவ்ஹு விவ்ஹாஸ: வதவெங்கூஜுஜும் ஸணெ ।
கூநிகீக்ஷுதவெ ஜிவெஹ்வ ஜுவெ கூயபூத்து ஜொவதெ ॥

வஹ்ஹு கொளுயகாவ்ஹாஸவீஸ வதுஹ்ரிகும் வுஜ்ஜ: ।
தத்தூநொமும் வுகுதவ்வ்ம் யுக்கூ ஸவ்கு வுஜ்ஜிஹாது ॥

சில விக்கிரகங்களில் முன்கையில் வீணைபோல் பாம்புகள் சுற்றிக் கொண்டவாருக அமைக்கவேண்டியிருக்கும். ஆங்கு அவ்வாருகப் பாம்பு சுற்றிக்கொள்ளுமிடத்தின் சுற்றளவு போல் மேலும் கால்பாகம் கூட்டிய அளவே அப்பாம்பின் நீளமாகும். முன்கையில் பாம்பு சுற்றிக் கொள்ளுமிடத்தின் சுற்றள்வு பன்னிரண்டு அங்குலமென்று வைத்துக் கொள்வோம். அவ்விடத்தில் சுற்றியவாருக அமைக்கப்பட வேண்டிய பாம்பின் நீளம் பதினேந்நங்குலமிருக்கவேண்டும். இவ்வாருகவே மற்ற இடங்களிலும் கண்டுகொள்க.

அவ்வாருகிய பாம்பின் நீண்ட வடிவத்தின் மேல் அதனுடைய படத்தை அமைக்கவேண்டும். படத்தின் நீளம் பன்னிரண்டங்குலமாம். படத்தின் அகலம் ஏழங்குலமும், கனம் ஒரு அங்குலமுமாம். மிகவும் கூர்மையாகக் காணப்படும் இரண்டு நாக்குகளையும் அப்பாம்பின் வாயில் அமைக்கவேண்டும். மற்றும் இரண்டு கண்களையும் அமைக்கவேண்டும். இப்படிக் கைகள் முதலிய இடங்களில் சுற்றிக் கொண்டவாருகக் காணப்படும் பாம்புகளின் வடிவத்தைப் பொருத்தமாகச் சமைக்கவேண்டும். (52)

இனி உடைகளின் விஷயம் கூறப்படுகின்றது. பட்டாடைகள், பஞ்சுத் துணிகள், மர உரிகள், பல்வேறு விதமான தோல்கள், இலைகளில் ஏதேனுமொன்றை விக்கிரகங்களுக்கு ஆடையாக அமைக்கலாம். அந்தந்த விக்கிரகங்களின் தகுதியை உற்று நோக்கி இதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். (53)

ய்ரூவெணை கூதகம் ஸிம்பம் தெஔதெவாயாயஉரஉஸெஷ।
ஸதாஜூஹாயதம் ஷாவம் நவஸவ்வாஸுஹாநஔஸ்ஸு ॥ ருச ॥

இவி பிம்பங்களின் ஆயுதங்களைப் பற்றிப் பேசப்படுகின்றது. எந்தப் பொருளினால் பிம்பம் பண்ணப்படுகின்றதோ அதே பொருளினால்தான் அதன் ஆயுதங்களையும் பண்ணவேண்டும். வேறு பொருள் கூடாது. செம்பு முதலிய உலோகத்தால் பண்ணப்படும் பிம்பங்களுக்கு அந்தந்த உலோகங்களாலேயும், கல்லில் சமைக்கப் படும் பிம்பங்களுக்குக் கல்லினாலும், மரத்தால் பண்ணப்படும் பிம்பங்களுக்கு மரத்தினாலும் ஆயுதங்கள் அமைக்க வேண்டு மென்றவாறு. இது எல்லா ஆயுதங்களுக்கும் பொதுவான விஷயம். இதைக் கருத்தில் பதியவைத்துக்கொண்டு, செய்யில் ஈடுபடவேண்டும்.

வில் (தனுஸ்) அமைப்பதற்கான விவரங்கள் முதலில் தரப்படுகின்றன. நூறங்குலம் நீளமுள்ளதாக வில்லை அமைக்கவேண்டும். இது நடுத்தரமான அளவாகும். இதற்கு மேல், ஒன்பது, ஏழு, ஐந்து அல்லது மூன்று அங்குலங்கள் கூட்டியும் குறைத்தும் வில்லின் நீளத்தை அமைக்கலாம். அதனால் வில்லின் உயரம் ஒன்பது வகையாம் :—

	அங்குலம்.
(1) வில்லின் உயரம்	109
(2) ,, ,,	107
(3) ,, ,,	105
(4) ,, ,,	103
(5) ,, ,,	100
(6) ,, ,,	97
(7) ,, ,,	95
(8) ,, ,,	93

ஊதுகுயல்ஓதம் விலீதம் வா
நவயாயதஷோடியழி।

வலிணஉவிலூகாரமஃ
வஸ்தாதயுரடிமரகூளாத்ரயெ ॥ ருரு ॥

கூடெ ... கூயபூம்மூலவ்யாஸெ
வ்ரதெ கூயெபு மூணாஜ்ஞயெ ।

வில்லின் உயரம் அங்.
(9) ,, ,, 91

இவ்வகைகளில் ஏதேனுமொன்றை அந்தந்த விக்கிரகத்தின் தகுதியைக் கவனித்து அமைக்கலாம். (544)

தனுஸ்ஸின் பருமை கைப்பிடிக்குள் அடங்கியதாக இருக்கவேண்டும். கைப்பிடிக்குள் நிறைந்திருக்கவும் வேண்டும். வில்லின் மத்தியில் கையால் பிடித்துக் கொள்ளவேண்டிய இடத்திற்கே இந்த அளவு அமையும். மத்தியிலிருந்து இருபுறமும் நுனிவரை வில்லின் பருமை படிப்படியாகக் குறைந்து கொண்டே செல்லும். இரு முனைகளிலும் வில்லினகலம் (குறுக்களவு) அரை அங்குலமே இருக்க வேண்டும். மற்றும் இருமுனைகளிலும் மும்மூன்றங்குலம் மடங்கி வளைந்து கட்டையடிவமாக இருக்குமாறு அமைக்கவேண்டும். வில்லில் மத்தியில் அதன் நீளத்தில் மூன்றிலொரு பாகத்தில் "பாண நாபி" என்னும் அமைப்பை ஏற்படுத்தவேண்டும். "பாண நாபி" எனப்படும் இது இன்னதென்பது தெளிவாக விளங்கவில்லை. நாபி என்பது உடம்பின் மத்திய பாகத்திலிருக்கிறதல்லவா? அதேபோல் வில்லில் வைத்து எய்வதற்காக அம்பு நாணில் வைக்கப்படும்போது, அம்பின் அடிப்புறம் நாண்கயிற்றிலும், அதன் மத்தி (நாபி) வில்லில் கைப்பிடி இருக்குமிடத்திலும் இருக்குமாதலால், அவ்வாறாக உள்ள வில்லின் மத்தியப் பிரதேசத்தையே "பாண நாபி" என்று சொல்வதாக நினைக்க இடமுண்டு. பலவகையாக வில்லைக் கையில் பிடிக்கும்போது இந்த "பாண நாபி"யும் ஒதுங்கினவாறாக அமை

விதஸ்தி ஆயாத்ரிரஸ்ரமெகே
வாணாகாவிவ்ருத்தஸ்ச தத்ஸமஃ ॥ 56 ॥
வாவாயாஸ்ஸ்யாத்ஸமோமத்ய ஸ்ஜ்யாதீவ்ருத்தஸாஹ்வயஃ ।
த்ரிவக்ரஸஹிதம் வாயு வாதேஸ்யாத்காரணதேவதா ॥ 57 ॥
வக்ரகர்வஸமம் வாணதீவ்ரம் தத்ஸமமாணகம் வா ।
கநிஷ்டாஜ்யஸமோதைத்ய வஸிஷ்டாஸ்ஸ்ரஸ்ருஜ் தா ॥ 58 ॥
சூஷ்யாயாஸ்ஸ வங்காக்ரஃ தத்தாரதெவ தத்தழ் ।

யக் கூடுமாகையால்தான் போலும் வில்லின் முழு நீளத்தில் மத்தி யிலுள்ள மூன்றிலொருபாகம் இதற்கென வகுக்கப் பட்டுள்ளது. இதற்கு வேறு பொருளுண்டாயின் ஆய்ந்துணர்க. (56)

இனி வில்லின் நாண்கயிறு விளக்கிக் கூறப்படுகின்றது. வில் லின் முழு நீளத்தில் எட்டிலொரு பங்கு குறைந்ததாக அதன் நாண் கயிறு இருக்கவேண்டும். நாண்கயிற்றின் நீளம் மட்டும் இங்கு கூறப்பட்டது. அதுபற்றிய மற்ற விவரங்கள் ஏனைய நூல்களி லின்று கண்டுகொள்க. (56½)

வில் மூன்று இடங்களில் வளைந்திருக்க வேண்டும். "த்ரி ணதம்" என்பது வில்லுக்கு மற்றொரு பெயர். மூன்று வளைவுகளுள் ளது என்பதே அதன் பொருள். இவ்வாறின்றி ஒரே வளைவுள்ள தாகப் பிறைச்சந்திரன் போலவும் வில்லை அமைக்கலாம். (57)

அம்பின் நீளம் இருபத்தோரங்குலம் இருக்கவேண்டும். இதைப் போல் இருமடங்கு (42 அங்குலம்)ம் அதன் நீளம் இருக்கலாம். அம் பின் சுற்றளவு. கையின் சிறுவிரலினுடைய சுற்றளவு போன்றதாக இருக்கவேண்டும். (58)

அம்பின் முனை ஐந்தங்குலம் அகலமும் அவ்வளவே நீளமுமுள்ள தாக இருக்கவேண்டும். அம்பின் நுனியின் (கூர்மையான "முகம்"

சூலஸ்ரீவத்ஸகம் வாலம் வத்ஸவக்ஷஸி கீர்த்திதம் ॥ ஏக ॥

வத்ஸாணாஜ்ஞாதல வாஸாந்த் ஸ்ரஷ்ஜ்யா தாமீரபாஸனெள ।
வாஸுதாரா கீர்த்திமுகை மாலயாபரண விஸ்ரூதம் ॥ சுபி ॥

டூஷ் லாஷ்ஜ்ஞாயாம் கவ்யாஸ்ரூக்ஷ்ய வஹ்னிஷ்வ் ।
ஸ்ரூபம் பவிஷ்வம் வரய கவ்யாஸ்ரூக்ஷ்வஜயா ॥ சுக ॥

எள வழங்கப்படும் பகுதியில்) நேத்திரற்குச் சமமான அளவுள்ள பகுதி அதன் அடிப்புறத்தில் பலவகையான இரேகைகளால் அழகாகக் காட்சியளிக்குமாறு அமைக்கப்பட வேண்டும். (59)

அவ்வாறு கும்பின் அடிப்புறத்தில் அமைக்கப்படும் இரேகைகள் ஒரு அங்குலம் அகலமுள்ளனவாக இருத்தல் வேண்டும். அம்பின் பிற்புறத்தில் "ஜ்யாநாபி" என்னும் அமைப்பைப் பண்ணவேண்டும். "ஜ்யா— நாண்கயிறு. நாபி— அதன் மத்தியம்." முன்பு "பாணநாபி" என்னும் சொல்லுக்குப் போலவே இங்கு ஜ்யாநாபி— என்னும் சொல்லுக்கும் பொருள் காணவேண்டும். நாண்கயிற்றில் அம்பைப் பதிய வைத்து எய்வதற் கேற்றதாக அம்பின் அடிப்புறத்தில் பகுதியைச் செய்துகொள்ள வேண்டியிருக்கும். லக்ஷ்மீதந்த்ரத்தில் "புங்கம்" என்று இதை வழங்குவர். இதையே இங்கு "ஜ்யாநாபி" என்று குறிப்பிடுவதாகத் தோன்றுகின்றது. நாண்கயிற்றின் மத்தியில் அவ்வாறு ஏதேனுமொரு அமைப்பு இருந்தாலும் இருக்கலாம். இந்த ஜ்யாநாபியின் ஆழமும் அகலமும் அம்பின் வால் போன்ற பின் புறத்தின் அகலத்தில் மூன்றிலொரு பங்காகும். (60)

இனி டங்கம் எனப்படும் மழுவின் இலக்கணம் கூறப்படுகின்றது. சிவபெருமான் கரங்களில் கையேந்தப்படும் ஆயுதங்களுள் முக்கியமானது இது. இதன் உயரம் பன்னிரண்டங்குலமாம். இதன் முகம் வெளிப்புறத்தை நோக்கியவாறு அமைக்கப்படவேண்டும். சிறு கோடரி போன்றதாகக் காணப்படும் ஆயுதமே டங்கம் எனப்படுவது. இதுபோலவே மானும் சிவபெருமான் தனது கையில்

ஸாடஶாஂஜ்ரஸ்ராயாரம் தஷ்யோஷ்டம் யுக்திதஶ்ரொசு ।
ஸாடஶாஜ்ரவிஷ்ணாரம் வக்ரம் ஶஜ்ரம் தஷ்யைவ வ ॥ சுஉ ॥

ஐஉஸொநீ-ஷ்வ-விஷ்ணொ வாஸுவஜ்ராஜ்ரயாஷ்டிதெ ।
ஷயும் ஸுணாஜ்ரஸ்தம் வ்ருஷஸாயாஉஷ்ரைவ கத்தஉः ॥ சுரு ॥

வஜ்ரபவஸம்யுக்தம் வஉஹஸ்த்ரஷிஸம்யுதி ।

திக்கப்பட வேண்டியவற்றுளொன்றும். இதனுயரமும் முன்போல் பன்னிரண்டங்குலமேயாம். வெளிமில் நோக்கியவாருகவோ அல்லது உள் நோக்கியவாருகவோ இருவகையாகவும் இதை அமைக்கலாம் எவ்வாறுன அமைப்பு கவர்ச்சிகரமாகவும் பொருத்தமாகவும் இருக்குமோ அவ்வாறுக நன்கு யோசித்து இவற்றை அமைக்க வேண்டும். (61½)

இனி, திருமால் விக்கிரகங்களின் கைகளிரண்டிலும் அணிவிக்க வேண்டியவையாள சங்கு சக்கரம் இவற்றின் விஷயம் கூறப்படுகின்றது. இவற்றின் அகலம் பன்னிரண்டங்குல மிருக்கவேண்டும். இவை வட்டவடிவமாக அமைக்கப்பட வேண்டியவை யாதலால் அகலம் போன்றதே இவற்றின் நீளமு மாகும். அதனுல்தான் போலும் தூலாசிரியர் இங்கு இவற்றின் நீளத்திற்கென்று தனியாக அளவு கொடுக்காமல் விடுத்தார். (62)

டமரு— எனப்படும் உடுக்கையின் அளவு இனி விளக்கப்படுகின்றது. இதன் நீளம் எட்டங்குலம். அகலம் ஐந்தங்குலம். இதன் மத்தியில் குவிந்து கருங்கியவாருக உள்ள பகுதியினகலம் மூன்றங்குலமாம். அப்பகுதியின் நீளமும் அவ்வளவே (மூன்றங்குலமே). இந்த உடுக்கையில் இரண்டு வகோயங்கள் இருக்கவேண்டும். தோல் வார்களால் இது நன்கு கட்டப்பட்டிருக்க வேண்டும். (63½)

இனி கமண்டலுவின் அளவு கூறப்படுகின்றது. கமண்டலு என்பது, முனிவர், பிரம்மா, முதலானேர் கையில் வைத்திருக்கும்

நவாஜ்ஞயை விதானம் தாராதியம் குர்வாதகஸ்ய ॥ சுச ॥

உத்தம் கரணதோரஃ கூர்மபார்ஷ்ணியாகாரம் தலெவ்வ ॥

வத்தம் கர்ணலதாஜீயம் விமாணவி
வ்யாதாணு ஷொபாகூதெ
உலெ வடபிராம்ஸகொ நிதயதொ
வாய்வ்ஸ்தாவ்ஷ் ஹ்ருதி ।
சுத்ரிஸ்ரமவ்ஸ்ரஜ உயுஷ்வரி
ஷ்டாஷ்டவ்தகம் குலி
லாரமெஃ வடபாதகம் கூரொதா கூடெ
நாசாது வீரொஜீயஃ ॥ கூரு ॥

விம்ஸகூரா யுரதீராஜ்ஞெஃ வரவிதகம்
வ்ருஜ்ஜெ தயா லொகயா
நாலம் வல்லிதயாவி வாய விதெத
ரவ்ஷாவராஜாம்ஸகெஃ ।

ஒரு வகைப் பாத்திரம். மேற்புறத்தில் வலிப்பான் கைப்பிடியுடனும் வயிற்றில் நீரைக் கொட்டுவதற்கேற்ற சிறு குழாய் போன்ற நளத்துடனும் இது காணப்படும். மேல் பிடி இல்லாமலும் சிற்சில இடங்களில் உண்டு. இது நம் நாட்டு மக்களுக்கு மிகவும் பழக்கமான தொன்றும் இதனகலம் ஒன்பதங்குல மிருக்கவேண்டும். அகலத்தில் பாதி அல்லது முக்கால் பங்கு இதின் உயரம் இருக்கலாம். அந்தந்த பிம்பங்களின் தகுதிகளைக் கவனித்துப் பொருத்தமாக இக்கமண்டலுவை அமைக்கவேண்டும். (64½)

முதலில் இரண்டு சுலோகங்களால் பத்ம பீடம், நாளம், இவற்றின் இலக்கணம் கூறப்படுகின்றது. இந்த சுலோகங்களிரண்டும் இந்த நூலில் இருபத்தேழாம் அத்தியாயத்தின் தொடக்

கத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அவற்றின் கருத்தை ஆங்கே கண்டுகொள்க. (65-66)

சிற்பரத்தினம், இரண்டாம் பாகம், கிரீடம் கடகம் முதலானவை களின் இலக்கணத்தைக் கூறும் பதினாறும் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ:

சுய லவதுமொழயுயாயி:।

சுய தெவுவிம்வெ ஸுஉருகூணழு

தெவுவிம்வெ வுகுத-ள்வெ கார யெஹ்ஹுமுஹாதி:।

கத்துஜாகரஜஹ்ஹு உஷ்ஹி வஹ்ஹு உதெவ தகு ॥ க ॥

பதினேழாவது அத்தியாயம்.

லேப்ய பிம்பத்தில் சூலத்தின் இலக்கணம்.

லேப்ய பிம்பமாவது, வர்ணம் பூசுவதலுல் உருவாக்கப்படும் பிம்பம். லேப்யம்—பூசப்படுவது. செம்பு முதலிய உலோகங்களி லுல், அல்லது கல் முதலியவற்றுல் பிம்பம் அமைப்பதற்கான வழி கள் மேலே கூறப்பட்டன. அவ்வாறு செய்வதற்கு இயலாத போது மரத்துண்டுகளால் விக்கிரகம் போன்ற அமைப்பை உண்டுபண்ணி அதிலும் வழிபாடு நடத்தலாம். உத்தேசித்த பிம்பத்தைக் குறிப் பிட்ட மரக்கட்டையில் அளவுடன் அமைத்து, தக்கவாறு வர்ணம் தீட்டிவிட்டால் நல்ல கவர்ச்சிகரமாகக் காட்சி யளிக்கும். இதுவே லேப்யபிம்பம் என வழங்கப்படும். இதற்கேற்ற மரக்கட்டையே இங்கு சூலம் என்று கூறப்படுகின்றது. அமைத்து இருக்கவேண்டிய இலக்கணம் இவ்வத்தியாயத்தில் கூறப்படுகின்றது.

லேப்யபிம்பம் செய்யவேண்டியிருந்தால் முத்துற முன்னம் சூலத்தைப் பண்ணிக்கொள்ள வேண்டும். அந்த சூலமானது, பிம்பத்தில் இருக்கவேண்டிய எல்லா அங்கங்கள், அந்தரங்கங்கள் இவை எல்லாவற்றுடனும் கூடியதாக இருக்கவேண்டும். நம் உடம் பில் எலும்புபோல், லேப்ய பிம்பத்தில் சூலம் ஜீவாதாரமான பகுதி யாகும்.

வ்ருக்ஷாதேஸ்ச வர்ஷ்மவ்ருத்திதஸ்தம்பாத்ஸ்தானநிர்ணயம் ।
ஸ்தானாலம்ருஜவஸ்தாநாம்ஸ்தானம் காரயேத்புத்திமான் ॥ 2 ॥

வாஸ்துவிக்ஷோரவ தேவாதாம்
தேவீகாம் ஸ்ரீஹரீணாம்தேஹஃ ।

(ஸ்ரீகாயஃகாயதாயும்
ஸ்ரீராயம்ஸஜ்ஜனாயதம் ஸ்ரீகரீ ॥ 3 ॥)

கருங்காலிமரம் போன்ற உறுதியான மரங்களால் திறமையுடன் தூண் குலத்தை அமைத்துக் கொள்ளவேண்டும். அதற்காக, தகுந்த முன்னேற்பாடுகளுடன் மரம் இருக்குமிடத்திற்குச் சென்று உத்தேசித்த கட்டையை வெட்டி எடுத்துவரவேண்டும். இந்நூலில் முதல் அத்தியாயம் 29 சுலோகங்களில் கூறப்பட்டபடி, பிம்பத்திற்கான கல்லைத் தேர்ந்தெடுப்பதில் போலவே இதிலும் விதிமுறைகளை அறுசரித்தல் வேண்டும். (2)

அதிலும் தேவர்களை ஆண்மரங்களாலும், பெண்தெய்வங்களைப் பெண்மரங்களாலும் அமைக்க வேண்டும். (நபும்சகமரம் தூலஸ்தாபனத்திற்கு உதவாது) ஆண்-பெண்-அலி மரங்களின் வாசியறிதல் போன்ற விவரங்கள் இந்நூலில் விரித்துரைக்கப்படவில்லை. காச்யபீயம் 79 வது அத்தியாயத்தில் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளது. ஆங்கே கண்டுகொள்க. (2½)

இந்த தூலத்தில், வம்சதண்டம், பக்ஷதண்டம் (அல்லது வக்ஷோதண்டம்), கடிதண்டம், என்று மூன்று தண்டங்கள் இணைக்கப்படவேண்டும். அவற்றுள் வம்சதண்டம் என்பது முதுகெலும்பு போன்ற அமைப்புடன் திகழும். இது கீழ் மேலாக நிற்கும். பக்ஷதண்டம், கடிதண்டம் எனப்படும் மற்ற இரண்டு தண்டங்களும் உடலில் குறுக்கே சென்றவாறு அமைக்கப்படும். ஹஸ்தம் என்று வழங்கப்படும் நெருக்குழிக்குக் கீழ் உள்ள உடலின் நீளத்திற்குச் சமம்

ഉയർന്നാൽ വിസ്താരമുള്ള വശത്തിൽ നിന്നും തെക്കുവിസ്തൃതി ।
കുടവയറിനുള്ളിൽ നാലുഭാഗവും വിസ്തൃതി ॥ ച ॥

നാലിലൊന്നു വശത്തുനിന്നും വിട്ടുകളഞ്ഞാൽ വലംകൊണകു ।
കുടവയറിന്റെ വൃത്തമായുള്ള ഉയരം വൃത്തമെവമാ ॥ ഛ ॥

മാർഗ്ഗനടുഭാഗം ദിവ്യം വക്ഷത്തിനുള്ളായതം വരുത്തു ।
വിസ്താരമുള്ളായതക്ഷണാത്തു ഉയരമുള്ളാകുന്നു വാ ॥ ജ ॥

വിസ്താരമായും വശം വൈരാജം വക്ഷത്തിനുള്ളവയും കൂടി ।
ഉയർന്നാൽ കുടവയറിന്റെ കൂടിയുള്ളാകാം ധരാജനെ ॥ ഝ ॥

നമാകവേ ഇത്ത വംശ തണ്ടത്തിന് നീളം ഇരുക്കവേണ്ടും. വയിറ്റിന് നടുപ്പുറത്തിന് അകലത്തിൽ താലിലൊരു പാകം വംശതണ്ടത്തിന് അകലമിരുക്കവേണ്ടും. അന്ത വംശതണ്ടത്തിന് അകലത്തിലും എട്ടിലൊരു പങ്കു കുറൈന്തതാക അതന് നുണിയിനകലം ഇരുക്ക വേണ്ടും. (4)

ഇന്ത കുലമാനതു പാതത്തിലിരുന്തു നാപി (കൊപ്പൂഴ്) വരൈയിൽ നാലു മൂലൈയുള്ളതാകവും, അതിലിരുന്തു ഗ്രിക്കൈ വരൈ എട്ടുപ് പട്ടൈ യുള്ളതാകവും, അതിലിരുന്തു ഉച്ചന്തലൈ വരൈ വട്ടവടി വമാകവും ഇരുക്കവേണ്ടും. ഇന്നൂല്— ഇരണ്ടാമത്തിയായം 77-വതു സുലോകത്തിൽ ശിവലിങ്കത്തിറ്കുക് കൂറപ്പട്ട വഴിയിലേയേ ഇതൈയും ഊഹിത്തറിക. ഇവ്വാറിൻറി ഉൾളങ്കാൽ മുതൽ ഉച്ചന്തലൈ വരൈ വട്ട വടിവമാകവേ കുലത്തൈ അമൈപ്പതും തകുതിയുടൈന്തേതയാം. (5)

ഇനി പകുതണ്ടം വിളക്കപ്പടുകിൻറതു. ഇതൻ നീളം മുപ്പത്തിരണ്ടങ്കുലം. ഇതനകലമും ആതരൈ അങ്കുലമാം. ഏഴങ്കുലം അകലമിരുന്താലും ഇരുക്കലാമ്. അകലത്തിൽ പാതിയളവു ഇതൻ കനമിരുക്കവേണ്ടും. ഇതൻ മത്തിയത്തിലിരുന്തു ഇരുപുറമും മുഴ വരൈ പടിപ്പടിയാക അകലം കുറൈന്തു കൊണ്ടേ ചെല്ലും. ഇരുമുനൈകളും നാലങ്കുലം അകലം ഇരുക്കവേണ്ടും. (7)

வக்ஷஸ்தண்டஸ்ய மத்யே து ஸ்தூணா ஸ்யாத் முனாங்குலா ।
*ஸ்தூணாதஸ்தாத்ஸ்ய பாதஸ்து வக்ஷஸ்தண்டஸ்ய பாதவத் ॥ அ ॥
ஸ்தூணாயாமஸ்ய பாதஸ்து கர்ணவம்ஸஸ்ய தண்டகா யோஜயேத் ।

ஷோடஸாங்குலபாதஸ்து கடிதண்டாவிலம்பிதா ॥ ஈ ॥
வஜ்ரஸ்தூணஸ்ய தஸ்தாரம் வக்ஷ வேதிஸ்ய மத்யத: ।
ஏகோ யாமஸ்ய மத்யே து காலேஷு வஜ்ரதண்டிகா: ॥ உ ॥
கடிதண்டாவலம்பஸ்து வ்யாஸஸ்யார்தம் ப்ரயோஜயேத் ।

வக்ஷதண்டாதயோரேவ கடிதண்டாதயோ ஸ்யுதா ॥ ஊ ॥

இத்தப் பக்ஷதண்டத்தின் மத்தியில் ஒரு துணா (துவாரம்) இட வேண்டும். இத்துணாயின் அளவு முன்றரை அங்குலமிருக்கும். இத்தப் பக்ஷதண்டத்தை ஹிக்காஸூத்திரத்துக்குக் கீழ்ப்பாகத்தில் குறுக்காக அமைக்க வேண்டும். அதிலும் பக்ஷதண்டத்தின் மேற் புறம் ஹிக்காஸூத்திரத்தின் கீழ் இரண்டங்குலம் தாழ்ந்ததாக இருக்கவேண்டும். இந்தப் பக்ஷதண்டத்தை வம்ச தண்டத்தில் இணைக்கவேண்டும். (8½)

கடிதண்டம் எனப்படும் மற்றொன்றின் நீளம் பதினாறங்குலம். இதன் அகலம் எட்டங்குலம். இதன் கனம் நாலங்குலம். கொப்பூழின் கீழ் ஐந்தங்குல அளவில் இதன் மேற்புற மிருக்குமாறு இது குறுக்காக அமைக்கப்படும். இதன் மத்தியிலும் நாலங்குல அளவுள்ள தாக ஒரு துணா இருக்கும். இதையும் (பக்ஷதண்டத்தைப் போலவே) வம்சதண்டத்தில் இணைக்கவேண்டும். (10½)

பக்ஷதண்டம், கடிதண்டம் இவற்றின் இருமுனைகளையும் சிறிது வளைந்தவாறாக அமைக்கவேண்டும். அதில் கைகளையும் (ஹஸ்த தண்டங்களையும்), கால்களையும் (பாததண்டங்களையும்), பொருத்த மாக அமைக்கவேண்டும். இவ் வினைப்புகள் பொருத்தமாக அமை

---

* ஸ்தூணா வஸ்திதாஸ— என்றிருக்கல் தகும்.

ஹஸ்தவ்ருத்யா யதாயுக்தம் கர்யாத் ஸ்தூபிகாஃ க்ரமாத் ।
ஆத்யஸ்ய ஸ்தூபிகாயாஸ்து ஹஸ்தஸ்யைகஸ்ய விஸ்தரம் கதயேத் ।

வக்ஷ்யமாணவிதானேன ஸ்தூபிகைவம் விலக்ஷணாஃ ।
வாகுலிக்ரமதோ வேஷ்டா வஜ்ராவ்ருத்திர்விதாநகஃ ॥

கதயேத்பூர்வவிதயோ ஹஸ்தஸ்யைகஸ்ய விஸ்தரம் ।
ஸ்தூபிகாயாஸ்து தைர்க்யம்து ஸ்தூபிகாயாஸ்து விஸ்தரம் ॥

கர்பிண்யா ஸ்தூபிகாயாஸ்து கர்யாத்பாணாந்தரம் புதஃ ।

வதற்காகவே இவ்வாறு கோணலாக அவற்றின் முனை அமைக்கப்பட வேண்டு மென்றவாறு. அவ்வாருள வகுந்த முனையின் நீளம் இரண்டங்குலம். அதன் அகலம், அதில் பொருத்தப்படவேண்டிய கைகளின் எண்ணிக்கையைத் தழுவியதாம். இரண்டு கை அமைப் பதானால், அதற்கேற்றதாகவும், நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட கைகள் அமைப்பதானால் அதற்கேற்றவாருகவும் அதனகலம் இருக்க வேண்டும். (12)

அறிவாளியான சிற்பியானவன், அந்தந்த பிம்பங்களின் தன் மைக்கேற்றவாருக, ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு அல்லது எட்டு எண்ணிக்கையுள்ளதாகக் கைகளை அமைக்க வேண்டும். அததற்கேற்றவாருகப் பகுதண்டத்தின் முனைகளின் அகலத்தையும் அமைத்துக் கொள்ளவேண்டும். பகுதண்டத்தின் சிகை (முனை)யின் அகலம் அதில் ஒரு பாகம். இது அடிப்புறத்தில். சிகையின் நீளமாகிய இரண்டங்குலத்தில் தொடக்கத்தில் இந்த அளவு. அதன் நுனியில் அதனகலம் சிறிது குறைந்திருக்கவேண்டும். (14)

இவ்வாறே கடிதண்டத்தின் இரு முனைகளிலும் வகுந்தவாருக மூன்றங்குல நீளத்தில் சிகையை அமைக்கவேண்டும். இதனகலம் ஒன்றரை அங்குலம். இந்த சிகை நல்ல வட்டவடிவமாக இருக்க

வாயுஸ்தானத்தை நிர்ணயம் செய்து அதிலிருந்து கருங்

காலம் வரையில் தெற்கு முகமாகவும் மேற்கு முகமாகவும்
கூவிஷ்ணுவும் வராஹமும் முகமண்டபமும் அமைக்க.
ஆவுடையாரை வகுத்துக்கொண்டு பாதியையும் அதிஷ்டானத்

தையும் கர்ப்பகிருஹத்தையும் அர்த்தமண்டபத்தையும்
சிவபாகத்தில் வரும்படி அமைக்கவும்.

முகமண்டபத்தை விஷ்ணுபாகத்தில் அமைக்கவும். கஅ

வேண்டும். இதன் களமும் அகலத்திற்குச் சமமானதே யாகும். (ஒன்றரை அங்குலமே யென்றவாறு). (15)

லகலபிம்பம் நின்ற வண்ணமாக இருக்கும் நிலையில் சூலம் ஸ்தாபிக்கவேண்டியிருந்தால், துடைகளின் நீளத்தில், மேற்புறத்தில் எட்டங்குலம் கூட்டிக்கொண்டு மரு (துடை) குலத்தின் நீளத்தை அமைக்கவேண்டும். லகலபிம்பம் வீற்றிருந்தவாறாக சூலத்தை அமைக்கும் போதும் இவ்வாறே துடைகளின் நீளத்தின் மேல் எட்டங்குலம் கூட்டிக்கொள்ள வேண்டும். (16½)

துடைகளின் அடிப்புறத்தில் தூணாகா அமைத்துக்கொண்டு, கடிதண்டத்தின் இருமுனைகளிலுமுள்ள சிகைகளில் பொருத்தவேண்டும். அவ்வாறாக இணைத்து, பலங்கொண்டவரையில் அழுந்துமாறு அதைக் கட்டவேண்டும். (17½)

அவ்வாறே முழங்காலின் அளவைத் துடையிலும் கெண்டைக்காலிலும் பகிர்ந்துவிடவேண்டும். அதாவது, இந்த சூலஸ்தாபனத்தில் முழங்காலுக்காகத் தனியாக ஒரு தண்டம் (மரத்துண்டு) வைக்கப்படுவதில்லை. ஆதலால் துடைக்காக அமைக்கப்படும் மரு தண்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

டத்தின் நுனியிலும், கெண்டைக்காலுக்காக அமைக்கப்படும் ஜங்கா தண்டத்தின் தொடக்கத்திலுமாக முழங்காலின் வடிவத்தை இரு கூருகச் செய்து அமைத்து இணைத்துவிட வேண்டுமென்றவாறு. துடைகள், கெண்டைக்கால் இவற்றின் நடுவில் சிகையை அமைத்துக் கொண்டு நன்கு பொருந்துமாறு அவற்றை ஒன்றேடொன்று இணைக்கவேண்டும். முழங்காலில் அமைக்கவேண்டிய சிகையின் அளவு மூன்றங்குலம். கெண்டைக்காலின் நீளமும் துடைகளின் நீளம் போன்றதேயாகும். (19)

துடையின் மத்தியில் ஊரு சூலத்தின் அகலம் (ஊரு சூலம்) துடையாக அமைக்கப்படும் மரத்துண்டு) துடையின் நீளத்தில் மூன்றிலொரு பங்கு இருக்கவேண்டும். துடையின் நுனியில் இருக்க வேண்டிய அகலம், நடுவில் உள்ளதில் முக்கால்பாகமாகும். கெண்டைக்காலின் தொடக்கத்திலும் அகலத்தினளவு இதுவேயாகும். (20)

கெண்டைக்காலின் அடிப்புறத்தினகலத்தில் மூன்றிலொரு பாகம் குறைந்தது அதன் நுனியின் அகலம். ஜானுவின் முகப்பில் ஜங்காவை (கெண்டைக்காலை) இணைக்கவேண்டும். இது விற்றிருக்கும் பாவனையில் அமைக்கப்படும் விக்கிரகங்களுக்கு. நின்ற வாறுக உள்ள விக்கிரகங்களுக்கு இவ்வாறான இணைப்பு வேண்டியதில்லை. துடை-முழங்கால், கெண்டைக்கால், இம் மூன்று உறுப்புக்களையும் தனித்தனியாகச் செய்து இணைக்காமல் ஒரே மரத்துண்டில் அமைத்துவிடலாம். அந்தந்த அமைப்பு தோன்றுமாறு வேலைப்பாடு மட்டும் இருந்தால் போதும். கெண்

ஜ்ஞாத்வைவாவஸ்திவிஸ்தாரே கதஸ்தாபகஸ்தாபயேத்॥

க்ரியா யாதகதாயாஶ்ச கூர்மபாதமயாயகே।
கதாஸ்ரவிஸ்ரகவ்யாவி க்ரியாஸ்தம்விஸ்ரகம் கயா॥ ஏக॥
வ்யாஸாயஞ்ச வாயு விஸ்தாரம் கத்ருதாத்ரயாம்ஶகைஃ
ககுப்யம் லக்ஷிதம் கஸ்திஜ்ஜா ஸ்ரமஸிவாம் கதாஸ்தகே॥

வாஹஸ்தாவிஸாரஜ்ஞே மாணாஜ்ஞாஸ்தாஷ்டாஸ்யகே।
கூர்மம்கதாஜ்ஞாம்வ்யாஸஃ வ்ரகோஷஸ்தைவதத்தஃ॥ ஏரு॥

ஏதாதகாரயாத்ரஸ்ய வ்யாஸம் கூயாத்ர வ்ரகோஷயோஃ
வாஹஸ்வ்ரகோஷயொஃ யை கொஷ்ரம்ஜாஸ்வஜ்ஜவைகே

டைக்காலின் முடிவுக்கு மேல் உள்ளங்கால் வடிவமான சூலத்தை (தல சூலத்தை) இணைக்கவேண்டும். (22)

பாததலத்தின் நீளத்தை மூன்று பாகமாகச் செய்து அதில் இரு பாகம் உள்ளங்காலின் முன்புறமாகவும், மூன்றுவதான ஒரு பாகம் குதிகால் எனப்படும் பின்பாகமாகவும் கொள்ளவேண்டும். உள்ளங்காலின் நடுவின் அகலத்தில் மூன்றிலொரு பாகம், அல்லது பாதி அளவு உள்ளங்காலின் அடிப்புறத்தினகலம் இருக்கவேண்டும். உள்ளங்காலின் அடிப்புறத்தில் இரண்டங்குல உயரத்தில் துளை செய்யவேண்டும். மேல் கெண்டைக்காலின் முனையில் உள்ள சிகையை அந்தத் துளையில் பொருந்தவிட வேண்டும். (24)

புயத்தின் அடிப்புறத்தில் அதனகலம் மூன்றங்குலம். புயத்தின் நடுவில் அதனகலம் இரண்டங்குலம். பிரகோஷ்டம் எனப்படும் முன்கையினகலமும் அதுவே. 2 அங்குலமே. (25)

முன் கைகளிரண்டிலும் அவற்றின் அடிப்புறத்தில் (தொடக்கத்தில்) உள்ள அகலத்தில் பாதியளவு அகலம் முனையில் அமைக்கப் படவேண்டும். புயங்களுக்கும் முன் கைகளுக்கும் மத்தியில் முழங்

வுஜ்ஜுவுஜ்ஜு ஸிவாஜ்ஜுகம் யொஜயெத்தூ ஜுஜம் யமா ।

வாஜ்ஜியொவ-லம்பஜ்ஜுவயு வாஜ்ஜுஜ்ஜுஜ்ஜு யொஜயெசு ॥

கடிவக்ஷாகரம் தீவயும் கவ்யாவலவஜ்ஜு மாணாஜ்ஜுஜ் ।

வம்ஸதண்டவம் தீவ்ய ஜுத்ய-ர்யவஜ்ஜுஸ்ஜிவாஜ்ஜிகயு ॥ உஷ ॥

மாணாஜ்ஜுஜாகரெ வம்ஸவாஜ்ஜுயொயொஜ்ஜுயெத்தூஜயு ।

ஹஸ்தவாதிகரும் தேஜ்ஜுகும் கர்ஜுவயுத்தெ யொஜயெசு ॥

கைகளை அமைக்கவேண்டும். காலில் முழங்கால் அமைப்பதுபோலவே கையில் முழங்கை அமைப்பதும். (26)

சிகையின் நீளம் இரண்டங்குலம். உறுதியாக இதை இணைக்கவேண்டும். இங்கும் மடங்காமல் நேராகத் தொங்கவிடப்பட்டதாகவோ, அல்லது எதிர்ப்புறம், மேற்புறம், பின்புறம் நோக்கவோ நீண்டதாகவே கைகள் இருப்பின் இணைப்புக்களில்லாமலே கைகளை அமைக்கலாம் என்பதை ஊகித்தறிக. (26½)

வம்சதண்டத்தின் இருபுறங்களிலும் பார்ச்வ (பக்க) தண்டங்களை இணைக்கவேண்டும். இவ்வாறாக இணைக்கப்படும் இரண்டு பக்கதண்டங்களின் நீளம் கடிதண்டத்திற்கும் பாததண்டத்திற்கும் இடையிலுள்ள உயரமேயாகும். அவற்றினகலம் மும்மூன்றங்குலம். வம்சதண்டத்தின் இருபுறங்களிலும் சமமான இடைவெளியில் இவை பொருத்தப்பட வேண்டும். இவ்விரண்டிலும் மேலும் கீழும் சிகைகளிருக்க வேண்டும். வம்சதண்டம், புச்சம் இவற்றிற் கிடையில் மூன்றங்குலத்தில் டி பார்ச்வதண்டங்களை உறுதியாக இணைக்கவேண்டும். (28½)

ஹஸ்தலங்கள், பாததலங்கள், காதுகள் இவ்விடங்களில் செம்புப் பட்டை (தகடு)களை இணைத்து அழகுறச் செய்யவேண்டும். (29)

க்ருத்வைவம்ஸ்தாபயேத்ஸ்தூபம் வக்ஷ்யமாணம்விதானதஃ ।
தேவாநாம்ஸகுலேவம்யாஸ் தேவீநாஞ்சாபிவிதயஃ ॥

உயேஷ்டர்க்ஷம்திர்யகாஜ்ஞ வாகாரம்ஸம்வம்ஸவிஸ்தரம் ।
கவஷ்டாம்ஸஹிதம்தூலம் விஸாலம்தத்தூர்த்வதஃ ॥ கஅ ॥

வாஹாவயவஸம்விஷ்டாஸ் வாஹாதிர்யக்வ்யவஸ்திதம் ।
வக்ஷஸ்தூணாயதம் ஸுஷ்டம் தலயோர்விஷ்டிதம் ஸமம் ॥

தஸ்யம் வாஹாந்தம் வ்யாதம் கபிதஸ்தம் வாதலயோர்
கபிதாரோதம் ஸுதாம்ஸம் யாமாம்ஸம் தலயு தீவ்ரகம் ॥

உத்தேசித்த தெய்வத்தின் மூர்த்தி நேர்மையாகவே இருப்பதாயின் அதற்கான சூலமும் நேர்மையாகவே அமைக்கப்படும். உத்தேசத்திலுள்ள தெய்வம் வளைந்த உடம்புள்ளதாக இருந்தால் அதற்கான சூலமும் வளைவுள்ளதாகவே அமைக்கப்படும். இவ்வாறாக தேவர்களுக்கான சூலஸ்தாபனம் கூறப்பட்டது. தேவிகளுக்கும் இது போலவே சூலஸ்தாபனம் கண்டுகொள்ள வேண்டும், அதிலுள்ள சிறிது மாறுபாடு இதோ விளக்கப்படுகின்றது. (30)

இதில் வயிற்றின் மத்தியத்தை மூன்றாகப் பிரிக்கவேண்டும். அதில் ஒரு பங்கு வம்சதண்டத்தின் அகலமாகும். அதன் அகலத்தில் எட்டிலொரு பங்கு குறைந்தது அதன் நுனியின்அகலம். அந்த வம்சதண்டம் நல்ல வட்டவடிவாயிருக்கும். (31)

இனி பக்ஷதண்டத்தினளவு கூறப்படுகின்றது. ஒரு புயத்தின் வெளிப்புறத்திலிருந்து மற்றொரு புயத்தின் வெளிப்புறம் வரையிலுள்ள அகலம் பாதாபர்யந்த விஸ்தாரமெனப்படும். இதில் ஒவ்வொரு புயத்திலுடையவும் அகலத்தில் பாதிபாகத்தை வெளிப்படுத்தி உள் நின்ற பாகம் பக்ஷதண்டத்தின் நீளமாகும். அதில் பாதியளவு அதனகல மிருக்கவேண்டும். இவ்வாறே ஊகித்துக் கொண்டு கடிதண்டத்தையும் அமைக்கவேண்டும். கடிப்பிரதேசத்

வெஷம் வ்ராஸிவ கதல்வு தாவுதெதா விவெஷதஃ।
சூவுதெவம்ஸதிஜ்ஜாதா வவ்லம்மாலுதா வொஜ்ஜயெஸு ॥ கச ॥

யாமாம்ஸம் வ்ருஷ்டிராகதா வெஷம் மதெல்தா வெஸுது।
ஜம்வாதிஜ்ஜாதா ஷஜ்ஜாதம் வொஜ்ஜயெஸு வ்ராஸதெ வாயஃ ॥

மஹல்மதல்வுவெஸாயா ஜவ்வாலு வொவுதெ।
விதெள்ள் உயும் வஸ்ராஸு வ்ருஷ்டிஜ்ஜ வாராதெகு ॥ கஞ ॥

உவஸ்துவாயதீம் வொத்த உஷ்டாஜ்ஜுததம் லவெஸு।

தின் அகலத்தை ஐந்து பாகமாக்கி, அதில் ஒரு பாகத்தைக் கழித்து நாலுபாகம் நீளமுள்ளதாகக் கடிதண்டத்தை அமைக்க வேண்டும். இந்தக் கடிதண்டத்தில் அகலம்-கனம்— இவையெல்லாம் முன்போலவே ஸாகித்தறிந்து கொண்டு பண்ணவேண்டும். அதில் வீற்றிருந்தவாருக அமைக்கப்படும் பிம்பத்தில் சிறப்பாக ஒரு விஷயம் கவனிக்கப்பட வேண்டும். வம்சதண்டத்திலிருந்து எட்டங்குலம் நீளம் கூட்டிக் கொள்ளவேண்டும். (34)

அதில் நாலங்குலம் பிருஷ்டபாகத்தினளவாம். மற்ற நாலங்குலத்தைத் துளையில் நுழைத்து விடவேண்டும். நின்றவாறான பிம்பத்தில், ஐங்கா தண்டத்திலிருந்து ஆறங்குலம் சேர்த்துக் கொள்ளவேண்டும். அதைக் குழியில் சொருகினாற் போல் நுழைக்க வேண்டும். இவ்வாறு மற்ற விஷயங்களையும் ஸாகித்தறிந்து கொண்டு செய்துகொள்ள வேண்டும். (35)

இனி உபகுலத்தை விளக்கிக் கூறுகிறேன். உபகுலம்-என்பது பிம்பம் போல் நிறுத்தப்பட்டிருக்கும் பிரதானகுலம் சாய்ந்து விழுந்து விடாமலிருப்பதற்காக அதைத் தாங்கியவாறு நிறுத்தப்படும் குலமாம். கவற்றின் மத்தியிலிருந்து இது ஸ்தாபிக்கப் பட வேண்டும். கவற்றின் மத்தியில் தொடங்கி, பிரதான குலத்தின் பக்ஷதண்டத்தின் முன்புறம் வரையில் உபகுலத்தின் நீளமிருக்க

வேதாந்தஸ்தம்பம் தீபிகாந்தம் ஸ்தாபயேத்ஸுதே வாலே! ॥

ஸ்தாபயாவஸ்தம் கர்ப்பஸ்தம் தத: பிம்பவாஸ்தி தம்பே।
மித்தியாத்ரா தாஸ்ரயாலு ஸ்தலம் வஸ்தூ பூலம் வாலே! ॥ கை ॥

கும்பஸ்தம் வஸ்திஸ்தம் ப்ரகா வர்ணாவு ஸ்தாபகு।
மிதே தூலதாரம் ஸ்தம்பம் கதாமி கீர்வாலி தம்பே ॥ கை ॥

உபஸ்தாபயிவாரிந்த்ர வக்ஷஸ்தூவ்ரம் வாலே।
உபஸ்தாபயிவாயாஸ்ய வம்பாத்ரு வாஸ்தீரம்கூரு ॥ சை ॥

வேண்டும். இதனகலம் எட்டங்குலமிருக்கவேண்டும். இதன் நீளம் (இடைவெளி) நாலங்குல மிருக்கவேண்டும். இந்த உபகுலத்தையும் குலத்திற்கு தக்கதான மரத்திலேயே அமைக்கவேண்டும். (37)

குலத்தினகலத்திற் கேற்றவாருக அதன் மத்தியில் துளை இருக்கும். இந்த உபகுலத்தில் சிகைகள் இரண்டு இருக்கவேண்டும். அறிஞனே! சுவற்றின் மத்தியில் குலத்தின் அடிப்புறத்தை நன்முகப் பொருந்தவிட்டு உறுதியாக்க கட்டிவிடவேண்டும். (38)

கடிதண்டம், பக்ஷதண்டம் இவ்விரண்டையும் தரித்துக் கொண்டு, வம்சதண்டத்தை இந்த உபகுலத்தின் துளையில் உறுதியாகப் பதியுமாறு நிதானமாக ஆளிகளின் உதவியுடன் இணைத்த வேண்டும், (39)

உபகுலத்தின் சிகையின் நுனியும் பக்ஷதண்டத்தின் முன்புறமும் ஸமமாக இருக்கவேண்டும். அவ்வாறு கணக்காகப் பார்த்து அமைக்கவேண்டும். இணைப்பு வெளியில் தெரியாதவாருகப் பொருத்தமாக அமைக்கவேண்டுமென்றபடி. உபகுலத்தின் சிகையிலும் வம்சதண்டத்தின் உச்சியிலும் துளைகளைச் செய்துகொள்ள வேண்டும். (40)

தொஹஜம் தாரஜம் வாய யஸ்யாஸ்தி யஸ்யாப்யலப் ।
விம்பாவஷ்டிஸ்வரூபாதம் தவுர்த்வாந்தம் வதேவரெ ॥சக॥

ஸ்தூபவ்ய விம்பவச் சூக்ஷ வம்வ்ருதாது மாரபாஜவா।
ஜலாயிவாவவ்ரஹ்ய்கீறு வ்ரதிஷ்டாம் காரயெத்பூஃ ॥ சஉ ॥

ஊதி சில்பரத்ன உத்தரபாகெ ஸ்தூபிவ்யாவதநுக்ரமணம்
நாம வஷ்டிதமோऽத்யாயஃ ।

அந்தத் துணிகளை ஒன்றாகப் பொருந்தவிட்டு, அதனுள் உலோகத்தினாலாகிய அல்லது மரத்தினாற் செய்யப்பட்ட ஆணியைச் செலுத்தி முன்யோசனையுடன் உறுதியாகப் பிடிப்பு உண்டாகுமாறு செய்யவேண்டும். சூலம் என்பது பிம்பத்தின் எலும்பு போன்ற தென்பது ஏற்கனவே கூறப்பட்டது. அதனால் கீழ்ச் சொல்லியபடி முன்னெச்சரிக்கையுடன் காரியங்களைச் செய்யவேண்டும். (41)

குருவானவர் சூலத்திற்குச் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்கள் (பண்பாடுகள்) அனைத்தையும் பிம்பத்திற்குச் செய்வது போலவே செய்யவேண்டும், ஜலாதிவாஸம் (நீரில் மூழ்கியவாறு வைப்பது) போன்ற சடங்குகள் யாவற்றையும் செவ்வனே முடித்துப் பிரதிஷ்டையையும் செய்து முடிக்க வேண்டும். (42)

சில்பரத்னம் இரண்டாம்பாகம் சூலஸ்தாபனத்தின் இலக்கணத்தைக் கூறும் பதினேழாவது அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ:

சுய சுவ்ஷாதிஸொரயூராயஃ।

சுய ரஜ்ஜுவாஸ்து

வஸ்வம் கூகூவாஹுவஹீகூவாய மதிலும் விலிவாரஃவாரஃ।
ஸுவிம் கூகூவாயிவாவஸ்வாகு வ்ரதிஷ்டாஜ்ஞ வஸ்வாவதெச ॥

மஹெஷ்தா வீகிகாம் கூகூவா ஸிலுயெவஷ்டகூயாவிவா।
கவீரதிஷ்டாவடெ கூகூவா ஸிலா ஊயாரவ்ஸ்ஜ்ஞ்தாடி ॥ உ ॥

வஷ்ணாதும் வ்ஹாமகெவைஸெ வ்ரதிஷ்டா வடியொஉஷ்டியொஃ।

பதினெட்டாவது அத்தியாயம்.

ரஜ்ஜுபந்தம் (சூலத்தைக் கயிற்றால் கட்டுதல்).

இவ்வாறாக முறைப்படி மரத்தைக் கொண்டுவந்து சூலத்தைப் பண்ணி, சுத்தம் செய்து, அதிவாஸனங்கள் பண்ணி அதற்குமேல் பிரதிஷ்டை பண்ணவேண்டும். (1)

கர்ப்பகிருஹத்தில் சூலத்தை ஸ்தாபிக்க வேண்டிய இடத்தில் கருங்கல் அல்லது செங்கல்லால் பீடம் அமைத்துக் கொள்ளவேண்டும். சூலத்தை ஸ்தாபிப்பதற்கான பள்ளத்தில் "ஆதாரசிலை" எனப்படும் கல்லை ஸ்தாபிக்க வேண்டும். (2)

நின்றவாறாக ஸ்தாபிக்கப்படும் ஸகலபிம்பங்களின் விஷயத்தில், சூலங்களை ஸ்தாபனம் செய்வதற்கான பள்ளங்களிரண்டிலும்,

வேறாயும் வடகிழக்கிலும் ஸ்தாபிக்க வேண்டியது தயார் செய்க.

வீரஸ்தலத்தை ஸ்தாபிக்கவேண்டிய இடத்தை நிர்ணயித்து,
சுத்தமான பூமியாயுள்ள ஸ்தானத்தில் ஸ்தாபிக்க வேண்டியது. 2

சுத்தமான பூமியில் ஸ்தானம் நிர்ணயித்து, ஸ்தாபிக்க வேண்டிய
ஜ்ஞானலிங்கத்தை வாஸ்துபூஜை முதலியவைகளைச் செய்து, 3

தக்ஷிணபாகத்தில் நான்கு ஹஸ்தமளவு சதுரமாகவும்,
ஆழமாகவும் குழியை வெட்டிக்கொள்ளவேண்டியது. 4

(ஒன்று இறைவனுக்கும் மற்றொன்று தேவிக்கும்) ஆறு அங்குலம் ஆழமும், மூன்றங்குலம் அகலமுமிருக்க வேண்டும். (3)

பீடத்தின் மத்தியில் நாலங்குலம் ஆழமுள்ளதாக ஒரே குழியும் தோண்டிக் கொள்ளலாம். (இது ஒரே சூலத்தை ஸ்தாபிக்கின்ற பக்ஷத்திற்காக இருக்கக்கூடும்.) ஆதாரசிலையில் முறைப்படி இரத்தினங்களை வைக்கவேண்டும். (4)

பிறகு சூலஸ்தாபனத்தை நடத்திவைக்கும் ஆசாரியன், அதற்கேற்ற சடங்குகளைச் செய்து முடித்து, கர்ப்பகிருஹத்தில் சூலத்தைக் கொண்டு வரவேண்டும். நின்றவாறாக அமைக்கப்பட்ட சூலமாயிருந்தால் ஐங்காசூலத்தின் அடிப்புறத்தையும், வீற்றிருந்தவாறான சூலமாயிருந்தால் வம்சதண்டத்தின் அடிப்புறத்தையும் அதற்கேற்ற வாறாகத் தோண்டி வைக்கப்பட்டுள்ள குழியில் தன்கு பொருந்துமாறு வைக்கவேண்டும். பிறகு சுன்னாம்பு அல்லது அஷ்டபந்தனம் இவற்றில் ஏதேனு மொன்றைக் கொண்டு சூலத்தை பலங்கொண்டவரை உறுதியாக அசைவற்று நிற்குமாறு செய்யவேண்டும். (5-6)

அல்லது, முன் கூறியவாறு கர்ப்பகிருஹத்தில் பிராம்மம், தைவம், மானுஷம், பைசாசம் எனப்படும் ஸ்தான பேதங்களை முறைப்படி

மஹாவைராஜாய வித்மஹே விஶ்வகர்மணே தீமஹி தன்னோ விஶ்வகர்மா ப்ரசோதயாத் ॥ ஏ ॥

ஓம் வாஸ்துபுருஷாய நமஃ
காத்ரவேயாய நமஃ
ஸர்வதேவாத்மகாய நமஃ
ஸர்வபூதாதிபதயே நமஃ ।

ஸ்ரீவத்ஸகம் வதாலாடம் கூர்மாரிஷ்டம் மணாம்ஸகம் ।
மாஹேந்த்ரம் வஜ்ரலாமனம் மாஹேந்த்ரகோம்ஸலோதகம் ॥ ஐ ॥

ஸஜலாரஸஜங்கா வஸ்த்ரம்ஸம்
மௌரிகங்கா மணாம்ஸகம் ।
வாம்யொஜ்ய வாமனயேச வாஸுகே
ப்ரதாரக்ர நிக்ஷிபேத்தாம் ॥ ஒ ॥

அறிந்து கொண்டு, உத்தேசத்திலுள்ள குலத்தை ஸ்தாபிக்க வேண்டிய இடத்தைத் தீர்மானித்துக் கொண்டு அதன்மேல் குலத்தை ஸ்தாபித்தலும் தகும். (7)

பிறகு குலத்தில் இணைப்பு உள்ள இடங்களிலெல்லாம் செம்புப் பட்டங்களைக் கற்றிக் கெட்டிப்படுத்த வேண்டும். அதன் மேல் குலத்தில் அஷ்டபந்தனத்தைப் பூசிக் கமிற்றால் கட்டவேண்டும். (8)

அஷ்டபந்தனத்திற்கான பொருள்கள் கூறப்படுகின்றன. அஷ்ட— எட்டு. பந்தனம்— கட்டுதல். எட்டுப் பொருள்களைக் கூட்டி ஒரு சேர்க்கைப் பொருளைத் தயாரித்து அதனால் லிக்கிரகங்களைக் கெட்டிப்படுத்துதல் என்பது இச் சொல்லின் பொருள். திருவட்டம் பிசின் நான்கு பாகம், குந்துரிக்கம் மூன்று பாகம், குங்கிலியம் ஐந்துபாகம், வெல்லம் ஒரு பாகம், வெள்ளைக் குங்கிலியரஸம் எட்டுபாகம், காவி மூன்று பாகம், இவ்வாறு பொருள்களையும் அதி

ஆவிர்புவர்கதெனிரஜ்ஜும் ஏறாவுனை வர்ணாதிஷ்டி ।
யதர கேஷளஉ ஷிவாயாதி நதா ஸ்ஏவெ விழிம்வெஸ ॥கக॥
ஸஷ்டவலஷிடம் வ்யாதிஷிடம் சிற்ஜு விசாரவேஷ்டீ ।

காவிகொரவமெ வஷ்டை கதவுணி ஜவொஷிதெ ॥ கஉ ॥
யதாஉ நுஷீவா கதுஸ்ரம்வாரவாடிதும் வுவொஹுவ ।
கதாவொரபுவயீ வஷுக ரூபயுவ்ஷ்டதுஸ்ரோணகீ ॥கங॥

ரஜ்ஜுவதுக்த நாலொள வுர்ஸ
உஷுயாரவாஸ குயொயுபுமாஃ ।
வஷ்டுர உயுமா வ்யாதா
விஜுவ உஷுவாஸுபுமா ॥ கச ॥

தற்குக் கூறப்பட்ட அளவு முறைப்படி ஒன்றுக் கூட்டி நன்றுகப் பொடி செய்யவேண்டும். பிறகு அந்தப் பொடியை கண பாத்திரத்தில் வைக்கவேண்டும். (10)

அதில் நெய், எண்ணெய், இவற்றை வற்றிக் கலந்து மந்தமான (தணிவான்) தீயில் வேத்து வேக வைக்கவேண்டும். தேன்போல் வரும். அப்போது அதை குலத்தில் பூசவேண்டும். இதுவே சிற்ப சாத்திரத்தில் தேர்ந்தவர்களால் அஷ்டபந்தனம் என்று கூறப்படும். (11½)

இனி நடு குலத்தில் பலவித்மான நாடிகள் அமைக்கும் வகை விளக்கப்படுகின்றது. நன்றுக முற்றிய பழுத்த தேங்காயின் மேல் மட்டையை எடுத்து சுத்தமான ஜலத்தில் ஊற வைக்கவேண்டும். நன்றுக ஊறின பிறகு அதிலுள்ள சோற்றை விலக்கிவிட்டு நரம்புகளைத் தனிப்படுத்தி எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த நார்களால் அததற்கேற்ற அளவுப்படி குலத்தில் நாடிகளை அமைக்க வேண்டும். (13)

மூலத்தானத்திலிருந்து நாபியின் வழியாக மேல் நோக்கிச் செல்லும் மூன்று நாடிகள். அம்மூன்றனுக்குள், நடுவில் செல்வது

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

"ஸுஷும்நா" எனப்படும். முறையே ஸுஷும்நையின் வலதுபுறம் "பிங்கலா"வும், இடதுபுறம் "இடாவும்" செல்லும். இவைதான் முக்கியமான நாடிகளாம். இவை ஒவ்வொன்றும் மூன்று கயிறுகளால் முறுக்கேற்றப் பட்டவையாகவும் இவ்விரண்டுக்குள்ளும் அகல மூன்றாவையாகவும் இருக்கும். (15)

இம் மூன்று நாடிகளும் புருவங்களின் மத்தியில் ஒன்றுகூடி விடும். அதற்குக் கீழ் வம்சதண்டத்தின் முன்புறத்திலிருக்கும். (16)

புருவங்களின் மத்தியிலிருந்து உச்சந்தலைவரை மூன்று நாடிகளும் ஒன்றுபோல் இணைந்து நிற்கும். உச்சந்தலையின் மேல் சென்றவுடனே அவை ஏழுகிளைகளாகப் பிரியும். (17)

அவற்றின் பெயர்களாவன :— காந்தாரீ (1). ஹஸ்திஜிஹ்வா (2). பூஷா (3). யசஸ்விநீ (4). அலம்புஷா (5). குஹூ (6). சங்கிநீ (7). (18)

இனி இவை செல்லும் வழிகள் விளக்கப் படுகின்றன. இந்த ஏழு நாடிகளுள், காந்தாரீ என்னும் நாடியானது உடல் முழுவதி

ವಕ್ಷಾ ದಕ್ಷಿಣಕರ್ಣಾಗ್ರಾ ವಾಮಕರ್ಣಪೃಷ್ಠಾ ಯಶಸ್ವಿನೀ ॥ ೧೯ ॥

ಅಲಂಬುಷಾದ್ಯುತ್ಕೃಷ್ಟಾಗ್ರಾಮಧ್ಯಾದಾಗ್ರಾ ಕುಹೂಶ್ಚಾಂತ್ಯಾ ।
ಶಾಖಿನ್ಯಾವಯಾಸಾಗ್ರಾ ಗುಹ್ಯಾನೀರುಪಮಾ ಲಘವಶ್ಚ ॥ ೨೦ ॥

ತೇಷಾಮಾದ್ಯಾಸ್ತ್ರಯಸ್ತ್ರಿಭಾಗಾಯವಕೃಶಾಸ್ತಿಸ್ರಃ ।
ಶೇಷಾಶ್ಚತುರ್ಭಾಗಾಯವಕೃಶಾಃ ಸರ್ವೇ ಲಘವಶ್ಚ ॥ ೨೧ ॥

ದಕ್ಷಿಣಾವರ್ತಾಃ ಸರ್ವೇ ಮಿಥುನೇಷ್ವಪಿ ವ್ಯತ್ಯಯೇನ ವ್ಯಕೀರ್ತಿತಾಃ ।
ವ್ಯಾಘ್ರಾಜಾಖೀಕೃತಯಶ್ಚೈವಂ ತ್ರಯಸ್ತ್ರಯಶ್ಚೈವ ॥ ೨೨ ॥

லும் பரவிச் செல்லும். ஹஸ்கிஜிஹ்வா என்னும் நாடி நாக்கின் அடிப்புறம் வரை செல்லும். பூஷா என்பது வலது காது வரையிலும், யசஸ்விநீ என்பது இடது காது வரையிலும் செல்லும். (19)

அலம்புஷா என்னும் நாடி, மேட்ரத்தின் (ஆண்குறியின்) அடிப்புறம் வரை செல்லும். குஹூ என்னும் நாடி "குதம்" (ஆசனவாய்) வரை செல்லும். கொப்பூழின் மத்தி வரையில் சென்று அங்கேயே தொங்கியவாறுக நின்றுவிடும் "சங்கினி" என்னும் நாடி. (20)

அவற்றுள் முதன்மையான நான்கு நாடிகள், ஒவ்வொன்றும் மூன்று யவம் கனமுள்ளவையா யிருக்கும். மற்ற நாடிகள் தன்னுள்ளு யவம் கனமுள்ளவையா யிருக்கும். (21)

இந்த நாடிகள் யாவும் இரண்டு புரியில் முறுக்கப்பட்டவையாகவும் பிரதக்ஷிணமாக முறுக்கேற்றப்பட்டவையாகவு மிருக்கும். இடை, பிங்கலை, ஸுஷும்னை, என்று முன்பு கூறப்பட்ட முக்கியமான மூன்று நாடிகளின் அடிப்புறமும் ஆண்குறியின் அடிப்புறத்தில் தொங்கியவாறுக விருக்கவேண்டும். (22)

கமாலிகுலஹிண்ஹாவ்ஹா காலயொரவ்ஹாஹ்ஸ ஹ்லூதாஃ।
விஹ்ரா வொஷண்ணீ வ்ருத்தீ வாஹினீ தேஜஸ்வினீ(நீ) தயா ॥ உக ॥

வாயவீ மஹதீ ஸ்ரவ ஹ்ருதீ ஸ்ரோதநீ தயா।
ரஸவாஹீ ஹ்ருதஸ்தீவ ஹ்ரும்ஸிநீவ ததைவ ச ॥ உச ॥

ஸம்ஹ்ருஷ்டாஸ்தீ வாநவ்ருத்தா வம்ஹாரீ ச ரஸவாஹிநீ।
வாஹிநீ காரவீ வ்யாதா தேஜ்ருஷ்டாஸ்ரவஹ்ருத்தவாத் ॥ உடி ॥

தாஸாமாஹ்ருத்தவ்ருத்தா காச்யஃ ஷட்டு உக்தாநி வாதஜாநி।
ஸஞ்ஜ்ஞாஃ ஷட்டு தயா வாதஜாதிஸ்ரவ வஹாஸ்ரிதாஃ ॥ உக ॥

கபொஹ்ரவ மதா விஷ்டகாஸ்ரயாவ்ருத்தவ லவணிகாஃ।
கபுகாதி ஹ வஹாவ்ருத்தி ஷண்ணாடீ ஹ்ரும் ததைகவச ॥ உள ॥

அந்த நாடிகளின் அடிப்புறத்திலிருந்து தனியாகப் பதினெட்டு நாடிகள் பிரிந்து செல்லும். அவையாவன :— விமலா (1). கோஷணி (2). ப்ருத்வி (3). வாஹினீ (4). தேஜஸ்வினீ (5). வாயவீ (6). கமநீ (7). மதநீ (8). ரோதநீ (9). ரஸவாஹீ (10). ம்ருதங்கீ (11). ஸ்ரம்ஸிநீ (12). சப்தஸம்ப்ருசாங்கீ (13). பூர்ணா (14). ஸம்ஹாரீ (15). ஸவாரிணீ (16). வாஹிநீ (17). தாமஸீ (18) இவையாவும் ஆண்குறியின் அடிப்புறத்தில் தோன்றுமவை.

இவற்றுள் முதல் ஆறுநாடிகள் வலதுகாலில் செல்பவையாம். மூடிலிலுள்ள ஆறுநாடிகளும் இடதுகாலில் செல்பவையாம். (26)

இந்தப் பன்னிரண்டு நாடிகளும் இந்த ஸ்தலத்தில் பரவிநின்று போல் கீழ் நோக்கிச் செல்லும். உள்ளங்கால் வரை சென்று, மீண்டும் நாளகத்தின் நுனிவரை மேல்நோக்கி வந்து ஆறு நாடிகளின் நுனிகளையும் அதைச் சுற்றி வளைத்து ஒன்றுபோல் சேர்த்துத் திரித்துப் பொருத்திவிட வேண்டும். (27)









நடுவில் கூறப்பட்ட ஆறுநாடிகளும் லஷ்மியின் அடிப் புறத்தைப் பற்றி, வம்சதண்டத்தின் பக்கத்தில் மேல் நோக்கி ஏறிப் பகுதண்டத்தின் மேலேறி இருபுறங்களில் அடிப்புறத்தை யடை யும். (28)

அதிலும், கமநீ, மதநீ, ரோதநீ என்னுமிவை வலதுகையையும், ரஸவாதீ, ம்ருதங்கீ, ஸ்ரம்ஸிநீ இவை இடது கையையும் அடையும்.

இவ்வாருகப் புயங்களின் அடிப்புறத்தை யடைந்த உடன் அம் மூன்று நாடிகளும் அவ்விடத்தைச் சுற்றியவாருக ஒன்று கூடி, ஒன்றேபோலாகிவிடும். மீண்டும் அ வை எட்டுக்கிளைகளாகப் பிரிந்து இடம் வலம் இருபுறங்களிலும் கைகளில் செல்லும். (30)

இவ்வாருகப் புயங்களின் அடிப்புறத்திலிருந்து உள்ளங்கை யின் நுனி வரையில் எட்டு நாடிகள் கைகளிலூடே பரவினற் போல் செல்லும். கைத்தலத்தில் சென்ற இந்த நாடிகளை மடக்கி மீண்டும் மணிக்கட்டு வரை கொண்டுவந்து அதைச் சுற்றியவாருக ஒன்று சேர்த்துக் கட்டிவிட வேண்டும். (31)

கயா கரொது ஹவெஷ்வு வலெஷ்வெவம் வாஹவதொ ।
வ்ரயா கநாபயஷ்வெவம் கலுயெல வ்ரதிரோஹிஷ்டு ॥ கூ ॥

காஹ்ருஷ்டெகயா கரப்யஃ வவாரஜ்ஜு வஹாவ்ரதாஃ ।
வஷ்டகிலிபு வஹவஸ்ராணி காயஃ வஸிக்தி-தாஃ ॥ கூ ॥

நாபீஹ்ருதயந்தரம் ஸ்ரோதோ ஜீவ-ரக்தவஹம் வ்ரஜேத் ।
நாபயஷ்டி கவஷ்டப்ய கஷ்டாவ்ரதநாமிகாஃ ॥ கூ ॥

யவஷட்டவரீணாநாம் ரஜ்ஜுரவ்ரதயெத் த்ரயம் ।
வாஸ்து நிரஸ்யம் ரஜ்ஜுஸ்து வஸுயெத்தக்ஷிணாவ்ரதம் ॥

இரண்டுக்கு மேற்பட்ட கைகள் உள்ள பிரத்மைகளிலும் இவ் வாறே ஒவ்வொரு கையிலும் எட்டெட்டு நாடிகளைப் பரவ விட்டுக் கட்டவேண்டும். இப்படிப் பிரதிமைகளில் முக்கியமான நாடிகளை அமைக்கவேண்டும் (32)

இவை ஒவ்வொன்றிலிருந்தும் அனேகம் நாடிகள் பிரிந்து சென்று உடல் முழுதும் பரவி நிற்கும். எழுபத்திரண்டாயிரம் நாடி கள் ஒவ்வொருவரது உடம்பிலும் பரவியிருப்பதாக மகரிஷிகள் கூறு கின்றனர். (33)

ஆனால் இங்கு முக்கியமான நாடிகளே கூறப்பட்டன. இந்த நாடிகளால் சூழப்பட்ட குலம், தர்ப்பமரத்து உதிர்ந்த இலையில் மெல் லிய நரம்புகள் சூழ்ந்தவாறுகக் காணப்படுவது போல் காணப்படும். இவ்வாறுக நாடிகளை அமைத்துப் பிறகு அவற்றை மறைத்து விட வேண்டும். (34)

அதற்காக ஆறு யவம் அளவு அகலமுள்ள உறுதியான இரண்டு கயிறுகளால் குலத்தைச் சுற்றி இடைவெளியில்லாமல் பிரத க்ஷிணமாகக் கட்டவேண்டும். (35)

ഹൃത്തടേ വായുവക്ത്രേ രജ്ജുകാകരമെല്ലയഃ।
കണ്ഠകരയുഗ്മേ കാലമുഖം കൂർമ്മം വൈഷ്ണവം।

ജീവസ്ഥാനേ ഹൃത്പദ്മേ കിരണാകൃതിഃ।
ഉത്തരേണ തു വായുഃ രജ്ജുവക്ത്രം വിധീയതേ॥ 36

ഇതി ശിൽപരത്നേ ഉത്തരഭാഗേ രജ്ജുലക്ഷണം നാമ
ഷഡ്വിംശോഽധ്യായഃ।

இதேபோல் எட்டு இதழ்களுள்ள தாமரைமலர் போன்ற அமைப்புடன் ஹ்ருதயபத்மத்தையும் கயிற்றிலேயே அறிவாளியான சிற்பியானவன் அமைக்கவேண்டும். அந்த ஹ்ருத்பத்மத்தின் காம்பு, நாபிவரை தொங்கியவாறுக விருக்கும். அந்த நாளம் ஸுஷும்ன நாடியுடன் இணைந்தவாறுக விருக்கவேண்டும். (36)

இந்த ஹிருதயபத்மமானது ஜீவாத்மாவின் இருப்பிடமென்று மகரிஷிகள் கூறுகின்றனர். அதனால் மிகுந்த கவனத்துடன் மூல மந்திரத்தைத் தியானம் பண்ணிக் கொண்டு கயிற்றைக் கட்ட வேண்டும். (37)

சில்பரத்தினம் இரண்டாம்பாகம் குலத்தைக் கயிற்றினால் கட்டும் வகையைக் கூறும் பதினெட்டாம் அத்தியாயம் முற்றும்.

ஸ்ரீ:

ஸுப்ரஹ்மண்யாய நமஃ

ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்

ஜாஜ்வல்ய மாநத்ரிநேத்ர ஸுநோ ஸுராராதி ஸைந்ய க்ஷயாதி ப்ரதக்ஷ !
ஸுராநந்த ஸந்தோஹ தாயின் ஸதாமப்ரமேய ப்ரபாவ ப்ரபோமாம் பாஹி ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமின் நமஸ்தே நமஸ்தே ॥ 1 ॥

ரணத்க்வாண கிங்கிணி ஜால மஞ்ஜீர பாதாப்ஜ ஸஞ்சாரு ஸிஞ்ஜான ஹம்ஸ !
ஸதாபாஸ்வதாநந்த ஸந்தோஹ தாயின் ஸதாமப்ரமேய ப்ரபாவ ப்ரபோமாம் பாஹி ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமின் நமஸ்தே நமஸ்தே ॥ 2 ॥

பத்தொன்பதாவது அத்தியாயம்.

ம்ருல்லேபநம் (மண்பூசுதல்).

இவ்வத்தியாயத்தில், குலத்தின் மேல் மண்பூசும் விதம் கூறப்படுகின்றது. முன்கூறியபடி நாடிகள் அமைக்கப்பெற்றுக் கயிற்றினால் உறுதியாகக் கட்டப்பட்ட குலத்தின் மேல், தக்கவாறாக மண் பூசி அதன் மேல் வர்ணம் தீட்டி வேலையை முடிக்கவேண்டும். அதற்கான் மண் எடுக்கும் வகை முதலில் விளக்கிக் கூறப்படுகின்றது. இப்பூமியிலுள்ள மண் பொதுவில் மூவகையாகின்றது. ஜாங்கலம் (1). அனூபம் (2). மிச்ரம் (3). என மூன்று வகையாம். அவற்றுள் ஜாங்கலமென்னும் முதல் வகை: வெட்டி யெடுப்பதற்கு முடியாதவாறாக மிகவும் உறுதியாக அழுந்திக் கிடக்கும் மண் "ஜாங்கலம்" எனப்படும். கருமணல் நிறையக் கலந்துள்ளதும் சிரமமின்றிக்கே வெட்டியெடுக்கக் கூடியதுமான மண் "அனூபம்" எனப்படும்.

ತಯೋರ್ಮಧ್ಯವಿಭಾಗಾಗ್ರಂ ಶಿಲ್ಪಿಭಿರ್ಮಧ್ಯಭಾಗಜಂ ।

ತೆಷ್ಟೌಷ್ಟಜೊಷ್ಟಜೊವೆತೆ ಶಾಲೆ ತೆಲೆ ಲಮೊಗಲೆ ॥
ಸಕೀಕೀವಃತಡಾಕಾಲೆಲ ಜಾತಂ ವಜ್ಞಂ ಲಲಾಹಲೆಸ ।
ಶ್ರೆತವಣಃಜ್ಞಾ ವಾ ಸಕ್ಷವಣಃಂ ಹಾಸಿಶ್ರೆವ ವಾ ॥ ಸ ॥

ವಿವ್ರಾಧಿವಣಃಲೆಲೆತ
ಕೃಷ್ಣವಣಃಲೆಯಾವಿ ವಾ ।

ಲಜ್ರಾಲಯೊಲೊಬ್ಯ ವಾಲೆತ್ರಷ್ಟಾ
ಲ್ರಾವಲೆಲವಲಾಲ್ಲಿಲಾ ॥ ೫ ॥

ಗುರಿಪ್ಪು :— ಇಂಗು ಅರೆ ಸುಲೋಕಂ ಪೊರುಳ್ ತೆಳಿವಾಕ ವಿಳಂಗಾಮಲ್ ಮೂಲಂ ಸಿತೈತ್ತುಳ್ಳತು.

ಮೇಲ್ಕೂಱಿಯ ಇರುವಗೈ ಮಣ್ಗಳುಂ ಕಲಂದು ಕಾಣಪ್ಪಡುವದೇ ಮೂನ್ರುಂ ವಗೈಯಾನ ಮಣ್, (2½)

ಅವಱ್ಱುಳ್, ವಱ್ಱಾದ ನೀರುಡೈಯದುಂ, ತೂಯ್ಮೈಯಾನದುಂ, ಪಲವಗೈಯಾನ ಪಲವಿರುಕ್ಷಂಗಳಾಲುಂ ನಱುಮಣಂ ಕಮழುಂ ನನ್ಮಲರ್ಗಳೈತ್ ತಾಂಗಿ ಮಂದಮಾರುತತ್ತಿಲ್ ಕಲಂದು ವೀಸಿ ವೆಕ್ಕು ತೂರತ್ತಿಲ್ ಸೆಲ್ಬವರ್ಗಳೈಯುಂ "ವಾ" "ವಾ" ವೆನ್ರಳೈಕ್ಕುಂ ಮಲ್ಲಿಗೈ ಮುಲ್ಲೈ ಮುದಲಿಯ ಪೂಂಗೊಡಿಗಳಾಲುಂ ಸೂழಪ್ ಪೆಱ್ರದುಂ, ವಂಡಿನಂ ಮಯಿಲಿನಂ ಮಱ್ಱುಂ ಇನಿಯ ಕುರಲೋಸೈಯುಡೈಯ ಪಲವಗೈಪ್ ಪಱವೈಗಳಾಲ್ ನಿರಂಬಪ್ ಪೆಱ್ರದುಮಾನ ಇಡತ್ತಿಲ್, ಆಱುಗಳ್ ಏರಿಗಳ್ ಇವೈಗಳಿலுಂಡಾನ ಸೇಱ್ಱು ಮಣ್ಣೈಕ್ ಕೊಂಡು ವರವೇಂಡುಂ. (3½)

ಮಣ್ಣಿಲ್ ಪಲ ನಿಱಂಗಳ್ ಉಂಡು. ಅಂದಣರ್ ಮುದಲಿಯ ನಾನ್ಗು ವರುಣತ್ತವರುಕ್ಕುಂ ಮುಱೈಯೇ, ವೆಳ್ಮೈ ಸಿವಪ್ಪು ಮಞ್ಜಳ್ ಕರುಮೈ ನಿಱಮುಳ್ಳ ಮಣ್ಗಳ್ ತಗುಂದವೈಯಾಂ. (4½)

ಮೇಲ್ಕೂಱಿಯವಾರುನ ಮಣ್ಣೈಕ್ ಕೊಂಡು ವಂದು ನೀರೈ ವಿಟ್ಟು ನನ್ರಾಗ ಕಲ್ಕಿತ್ ತುಕೈತ್ತುಪ್ ಪುದಿಯ ತುಣಿಯಾಲ್ ವಡಿಕ್ಕಟ್ಟವೇಂ

டும். அவ்வாறு துணியில் வழியாக வடிக்கட்டப்பட்ட குழம்பை ஒரு பாத்திரத்தில் வைத்து வெயிலில் மூலர்த்தவேண்டும். நீரெல்லாம் வற்றிப் போய்விடும் வரை நன்றாக உலர்த்தவேண்டும். (5½)

பிறகு அரக்குப் பொடியை அத்துடன் கலக்கவேண்டும். பால் மரங்களின் (ஆல், அத்தி, அரசு, இச்சி) பட்டைகளை நீரில் ஊற வைத்து அந்தக் கஷாயத்தை விட்டு நன்றாகத் துகைக்க வேண்டும்.

மீண்டும் அந்த மண்ணை நன்கு உலர்த்த வேண்டும். அதற்குப் பிறகு, கருங்காலி மருதை இம்மரங்களின் பட்டைகளை இடித்து நீரில் கொதிக்க வைத்து அந்தக் கஷாயத்தை அந்த மண்ணில் ஊற்றித் துகைக்க வேண்டும். பிறகு அதை மீண்டும் உலர்த்த வேண்டும். இம்முறை உலர்த்தும் போது, நன்றாகப் பொடியாகும் வரை உலர்த்தக் கூடாது. குழம்பான நிலைமை மாறி உருண்டையாக உருட்டி வைக்கக்கூடிய பக்குவம் வருகின்ற வரையில் உலர்த்தினால் போதும். (7)

பிறகு முக்களிகளை (கடுக்காய், தான்றிக்காய் நெல்லிக்காய்) நீரில் போட்டுக் கொதிக்க வைத்து அந்தச் சாற்றை இ மண்ணில் ஊற்றி

மாம்ஷத்ரயவஹாயாஸ்தம் விஷம் சூர்ணம் தத்ர க்ஷிபேத் ॥ அ॥

விஷ்ணுக்ராந்தாரஸேனைவ பூர்ணயேத் விஷம் தத்ர சூர்ணம் ।
பூர்ணம் வேஷ்ட்யதிதக்ஷாம்ஸம் பொஜயேத்தா பூர்வவத் ॥ கூ ॥

க்ருஹ்ணாம்யஹம் தா ஹம்பூர்வ வஜ்ராவஷ்டம்ப ராக்ஷஸி ।
யவமாய-ஞ்ஜனாஷாம்ஸ்தாவ்ருதவீவ்ருக்ஷ தயா ॥ ஐ ॥
யயா வஜ்ராம்ஸம் வஜ்யொஜ்ய சக்ஷிர்பூதம் வஜ்ரராம் வாஜ்ரி।
பூர்வஷ்டாம்ஸம் வஜ்ரயொஜ்ய காலிகெரவஜ்ரொத்திகெ ॥ கக ॥

நன்றாகத் துகைக்க வேண்டும். அறிவாளியான சிற்பி, சிறிது இளக்கமாக இருக்கும் நிலையிலேயே அம்மண்ணை உருண்டையாகப் பண்ணிக் கொள்ளவேண்டும். (8)

உருண்டையாக உருட்டிக் கைத்தலத்தில் வைத்துக் கொண்டால் கையிலுள்ள ரேகைகள் அவ்வுருண்டையில் தானாகப் படிய வேண்டும். இந்தப் பக்குவத்தில் மண்ணை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றவாறு. பிறகு அந்த மண்ணை நான்கு பாகமாகப் பண்ணிக் கொள்ள வேண்டும். அதில் ஒரு பாகத்தினளவு *சாதாரணமான மண்ணைக் கூட்டிக் கொள்ளவேண்டும். (9)

பிறகு அம்மண்ணை த்ரிபலா கஷாயம் விட்டுத் துகைக்கவேண்டும். அந்நிலையிலேயே, ஏழு, எட்டு அல்லது பத்து நாட்கள் புளிக்குமாறு வைத்திருக்க வேண்டும். பிறகு யவம், கோதுமை உளுந்து காயாவின் இலை, இவற்றை ஸமபாகம் சேர்த்து நன்றாகப் பொடி செய்து கொள்ளவேண்டும். அதன்மேல் எட்டிலொரு பாகம் மண்ணைச் சேர்த்துத் தேங்காயிலுள்ள இளநீரை மாற்றிப் பாத்திரத்தி

---

* இங்கு மற்ற நூல்களில் பொறுக்காங்கல்லைப் பொடி செய்து கெடி மண்ணில் நாலிலொரு பாகம் கூட்டிக் கொள்ள வேண்டுமென்றிருக்கிறது.

வாக்தேவீ ஸஹிதாயைதாந்யுக்தா ஸாஸனாதி க்ருதேனதா ।

ஸ்ரீவித்யாமந்த்ரராஜாயைவேதி கூடத்ரயாந்தம் ததோயவ ஸ ॥ கஉ ॥

வஜ்ராதவஜ்ர தாயுர்யாம்ஸா
தேகாது வஜ்ரகுணாயை யொஜயேத் ।
ஸ்தூதுர்யாம்ஸம் ஸ்ருஷ்டி தத்வீது
*ஷயிதாயை-யேதூ-மஃ ॥ கஊ ॥

ஸாஸ்ரீய விவ்ருத்யைவ ஸ்ரிவீ ஸ்ரீஜநீ தயா ।
வஹ்நாம்ஸம் வ-கண-யேஷ்டாது தத்குண-புஷ்ட ஸ்தூர்தா வாஸ ।
ஸ்ருக்ஷ்காவ தாவி-ம்ஸாம்ஸம் யொஜயிக்வா தா ஸ்ரீ-யேத் ।
ஸயாக்ஷீரவ்ருதெதிரவ்ம ஸ்ரீ-யேத்ய வாதஹ்ருயா ॥ கரு ॥

லிட்டு நன்றாகத் துகைக்க வேண்டும். முன்பு கூறியபடி பத்துநாள், எட்டுநாள், ஏழுநாள் இவ்வாறுகப் புளிக்க வைத்து மீண்டும் மீண்டும் இளநீரை விட்டுத் துகைக்க வேண்டும். (14)

திருவட்டம் பிசின், குங்கிலியம், குந்துரிக்கம், ஸர்ஜாரஸம், இவற்றைச் சம அளவு பொடி செய்துச் சேர்த்துக் கொள்ளவேண்டும். மண்ணின் முழு அளவில் பதினாறி லொரு பாகம் இவற்றைக் கலக்கவேண்டும். (15)

பிறகு, சுக்கு, திப்பிலி, மிளகு, மஞ்சள் இவைகளைச் சமபாகம் (டி மண்ணில் 10-ல் ஒரு பங்கு) எடுத்துப் பொடி செய்து, அந்தப் பொடியை அம் மண்ணேடு 24-ல் ஒரு பங்கு கலந்து நன்றாகத் துகைக்கவேண்டும். மீண்டும் அத்துடன், நெய் பால் நெய் இவற்றைக் கலந்து துகைக்க வேண்டும். (15)

---

* இங்கு மற்றை நூல்களில் வேறு விதமாகக் கூறப்படுகின்றது.

கவித்தலிலுநியர்ஸ வலிணைபுள வள வஸதாம்கூரு ।
ரூடிः வஞ்சுஸாம்ஸெ த தலுலிணைர்க விஜபுலெசு ॥ கசு ॥

ஜெதெலுதாவிலுய வம்ஷெபு வாநிகாம்கூவதெள ।
ஹரிதாலுகூவுகுவர்லுராமரூமொரொவதாதி வ ॥ கள ॥
வஜம் வஞ்சுணர்பு ரூஹ்ரீயாம் கிரம்ஸாம்ஸம் யெரஜயெதூதः ।

கதவிகாவுஜவெஜவாயாதுஞ் விஜபுலெசு ॥ கஅ ॥
வுணர்ராஜதவலிணர்ஞ தரீவாமரவம்வவழ ।

கூவீராவாஸவலீகவலுவுலுவஸாவுவழ ॥ கசு ॥
ஸவயுஜலுரொகுஷ்யுஜ்ஜெவடிஞ்ஜா ரூதிகா ரஜः ।

விளாமரம், பில்வமரம் இவற்றின் கோந்துகளைப் பொடிசெய்து டி மண்ணில் 15-ல் ஒரு பங்கு கலக்கவேண்டும். டி கோந்துப் பொடிகள் இரண்டும் சமபாகமாக இருக்கவேண்டும். (16)

அகலத்தைப்போல் மூன்றுமடங்கு லிங்கபீடத்தின் அகலம் இருக்கலாம். அல்லது லிங்கத்தின் சுற்றளவுக்குச் சமமாக லிங்கபீடத்தின் அகலம் இருக்கலாம். கர்ப்பக்ருஹத்தின் அகலத்தை மூன்று கூறுகச் செய்து அதில் ஒரு பாகத்திற்குச் சமமாக லிங்கபீடத்தின் அகலத்தை அமைக்கலாம். கர்ப்பக்ருஹத்தின் அளவையே மான்கு கூறுகச் செய்து அதில் ஒருபாகம் லிங்கபீடத்தின் அகலமாக அமைத்தலும் தகும். லிங்கத்தின் அகலத்தினுடைய கர்ணத்தை ஆதாரமாகக்கொண்டு அதைப்போல் மூன்று மடங்கு அகலமுள்ளதாகவோ அல்லது இரண்டு மடங்கு அகலமுள்ளதாகவோ லிங்கபீடத்தை அமைக்கலாம். சிவலிங்கத்தில் முதலில் பிரம்மாம்சமும், பிறகு விஷ்ணுவின் அம்சமும், அதற்குப் பிறகு சிவாம்சமுமாக மூன்று பாகங்கள். அவற்றில் விஷ்ணவம்சத்திற்குச் சமமாக லிங்கபீடத்தின் உயரம் இருக்கவேண்டுவது மிகவும் முக்கியம். எக்காரணத்தாலும் இவ்விஷயம் தவறாது கவனித்துக்கொள்ளப்படவேண்டும். காண்பதற்கு அழகாகத் தோன்றுவதற்காக லிங்கபீடத்தின் மேல்புறம் உள்ள அகலத்தைப்போல் எட்டில் ஒரு மடங்கு அடிப்புறத்தில் அகலம் அதிகமாக இருக்குமாறு அமைக்கவேண்டும்.

வீரவ்யாஸம் ஸமாவ்ருத்தம் விஷ்ணோர்பாகஸமன்விதம் ।
வாஸோந்யம் நாமராத்ரீணாம் விம்சதிம் வீதிகாவதி ॥

உபாநவாஹ்யவிஸ்தாரம் ஸவெதுஷாஹ்ந வியேகெ ।
கதவ நவதிபாம்ஸஹீநம் வாஹ்யவிஸ்தாரகே ॥

என்னும் காச்யபீய (58...14, 15) சுலோகங்களோத் தழுவியும், இந் நூலில் இதே அத்தியாயத்தில் 15, 16 சுலோகங்களோத் தழுவியும் "ஸ்ரவிஸ்தாராத்ஷாம்ஸகயிகம்" என்னும் பகுதிக்குப் பொருள் தரப்பட்டுள்ளது.

[1]ஹவெபுஷாஶ்மி வீராநாம் ஜந்நாநம் ஶ்ருணுவிஷ்ணுஜீ: ।
வீராஶ்சுபா விஶ்வாஸ: ஸ்யாந்நமாவஸ்திகாஸ்ததா ॥ ஈ ॥

நாமரூபிக்ரியாணாஞ்ச வீமலக்ஷண உச்யுதெ ।
க்ரிவஞ்சவிம்மாயாஶேந கல்பவ்யாஸ விஶோதநம் ॥ ஊ ॥

நாகர, வேஸர, திராவிட பீடங்களின் பொது இலக்கணம்—ஈ-கச.

இந்த சுலோகத்தில் நாகரம், திராவிடம், வேஸரம் என்ற மூன்று வகையான பீடங்களுக்கும் பொதுவான விஷயம் கூறப்படுகின்றது. பீடங்கள் யாவற்றுக்கும் "ஜன்மம்", "உபாகம்" என்று வழங்கப்படும் அடிப்புறத்தின் அளவு மூலவிஸ்தாரம். அதாவது அடிப்பாகத்தின் அகலம். பீடத்தின் நுனியின் அகலம் மஹாபட்டிகை அளவாக இருக்கும்.

பிரம்ம, விஷ்ணு, சிவாம்சமென்று மூன்றாக அமைந்துள்ள லிங்கத்தின் முழு நீளத்துக்குச் சமமான அகலமுள்ள பீடம் உத்தமம். பூஜாம்சத்தைப்போல் இருமடங்கு அகலமுள்ள பீடம் அதமம். இவ்விரண்டுக்கும் இடையிலுள்ள பாகத்தை எட்டு கூறாகச் செய்து மொத்தத்தில் ஒன்பது அகல அளவுகள் லிங்கபீடத்துக்குக் கூறப்பட்டன முன்பு ஐந்தாவது சுலோகத்தில். இது நாகரமென அறியத்தக்கது.

வேஸர லிங்கபீடத்தின் இலக்கணம்.

இதிலும் உத்தம பீடத்தின் அகலம் நாகரத்தில் போலவே (த்ரிகண்ட லிங்கத்தின் உயரத்தினளவு) கண்டு கொள்வது. லிங்கத்தின் உயரத்தை ஒன்பது கூறாகச்

---

(1) இங்கு காச்யபீயத்தில், "நாமரூலெவிச்யுதெ" என்றும், "ஹவம் ஶ்ரவிவிச்யுதெ" என்றும், நாகர, வேஸர, த்ராவிட மென்று முவகைப்பட்ட பீடங்களின் இலக்கணத்தைத் தனித் தனியாக முதலில் கூறிவிட்டு, பிறகு எல்லாவற்றுக்கும் பொதுவான விஷயத்தைக் கூறுமிடத்தில் எல்லாவிதமான பீடங்களுக்கும் பொதுவான விஷயம் கூறப்படுகிறது. இந் நூலிலும் அதே வழியிலேயே பீடலக்ஷணம் விளக்கப்பட்டதாயினும் தனிப்படுத்திக் கூறப்படவில்லை. பின்புவரும் 10 to 13 சுலோகங்களில் தனித்தனியாக கூறப்படுகிறது:.

உத்யாதி வ்ருத்யுபரிதம் நவகம் நாமரே ஸ்ரேஷ்டம் ।
வேஸரோத்தமத்ருதம் கேவலம் நீரே தத்ஸமவஸ்துகம் ॥ ஐக ॥
தயோ ரந்யேத்வஷ்டயா ஹீநா வீம்யாஸா நவஸ்ரேதாஃ ।
கூடாம்ஸ ஸ்தூலவிஷ்வம்ஸ கீர்த்யேகாம்ஸ உபஸ்ரேஜெத ॥
ஸுஷிராநந்த நீவாதி வீம்ஸ்ரம் ஸ்ரீவிஸ்ரேஷ்டம் ।
கூட வேஸரஸ்ரிம்ஸ்ரு ஸ்ருஷ்டாம்ஸ வர்ணாஸுகெ ॥ ஐக ॥

செய்து அதில் ஏழுபாகம் அளவு அகலமுள்ள பீடம் வேஸரத்தில் அதம்மாகக் கொள்ளப்படும். இவ்விரண்டு அளவுகளின் இடையிலுள்ள பகுதியை எட்டு கூறுகச் செய்து ஒவ்வொரு பாகத்தையும் லிங்கபீடத்தின் அகலத்திற்கான அளவாக வைத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறுகமொத்தத்தில் லிங்கபீடத்தின் அகலத்திற்கான அளவு ஒன்பது வகையாகின்றது. இத்தமுறை வேஸர லிங்கபீடங்களுக்கேற்றதாகக் கொள்ளப்படும். முன்கூறிய வகையில் கணக்கிட்டு இதையும் ஊகித்தறிக.

த்ராவிட லிங்கபீடத்தின் இலக்கணம்

லிங்கத்தின் ப்ரம்மாம்சம், விஷ்ணவாம்சம் இவ்விரண்டு பாகத்தையும் சேர்த்து எட்டுகூறுகப் பண்ணி, அடிப்புறத்தில் மூன்று பாகத்தைவிட்டு எஞ்சிய ஐந்து பாகத்தை லிங்கபீடத்தின் உயரமாகக் கொள்ளவேண்டும். இது அதமம். அவ்வாறே செம்பு அடிப்புறத்தில் இரண்டு பாகத்தைவிட்டு மீதியுள்ள பகுதியை லிங்கபீடத்தின் உயரமாகக் கொண்டால் இது மத்யமமான அளவாகும். அதிலேயே ஒரு பாகத்தைக் கீழ்ப்புறத்தில் ஒதுக்கி பாக்கியுள்ளதை லிங்கபீடத்தின் உயரத்தினளவாகக் கொள்வதும் உண்டு இது உத்தமம். இவ்வாறுகக் கணக்கிட்டு ஊகித்தறிக.

வேஸரலிங்க பீடத்தின் இலக்கணம்.

வேஸர லிங்கத்தின் சுற்றளவைப் பதினாறு கூறுகச் செய்யவேணும். அவ்வளவு அகலமே அதன் பீடத்திலும் அமைக்கவேண்டும். இது உத்தமபக்ஷம். வேஸரலிங்கத்தின் சுற்றளவைப் பதினாறு கூறுகச் செய்ததில் பன்னிரண்டு பாகம் அதன் பீடத்தின் அகலம் அமைப்பது அதம

ஊர்த்வம் ஹி தத்ஸ்யம் வ்யாஸம்
:கர்ணைஸ் ஸ்யாத் வர்த்ய ।
விஷ்கம்பேன த்ரயம்சகவ்யா-
ஹ்ருத்யாம்ஸாயிகம் தத் வா ॥ ஐ ॥

பகுதம். இவ்விரண்டின் இடையிலுள்ள பகுதியை எட்டு கூறுக்கி மற்றும் ஏழு அளவுகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதெங்ஙனே என்னில் :

(1)	லிங்கத்தின் சுற்றளவு	16 அங்.	பீடத்தின் அகலம்	16 அங்.
(2)	,,	16 அங்;	,,	15½ அங்.
(3)	,,	16 அங்;	,,	15 அங்.
(4)	,,	16 அங்;	,,	14½ அங்.
(5)	,,	16 அங்;	,,	14 அங்.
(6)	,,	16 அங்;	,,	13½ அங்.
(7)	,,	16 அங்;	,,	13 அங்.
(8)	,,	16 அங்;	,,	12½ அங்.
(9)	,,	16 அங்;	,,	12 அங்.

இதுபோல் ஊகித்தறிந்துகொள்ளவேண்டும்.

அந்த லிங்கபீடத்தின் உயரம் விஷ்ணுபாகத்தின் அளவாக இருக்கும். அதாவது லிங்கத்தின் உருவத்தில் பிரம்ம, விஷ்ணு, சிவாம்சம் என மூன்று பாகங்கள் உண்டல்லவா ? அவற்றில் விஷ்ணுபாகம் எவ்வளவு உயரமோ

---

(1) "ஊர்த்வாக்ஷாஜமதீ" என்பது வேதவாக்கியம். அதன்படி ஐகத்யம்சம் என்பதற்குப் பனிரண்டு அம்சம் என்று பொருள் கரப்பட்டுள்ளது. இங்கு "கர்ணாஸ்" என்பது பொருத்தமுள்ளதாகத் தோற்றவில்லை. அதனால் "கர்ணாயஸ்" என்று பாடமிருப்பதாக மனதில்கொண்டு, 'இது அதமபக்ஷம்' என்று மொழி பெயர்ப்பு எழுதப்பெற்றுளது. காச்யபீயத்தில் 58வது படலத்தில்,

"வஜ்ராம்ஸஸ் வரீணாஹவஸம் ஸ்ருஷ்டம் விஸ்வகர்மணா ।
வரீணாஹெ கலாம்ஸெ தூ ஹாகம்ஸ யேதம்ஸ்வி கி ।
கயொர்ஹ்யெர்வஷ்டஹாமெதூ நவயா வீம்விஷ்ணுதஸ் ।"

என்று பாடமிருப்பதை ஆதாரமாகக்கொண்டு இவ்வாறு உரை எழுதப்பெற்றது.

(2) "தஸ்யுதூ" என்றும் பாடம் உண்டு.

வலெபுஷாஷெ லிம்மொஹ்ம் வீம்மொஹ்டவ்மெஷ்கிழ் ।
வீம்ஷ்முலஹ்ர் விஷ்ணா ஷலஹ்ம்நஹ்டிம்ஹ்மெகெஃ ॥ யிரு ॥
ஹீம்நஃ வீம்ஹ்ரு விஷ்ணாமொ ஹீம்நெ ஷயெ்ரு கயொ்நஹ்டெ ।
நாஹ்ரஹ்டிக்யம் வீம்ம் க்ரு்ஷெண ஹ்ஹாஹ்ரஹ்டிக்கிழ் ॥ யிசு ॥
ஷகஹ்ரஹ்ரும்ஷ வலஹ்ரும் வ்ருக்தமெஹ்க க்ரியா ஷிகிழ் ।
வீம்ம் நிஷ்ணஹ்டிம்ஹ்நாம் விஜ்ஞேயம் லலபுகிஹ்ஸிழ் ॥ யிஎ ॥
சூயகம் வ்ருகிரோநாம் ஸ்யாஸ் லகமெவாயபுஹ்ரு்கிழ் ।

அவ்வளவு வரை லிங்கபீடம் உயர்ந்திருக்கவேண்டுமென்ற வாறு. எல்லா லிங்கங்களிலும் பீடத்தின் உயரம்போக மீதியுள்ளது லிங்கத்தின் உயரமாகும்.

யிரு–யிசு

பீடத்தின் அடிப்புறத்திலுள்ளதைக்காட்டிலும் அதன் மேல்புறத்தின் அகலம் 8, 9 அல்லது 10-ல் ஒரு அம்சங்கள் குறைவாக இருக்கவேண்டும். இம் மூன்றும் முறையே அதம, மத்யம, உத்தமபக்ஷங்களாம்.

நாகரம், வேஸரம், த்ராவிடம் என வழங்கப்படும் மூன்று வகையான பீடங்களும் முறையே விளக்கப்படுகின்றன. இம்மூன்றில் முதலாவது சதுரமாக இருக்கும். இரண்டாவது எட்டு கோணமுள்ளதாயிருக்கும். மூன்றாவது வட்டவடிவமாயிருக்கும்.

யிஎ

லிங்கங்கள், நிஷ்களம் என்றும் ஸகளம் என்றும் இரு வகைப்படும். அவற்றுள் நிஷ்களமான லிங்கங்களுக்கு அமைக்கப்படும் பீடம் எல்லா பக்கங்களிலும் ஸமானமாக இருக்கவேண்டும். பிரதிமைகளுக்கு அமைக்கப்படும் பீடம் கீண்டதாக இருக்கும். ஸகலமான லிங்கங்களுக்கு அமைக்கப்படும் பீடம் அரைச்சந்திர வடிவமுள்ளதாக இருக்கும்.

இனி பன்னிரண்டு வகையான லிங்கபீடங்கள், தனித்தனியான அளவும் அமைப்பும் உள்ளவை விளக்கப்படுகின்றன. அவற்றுள் முதலில் கூறப்படுவது:—

(க) மேருஸுந்தர பீடம்—கஅ-உய

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினொன்று பாகமாகச் செய்து (மனதில்) வைத்துக்கொள்ளவேண்டும்.

ஸ்ரீகாமாக்ஷி வீணாவித்யாதரஸ்வாந்தஸ்வரூபிகா ॥
வஜ்ரேஷ்வரீ யுக்தயாம்ஸ ஸ்வயம்நாவம்கதோ ஹரேஸ ।
ஸ்ரீத்ரயாம்ஸம் வாநுவர்த்ய ஸ்வயம் ஸ்வயம்நகம்வகர்த்ரீ ॥ கரு ॥

வாயுத்ரயாஸ்ரந கரணொத்ய-
ஸ்வயம்நோ யுக்தாம்பாஜம் ஸ்ரயகர்த்ரீ ।
ஸ்வயம்நகம்வொ த்ரயாஸ்ரஸ்வாஸ
கரஸ்வரூபிணவொயுபவிகா ॥ உய ॥

அதில் ஒரு பாகத்தில் மூலபட்டிகையை அமைக்கவேண்டும். பீடத்தின் அடிப்புறத்திலுள்ள பட்டிகையே மூல பட்டிகை எனப்படும். ஜன்மம், உபானம் எனப்படுவதும் இதுவே. இதன்மேல் தாமரைமலர் மூன்று பாகங்கள். அரை பாகம் கும்பம். பிறகு அரை பாகத்தில் க்ஷுத்ர பத்மம் (சிறு தாமரை மலர்). பிறகு இரண்டு பாகங்கள் வட்டவடிவமான நிலையில் அமைக்கவேண்டும். மீண்டும் அரைப் பாகத்தில் க்ஷுத்ரபத்மமும், மேல் அரைப்பாகத்தில் கும்பமும் அமைக்கவேண்டும். அதன்மேல் இரண்டரை பாகத்தினால் கண்டம் (கழுத்துபோல் பீடத்தில் உள்ளடங்கிய பகுதி "கண்டம் – கணம்" எனப்படும்). பிறகு அரைப்பாகத்தினால் மேல்நோக்கியவாறாக க்ஷுத்ர பத்மம் ஒன்று அமைக்க வேண்டும். அதன்மேல் அரைப்பாகத்தில் கும்பம். பிறகு இரண்டு பாகத்தில் ஊர்த்வ பட்டிகையை அமைக்க வேண்டும். அதன்மேல் கும்பவடிவமான ஆஜ்யதாரிணியை அரைப் பாகத்தில் அமைக்கவேண்டும். இவ்வாறாக அமைக்கப்படும் பீடத்திற்கு "மேரு ஸ்தரம்" என்று பெயர்.

பீடத்தின் மொத்த உயரம் பதினைந்து பாகம் :—

(1) மூல பட்டிகை	1	(8) கண்டம்	2½
(2) தாமரை மலர்	3	(9) மேல்நோக்கிய தாமரைமலர்	½
(3) கும்பம்	½	(10) கும்பம்	½
(4) க்ஷுத்ரபத்மம்	½	(11) ஊர்த்வபட்டிகை	2
(5) வட்டம்	2	(12) கும்பாஜ்ய தாரிணீ	½
(6) க்ஷுத்ரபத்மம்	½	ஆக அம்சம்	14
(7) கும்பம்	½		

இவ்வாறாக அமைக்கப்படுவது 'மேரு ஸ்தர பீடம்' எனப்படும்.

கம்பாஜ்யாநிஷ்யையுக்த வ்யாதேவம் தேஷ்வஷ்டஸு ।
கஷ்டாதிஷ்டாம்ஸ வீரொத்ய ஜநஷ்யம்ஸ ஜிஹ்மாதிகஃ ॥ உக ॥

யதஷ்டிபு ஜுமதீம் கூயாதாஸ கூர்ஷ்டம் க்ரீஷி ரெகதஃ ।
கம்பம், கம்ஃஸ்யெகெந வ்ருத்தாஸா டவ்ஜ்ஜேதகஃ ॥ உட ॥

ப்ரதிம் யதஷ்டிபு வ்ருத்யெந வடி ஃயெபுந கம்பகஃ ।
க்ரீஷிஃ கணம் தயாம்ஸ்யெந வாஜிநம் கூய ஹாமதஃ ॥ உக ॥

லக்ஷ்மீஸ்தந்த்ரபீடம்—உக-உச.

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினெட்டு பாகங்களாகப் பிரித்துக் (மனதில்) கொள்ளவேண்டும். அந்த அடிப்படையில் விவரிக்கப்படுகின்றது:—

அடியில் இரண்டு பாகம் ஜன்மம் (உபாகம்). பிறகு நான்கு பாகங்களில் [1]ஜகதீ. அதன்மேல் மூன்று அம்சங்களால் [2]குமுதம் அமைக்கவேண்டும். பிறகு ஒரு பாகத்தில் கம்பம் அமைக்கவேண்டும். அதன்மேல் ஒரு அம்சத்தில் கண்டம் (சற்று உள்ளடங்கிய பாகம்) அமைக்கவேண்டும். "ஸ்ரக்பாசாதப்ஜ மந்தத:" என்னும் பகுதிக்குப் பொருள் நன்கு விளங்கவில்லை. "அந்தத:" என்பது "அம்சத:" என்றிருக்கக்கூடுமோ என்ற ஐயமும் தோன்றுகிறது: "மாலாபோன்ற பாசத்தினால் க்ஷுத்ரபத்மம் ஒரு அம்சத்தில் அமைக்கவேண்டும்" என்று ஒருவகையாகப் பொருள் கொள்ளக்கூடும். அதன்மேல் நான்கு அம்சங்களால் வட்ட வடிவமான குமுதகம் அமைக்கவேண்டும். பிறகு ஒரு அம்சத்தில் மற்றொரு க்ஷுத்ரபத்மம் அமைக்கவேண்டும். பிறகு அரை பாகத்தில் கம்பம் அமைக்கவேண்டும். பிறகு மூன்று அம்சங்களில் 'கண்டம்' அமைத்து, ஒரு பாகத்தால் கம்பம் அமைக்கவேண்டும். அதன்மேல் இரண்டு பாகங்

---

(1) பீடத்தில் மூலபட்டிகையின்மேல் சிறிது உயரம் வரை சுவர் போல் சமமாக அமைக்கப்படும் பாகம் "ஜகதீ" எனப்படும்.

(2) அதன் மேல்புறத்தில் விளிம்புபோல் உருண்டையாக வெளியில் வளர்ந்துவந்திருக்கும் பாகம் குமுதம் எனப்படும். இது வட்டமாகவும், மூன்று பட்டையாகவும், பல சித்திர வேலைப் பாடுகளுடனும் பலவகையாக இருக்கும்.

கி (ரூவம் ? ரூாஜா) வாரிகாம ஷ்யாமா-
நயாரஸ வராஜ்யப்ரஹ்வெஸ ।
லக்ஷ்மீஸுரஸம்ஜ்ஞம் ந-
வீம் லேவம் ப்ரவியுகி ॥ உச ॥

களால் ரீவ்ரபட்டிகையை அமைத்து, பிறகு அரைப்பாகத் தால் சூத்ரபத்மம் அமைத்து அதையே "க்ருதவாரி" யாக அமைக்கவேண்டும். இவ்வாறுக அமைக்கப்படுவது "லக்ஷ்மீஸுத்ரபீடம்" என்னும் பெயருடன் வழங்கப்படும்.

பீடத்தின் மொத்த உயரம் 18 பாகம் :—

(1)	ஜண்மம் (உபாகம்)	2 பாகம்
(2)	ஜகதீ	4 ,,
(3)	குமுதம்	3 ,,
(4)	கம்பம்	1 ,,
(5)	கண்டம்	1 ,,
(6)	ஸ்ரக்பாசாப்ஜம்	1 ,,
(7)	வட்டம்	4 ,,
(8)	சூத்ரபத்மம்	1 ,,
(9)	கம்பம்	½ ,,
(10)	கண்டம்	3 ,,
(11)	கம்பம்	1 ,,
(12)	வாஜனம் (கம்பம்)	1 ,,
(13)	ரீவ்ர பட்டிகை	2 ,,
(14)	பத்மாஜ்ய த்ருக்	½ ,,
	ஆக	25 பாகம்

குறிப்பு :— இந்த லக்ஷ்மீஸுத்ர பீடத்தில், பீடத்தின் மொத்த உயரத்தை 18 பாகமாக்கி மேல் விவரங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் சில்லரையாகக் கூறப்பட்டுள்ள உறுப்புக்களின் பாகங்களைக் கூட்டினால் 25 பாகம் வருகின்றது. அதனால், மூலத்தில் "ஜகதீமாரம்ஸ வீதொவெ" என்பதை "ஜகதீ க்ருதாம்ஸ வீதொவெ" என்று திருத்தினால் கருத்து சரியாகி விடும். காச்யபீயம் போன்ற மற்ற நூல்களிலும் இந்த லக்ஷ்மீ ஸுத்ர பீடத்தைப்பற்றிய விவரம் கிடைக்கவில்லை. அதனால் உள்ளதை உள்ளபடியே அச்சிட்டனம். இதைக் கண்ணுறும் அன்பர்கள் ஆராய்ந்து உண்மையை அறிவிக்கவேண்டும்.

வீரொஹ்ஹ ஷொடஶாம்ஶொத்ய வாஸ்துஹ்ருதயாஜ்ஞிகீ: ।
கரொஹ்ணைகெந ஜமதீ ஸ்வம் வெத்ஸ்ய வதூஜ்ஞி ॥ உ ॥
வஸிகா ராஜ்யாராம்ய விஷ்ணுஸம்மீலநாஹ்வயெ ।
ஹஷ்டஶாம்ஶொ வீரொஹ்ஹ ஸவெஶ வாயூம்ஶகீர்வாஸ்து ॥
வாயுகுயெண ஜமதீ வாயெநாஷ்டம் யுமயுகீ: ।
வட்டம் வாயெநொவவட்டம் கணம் குர்யம்ஶ கதிவ்யுகீ: ॥

(ஈ) விஷ்ணுஸம்மீலனபீடம்—உடு-உசு.

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினாறு பாகமாக்கிக் கொள்ளவேண்டும். அதனுள்:—

(1)	ஜகதி	2	பாகம்
(2)	தாமரைமலர்	5	,,
(3)	கும்பம்	2	,,
(4)	தாமரைமலர்	4	,,
(5)	பட்டிகை	2	,,
(6)	க்ருதவாரி	1	,,
		ஆக 16	பாகம்

என்று இவ்வாறு உறுப்புக்களை அமைக்கவேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் லிங்கபீடம் "விஷ்ணுஸம்மீலன பீடம்" எனப்படும். இந்தப் பீடத்தில், மற்றவைகளில்போல் தொடக்கத்தில் உபானத் அல்லது ஜன்மம் எனப்படும் பகுதி இருக்காது. அந்த ஸ்தானத்தில்தான் முதன் முதலிலேயே "ஜகதி" என்னும் உறுப்பு 2 அம்சங்களில் அமைக்கப்படுகின்றது.

(ச) பத்மபத்ரபீடம்—உசு-உகூ.

இதில் பீடம் இருக்கவேண்டிய மொத்த உயரத்தைப் பதினெட்டு பாகமாகச் செய்துகொண்டு அதன்மேல் அதன் உறுப்புக்களை அமைக்கவேண்டும்:—

உவவடிம் கொகுவயும் வடி 8யெழுந வொவரி ।
கூயுஂஸ்ரம் வாஜநக8ஷிஷ்ட 8யும் வடுராஜ்யப்ரஹவெஷ ॥ உஅ ॥

வஷ்ரஹஸ்ர ஶிஂவீம் விஜெய 8கிஸொஹநிழ் ।
யுத்தயுஂஸ்ரெ வீஂதஂஸ்ரெதஂ வ்யுகவா யுயுகஃஷ்யுதா ॥

---

(1)	ஐன்மம்	1½ பாகம்
(2)	ஐகதீ	3½ ,,
(3)	தாமரைமலர்	1½ ,,
(4)	கம்பம்	½ ,,
(5)	ப்பட்டம்	½ ,,
(6)	உபபட்டம்	½ ,,
(7)	கண்டம்	3 ,,
(8)	உபபட்டம்	½ ,,
(9)	பட்டம்	½ ,,
(10)	வாஜனம்	2 ,,
(11)	பட்டாஜ்யத்ருக்	½ ,,
		ஆக 14½ பாகம்

இவ்வாறுக அமைக்கப்படும் பீடம் "பத்மபத்ர பீடம்" எனப் படும்.

குறிப்பு :—இந்த பத்மபத்ர பீடத்திலும் ஒரு தவறு உளது. இதன் மொத்த உயரத்தைப் பதினெட்டு பாகமாகச் செய்து விவரம் கூறத்தொடங்கியவர் பதினைரை பாகங்களுக்கே விவரம் தருகிறார். மற்ற மூன்றரை பாகங்களுக்கான உறுப்புக்களோ அல்லது அவற்றின் அம்சத்தின் விளக்கமோ தரப்படவில்லை. "குமுதம்" என்னும் உறுப்பு இந்த பீடத்தில் கூறப்படவில்லை. அதையும் அதன் இருபுறங்களிலும் அமைக்கப்படவேண்டிய கம்பங்கள் அல்லது பத்மங்கள் ஆகியவற்றின் அளவுகளையும் கூட்டினால் விடப்பட்ட மூன்று பாகங்கள் சரியாகலாம். அச்சிட்ட மூல புஸ்தகத்தில் அவ்வாறான கருத்துள்ள சுலோகம் காணப்படவில்லை. அறிவாளிகள் இதை ஆராய்ந்தறிய வேண்டும்.

ஸுதர்சனம் ஸஹஸ்ராரம் ஜ்வாலாஹ்யாம் ஜ்வாலாஹ்யாம் வாஜிதம் ஜ்வலத்।
வஜ்ரவஜ்ராவயுதாஹ்யாம் கணோம்ஸ்வாஹ வஷட்யுக்தம் ॥
உபவஜ்ராயுதாஷ்டாஸ்ரம் கம்ஜ்வாஹ்யாம் ஜ்வாலாஸ்ரம்யுக்தம் ।
வஹ்னிம்ஸ்வாஹ ஜ்வாலிதாக்ஷம் ஸுதர்சனம்ஸ்வாஹ வஷ்ரம்ஜ்வலத் ॥

(டு) ஸாமாங்கபத்ரபீடம்—உகூ-ஙக.

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினெட்டு பாகமாக மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அதனுள்:- (இதில் உறுப்புக்களின் கணக்கு மேலிருந்து கீழ்நோக்கித் தரப்படுகின்றது.)

(1)	க்ருதவாரி	½ பாகம்
(2)	கும்பம்	1 ,,
(3)	வாஜனம்	2½ ,,
(4)	பட்டம்	½ ,,
(5)	உபபட்டம்	½ ,,
(6)	கண்டம்	2 ,,
(7)	பட்டம்	½ ,,
(8)	உபபட்டம்	½ ,,
(9)	எட்டுபட்டையுள்ள கும்பம்	4 ,,
(10)	ஜகதீ	5 ,,
(11)	உபானம்	1½ ,,
	ஆக	18 பாகங்கள்.

இது அழகிய "ஸாமாங்கபத்ரபீட"மென வழங்கப்படும்.

இந்த ஸாமாங்கபத்ர பீடத்தில் 31-வது சுலோகத்தில் "உபவஜ்ராயுதாஷ்டாஸ்ரம்" என்று மூலம் உள்ளது. "உபபட்டம் மேலிருக்கவேண்டும்" என்பது அதன் பொருள். உறுப்புக்களின் உயரத்தின் அளவைக் கூறுமிடத்தில் இச் சொல் பொருந்தவில்லை. அதனால் "உபபட்டோர்த்த மஷ்டாச்ர:" என்று பாடம் இருப்பதாக வைத்துக்கொண்டு "அர்த்தம்" என்பதற்குப் "பாதி" என்னும் பொருள் உள்ளமையின் "உபபட்டம் அரைபாகம்" என்று பொருள் தரப்பட்டது.

வாகசு வாசாம்ஹரூவும் வீம் வவகி மொவாகழு ।
கதுஷ்யும்மொகூ வீமொவ்வெ வுரூம்வாமெந வவுகழு ॥

வதுஹிழுஷ்ஷ உலம் வாயழு உயழுங்கும்வொ யுஷ்மம்மகஃ ।
கும்வொzயழுஷியெழு நாம்மொஜம் வுதுகம் (வாவகிழு ?
வாவயழு)தொ உலழு ॥ கூ ॥

வடுஷியெழுந கண்ணாம்ஸு கும்வொzயெழுநாயழும்வொஜழு ।
கூம்ஸம் வாஜந ஷியெழுந வலம் கொவன யெழுகஃ ॥ கூ ॥

(சு) ருத்ரகாந்தபீடம்—கூ-கூ

இந்த பீடத்தில் அதன் மொத்த உயரத்தைப் பதினேழு பாகமாகச் செய்து உறுப்புக்களின் விவரம் தரப்படுகிறது. அதனுள் :—

(1)	உபாகம்	1 பாகம்
(2)	வப்ரம் (ஜகதி)	4 ,,
(3)	பத்மம்	1½ ,,
(4)	கம்பம்	½ ,,
(5)	த்ருக்	1 ,,
(6)	கம்பம்	½ ,,
(7)	கூடத்ரபத்மம்	½ ,,
(8)	வட்டம்	2 ,,
(9)	கூடத்ரபத்மம்	½ ,,
(10)	பட்டம்	½ ,,
(11)	கண்டம்	1 ,,
(12)	கம்பம்	½ ,,
(13)	கூடத்ரபத்மம்	½ ,,
(14)	வாஜனம்	2 ,,
(15)	கூடத்ரபத்மம்	½ ,,
(16)	கோபாணம் (கம்பம்)	½ ,,
	ஆக	17 பாகங்கள்

இவ்வாறாக அமைக்கப்படுவது மிகவும் அழகான "ருத்ர காந்த பீடம்" என்று வழங்கப்படும்.

வாகனி ராடூகாஹாவும் வீரர்க்கும் வாழ்வாகவும் ।
காதியபாதங்களிலே வீடும் ஈசன் மகிமைகளை ॥ கூ ॥

வடிவும் உமாவும் வெள்ளை யடிமையும் வெற்றிமுகமும் ।
குடியும் மனம் வாயுமிவை வடதிசையடியோ மலைகள் ॥ கூ ॥

கையெடுநாவுடியும் கூடாள்
வெற்றிமங்கை யடிமையுமே ।
கைமலரெற்றும் வாயுமாமலை
மிசிரலையும் வாழ்வு மலைகள் ॥ கூ ॥

குடியும் வடதிசையிலே லொடுகாலு நீங்கிடுமே ।
வீடொடு ஷொபனாமலை வாழ்வாயும் நிலவடிகள் ॥

(எ) ஸோமகாந்தபீடம்—கூ-கூ

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பத்தொன்பது பாகமாக வைத்து உறுப்புக்களுக்கு விவரம் தரப்படுகின்றது. அதில் :—

(1)	பூகதம் (உபாதம்)	1 பாகம்
(2)	வப்ரகம் (ஜகதீ)	2 ,,
(3)	பெரிய தாமரைமலர் (மஹாபத்மம்)	4 ,,
(4)	திருக்	½ ,,
(5)	கும்பம்	1 ,,
(6)	கண்டம்	½ ,,
(7)	க்ஷுத்ரபத்மம்	½ ,,
(8)	வட்டம்	1½ ,,
(9)	மேல்நோக்கிய க்ஷுத்ரபத்மம்	½ ,,
(10)	கும்பம் (வேதிரம்)	1 ,,
(11)	திருக்	½ ,,
(12)	வேதிரம்	1 ,,
(13)	மேல்நோக்கிய மஹாபத்மம்	3½ ,,
(14)	கிருதவாரி	1½ ,,
	ஆக	19 பாகங்கள்

இவ்வாறாக அமைக்கப்படும் பீடத்திற்கு "ஸோமகாந்த பீடம்" என்று பெயர்.

ஶ்ரீமாவடிஞ்ஞ வெஞாஸ்ரெ யூஜுமெஜு நாஸுகொஸ்ஸுழி ।
கூயெஜுநவரூம் வுஜுஞ்ஞ (ஸாஜெநாயெஜுந வஜுஜி ॥ சூ ॥
யூஜுயஜு ஶ்ரீயுஜுவஜுஞ்ஞ) வஜுஞ்ஞஜி ரஸு வஜிகா ।
வுஸ்ரெந வுஜுஹுஸுவெஜுகு ஜெஜீஞ்ஞவுஜுஜுஹுஜுகுழி ॥ சை ॥
வீஜொவெ ஷொஜுஸாஸ்ரொஸுழ்ஸ்ரி-
ஸுஸாயெஜு கூயஜுஸாஜுஸுரே: ।
நெகெஜுஞ்ஞ ஜுஜுஹுகுவெ ஜுயூஜெஜுஞ்ஞ
யூகூஜ வஜுஜி ॥ சக ॥

(அ) ஸர்வாங்கபத்ரபீடம்—சுஅ-சை

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினாறு பாகமாகப் பிரித்து உறுப்புக்களின் உயரத்தின் அளவு கூறப்படுகிறது. அவற்றுள்:—

(1)	மூல பட்டிகை (உபாநம்)	2 பாகம்
(2)	மஹாபத்மம் (பெரிய தாமரைமலர்)	4 ,,
(3)	க்ருக்	½ ,,
(4)	கண்டம்	1 ,,
(5)	கூஷ்மாண்ட்ரபத்மம்	½ ,,
(6)	வட்டம்	1 ,,
(7)	கூஷ்மாண்ட்ரபத்மம்	½ ,,
(8)	க்ருக்	½ ,,
(9)	மேல்கோக்கிய மஹாபத்மம்	4 ,,
(10)	பட்டிகை வடிவமான க்ருதவாரி	2 ,,
	ஆக	16 பாகங்கள்.

இவ்வாறாக அமைக்கப்படும் பீடம் "ஸர்வாங்க பத்ரபீடம்" என வழங்கப்படும்.

(கூ) ஸ்ரீகர பீடம்—சக-சஉ

இதில் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினாறு கூறு செய்து வைத்துக்கொள்ளவேண்டும். அவற்றுள் :—

(1)	ஜகதீ	2 பாகம்
(2)	மஹாபத்மம்	5 ,,
(3)	க்ருக்	½ ,,
(4)	வேதிரம்	1 ,,

வபுகா ஜாஜுஹுவெ கி ஸ்ரீகரே வ்யாதுயாகுழு।
வாகஷ்டிஹெவ வாய-ூாம்ஸா ஜுஹுயெூந கும்வகுழு ॥ சஉ ॥

(வபுகாயஃ வ்ருவெதாம்ஸாஸ் வகும்வா வாஷ்டிவபுநெ।
வீரொதியெ ஷொவஸாம்ஸெ வாஸம்சுயுஸ் ஷுயாயுகஃ ॥

கெவணம் வாயுவெதாம்ஸெஸ்) வஷ்டியெூந கும்வகுழு।
யூஸயும் வஜ்ரிகெம்வ்யா ஏவுூாஜ்ஜம் வெதாஸுகஃ ॥ சச

---

(5)	திருக்	½	,,
(6)	மஹாபத்மம்	4	,,
(7)	பட்டிகை	2	,,
(8)	ஆஜ்யப்ருத் (க்ருதவாரி)	1	,,
	ஆக	16	பாகங்கள்

இவ்வாறாக அமைக்கப்படும் பீடம் "ஸ்ரீகரபீடம்" என்று வழங்கப்படும்.

(ii) புஷ்டிவர்த்தன பீடம்—சஉ-சஈ.

இந்த ஸ்ரீகர பீடத்திலேயே சிறு மாறுதல் செய்வதன் மூலம் புஷ்டிவர்த்தனம் என்னும் பீடம் அமைக்கலாம். முதலில் அமைக்கப்படும் ஐகதீ இரண்டு பாகமில்லாமல் ஒன்றரை பாகத்தில் அமைக்கவேண்டும். அரை பாகத்தில் கம்பம் அமைக்கவேண்டும். பிறகு நான்கு பாகங்களால் கீழ்பட்டிகையும், கம்பமும் அமைக்கவேண்டும். இதுவே புஷ்டிவர்த்தன பீடமெனப்படும்.

(iii) ஸௌம்ய பீடம்—சஈ-சடு.

இதிலும் பீடத்தின் மொத்த உயரத்தைப் பதினாறு பாகமாகச் செய்துகொள்ளவேண்டும். அதில் :

குறிப்பு :— சுலோகம் 42 உத்தரார்த்தத்தில் "வாகஷ்டிஹெவ" என்பதை "வாகவிஹெவ" என்பதாகக்கொண்டு "இந்த ஸ்ரீகர பீடத்திலேயே" என்று மொழிபெயர்ப்பு தரப்பட்டுள்ளது. மூலம் மட்டும் உள்ளபடியே அச்சிடப்பட்டுள்ளது. மூலத்தில் உள்ளபடியே பொருத்தமாகப் பொருள்கொள்ளக் கூடுமாயின் அதையும் அறிஞர்கள் கவனிக்கவேண்டும்.

ஈ (யஃ? யஃம்) கேஷவண ஃமஸ்ஸள தெள
வஷிகாயைநர ஸாஜ்யஸ்ஸுகே ।
ஸாஃரோந்யம் நாஹஸாஃநாம்
ஹௌஃம் வீர ஃபிஃம் ஸ்ஸுகு ॥ சு ॥
ஸவம் ஆஃமஸஹெஃந வீராநாம் ஆகூ வணிஃகு ।

---

(1)	சூரம் (உபாகம்)	2 பாகம்
(2)	கேஷபணம்	½ ,,
(3)	மஹாபத்மம்	4½ ,,
(4)	கம்பகம்	½ ,,
(5)	த்ருக்	½ ,,
(6)	வஜ்ரம்	1 ,,
(7)	மேல்நோக்கிய மஹாபத்மம்	4 ,,
(8)	கேஷபணம்	½ ,,
(9)	பட்டிகை	2 ,,
(10)	ஆஜ்யத்ருக் (க்ருதவாரி)	½ ,,
	ஆக	16 பாகங்கள்.

இவ்வாறாக அமைக்கப்படும் பீடம் "ஸௌம்யபீடம்" என்று வழங்கப்படும். இந்த ஸௌம்யபீடம், நாகரம், த்ராவிடம், வேஸரம் முதலியவற்றுக்கெல்லாம் பொதுவானதாகும். இவ்வாறு பன்னிரண்டு வகையான பீடங்களின் இலக்கணம் வருணிக்கப்பட்டது.

குறிப்பு :— பதினொரு விதம்தான் கூறப்பட்டுள்ளது. ஆனால் பன்னிரண்டு வகைகள் கூறப்பட்டதாக முடிவில் சொல்லுகிறார். இவ்வத்தியாயம் தொடக்கத்தில் கூறப்பட்ட பத்ம பீடத்தையும் சேர்த்துக்கொண்டு பன்னிரண்டாகக் கொள்ளக் கூடும். அல்லது ஒரு பீடத்தின் இலக்கணத்தை விளக்கும் சுலோகங்கள் சில இவ்விடத்தில் காணுமற் போயிருக்கலும் கூடும். அல்லது அடுத்தாற்போல் கூறப்படும் ஸாமான்ய பீடத்தையும் சேர்த்துப் பன்னிரண்டாக்கலாம். அறிஞர்கள் ஆராய்ந்துணர்க.

அய வாஸ்து வீழி :—

ஆயுஷாம்ஸ ஶிவவீம்கே கபிகீஶராஜ்ஞீஸ்ஸம்ஸகேஃ வாடஃகம்
ப்ராடயாஜமதீம் தயா கஃஷிகம் கதபிகாம் வகஃரோஸி।
கம்ஸாஹ்யாம் மஸ ஶிம்ஸகேத மலவழிம் ஜாமகேzஷ்யம்ஸிகி
ஸ்ரீவாஜேzயுர்யுதயெத வஜஷிம் ஶிவெதவழிம்வஷா ॥

ஸாமான்ய பீடம்

சிவபீடத்தின் உயரத்தைப் பதினாறு பாகமாகச் செய்து கொள்ளவேண்டும். அதில் 1 பாகம் பாதகம், 5 பாகங்கள் ஜகதீ, 4 பாகங்கள் குமுதம், 1 பாகம் பட்டிகை, 2 பாகங்கள் கண்டம், 1 பாகம் அதனுடைய பட்டிகை, 4 பாகங்கள் ஜகதீ (கண்டத்தின்மேல்), 2½ பாகங்கள் வலபி, எஞ்சிய பாகத்தால் பட்டிகை. சிவபீடங்கள் எப்பொழுதும் இவ்வாறே அமைக்கவேண்டும்.

குறிப்பு :- சிவபீடத்தின் உயரத்தின் அளவைப் பதினாறு கூறாகச் செய்யுமாறு இந்த சுலோகத்தின் தொடக்கத்தில் கூறினார். பிறகு அதற்கு விவரம் கூறுமிடத்தில் 21 பாகங்களுக்குச் செல்லுகின்றது. அதாவது :

(1)	பாதகம்	1 பாகம்
(2)	ஜகதீ	5 ,,
(3)	குமுதம்	4 ,,
(4)	பட்டிகை	1 ,,
(5)	கண்டம்	2 ,,
(6)	பட்டிகை	1 ,,
(7)	ஜகதீ	4 ,,
(8)	வலபி	2½ ,,
(9)	பட்டிகை	½ ,,

ஆக 21-பாகங்களாகின்றன. அதனால் சிறிது முரண்பாடு உள்ளது. அறிஞர்கள் இதை ஆராய்ந்தறிக.

யதாஷ்டாஸ்ர வ்ருகாரேண வீராநீ த்ரயஸ்ரீ நபஃ।
வேதிகா வலயோபேதாமேகாம்
ஷோடஶாஸ்ரம்ச வ்ருத்தமேவ ॥ சஎ ॥

வாதேஷா ரசயேத்ஷட்ஸ்ரீ த்ரயஸ்ரம் சாபரம் ஸஹிமே!
வீரம்ஸ்தூ வ்ருத்தஷாவியோஷ்டயிவிதா.
மம வியாயாவஸ்ரிஷ்டம்
சாஹ்யாரசாயாய வாயோ வலயோஷ்டகயா.
தீர்ம வியாயாம்ஸகேந।

ஸிஷ்டாயாய கதேஷ்டநேய கஷ்ட (யஃ? க்ர்)
த்ர்யஂஸவிஸ்தார தெவைர்யம்
கூயா டிஷ்டாஸ்ர சாஸாம்ஸக கூதஜலகூ.
லயம் கூஸாஸ்ரம் வ்ருத்தமேவ ॥ சக ॥

"பீடங்கள் பதினென்கு வகைப்படும்" என்று மயன் கூறினர். அவையாவன:

(1) நான்கு கோணமுள்ளது. (2) ஆறு கோணமுள்ளது. (3) எட்டு கோணமுள்ளது. (4) பன்னிரண்டு கோணங்களுள்ளது. (5) பதினாறு கோணங்களுள்ளது. (6) வட்டவடிவமானது. இந்த ஆறு வகைகளும் சமஅளவில் அமைந்தனவாம். இவற்றிலேயே நீண்ட அளவுள்ளதாக மற்றொருவகை அமைக்கலாம், அவை ஆறுவகையாம். ஆக, பன்னிரண்டு விதமாயிற்று. (13) முக்கோண வடிவமானது. (14) பாதி சந்திர வடிவமானது. இவ்வாறுகப் பதினென்கு வகைகள் கூறப்பட்டன.

சக

பீடத்தில் பிரதிஷ்டை செய்வதற்கான பாகத்தை ஒதுக்கி, எஞ்சியதை நான்கு பாகமாக்கிக்கொண்டு, இதில் 2 பாகத்தில் "பாதேவலயம்" அமைத்து, 1 பாகத்தால் "உதகதாரி" (கருத்வாரி)யை அமைக்கவேண்டும். எஞ்சிய மற்றொரு பாகத்தால் அதன் வேஷ்டநத்தைப் பண்ண வேண்டும். பிறகு நாளத்தை அமைக்கவேண்டும். அந்நாளத்தின் அகலமும், நீளமும் பீடத்தின் உயரத்தில்

ரூகரூ ரூவவிம்பாநாம வீம 8-தூரநாலகழ ।
டகழிணொடிஉ-வாநாஞ்ம வ-ஙிவடுநாலம வுகஉலெஸ ॥
வீம்வுாவஸ்ரிவெடிாம்ஸம நாலடி-ஙிலவு விஷ்ரூகழ ।
சூபாடம கதூடம கஷூஸ ஸ்ரிவத-ஹபூமஹாவநாஸ ॥ ருக ॥
க-யபூா ஹாவாமுவிஷூாரம கதூ-ஙிலவிசூரெள வ-நஃ ।
8-ஙிலா டியபூஸ்ரிஹாமம்வா மொ8-வாகாரு 8ாலஸெஸ ॥ ருட ॥

மூன்றிலொரு பாகமிருக்கவேண்டும். அது எட்டு கோண முள்ளதாக இருக்கவேண்டும். அதில் ஜலம் பெருகி யோடுவதற்காக கால்வாய்போன்ற ஆழமான பகுதி ஒன்றுண்டு அல்லவா? அது நாளத்தின் கனத்தில் எட்டிலொரு பாகத்தில் அமைக்கப்படவேண்டும். மேலும் நாளத்தின் அடிப்புறத்தைக் காட்டிலும் அதன் நுனி சிறிது மெல்லியதாக இருக்கவேண்டும். (இதே அத்தியாயம் மூன்றுவது சுலோகத்தைக் காண்க).

ருஏ

கிழக்கு அல்லது மேற்கு முகமான பிம்பங்களின் பீடத்தில் நாளம் வடக்கு நோக்கி யிருக்கவேண்டும். தெற்கு அல்லது வடக்கு முகமான பிம்பங்களின் பீடத்தில் நாளம் கிழக்கு நோக்கி இருக்கவேண்டும்.

ருக-ருட

பீடத்தின் அகலத்தில் மூன்றிலொருபாகம் அல்லது நான்கிலொருபாகம், நாளத்தின் அடிப்பாகத்தின் அகலமாகும். நாளத்தின் நீளமும் அதற்கு (நாளத்தினுடைய அடிப்புறத்தின் அகலத்திற்கு)ச் சமமாகவே அமையும். நாளத்தின் அடிப்புறத்தைக் காட்டிலும் நுனியில் அதன் அகலம் சிறிது குறுகியிருக்கவேண்டும். அடிப்புறத்தின் அகலத்தில் மூன்றிலொருபாகம் அல்லது நான்கிலொரு பாகம் நுனியில் குறுகியிருக்கலாம். அல்லது நாளத்தின் அகலத்தில் (நான்கு பாகமாக்கப்பட்டதில்) மூன்றரை பாகமும் நாளாக்ரத்தின் அகலம் அமைக்கலாம்.

மஹாஷண்டஸ்ஸம்வாஸ்யா வ்யஸ்தாத்ரம் பிநாகீ ஸ்ருஷ்டி ।
நாலதாரத்ரிபாதைகம் வாகம் வ்யாஸாம்ஸதஃ ஸ்மிதி ॥ ருக

வீரபத்ரைகதா கௌலவையாம் நாம பிதம் வ்ருகலயெஸ ।
வ்யாதிஷ்டவ்ருஷபஸ்தம்பம் ஸம் வாதாயிகஸ்ஸவா ॥ ருச ॥

கர்யயம் வாஜ்யஹ்ருஷ்யாஹொ
। பிஷ்மஸ்(வா ? வா)கம்ப கதஸ்மி ।
சூலிஷ்டபிலயையுதம் கஸ்கரஸ்தெணொஷகம் ஸவெஸ ॥ ருரு ॥

ருக

இந்த நாளத்தை முன்கூறியபடி பசுவின் முகம்போல வும், அல்லது யானையின் உதடுபோன்ற அமைப்புள்ளதாக வும் செய்யலாம். நுனியில் சிறிது உயர்ந்திருத்தல் சுபமானது. இந்த நாளத்தின் நடுவில் ஜலம் பெருகுவதற்காகப் பள்ளமாக வாய்க்கால்போல் வெட்டவேண்டும். அந்த ஆழமான பகுதி, நாளத்தின் அகலத்தில் மூன்றிலொரு பாகம் அகலமுள்ளதாக இருக்கவேண்டும். (நாளத்தின் அகலம் மூன்றங்குலமானால், மத்தியில் 1 அங்குலம் ஆழமென்றபடி) அவ் வாய்க்காலின் அகலம் எவ்வளவோ அவ்வளவே அதன் ஆழமுமிருக்கவேண்டும்.

ருச-ருரு

பீடத்தின் மத்தியில் வடக்குத் திக்கில் இவ்வாறு நாளத்தை அமைக்கவேண்டும்.

இந்த நாளத்தின் உயரம் மூன்று வகையாக அமைக்கப்படலாம். பீடத்தின் ஊர்த்வபட்டம் அல்லது ஊர்த்வ பட்டிகையளவு நாளமும் உயர்ந்திருக்கலாம். அல்லது ஊர்த்வபட்டிகையின் உயரத்தில் நாலிலொருபாகம் கூடவும் நாளத்தின் உயரம் இருக்கலாம். அல்லது ஊர்த்வபட்டிகையின் உயரத்தில் அரைப்பாகம் அதிகமாக உயர்ந்ததாகவும் நாளத்தை அமைக்கலாம். ஆஜ்யப்ருத் (க்ருத்வாரி) அகலமும் நாளமூலத்தில் ஆழமாகவுள்ள பகுதியும் சம அளவாக இருக்கவேண்டும். அது லிங்கத்தின் மூலம் வரை, படிப்படியாக உயர்ந்துகொண்டே செல்லுமாறு அமைக்கவேண்டும்

வீரொவஜம் கெகஹாரம் ஹெரக தேவொயபுஜ்ஜநம் ।
கயொஜ்ஜந தேகம்வா வ்யாஹெகம் ஹொவவத்திகம் ॥ ருசு ॥

கதரியம் (ஜ?வி) நா கொணம் வட்டயெச வொட்டம் யதா ।
உவயபுஹாவவாநக ஒலியபுவட்டாந சாவரெச ॥ ருஎ ॥

ஸிவஹாம ஸ்யம் வீரா ஜகிஹி தவஜம்வெநம் ।
உஜதொரவிய தொஷாய கஸ்ஸாதேள வஸிவஜபுயெச ॥

ருசு

இந்த சுலோகத்தில் பீடத்தை அமைப்பதற்கான கல் இருக்கவேண்டிய வகை கூறப்படுகின்றது. பீடத்திற்கான கல் ஒரே கல்லாக இருத்தல் நன்று. (பல கற்களால் பீடம் அமைத்தல் நன்றன்று என்றவாறு). அதனுடைய மேல் புறத்தில் செய்யப்படும் அலங்காரம் (ஊர்த்வபட்டிகை போன்றது) ஒரே கல்லினாலானதாக இருக்கவேண்டும். அவ்வாறே கீழ்ப்புறத்தில் செய்யப்படும் அலங்காரமும் ஒரே கல்லாக அமைக்கப்படவேண்டும். இந்த அதோமண்டனம் ஒரே கல்லினால் அமைக்குமாறு கிடைக்காவிடில் பல கற்களாலும் அமைக்கலாம்.

ருஎ–ருஅ

அவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட கற்களால் பீடத்தை இணைக்கவேண்டியிருந்தால், அவ்விணைப்பு கோணங்களில் வராதவாறு (மூலைகளில் அமையாமல்) அழகாக இணைக்க வேண்டும். மேலே இருக்கவேண்டிய உறுப்பு (ஊர்த்வ பட்டிகை) வரை மேல்மேல் இணைத்துக்கொண்டே போகலாம். (மேல் உறுப்பு ஒரு கல்லாகவே இருக்கவேண்டுமென்று முன்பே கூறப்பட்டது.)

இவ்வாறாக லிங்கபீடத்தின் அமைப்பு விளக்கப்பட்டது. இந்த லிங்கபீடத்தில் லிங்கம் ஸ்தாபிக்கப்படும் பொழுது, லிங்கத்தின் சிவபாகம் பீடத்தின் உட்புறத்தில் சிறிதும் அழுந்தியதாக இருக்கக்கூடாது. அவ்வாறே பீடத்தினின்றும் மேற்புறமும் செல்லக்கூடாது. இவ்வாறு ஏறியும் இறக்கியும் இருத்தல் இரண்டும் குற்றமாம். அதனால் அதைத் தவிர்க்கவேண்டும்.

நிலநிலை மலையு மீரம் பூமலை மிலையெகையா।
கடலாலை பெருகலெல வருகலையா உலகுபுணைநிழ ॥
கூலதெரு மறுகி லெருவ லுயர் லெநிழணைநிழ ।
உலகுபுவரி லீரா நாம லெநீ ரழாவலா நகெ ॥ சுல ॥

நாலதெரு கலா மெரு கணை மலெநீ நாமலருதெ ।
யாலிலாடகமெ வாதெ நீவபூநீவபும் யலாகுரிழ ॥ சுக ॥

நிவணும் நெகவணுமவா யாகுரா கலயா உலொகதிழ ।

(சுசு–சுல)

இணைப்பு இல்லாமல் ஒரே கல்லில் அமைக்கப்படும் பீடமே சிறந்தது. அவ்வாறு கிடைக்காவிட்டால் மேல் அணியை (ஊர்த்வபட்டிகையை) யாவது ஒரே கல்லால் அமைத்தல் அவசியம்.

சிறியதும் பெரியதும் நடுத்தரமானதுமாகிய பீடாங்கங்கள் யாவற்றிலும், இணைத்து அலங்காரம் செய்தல் கீழ்ப்புறத்திலேயே அனுமதிக்கப்படுகின்றது. பீடங்களின் இணைப்புக்களை மேலும்மேலும் ஒவ்வொரு உறுப்புக்களின் மூடிவில் அமைக்கவேண்டும்.

சுக

நாளத்தின் மத்தியிலும், பீடத்தின் மத்தியிலும், கர்ணத்திலும் இணைப்பு அமைத்தல் நன்றன்று. அதிலும் வலதுபுறத்தில் மிளமாகவும், இடதுபுறத்தில் குறுகியதாகவும் உறுப்புக்களை அமைத்துக்கொண்டு முறைப்படி இணைக்கவேண்டும். இணைக்கப்படவேண்டிய பகுதியை, மூன்று கண்டுகளாகவோ அல்லது சாத்தியமானவரை பல கண்டுகளாகவோ செய்துகொண்டு, பொருந்துமாறு இணைக்கவேண்டும். இவ்வாறு இணைப்பதைக் கீழ்ப்புறத்திலுள்ள உறுப்புக்களிலேயே அமைத்தல் தகும். மேற்புறத்தில் தகாது.

அப வாஸ்துபுருஷ:—

ஸ்திதே நவபதாத்மகஸ்தலே மத்யநாதிமுக
விஸ்தாரதைர்஘்யவிஸ்தாரோ ஹ்யாயதாகார: ।
விஸ்தார்யாம்ச விஸ்தீர்ண நிஜவ்யாயத
வாஸ்தோர்த தத்ஸ மஸ்தாத்ஸ்ய ஸம்பவஸ்தே ॥ ஸு ॥

பாதசிலை—ஸு.

பிம்பத்திற்குப் பாதசிலை இருக்கவேண்டிய விதம் விளக்கப்படுகின்றது. இந்தக் கல், மூல பிம்பங்கள், லிங்கங்கள் இவைகளை ஸ்தாபிக்குமிடங்களில் அடிப்புறத்தில் ஆதாரமாக வைக்கப்படுவதாகும். "பாதசிலை" என்று இதற்குப் பெயர் வழங்கும். இது நபும்ஸகக் கல்லாக இருத்தல்வேண்டும். (ஆண், பெண், அலி என்னும் தன்மைகள் கற்களிலுமுண்டு என்பது இந்நூலில் முதல் அத்தியாயத்தில் 25வது சுலோகத்தில் கூறப்பட்டது). இது அவ்வோ பிம்பங்களின் நாளத்தின் எல்லையைக் கடந்து இருக்கவேண்டும். அதாவது பிம்பம் அல்லது லிங்கம் இவற்றின் பீடத்தில் நாளம் இருக்கின்றதல்லவா? அந்த நாளத்தின் நுனியைக் காட்டிலும், அதன் கீழுள்ள பாதசிலை வளர்ந்திருக்கவேண்டும். நாளத்தினின்று வெளியில் கொட்டுகின்ற அபிஷேக ஜலம் முதலியன கீழுமுள்ள பாதசிலையின் மேலேயே விழுமாறு பாதசிலையை வளர்த்தி அமைக்க வேண்டுமென்றவாறு. அவ்வாறு வளர்ந்திருக்கவேண்டிய அளவு, நாளமூலத்தின் அகலத்தைக்காட்டிலும் கால்பாகம் அல்லது அரைப்பாகம் இருக்கவேண்டும். அதாவது, நாள மூலத்தினகலம் ஒரு அடியானால் அதன் கீழுள்ள, பாதசிலை அந்த நாளத்தைக் கடந்து கால் அல்லது அரையடி வளர்ந்திருக்கவேண்டும். இவ்வாறே ஊகித்தறியவேணும். இந்தப் பாதசிலையின் விஸ்தாரம் இருமடங்காக இருக்கவேண்டும். அதாவது, [1]பிம்பத்தின் அகலத்தைப்போல்

---

(1) காச்யபீயம் 59வது படலம் மூன்றுவது சுலோகத்தில்:—
"ஹிமவ்யாஸ அயாயிகயம் வ்யாஸம்" என்றிருக்கிறது. அதையொட்டி "விஷ்வக்ஸ்யாம்ச விஸ்தீர்ண" என்னும் இந்நூல் சுலோகத்திற்கும் கருத்து விளக்கப்பட்டது. இங்கு பிம்பத்தின் பாதசிலையே இந்த சுலோகத்தால் விளக்கப்படுவதாகக் கொண்டாலும் பொருந்துமாறு விவரிக்கப்பட்டது.

ஹஸ்தாத்பாதி ஹ்ருதிஹஸ்ய தேக மிஷ்யதே
வீதெ விஹாய ஸ்வவெஸ்மயதஸ்வபூராயாழி।
ஸ்வகாயபூதாம்ஸ்மிதிதம் வதத்தி தாஸோதி-
ஸ்தாவத்ஸ்ய திஸ்ருபூமிதநாஸ நிவெஸநாய॥சுகூ॥

இரு மடங்கு அகலமுள்ளதாகப் பாதசிலை இருக்கவேண்டு மென்றபடி. பாதசிலையின் உயரம் இருக்கவேண்டிய அளவு, அதன் (பாதசிலையின்) அகலத்தை ஆதாரமாகக் கொண்டு நிர்மானிக்கப்படவேண்டியதாகும். பாதசிலையின் அகலத்திற்குச் சமமாகவே அதன் உயரமிருக்கலாம். அகலத்தை 4 கூறுகச்செய்து ஒரு (கால்) பாகம் குறைத்துப் பாதசிலையின் உயரத்தை அமைக்கலாம். அல்லது பாதசிலையின் அகலத்தை இரு கூறுகச்செய்து, ஒன்றைக் குறைத்து மிகுதியைப் பாதசிலையின் உயரமாகக்கொள்ளலாம். அதாவது, பாதசிலையின் அகலம் நான்கு அடிகள் என வைத்துக் கொள்வோம். அப்போது அதன் உயரமும் 4 அடிகளே இருக்கலாம். காலில் ஒரு அடி குறைவாக மூன்றடி உயரமிருக்கலாம். காலில் 2 அடி குறைவாக இரண்டடியே பாதசிலையின் உயரமாகலாம் என்றவாறு.

சுகூ

பாதசிலையின் உயரத்தை மூன்று கூறுகச் செய்து கொள்ளவேண்டும். அதில் இரண்டு பாகங்களைப் பூமியின் உள்ளேயும், ஒருபாகத்தை வெளியில் தெரியுமாறும் வைக்க வேண்டும். வெளியில் தெரியுமாறுள்ள மூன்றிலொரு பாகத்தைப் பீடத்துடன் இணைக்கவேண்டும். இதன்மேல் வைக்கப்படும் ப்ரம்மசிலையின்மேல் தக்கவாறு நாளம் அமைக்க வேண்டும். அதற்காக இதை இரண்டு, ஒன்று அல்லது அரை அங்குலம் அளவு ஆழமுள்ளதாக்க வேண்டும். இதில் இரண்டங்குலம் ஆழம் தோண்டுவது உத்தமம். ஒரு அங்குலம் ஆழம் தோண்டுதல் மத்திமம். அரை அங்குலம் ஆழமுள்ளதாக அமைப்பது அதமபக்ஷமாகும். இவ்வாறு

லிங்காயாவஹதோ நவாம்ஸகஸிலா-
வ்யாஹோ வஸிஷ்ஹாவாஹ:
வ்ருஷாம்ஸ பிஹாணஷ்டதாயிகா-
வஷ்டாம்ஸிகாயாம் க்ருதாக ।

பிம்பங்களுக்குப் பாதசிலையும், பிரம்மசிலையும் அமைக்கும் வகை கூறப்பட்டது. இனி லிங்கங்களுக்குப் பாதசிலை. பிரம்மசிலை இவற்றை அமைக்கும் வகை கூறப்படுகின்றது.

கூச

லிங்கங்களின் அடிப்புறத்தில் பொருத்தப்படவேண்டிய நபும்ஸகசிலை (பாதசிலை)யின் அகலம் அந்தந்த லிங்கத்தின் உயரத்திற்குச் சமமாக இருக்கவேண்டும். இது உத்தமம். அந்தந்த லிங்கத்தின் பூஜாம்சத்தின் உயரத்தைப்போல் இருமடங்கு பாதசிலையின் அகலமிருக்கலாம். இது அதம பக்ஷம். இவ் விரண்டு அளவுகளுக்கும் இடையிலுள்ள பகுதியை எட்டு கூறுகச் செய்யவேண்டும்; அவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அளவாகும். இவ்வாறு கிடைக்கும் ஒன்பது அளவுகளில் மும்மூன்று அளவுகள் முறையே உத்தமம், மத்திமம், அதமம் எனக் கொள்ளத்தக்கவை. அவற்றிலும் முன்பின் அளவுகளுக்குள் உத்தமம் முதலிய பாகுபாடுகளை ஊகித்தறியவேண்டும். அதெவ்வாறெனில்:

ஒரு லிங்கத்தின் உயரம் 3 அடி என்று வைத்துக் கொள்வோம். அதன்மீழ் அமைக்கப்படவேண்டிய நபும்ஸக சிலையின் அகலமும் மூன்றடியே இருப்பது உத்தமம். அந்த லிங்கத்தின் பூஜாம்சத்தைப்போல் இருமடங்கு பாதசிலையின் அகலம் இருப்பது அதமம். (பூஜாம்சம் சாதாரணமாக லிங்கத்தின் மொத்த உயரத்தில் மூன்றிலொருபங்கே அமையுமாதலால் இங்கு பூஜாம்சத்தின் உயரம் என்பதால் ஒரு அடி உயரத்தை எடுத்துக்கொண்டு அதைப்போல் இருமடங்கு பாதசிலையின் அகலம் அதமம் எனக்கொள்ளப்பட்டது). இதன் இடைப்பகுதியை எட்டு கூறுகச் செய்யும் வகை:—

கும்பேச்வராய நமஸ்தே.
வ்ருஷபாரூடாய நமஸ்தே.
ஸ்ரீபார்வதீஸஹிதாய நமஸ்தே.
ஸாம்ப ஸதாசிவாய நமஸ்தே ॥ சுசு ॥

---

(1) லிங்கத்தின் உயரம் 3 அடி. பாதசிலையின் அகலம் 3 அடி 0 அங்.
(2) ,, 3 அடி; ,, 2 ,, 10½ அங்.
(3) ,, 3 அடி; ,, 2 ,, 9 அங்.
(4) ,, 3 அடி; ,, 2 ,, 7½ அங்.
(5) ,, 3 அடி; ,, 2 ,, 6 அங்.
(6) ,, 3 அடி; ,, 2 ,, 4½ அங்.
(7) ,, 3 அடி; ,, 2 ,, 3 அங்.
(8) ,, 3 அடி; ,, 2 ,, 1½ அங்.
(9) ,, 3 அடி; பூஜாம்சம்போல் இருமடங்கு.

இதுபோலவே பலவிதமான உயரமுள்ள லிங்கங்களுக்கும் அவற்றின் உயர அளவிலிருந்து பாதசிலையின் அகலத்தை நிர்ணயம் செய்யும் வழியை ஊகித்தறிக.

பாதசிலையின் அகலத்தில் பாதி அளவு அதன் உயரம் இருத்தல் உத்தமம். அதன் அகலத்தில் கால் (நாலிலொரு) பங்கு உயரம் இருக்கலாம்; இது அதமம். இவ் விரண்டு அளவுகளின் இடைப்பகுதியை எட்டு கூறுக்கி முன்போல் இதிலும் ஒன்பது அளவுகள் கண்டுகொள்ளவேண்டும்.

(1) பாதசிலையின் அகலம் 3 அடி அதன் உயரம் 1 அடி 6 அங். 0 யவம்
(2) ,, 3 அடி; ,, 1 ,, 4 ,, 7 யவம்
(3) ,, 3 அடி; ,, 1 ,, 3 ,, 6 யவம்
(4) ,, 3 அடி; ,, 1 ,, 2 ,, 5 யவம்
(5) ,, 3 அடி; ,, 1 ,, 1 ,, 4 யவம்
(6) ,, 3 அடி; ,, 1 ,, 0 ,, 3 யவம்
(7) ,, 3 அடி; ,, 0 ,, 11 ,, 2 யவம்
(8) ,, 3 அடி; ,, 0 ,, 10 ,, 1 யவம்
(9) ,, 3 அடி; ,, 0 ,, 9 ,, 0 யவம்

இதுபோல் பாதசிலையின் உயரத்தினளவை அதன் அகலத் தினளவினின்றும் ஊகித்தறியவேண்டும். இந்தப் பாதசிலை யில் லிங்கத்தைப் பொருந்த வைப்பதற்காக அதற்கேற்ற தாக ஒரு பள்ளமும் வெட்டவேண்டும்.

[1] ஜயதா விம்பவிஷ்டம்ஹா ஜெ ஷாஸ்யாஶ் சிமாணாவதா(ஸ) ।
விஷ்காராயுயபூகொநீவா மவெஷ ப்ரஹ்மஶிலாகுசிஷ ॥ சுரு ॥
வாகம ப்ரஹ்மஶிலாயெ ப்ரஹ்மாமொவதம மவெஷ ।
ப்ரவிஶெஷ ப்ரஹ்மாமஷ நீரந்தும யயாமவெஷ ॥ சுசு ॥
நந்த்யாவகபுவரா: காயபூ ஶுகஸ்ய ஷ ஶிலாஃகுரோஷ ।
வீம்ப்ரஹ்மஶொரபுயெ ப்ரதிகஷிணெந யொஜயெஷ ॥

சுரு

அல்லது லிங்கத்தின் அகலத்தைப்போல் இருமடங்கு கனமுள்ளது உத்தமம். லிங்கத்தைப்போல் ஒன்றரை மடங்கு கனமுள்ளது அதமம். இவ்வாறுகவும் சிலவிடங்களில் ப்ரம்மசிலை அமைப்பதுண்டு.

சுசு

ப்ரம்மசிலையின் நடுவில் பள்ளம் வெட்டி அதில் லிங்கத்தைப் பொருத்தவேண்டும். லிங்கத்தில் ப்ரம்ம பாகம் எவ்வளவோ, அவ்வளவுக்குச் சரியாகவே ப்ரம்ம சிலையில் பள்ளம் வெட்டவேண்டும். அவ்வாறு குழிபோல் வெட்டப்பெற்ற பள்ளத்தில் லிங்கத்தின் ப்ரம்ம பாகத்தைப் புகுத்தவேண்டும். அவ்வாறு புகுத்திய பிறகு லிங்கத்திற்கும் ப்ரம்ம சிலையின் குழிபோன்ற பள்ளத்திற்கும் இடைவெளியில்லாமல் நிட்டமாக அமையுமாறு கவனித்துக் கொள்ளவேண்டும்.

சுஎ

ப்ரம்மசிலைக்குமேல் பீடத்தை அமைக்கவேண்டும். பீடத்திற்கும் ப்ரம்மசிலைக்குமிடையில், கஞ்சாவட்டை மலர் போன்ற நான்கு சிலைகளை நாற்புறமும் ப்ரதக்ஷிணமாகப் பொருத்தவேண்டும். இச் சிலைகளை வைக்கும் விதமும், அவற்றின் அமைப்பிலுள்ள விசேஷங்களும் காச்யபீயத்தில் 69வது படலத்தில் கூறப்பட்டுள்ளன. ஆங்கு காண்க.

---

(1) முன்பு கூறியது பாதசிலை, இது ப்ரம்மசிலை. இவ்வாறிருக்க "ஜயதா" என்று சொல்வது பொருத்தமில்லை. முன்பு கூறப்பட்டதும் ப்ரம்மசிலையாகவிருந்தால்தான் அதற்கே மற்றொரு அளவு கூறுமிடத்தில் அது பொருந்தும். ஆய்ந்தணர்க.

அய நாமராதி வைஷ்ணவ :—

ப்ரஹ்மணம் லிங்மவிஷ்ணோஸ்து ! த்ரஹ்மணம் வெடஸ்ரூணஜி ।
கர்ணம் வ்யாஸத்ரி வாஹ்நாம்ஸாது லவெஸ்ரிமெதக ஸாமரே ॥
ஸஹ்ரிகணது யதக்யஹ்நாம்ஸ
வ்யாஹா ஸ்ரேஷ்டா (ய ? ய) தவ்ய தக ।
வ்யாவாய்யயுவிஹீநா வ்யா.
ஸ்ரீயா ஜெயெzஷ்டயா தயொஃ ॥ ஷ ॥

ஷஅ

நாகரம், த்ராவிடம், வேஸரம் என மூன்று வகையான லிங்கங்களுக்கும் ப்ரம்மசிலைகளை அமைப்பதிலுள்ள விசேஷங்கள் இனி விளக்கப்படுகின்றன.

நாகர லிங்கத்திற்கு அமைக்கப்படவேண்டிய ப்ரம்ம சிலையின் அகலம், லிங்கத்தின் குறுக்களவைக் காட்டிலும் இருமடங்கு, மும்மடங்கு அல்லது நாலுமடங்கு இருக்க வேண்டும். தனது அகலத்தில் முக்கால் பங்கு அதன் உயரம் இருக்கவேண்டும். அதாவது லிங்கத்தின் அகலம் ஒரு அடி என்று வைத்துக்கொள்வோம். அதன் ப்ரம்ம சிலையின் அகலம் 2, 3 அல்லது 4 அடி இருக்கலாம். அதன் கனம் (உயரம்) முறையே 1½ அடி, 2¼ அடி அல்லது மூன்று அடி இருக்கலாம் என்றவாறு.

த்ராவிட லிங்கத்தின் ப்ரம்மசிலையின் இலக்கணம்—ஷஅ-எம

இது கர்ப்பக்ருஹத்தின் அடையாளத்தால் சொல்லப்படுகின்றது. கர்ப்பக்ருஹத்தின் கர்ணத்தில் நாலிலொரு பங்கு ப்ரம்மசிலையின் அகலமிருக்கலாம். இது உத்தமம். கர்ப்பக்ருஹத்தின் அகலத்தை நாலு பாகமாகச் செய்து அதில் ஒன்றரைபாகம் குறைந்ததாகப் ப்ரம்மசிலையின் அகலம் அமைக்கலாம். இது அதமம். இவ்விரண்டு அளவு

---

(1) "விஷ்ணுகம் வெடஸ்ரூமதஃ" என த்ரஹ்மவெவஃ.

(2) கணித சாஸ்திரத்தில் கோடி, புஜம், கர்ணம் என வழங்கப்படுவன மூன்றளவுகள். அவற்றுள் கர்ணம் என்பது இங்கு குறிப்பிடப்பெற்றது (முக்கோணத்தின் ரேண்ட பகுதி).

(கியெ? ஹிரு) கு நவயா ப்ரஹ்மஸ்தாவ்யா தி
உரவிவெ ஸ்திவெ ;
வ்யாவாயாம் கிது வாதொநம்
கதொஉயெ zஷ்டாஜிதெ ॥ எடி ॥

கு-ம்ஹம் ப்ரஹ்மஸ்தாயாஃ வ்யாஸவயா உரவிவாஹுயெ ।
ஆய ஸ்தாபூஜாயெபுந கிரவது-ஸ்தாபவிஷ்யதி ॥ எக ॥

களின் இடைப்பகுதியை எட்டு கூறுகச் செய்யவேண்டும். இதில் ஒவ்வொன்றும் நிராவிட லிங்கத்தினுடைய பிரம்ம ஸ்தானின் அகலத்தினளவாகும். அதெங்ஙனே யென்னில்: கர்ப்பகிருஹத்தின் கர்ணம் 16 அடி என்று வைத்துக்கொள் வோம். அதில் நாலிலொரு பாகம் (4 அடி) பிரம்மஸ்தலத்தின் அகலமாகலாம். இது உத்தமம். அல்லது கர்ப்பகிருஹத் தின் அகலத்தை நாலு கூறுக்கி அதில் 1½ பாகம் குறைத்து 2½ பாகத்தை பிரம்மஸ்தலத்தின் அகலமாகக் கொள்ளலாம். இவ் விரண்டுக்குமிடையிலுள்ள பாகத்தை எட்டு கூறுகச் செய்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு அளவாகக் கொள்ள லாம். இவ்வாறுகளே பல்வேறு அளவுள்ள கர்ப்ப கிருஹத் தின் கர்ணத்தினளவை ஆதாரமாகக்கொண்டு நிராவிட லிங்கத்தின் பிரம்மஸ்தலத்தின் அகலத்தை ஊஹித்தறிய வேணும்.

நிராவிட லிங்கத்தின் பிரம்மஸ்தலத்தின் உயரம் அதன் (பிரம்மஸ்தலத்தின்) அகலத்தில் பாதி யிருக்கலாம். இது உத்தமம். அல்லது அதிலும் (அதன் அகலத்தின் பாதி யளவிலும்) கால் பாகத்தை கீக்கி, மூக்கால் பாகம் பிரம்ம ஸ்தலத்தின் உயரமிருக்கலாம். இது அதமம். இவ் விரண்டு அளவுகளின் இடைப்பகுதியை எட்டு கூறுகச் செய்வதன் மூலம், நிராவிட லிங்கத்தின் பிரம்மஸ்தலத்தின் உயரத்தின் அளவு ஒன்பது வகையாகும்.

வேஸரலிங்கத்தின் பிரம்மஸ்தலம்—எக-எஉ

கர்ப்பகிருஹத்தின் அகலத்தில் பாதியளவை ஆதார மாக எடுத்துக்கொள்ளவேண்டுமிதற்கு. கர்ப்பகிருஹத்தின் பாதியகலத்தில் மூன்றிலொருபாகம் அல்லது நான்கிலொரு

வ்யாஸாய ஸெஹாமொஹா வ்ராஹ்மணெயெ ஸஹாஜிதெ ।
நவ்ய ஹஸ்தாஃ ப்ரொக்தாஃ ஸித்வ்ய ஹாம்ஸதொ வடெ ॥

ஸ்யவாஸிகவிஸ்தாரம் விஸ்தாராஷ்டாம்ஸகம் நதெ ।
தந்ய வடெ (கம்) ஸம் ரூதுஹதெ ஸ்யா தெஸ்ராஸிலெ ॥ எக ॥

பாகம் வேஸரலிங்கத்தின் ப்ரம்மஸிலையினுடைய அகலம் இருக்கலாம். இங்கும் முந்திய அளவு உத்தமம். பிந்தியது அதமம் என்பதை அறியவேண்டும். இவ்விரண்டு அளவுகளின் மத்திய பாகத்தை எட்டு கூறுக்கி, வரிசையாக ஒன்பது அளவுகள் எடுத்துக்கொள்ளவேண்டும். இதிலும் ப்ரம்மஸிலையின் அகலத்தில் பாதி அல்லது நான்கிலொரு பாகம் அதன் உயரம் (கனம்) இருக்கவேண்டும். இவ்விரண்டு அளவுகளுக்கும் இடையிலுள்ள பாகத்தை எட்டு கூறுகச்செய்து மொத்தத்தில் வரிசையாக ஒன்பது அளவுகள் ப்ரம்மஸிலையின் உயரத்தில் அமைக்கலாம். இங்கு அகலத்தில் ஒன்பது வகையும் உயரத்தில் ஒன்பது வகையும் கூறப்பட்டதல்லவா? இவற்றுள்ளும் முறைப்படி முதலுக்குமுதல், இரண்டாமதற்கு இரண்டாவது என்று வரிசைக்ரமமாகவே, அகலத்தினளவையும் உயரத்தின் அளவையும் ப்ரம்மஸிலைக்கு அமைப்பது தகும்.

எக

லிங்கத்தின் ப்ரம்மாம்சம் இருக்குமளவுக்குச் சரியாக இந்தப் ப்ரம்மஸிலையில் பள்ளம் தோண்டவேண்டும். இந்தப் பள்ளமான பாகத்தின் மத்தியில் ரத்தினங்களுக்கான ஆழமான பகுதியை அமைக்கவேண்டும். இது இரண்டு யவங்களுக்குமேல் அகலமுள்ளதாக இருத்தல் வேண்டும். அகலத்தில் எட்டிலொருபாகம் ஆழமுள்ளதாக இருக்கவேண்டும். இவ்வாறுக அமைக்கப்படும் பகுதிக்கு 'ரத்தினகர்த்தம்' என்று பெயராகும். "ரத்தினங்களை வைப்பதற்கான பள்ளம்" என்பது இச்சொல்லின் பொருள். இவ்வாறுக வேஸரம் என வழங்கப்படும் லிங்கத்தின் ப்ரம்மஸிலையின் அளவு விளக்கிக்கூறப்பட்டது.

ஸ்வாஸநஸயநாதீநாம் வீதஹேதோ: ।
ஸ்தாநாஸந விஹாரஸ்ய ஸ்வீகாரஸ்தம் (வ ? வா) ஸே.
(வ ? வா) ஸே ।
வாகஸ்திரிவித ஸ்தாஸ்ய ஷண்ணாம் வாபிகம்தத: ॥ எச ।
ஸ்வஸநாநாம் ஸ்ருவிஸ்தாரா த்ரிஷ்டஹாமாயிகாயதி: ।
விமாணம் தஸ்ஜாயாச நிஸ்ணம் வீதிகாஸ்ரிவ ॥ எஞ ।

ஆஸனம், சயனம் முதலியவற்றின் பீடங்களின் வகைகள்-எச-எள

பிம்பங்களில் நின்றவண்ணம் உள்ளவை, விற்றிருந்த வண்ணம் உள்ளவை, கிடந்தவாறு உள்ளவை இவற்றிற் கேற்றவாறு அவ் வகைகளின் பீடங்கள் வெவ்வேறு அமைப்புள்ளதாக இருத்தல் அவசியமாகின்றது. இதில் முந்நிலைதைக்காட்டிலும் பிந்தியது ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து அல்லது ஆறு மடங்கும், அல்லது அதற்கு மேலாகவும்கூட வித்யாஸப்படலாம். அதற்குத் தக்க வாறு இதை அமைக்கவேண்டும். வரிசையாக மூன்றளவு களை எடுத்துக்கொண்டு முதலாவது ஸ்தானத்திற்கும் (நின்றவண்ணம்), இரண்டாவது விற்றிருந்த வண்ணத்திற் கும், மூன்றாவது சயனத்திற்கும் கொள்ளத்தகும்.

விற்றிருக்கும் விக்கிரகங்களுக்கு அமைக்கப்படும் பீடம் தனது அகலத்தைக் காட்டிலும் எட்டு மடங்கு அதிகம் நீள மாக இருத்தல்வேண்டும். அது தனது (விக்கிரகத்தின்) உயரத்தைப்போல் இரு மடங்கு நீளமுள்ளதாக இருத்தல் (பார்ப்பதற்கு) அழகாக இருக்கும், மற்ற பீடங்களில்போல், பேரத்தின் உயரம் மூன்று, நான்கு, ஐந்து பாகங்களாகச் செய்யப்படவேண்டும். சயனம், ஆஸனம், ஸ்தானம் இவற் றிற்கு இம் மூன்றையும் முறைப்படி இணைத்துக் கொள்ள வேண்டும். பீடத்தின் உயரம் சயனத்தில் மூன்றிலொரு பாகமும், ஆஸனத்தில் நான்கிலொரு பாகமும், ஸ்தானத் தில் ஐந்தில் ஒருபாகமும் இருக்குமாறு அமைத்தல் வேண் டும். அதாவது: சயனபேரத்தின் உயரத்தை மூன்று கூறு செய்து அதில் ஒருபாகம் பீடத்தின் உயரம் அமைத்தல் வேண்டும். விற்றிருந்த விக்கிரகத்தின் உயரத்தை நான்கு பாகமாக்கி அதில் ஒருபாகம் அதன் பீடத்தின் உயரம்

ராக்ஷஸேந்த்ரபாகம் தது வைரோசனபாகதஃகுரோசம் ।
வீரஸ்ரீகாந்திஷாஸ்ரயா ஜயகேயவாட்யஸகேஸ்ரீகே ॥ எசு
யஸ்ரோவிகம் கயாகேவஸ்ரீம் வ்யாஸஸ்ரு ரூபகேஸ்ரீகஃ ॥

கயாலகணமஹஃ :—

ஜ்ரஹவிஷ்ணு சிவாநாஞ மௌலயஸ்ரீநாம் கயாலகணஸ்ரு ।
லொவபீம் கிமாஸ்ரீஸ்ருஹிம்ஸவிம்ஸமாலகணம் வ்ஸ்ரகஸ்ரு ॥
ஸேவாஷ்டுகாணாம் வாணாநாம் விம்மாநாஞ வ்ஸ்யம்ஸவாஸ்ரு ।
பூலவாஸ்ரூலவம் வீரம்வா யஸ்யேஷ்டம் காரயேத்ஸ்வயஃ ॥ எசு
உகி சில்பரத்ன உத்தரபாகே வீராதிலகஷணம் நாம
லவத்விஸோ(ஸ்ரு)யாயஃ ॥

அமைக்க வேண்டும். நின்றவாறுள்ள விக்கிரகத்தின் உயரத்தை ஐந்து கூறாக்கி, அதில் ஒருபாகத்தை அதனுடைய பீடத்தின் உயரமாகச் செய்யவேண்டுமென்றபடி. மேலும் சயனபேரத்தில் பீடத்தின் அகலமும், நீளமும் பொருத்தமாக இருக்கும்படி கவனித்து அமைக்கவேண்டும். அதற்காகக் கூறப்பட்ட அளவில் சிறிது ஏற்றத்தாழ்வு ஏற்பட்டாலும் அதனால் பாதகமில்லை.

ஆஸனத்தின் வகைகள் -எசு-எகூ

பிரமன், விஷ்ணு, சிவன் முதலானோர்க்கும், பார்வதி முதலியவர்களுக்கும், ஆஸனம் அமைப்பதில் (வீற்றிருந்தவாறு விக்ரகம் அமைப்பதில்) அதற்கு உபபீடமும் அமைக்கவேண்டும். பீடத்தின் அடிப்புறத்தில் சிக்கம் இருக்கவேண்டும். இவ்வாறான சிக்காதனம் மேற்கூறப்பட்டவர்களுக்கும் வீற்றிருந்த கிலையில் அமைக்கவேண்டும்.

தைவம், ஆர்ஷம், பாணம், சுயம்பு இவ்வாறான லிங்கங்களுக்கு ப்ரஸாத வடிவமான பீடத்தையோ அல்லது கீழ்க்கூறப்பட்ட மேரு ஸுகாந்தம் முதலிய பீடங்களில் ஏதேனும் ஒன்றையோ தன் இஷ்டம்போல் அறிவாளியான சிற்பி அமைக்கவேண்டும்.

சில்பரத்னத்தில் பிற்பகுதியில் பீடங்களின் இலக்கணத்தைக் கூறும் இருபத்தேழாவது அத்தியாயம் முற்றும்.

—:—

அனுபந்தம் — 1.

*சிற்சுகவின் சங்கேதச்சொற்கள்— ஆவுகள்

(1) ஸாகடி — உயரம்.

உஜ்ஜி
ஸாகடி
உச்சாயஃ, வரீச்சாயஃ
கரீஜ்ஜி, உத்தரீஜ்ஜி
உதயஃ
உகதிஃ, உகதடி, ஸொகதடி
சூயஃ
சூயாஃ
சூயதிஃ, சூயதடி
தீவடி, ஸெவடி
உத்தெயஃ, வரீத்தெயஃ
திதிஃ
வடி

(2) வரீணடி— அகலம்.

வ்யாவஃ
விஸ்தாரடி
விஸ்தாரஃ
விஸ்தாரதிஃ
விஸ்தாரஃ
விஸ்தாரிஃ
விஷ்கம்பஃ
கதிஃ, விகதிஃ, சுத்தகதிஃ,
கதடி
காரடி
கர்கடி, வ்ருகாகடி, வ்ருகதடி, விகாகடி
வ்ருயா

(3) உத்தாகடி— கனம்.

உத்தீதிஃ
வடி
வீதகுடி

---

* இதனில் உபயோகிக்கப்பட்ட சொற்களே தொகுக்கப்பெற்றன்ன.

(4) உவரோதபு- இடைவெளி.

தீவுபு

---

(5) வரிசாணபு- சுற்றளவு.

காஹஸ: வரிணாஹஸ:

வரிணாஹஸ: வரியி:

---

(6) லம்வரோதபு- தொங்குமட்டம்.

லம்பஸுத்ரபு

---

(7) விதஹ்தி:- சாண்.

(8) கிஷ்கு:, ஹஸ்த:, கரு:- முழம்.

(9) காலரோதபு- இந்நூல் 118 to 120 பக்கங்களில் காண்க.

(10) ரோகாம்ஸபு ,, 34, 35 ,, ,,

(11) ரோகுரம்ஸபு ,, 46-வது ,, ,,

(12) எம்மகர்ணம் முதலிய
கைமுத்திரைகள் இந்நூல் 16-வது அத்தியாயத்தில் ,,

அனுபந்தம்— 2.

சிற்பிகளின் சங்கேதச்சொற்கள்— எண்.

ஒன்று :

வரகூடு

சுவகிஃ — பூமி (1)
க்ஷிதிஃ — ,, ,,
ஹுவி: — ,, ,,
மஹஃ — ,, ,,
ஊஹா — பூமி ,,
வதூ: — சந்திரன் (1)
ஶஶீ — ,, ,,
வெ்யாஃ — ஆகாயம் (1)
நரவதிஃ — அரசன் (1)
சுந்ரா — (1)
ஶிவஃ — (1)

இரண்டு :

நெத்ர — கண்கள் (2)
நயந — ,, ,,
ஸாங்க்ஷிணெ — ,, ,,
ஊருஸுள — ,, ,,
சுஶ்ரூஸுள — அச்விநிதேவர்கள் (2)
ஒஷ்ரூள ,, ,,
வக்ஷுள — இறக்கைகள் (2)
ஶுங்: — (பருப்பு முதலியவற்றின்) பாதிகள் (2)
ஸாலகெ — விழிகள் (2)

கலா — கலைகள் (2)
கரௌ — கைகள் (2)

மூன்று :

கி
மூணாஃ — ஸத்த்வ ரஜஸ் தமோ குணங்கள் (3)
அக்னயஃ — அக்னிகள் (3) (கார்ஹபத்யம், தக்ஷிணாக்னி, ஆஹவநீயம்)
வாவஸ்தாஃ — ,, ,,
வஹ்னயஃ — ,, ,,
ஸமித்தாஃ — ,, ,,
ஜகதி — உலகங்கள் (3)
லோகாஃ — ,, ,,
ராமாஃ — பரசுராமன், ரகுராமன், பலராமன் (3)

நான்கு :

வக்வாரி
வேதாஃ — வேதங்கள் (4)
ஸ்ருதயஃ — ,, ,,
நிகமாஃ — ,, ,,
ஸமுத்ராஃ — கடல்கள் (4)
ஸாகரஃ — ,, ,,
ஸாகராஃ — ,, ,,
உததயஃ — ,, ,,
யுகம் — இவ்விரண்டு (4)
பாகாஃ — பாகங்கள் (4)

ஐந்து :

வஜ்ர

வஸுஸுமாः – மன்மதபாணங்கள் (5)
வாணாः – ,, ,,
வாயகாः – ,, ,,
ஸுமாः – அம்புகள் (5)
ஹஷவः – ,, ,,
க்ஷுஷுமாः – ,, ,,
விஷிவாः – ,, ,,
மஹாபூதானி – பூதங்கள் (5)

ஆறு:

ஷட்
ரீதவः — பருவகாலங்கள் (6)
வேதாங்கி – வேதத்தின் அங்கங்கள் (6)
ரஸாः — சுவைகள் (6)

ஏழு:

ஸப்த
குலாயः — குலபர்வதங்கள் (7)
ஔஜாः – ,, ,,
சுசயः — ,, ,,
மாருதாः – ,, ,,
ரிஷயः — ஸப்தரிஷிகள் (7)
சூர்யரஷ்மயः — (சூரியனுடைய) கிரணங்கள் (7)
சுபர்ணாः — ,, ,, ,,
வ்யாஹ்ருதயः – ஸங்கேத ஸ்வரங்கள் (7)

எட்டு:

வஸு
வஸவः — வஸுக்கள் (8)

அஷ்டகாஃ இரண்டு நாக்குள்ளவை (பாம்புகள்) (8)
சுபர்ணாஃ — பாம்புகள் ,,
குஞ்சராஃ — திக்கஜங்கள் (8)
பசவாஃ — யானைகள் ,,
திசாஃ — திசைகள் (8)
தேவாஃ — ,, ,,

ஒன்பது :

நவ
க்ரஹாஃ — நவக்ரஹர்கள் (9)
சங்க்யாஃ — எண்கள் (9)
ரந்த்ராணி — (உடலிலுள்ள) துவாரங்கள் (9)
த்வாரம் — துவாரம் ,,
பதஃ — (9)

பத்து :

திச
திசஃ — திசைகள் (10)
தேவாஃ — ,, ,,
திக்ஃ — திசை (10)
பதஃ — தர்மதேவதை-தசமி திதியின் தேவதை (10)

பதினொன்று :

ருத்ரகாதச
ருத்ராஃ — ருத்திரர்கள் (11)
ஜீவாஃ — ,, ,,

பன்னிரண்டு :

ஆதித்ய

ஸாதவ: — சூரியன்கள் (12)

வஸ்வர்யமா: — ,, ,,

திவாகரராஜ: — ,, ,,

சுசுக்ஷா: — ,, ,,

ஸாதக்ஷாணா: — ,, ,,

விதாதா: — ,, ,,

சூஷிதா: — ,, ,,

ரவய: — ,, ,,

ஸாவர்ணக: — ,, ,,

திசஸ்பதி: — ,, ,,

ஸாவர்ணர: — ,, ,,

ஜமதீ — (12) (ஆதித்யாக்ஷர ஜமதீ)

பதின்மூன்று :

தைவோதித்ய

விஸ்வம் — உலகங்கள் (13)

பதினான்கு :

பாதாதித்ய

விஸ்வ — உலகங்கள் (ஸுரேஸ்வர) (14)

உதவ: — மனுக்கள் (14)

பதினைந்து :

பாஸ்வதித்ய

தியவ: — திதிகள் (15)

பதினாறு :

ஷொலஸ

விகாராஃ — (மூலப்ரக்ருதியின்) விகாரங்கள் (16)

கலாஃ — (சந்திரனுடைய) கலைகள் (16)

வ்ருத்தகலாஃ — ,, ,, ,,

நரவராஃ — அரசர்கள் (16)

சுவஷ்டிஃ — (16)

பதினேழு :

ஸப்தடஸ

க்ருதயஷ்டிஃ — (17)

நரவராஃ — அரசர்கள் (17)

பதினெட்டு :

அஷ்டாதஸ

யுகிஃ — (18)

பத்தொன்பது :

னவொ நவிம்ஸ திஃ

க்ருதியுகிஃ — (19)

இருபது :

விம்ஸ திஃ

கிருதிஃ — (20)

இருபத்தொன்று :

னக விம்ஸ திஃ

விகிருதிஃ — (21)

இருபத்திரண்டு :

வாவிம்ஸதிஃ

கூர்ய கிஃ — (22)

இருபத்துமூன்று :

கூபொவிம்ஸதிஃ

விர்ய கிஃ — (23)

இருபத்துநான்கு :

சதுர்விம்ஸதிஃ

சாயபூரணி — (24)

வஜ்ர கிஃ — (24)

இருபத்தைந்து :

பஞ்சவிம்ஸதிஃ

சவிர்ய கிஃ — (25)

இருபத்தாறு :

ஷட்விம்ஸதிஃ

உதார்ய கிஃ — (26)

இருபத்தேழு :

ஸப்தவிம்ஸதிஃ

பீஷ்ணி — நக்ஷத்திரங்கள் (27)